# திருக்குறள் கூறும் சான்றாண்மை

பேரருட் பெருந்தகை
**டாக்டர் இரா. அருளப்பா**
பேராயர்
சென்னை - மயிலை

மெய்ப் பொருள் பதிப்பகம்

5, அங்காடித் தெரு,
அயன்புரம், சென்னை - 600023.

முதற் பதிப்பு – 1974. நவம்பர்.
விலை ரூ. 7-00.

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சான்றாண்மை என்றால் என்ன ? | 9 |
| 2. | சால்புத்தூண் 1. அன்பு | 22 |
| 3. | விருந்தோம்பல் ... | 32 |
| 4. | அருள் என்னும் அன்பீன் குழவி ... | 42 |
| 5. | அருளும் பொருளும் ... | 49 |
| 6. | சால்புத்தூண் 2. நாண் ... | 63 |
| 7. | ,, ,, 3. ஒப்புரவு. ... | 71 |
| 8. | ,, ,, 4. கண்ணோட்டம் ... | 83 |
| 9. | ,, ,, 5. வாய்மை. ... | 93 |
| 10. | ஊழ். ... | 105 |
| பிற்சேர்க்கை | —1 ... | 117 |
| ,, | —2 ... | 120 |
| ,, | —3 ... | 140 |
| ,, | —4 ... | 157 |
| ,, | —5 ... | 160 |
| ,, | —6 ... | 172 |
| ,, | —7 ... | 177 |
| ,, | —8 ... | 182 |
| ,, | —9 ... | 188 |
| ,, | —10 ... | 197 |

மெய்ப்பொருள் அச்சகம், சென்னை - 600023.

அன்னை இல்லம்
25—10—1974

தமிழ் வாழ்க

பன்மொழிப்புலவர்

**கா. அப்பாத்துரையார்,**

எம்.ஏ. (ஆங்) எம்.ஏ. (தமிழ்) விசாரத் (இந்தி) எல்.டி.

சென்னை - 18.

## "சான்றாண்மை" — ஓர் ஒப்புரை.

சான்றோர், சான்றாண்மை, சால்பு ஆகிய வள்ளுவச் சொற்களை மையமாகவைத்துத் திருக்குறளில்திருவள்ளுவரின் உள்ளக்கருத்துக்களைத் தெள்ளத் தெளிய வெளிக்கொணர முனையும் ஒரு புதுமுறை ஆய்வேடு இச்சிறுசுவடி. சான்றோரா கிய திருவள்ளுவர்ஏட்டில் சான்றாண்மைக் கருத்துப் பற்றிய ஒரு சான்றோரின் அகல்விரிவான ஆராய்ச்சியாக இது திகழ் கிறது.

திருக்குறளை ஓர் ஒழுக்கநூல் என்று ஆராய்ந்தவர் உண்டு; உலகியல் நூல் என்று ஆராய்ந்தவர் உண்டு; அறிவு நூல் என்று ஆராய்ந்தவர் உண்டு. சமயநூலாகஆராய்ந்தவர் மிகச்சிலரே. ஆனால் உலகின் பிற வாழ்வியல் ஆசிரியர்கள் போலத் திருவள்ளுவர் ஒழுக்கம் வேறாக, உலகியல் வேறாக, அறிவு ஆய்வுக் கருத்துக்கள் வேறாக,சமயம் வேறாகக் கொள்ளாமல், இவையனைத்தையும் ஒரே வட்டத்தின் பல் திசை நோக்குகளாகக் கொண்டவராதலால், இந்த ஆய்வுகள் எல்லாமேதிருக்குறளுக்கு முற்றிலும் பொருந்துபவையாகஅமைந் துள்ளன.

இவ்வாய்வேட்டின் ஆசிரியர், அருளார் திரு அருளப் பரின் ஆய்வு முடிபு இதற்கு ஒரு சான்றாக விளங்குகிறது.

திருக்குறளை ஒரு சமய நூலாகக் கருதியவர் பெரும் பாலும் சிலர் என்றே கூறலாம். ஆயினும் திருக்குறளின் ஆசிரியர் சிவநெறியினர் என்றே கொண்டு சிவநெறியினரும், திருமால் நெறியினர் என்றே கொண்டு திருமால் நெறியினரும், சமண நெறியினர் என்றே கொண்டு சமண நெறியினரும், புத்த நெறியினர் என்றே கொண்டு புத்தநெறியினரும் உரை வகுத்துள்ளனர். இதுபோலவே இசுலாம் நெறியினர் என்று கொண்டு இசுலாமியரும், இயேசு நெறியினர் எனக்கொண்டு இயேசு நெறியினரும் உரைகொள்வதில் வியப்பு எதுவும் இருக்க முடியாது! உண்மையில், இதுகாரும் அவ்வாறு உரை இல்லாதிருந்தது ஏன் என்றுதான் வியப்புக்கொள்ளுதல் வேண்டும்.

இயேசு நெறியாளர்களைப் பொறுத்தமட்டில், தமிழர்களைவிட அந்நெறி பரப்பவந்த செர்மானியரும், ஒல்லாந்தரும் பரங்கியரும், ஆங்கிலேயரும், பிற மேலைநாட்டினரும் ஆகியவர்கள்தான் சென்ற நானூறு ஆண்டுகளுக்கு மேலாகத் திருக்குறளில் மிகுந்த ஆர்வம் காட்டிவந்துள்ளனர் என்பதை அத்துறை வரலாறு காட்டுகிறது. பிறநாட்டவர்கள் இடித்துக் காட்டிய பின்பே, பிறநாட்டறிஞர் எடுத்து விளக்கிக் காட்டிய பின்பே, தமிழ்ப் பழம்பேரிலக்கியத்தின் அருமையையும், திருக்குறளின் அருமை பெருமைகளையும் தமிழ்நாட்டவரும் பிற இந்திய மக்களும் உணரத் தொடங்கியுள்ளனர் என்று கூறினால் அது தவறாகாது.

தமிழகத்தில் இடையிருட்கால அரைநெறிப்படலங்களிடையே மங்கி மறைந்த நிலையிலும் உலகளாவ ஒளி வீசத் தொடங்கியுள்ள தமிழும் திருக்குறளும், உலகளாவிய, பல சமய, பல்கலை இயல்துறைகளளாவிய ஆய்வாராய்வுகள் மூல மாகவே தம் இயலொளி காணப்பெற்றுத் தமக்கு உலகில் உரிய இடம் பெறும் வாய்ப்புடையதாக இயலுதல் கூடும்; அண்மை வருங்காலத்திலேயே அவ்வாறு இடம் பெற வேண்டுமானால், இத்தகைய புத்தாய்வாராய்வுகளைத் தமிழகமும், இந்தியாவும், அறிவுலகும் ஊக்கி வளர்க்க வேண்டும்.

அருளார் திரு அருளப்பரின் ஆராய்ச்சிகள் பலருக்கு, இயேசு நெறியினரான தமிழருக்குக்கூட, புதியனவாக, புது நிலம்படர்வனவாகத் தோற்றலாம். ஆனால் இவ்வேட்டில் காணப்படும் ஒரு தனிப் பெருஞ்சிறப்பை, எவரும் கவனிக்காதிருக்க முடியாது. திருவள்ளுவரின் உள்ள ஒருமைப்பாட்டினை அவை தெள்ளத் தெளியக் காட்டுகின்றன. இதுவரை

பலர் கருதி வந்துள்ளதுபோல், திருக்குறள் பல கருத்துக்களின் ஒரு தொகுப்பன்று - இது ஒரு மையக்கருத்தின் பல்திசை விரிவாகி, மனித வாழ்க்கைக்குரிய எல்லா மெய்மைகளையும் யும் ஒரே கோப்பமைப்பாக்கி, மனித உலகுக்கு வழங்குகிறது

இதை முதன் முதலாக உலகுக்குச் சுட்டிக்காட்டியவர் காலஞ்சென்ற உலகப்பேரருட் பேரறிஞர் ஆல்பெர்ட்சுவைட் சரேயாவர். இவ் வாய்வேட்டின் ஆசிரியர் அதனை முழுதுற ஒருமைப் பாடாகக் காட்டி, அதனை ஒரு சமயப் பெருநூலுடன், விவிலியத் திருமறையுடன் பொருத்தியும் காட்டியுள்ள **அழகருமை உண்மையிலேயே வியப்பார்வமும் இறும்பூதும் ஊட்டதக்கதாகும்**

முடிபு இயேசுநெறி முடிபாகக் காணப்படுகிறதே என்று அச்சமய நெறியாளரோ, பிற சமய நெறியாளரோ மலைப்புறத்தேவையில்லை. அவரின் ஆராய்ச்சிகளின் பூர்வ பாகம் முழுவதும் இயேசு நெறி எண்ணுத அறிஞரின் ஆய்வுரைகளே படிகளாகக் கொண்டு முன்னேறுவதைக் காணலாம். சமயம் காரணமாக அவரிடமிருந்து வேறுபடுபவர்கள், அப் பூர்வ பாகத்தைவிட, இறுதிக்கண்வரும் உத்தரபாகத்திலேயே வேறுபாடு மிகுதி காண்டல் சாலும். ஆனல் கிறித்தவ உலகின் அறிஞரான ஆல்பெர்ட் சுவைட்சர் தொடங்கி வைத்ததைக் கிறித்தவத் தமிழறிஞரான அருளார் திரு அருளப்பர் விரிவு படுத்தியதுபோல, தமிழ்க் கிறித்தவரான வருங்காலத் தமிழ் ஆராய்ச்சி இளைஞர்கள் முயன்றால், இவ்வழி புதிய விவிலிய ஆராய்ச்சிகளும் பெருகி, வள்ளுவ விவிலிய ஆராய்ச்சித் துறை என்ற புதிய ஒளி விளக்கம் ஏற்பட வழி ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

திருக்குறள் தமிழகத்தில் பூட்டிவைக்கப்பட்ட பெட்டகமாய் இனியும் நெடுநாள் இருக்கக்கூடாது. உபநிடதங்களுக்கும் சமக்கிருத இலக்கியப் பெருங்கடலுக்கும் உலகில் புது வாழ்வளித்துள்ள **மேலையுலகம்தான்** தமிழுக்கும் திருக்குறளுக்கும் அதுபோலவே அறிவுலகில் உரிய தகுதி வாய்ந்த **நல்லிடம் அளிக்க வேண்டும்.**

அருளார் திரு அருளப்பரின் இவ்வாய்வொளிச்சுடர், விவிலிய - திருக்குறள் ஆய்வைத் தமிழ்க் கிறித்தவர்களிடையே, உலக அறிஞரிடையே பரப்புவதாக அமைந்துள்ளது. அதைத் **தமிழர் ஊக்குதல் கடன் ஆகும்**. அதுமட்டுமேறு, இசுலாமிய அறிஞரும், சீன சப்பானிய அறிஞரும்,

பிற சமய மொழி, இன அறிஞரும் இத்துறையில் ஈடுபடும் நிலை ஏற்பட வேண்டும்.

அருளார் திரு அருளப்பரின் ஆய்வேட்டின் கருத்துக்களைத் தமிழர் நன்கு பின்பற்றி உணர வேண்டுமானல், அவர்கள் ஒருபுறம் திருக்குறள் பற்றிய பழைய, புதிய உரைகளை உலகளாவிய ஆய்வேடுகளைத் தொகுத்துக் காண்டல் வேண்டும்; அதுமட்டுமன்று, விவிலிய மறைக்கருத்துக்களையும் வெறும் கிரித்தவர் நிலையிலன்றி, உலக சமயங்களின் மாணவர் என்ற நிலையில், ஒருச்சார்பற்ற முறையில் ஆழ்ந்தகன்ருய்ந்து காண்டல் வேண்டும்.

இன்றிருக்கும் உலகப் பெருஞ்சமயங்களுக்கு ஒரு தனித்தன்மை உண்டு—மாண்ட பழஞ்சமயங்களுடன் இவற்றை ஓப்பிட்டுப் பார்த்தால் தான் இது விளங்கும். திருக்குறளின் பெருமை இதுதான்—இது இன்றிருக்கும் உலகப் பெருஞ்சமயங்களின் முன்னணிக் கொடிப்படையின் கொடி ஆகும். அது விவிலியத்துடனும் பிற சமயத் திருமறைகளுடனும் நெருங்கிய தொடர்புடையதுமட்டுமன்று; அவற்றின் உள்ளொளி காணவும் அவற்றின் உள்ளாற்றல் பெருக்கி உலகை இன்னும் அவற்றின் வளர்ச்சியில் ஊட்டவும் பெரிதும் உதவுவதாகும்.

அருளாளர் திரு அருளப்பரின் ஆய்வேடு ஓர் ஒளிஏடு. அது இத்தகைய தமிழக மளாவிய உலகளாவிய ஆய்வாராய்வுக்கு ஒரு தொடக்கத் திருச்சுழியாய் அமைவதாக!

# முன்னுரை

சான்றோர் பண்புகளையும் ஒழுக்கத்தையுமே திருக்குறள் கூறுகின்றது என அறிஞர் பலரும் பொதுவாகக் கருது கின்றனர்.

திருக்குறள் பிரச்சார சங்கத்தின் அமைப்பாளரும், காஞ்சி காமகோடி செகத்குரு சங்கராச்சாரியாரிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவரும், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இந்தியா முழுவதும் பரவச்செய்து, தமிழ் அறி ஞர்களின் பாராட்டைப் பெற்றவருமான திரு. வான்மீகி காந்தன் அவர்கள்

''திருக்குறளின் 133 அதிகாரங்களும் உருவாக்குவது சான்றோனையே''* (மொழி பெயர்ப்பு - முன்னுரை பக். 8 1969)

என்று கூறுவது சிறப்பாகக் கவனித்தற்பாலது.

ஆகவே, திருவள்ளுவர் கூறும் சான்றாண்மை, அது ஊன் றிய ஐந்து தூண்கள் இவற்றை நன்கு ஆய்ந்து அறிவோமா யின் திருக்குறளின் சாரத்தை அறிந்தவர்களாவோம். ஆகவே இந்நூலில் முதற்கண் 'சான்றாண்மை' பற்றிக் கூறிய பின்னர், சால்பூன்றிய தூண்கள் ஐந்தும் ஒவ்வொன்றாகக் கூறப்படும்.

'அன்புடைமை' அதிகாரத்துடன் ''விருந்தோம்பல்'' என்னும் அதிகாரம் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள தால், அன்புடைமைக்குப் பின்னர் ''விருந்தோம்பல்'' சிறப்பை ஆய்வோம்.

அருள் என்பது அன்பீன் குழவி எனப்படுவதால் அடுத்த படியாக ''அருளை''ப் பற்றிக் கூறுவோம்.

''அருள் என்னும் அன்பீன் குழவி'' கூறப்படுவது 'பொருள் செயல்வகை' என்னும் அதிகாரத்தில் ஆதலான், இதன் உட் கருத்தையும் ஆய்வோம்.

---

* ''சான்றோன்'' என்பதன் விவிலியப் பொருளைப் **பிற் சேர்க்கை 9-ல் காண்க.**

''ஊழி பெயரினும் தாம் பெயரார்'' சான்றோர் என்று கூறப்படுகிறது : அத்துணை ''ஆண்மை''யுடன் செயல்புரிய வேண்டியவர்கள் அவர்கள் ! அதே சமயம் '' ஊழிற்பெரு வலியாவுள !'' என்றும் கூறப்படுகிறது. இந்த ஊழின் வலியும் சான்றோர் ஆண்மையும் எங்ஙனம் பொருந்தும் ? ஆகவே '' ஊழ் '' என்பது என்ன என்றும் ஆய்தல் அவசியம் எனத் தோன்றுகிறது.

ஆகவே பின்வருமாறு அமையும் இந்நூலின் பிரிவுகள் :

1. சான்றாண்மை என்றால் என்ன ?
2. சால்பூன்றிய தூண்களுள் - தூண் 1. அன்பு
3. விருந்தோம்பல்.
4. அருள் என்னும் அன்பீன் குழவி.
5. அருளும் பொருளும்.
6. சால்புத்தூண் 2. நாண்.
7. ,, ,, 3. ஒப்புரவு.
8. ,, ,, 4. கண்ணோட்டம்.
9. ,, ,, 5. வாய்மை.
10. ஊழ்.

இவைபற்றிக் கூறப்படும் கருத்துக்கள் விவிலியக் கருத்துக்களுடன் தொடர்பு கொண்டவை எனக்கருத இடமுண்டா என்பது பிற்சேர்க்கைப் பகுதியில் கூறப்படும்.

அண்மையில் புலவர் மு. தெய்வநாயகம் அவர்கள் வெளியிட்ட திருக்குறள் ஆய்வு நூல்களைப் படித்த பின்னர், வள்ளுவர் கூறும் சான்றோர், சான்றாண்மை, அச்சால்பூன்றிய தூண்கள் இவைபற்றி மேலும் ஆய்ந்தறிய வேண்டுமென எழுந்த ஆர்வத்தினின்று பிறந்ததே இச் சிறுநூல். பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையாரது 'மணிவிளக்கவுரை' யில் கண்ட பல அரிய கருத்துக்கள் எனது சிறிய முயற்சிக்குப் பெரிதும் அரணாயமைந்துள்ளனவென்பதை, ஈண்டு ஆளப்படும் மேற்கோள்கள் பலவற்றினின்று அன்பர்கள் எளிதில் காணலாம். அன்னாருடைய உரைகளுக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

+ இரா. அருளப்பா.

# 1. சான்றாண்மை எது?

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்.

என்கிறார் வள்ளுவர்.

இவ்வைந்து உயர்பண்புகள் இல்லையேல் சால்பு என்னும் மண்டபம் நில்லாது என்பது பொருள்.

திருக்குறள் நயவுரை குறிப்பிடுவதுபோல, “ஐந்துகால் மண்டபங்கள் மிகுந்த காலம்போலும் அது... அசோகத்தூண் முதலியன மிகுதியும் பேசப் பட்ட காலமது;” ஆகவேதான் இவ்வுருவகத்தைக் கையாள்கின்றார்.

ஈண்டு கூறப்படும் இவ்வைம்பெரும் பண்பு களின் உண்மைக் கருத்தை முழுதுற அறிய வேண் டுமாயின் அவை தாங்கி நிற்கும் ‘சால்பு’ என்பதன் பொருளை நன்கு கண்டுணர்தல் வேண்டும்.

அதே சமயத்தில், ‘சால்பு’ என்பதன் உட் பொருளை நன்கு அறிய வேண்டுமாயின், அதனைத் தாங்கி நிற்கும் தூண்கள் ஒவ்வொன்றன் உட்பொரு ளையும் அலசிப்பார்த்தல் அவசியம். மண்டபத்தின் சிறப்புக்கு ஏற்றவையாகத்தான் தூண்கள் இருக் கும். தூண்களின் சிறப்புக்கு ஏற்றவாறுதான் மண் டபத்தைக் கட்டுவர்.

எனவே, சால்பு என்றால் என்ன? வள்ளுவர் சால்பு என்பதுபற்றிப் பேசுவது ‘சான்றாண்மை’

என்னும் அதிகாரத்தில்என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அதிகாரத்தில், சால்பு–சான்றாண்மை என்ற சொற்களைப் பொருள் வேறுபாடின்றிப் பயன்படுத்துவதுபோல் தெரிகிறது. இதே அதிகாரத்தில் 'சான்றோர்' என்ற சொல்லையும் ''சான்றவர்'' என்ற சொல்லையும் 'சால்பு' 'சான்றாண்மை' என்ற சொற்களுடன் இணைத்துப் பேசுவதைக் காண்கிறோம். ஆகவே, 'சால்பு', சான்றாண்மை, சான்றோர்' என்ற சொற்கள் பொருள் தொடர்பு உடையன என்பது தெளிவாகிறது. அஃதாவது, ''சால்புடையவர் சான்றோர், அவரது பண்பே சான்றாண்மை'' என்று புலனாகிறது.

இக்கருத்தைப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையவர்கள் தெளிவுபடுத்துகின்றார்.

''சான்றோன் என்பது சால்புடையவன் என்ற பொருளுடையது. சால்பு என்பது **பண்பின் நிறை பொங்கல் மலர்ச்சி**, பண்பிற்சிறந்து, இயல்பாகவே **பண்புருவினனாகி**, பிற பண்பாளர்களுக்குச் சான்றாக, பின்பற்றும் மாதிரியாக, இலக்கண மேல்வரிச் சட்டமாக நின்று, பண்பாளர்களிடமெல்லாம் சால்பலைகளையும், மற்ற எல்லாரிடமும் பண்பலைகளையும் பரப்பும் **பண்புடையவனே** - சால்புடையவனே, சான்றோன்; அவன் பண்பே சான்றாண்மை''.

(மணிவிளக்க உரை - II - பக், 534).

ஆகவே, இவ்வதிகாரத்தில் கூறப்படும் கருத்துக்களை ஆராய்ந்தால் சால்பு என்பதன் உட்பொருளை நன்கு அறியமுடியும்.

கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

''நன்மையே செய், தீமை செய்யாதே'' என்பது பகுத்தறிவுள்ள மாந்தர்க்கெல்லாம் பொதுவிதியாகும். இதை எல்லோரும் ஒரேவிதமாகவா மேற்கொண்டு ஒழுகுகின்றனர்?

1) எப்போதும் நன்மையே செய்பவர் உண்டு. அஃதாவது தீமையே செய்யாதவர் உண்டு. தீமை செய்யாமலிருப்பதே ஒரு நன்மை என்றும் கூறலாம் அல்லவா?

2) எப்போதும் தீமையே செய்பவர்,

3) சில சமயங்களில் தீமை செய்பவர்,
சில சமயங்களில் நன்மை செய்பவர்,

4) தீமையானதெல்லாம் தவிர்ப்பதோடு, நன்மையானதெதுவோ அதையெல்லாம் தம் கடமைபோலப் பாவித்துச் செய்து முடிக்க நினைப்பவர்களும் உண்டு. தீமையானதெல்லாம தவிர்க்கக் கடமையுண்டு. நன்மையானதெல்லாம் செய்யவோ கடமை என்றில்லை. சாதாரண மக்கள் அஃதாவது பண்பு நிறைவற்றவர்கள் இந்த அளவுக்கு முனைவதில்லை. இன்றியமையாத கடமைகளை மட்டும் செய்து, அத்தோடு மன நிறைவு கொள்பவர்கள் அவர்கள். பண்பு நிறைவுடையவர்களோ ''நல்லவையெல்லாம் கடன்'' என்றறிந்து அவற்றைச் செய்ய முனைந்து நிற்பர். இந்த முனைவே ஆண்மை என்க. இவர்களைக் குறித்தே இக்குறட்பாவில் கூறப்படுகிறது.

இந்த 'ஆண்மை' சான்றாண்மை எனப்படுகிறது. ஏனெனில், ''பிற பண்பாளர்களுக்குச் சான்றாக''...ஏன், நன்மைக்கே சான்றாக மேற்கொள்ளப்படுவதொன்றாகும். நன்மைக்குச் சான்று என்றால் பொருள் என்ன? நன்மை எல்லாம் செய்வதால் ஒருவன் எத்துணை மேன்மையடைகிறான்,

அடையக்கூடும்; அதனால் பிறர்க்கு எத்துணை நன்மை விளையக்கூடும்-விளைகின்றது – என்பதெல்லாம் தன் நடத்தையால், செயலால், முன்மாதிரியால் காட்டுவதாகும். தீயவர்க்கும், தீமைக்கும் சான்று பகர்வது எளிது. அஃதாவது தீமை செய்வதால் ஏற்படக்கூடிய சிற்றின்பத்தைப் பிறரும் நுகருமாறு தன் தீய முன்மாதிரியினால் செயலாற்றுவது எளிது. ஆனால் நன்மையே என்றும் செய்து காட்டுவது, எல்லா நன்மையும் செய்ய முனைவது, அதுவே தன் கடமை என்று வாழ்வது எளிதன்று. ஆண்மை மிக்க செயல். ஆகவேதான் இது சான்றாண்மை எனப்படுகிறது என்க.

சுருங்கச் சொல்லின் - நன்மையானதெதுவும் கடமை போலக் கருதிச் செய்வது சான்றோர்க்கு, சால்புக்கு உரிய முதற்பண்பாகும்.

குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று.

இக்குறளில், 'நலனே' என்ற சொல்லில் காணும் ஈற்றேகாரம் வெறும் அசையா, அன்றித் தேற்றேகாரமா என்பது ஆயத்தக்கது. வெறும் அசையாய் மட்டுமிருந்தால் பொருள் ஒன்று: தேற்றேகாரமாயிருந்தால் பொருள் வேருகும்.

"குணநலம் சான்றோர் நலன்" என்பதற்கும் "குணநலமே சான்றோர் நலன்" என்பதற்கும் பொருள் வேறுபாடுண்டு. இக்குறட்பாவுக்கு உள்ள உரைகள் பெரும்பாலும் இரண்டாவதாகச் சொன்ன பொருளையே கூறுகின்றன.

பரிமேலழகர்: "சான்றோர் நலமாவது குணங்களாகிய நலமே."

சிதம்பரனர் : "சான்றேர்களின் நன்மை குணங்களால் ஆகிய நன்மையே ஆகும்."

தேவநேயன் : "சான்றேர் நலமாவது குணங்களான நலமே."

கா. சுப்பிரமணியப்பிள்ளை : "சான்றேர்களது சிறப்பு குணச்சிறப்பே."

மு. வ. : "சான்றேரின் நலம் எனப்படுவது அவருடைய பண்புகளின் நலமே."

குழந்தை : "சான்றேர்களது நலமாவது நற்குணங்களாகிய நலமேயாகும்."

இதுவே இக்குறளுக்குப் பொருளாயின், வள்ளுவர் "சான்றேர் நலனே" எனக்கூறியதன் காரணம் என்ன? நலம் என்ற சொல்லைக் குணம் என்ற சொல்லுடன் இணைத்துக் கூறும்போது பொருள் அத்துணைச்சிறப்பாகத் தென்படவில்லை. சான்றேர்க்குள்ள சிறப்பெல்லாம் குணச்சிறப்பே என்பது எளிதில் புலப்படக்கூடியதேயன்றே? அச்சொல்லைச் 'சான்றேர்' என்ற சொல்லுடன் இணைத்துத் தேற்றேகாரத்தையும் சேர்க்கும்போது பொருள் சிறப்பதாகத் தெரிகிறது.

முந்திய குறட்பாவில், நன்மையானதெல்லாம் செய்வதே தம் கடமை என வாழ்க்கை நடத்துவதே சான்றேர் பண்புகளில் தலை சிறந்ததெனக் குறிப்பிடப்பட்டது. இதுவே சான்றேர்க்குரிய நலன், சான்றேரிடம் காணும் நன்மை, எனலாம். இந்தப் பண்பே ஒருவர்க்கிருக்கக்கூடிய குணங்களுள் சிறந்தது என்றால் கருத்து சிறக்கிறதன்றே? ஆகவே சான்றேர் வாழ்ந்து காட்டும் குணநலனே மெய்யான குணநலம் என்ற பொருள்

கிடைக்கிறது. பிறநலன்கள் நலன்-நன்மை என்ற பெயருக்குத் தகுதியற்றவை. அஃதாவது நன்மையெல்லாம் செய்வதைத் தன் கடமையென ஒழுகுபவனின் பண்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தீமை செய்யாமலிருந்தால்போதும், ஏதோ ஒரு நன்மை செய்தால்போதும் என மனநிறைவு கொள்பவனின் பண்பு அத்துணைச் சிறப்பு எய்துவதில்லை என்க.

''பிறநலம்'' என்ற தொடருக்கு உரைகள் பெரும்பாலும் ''உறுப்புகளின் சிறப்பு'' என்ற பொருள் கொள்கின்றன. உடல் உறுப்புகளின் சிறப்பு, உடலழகு அல்லது கல்வி, குடிப்பிறப்பு முதலிய சிறப்புகள் இங்குக் குறிக்கப்பட்டுள்ளன என்றால் இவையெல்லாம் நலன்கள் அல்ல, குணச் சிறப்புதான் சிறப்பு என்று வள்ளுவர் சொல்லித் தான் தெரிந்துகொள்ள வேண்டுமோ எனக்கேட்க இடமுண்டு

சுருக்கம்: நன்மையானதெல்லாம் செய்ய முனைவது தம் கடமை எனக்கருதும் சான்றோர் பண்பே 'சால்பு' என்னும் ''பண்பின் நிறை பொங்கல் மலர்ச்சி'' (மணி விளக்கவுரை) பிற பண்பாளருக்குச் சான்றாக விளங்குவதற்கு ஏற்ற பண்பு. இதனோடு ஒப்பிட்டால் பிற நற்பண்புகள் மங்குகின்றன.

அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பூன்றிய தூண்.

''பண்பின் நிறை பொங்கல் மலர்ச்சி'' என மணி விளக்க உரைகூறும் ''சான்றோர் நலனே'' அவர்கள் 'பண்புருவினர்' ஆகும்படி செய்யும். இங்ஙனம் பண்புருவினர் ஆகுமாறு செய்யும் குணச்

சிறப்புகள் ஐந்து. இவையே 'சால்பின்' நிறைவை எய்தச் செய்து, அதனைத் தாங்கும் தூண்களாக வும் உள்ளவை.❋

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

'எவ்வுயிரையும் கொல்ல மாட்டேன்' என்ற விரதம் (நோன்மை) பூண்டு வாழ்ந்த மக்களின் காலம் வள்ளுவர் வாழ்ந்த காலம்.

ஊன் தின்னுதல் பொருட்டாயினும் சரி, வேள் வியின் பொருட்டாயினும் சரி, 'ஒன்றன் உயிர் செகுத்துண்ணுமை நன்று' என்பது வள்ளுவரே தரும் படிப்பினை.

ஆனால், இத்தகைய விரதத்தைக் கடைப்பிடித் தவர்கள் உயிர்களின் உயிரை மாய்க்காவிடினும் உயிரினும் மேலானதாகக் கருதப்படவேண்டிய பிறருடைய பெயரைக் கெடுப்பதைப் பெரிதாகக் கருதவில்லை. பிறரைக் குறித்து அவதூருகப்பேசு வதாலோ, பிறர் செய்த குற்றத்தைப் பலரும் அறியப் பறைசாற்றுவதாலோ பிறருடைய வாழ்வு கெடுவதை நாம் பன்முறை பார்த்து வருகிறோம். நன்மக்கள்-சான்றோர்-இங்ஙனம் செய்யமாட்டார் கள். ஆகவேதான் 'பிறர் தீமை சொல்லா நலத் தது சால்பு' என்று படிப்பிக்கிறார் வள்ளுவர். உயிர் களைக் கொல்லாமையாகிய நன்மை பலரும் கடைப் பிடிக்கலாம். ஆனால், 'பிறர் தீமை சொல்லா' நோன்மை முன்னதைவிட மிகப்பெரிய நன்மை. அது 'சால்புடையார்' பின்பற்றும் கொள்கை என் கின்றார்.

---

❋ ஒவ்வொரு தூணுக்கும் விளக்கம் பின்னர் தரப்படும்.

சுருங்கக் கூறின்; எந்நிலையிலும் பிறர்மீது தீமை கூருமல் இருப்பது சால்புடையவர் பண்பென்க.

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்ரேர்
மாற்ருரை மாற்றும் படை.

இக்குறளில் 'ஆற்றுவார்' என்ற சொல்லுக்குப் பலவிதமாகப் பொருள் கூறப்படுகிறது.

1) ஒரு காரியத்தை வெற்றி பெறச்செய்து முடிப்பவர்–இது பரிமேலழகர், சிதம்பரஞர், புலவர் குழந்தை, கா. சுப்பிரமணியப் பிள்ளை, தேவநேயன், இவர்கள் கூறும் பொருள்.
2) பெரியார்-மணக்குடவர், பரிப்பெருமாள், இவர்கள் தரும் பொருள்;
3) நல்லோர்–பரிதியார்
4) ஐம்புலன்களின் வேகத்தை ஆற்றுவார்-காலிங்கர்.
5) ஆற்றலுடையவர்–மு.வ. அவர்கள்.

எடுத்த காரியத்தை வெற்றி பெறச் செய்து முடிப்பவர்கள். (செயற்கரிய செய்வார் பெரியர் என்ற குறட்பாவின்படி) பெரியார் ஆவர். அவர்களை நல்லோர் எனவோ ஆற்றலுடையவர் எனவோ அழைப்பதில்தவறில்லை. ஆகவே, 'செயற்கரிய ஒரு காரியத்தை வெற்றி பெறச் செய்து முடிப்பவர்' என்றபொருளே சிறக்கிறது. அவர்களைச் செயலாற்றுவார் எனினும் பொருந்தும்.

இங்ஙனம் வெற்றி பெறச்செயலாற்றுவார்க்கு ஆற்றல் எங்கிருந்து வருகிறது என்று கேட்டால் 'பணிதலே அந்த ஆற்றல்' என்கிருர் வள்ளுவர்.

மக்கள் பெரும்பாலும் 'பணிதலை' ஆற்றல் என்று கருதார். யாரையும் பொருட்படுத்தாமல், யாருடைய துணையையும் தேடாமல் தாமாகவே ஒன்றைச் செய்து முடிக்க முனைந்தால் அதைத்தான் 'ஆற்றல்' என்பர். பிறர் துணையை நாடுவது ஆற்றல் இன்மைககுச் சான்ருகக் கருதப்படுமே யொழிய ஆற்றலுக்கு அத்தாட்சியாக அன்று. இது உலக நடை.

ஆனல் வள்ளுவர் கூறுவது உலக நடைக்கு மாருக உள்ளது. தாழ்மையுடன் பிறர் துணையை நாடுவதில் காணப்படும் 'பணிதல்' அவர்களது ஆற்றலாகப் பரிணமிக்கிறது என்கிருர். அதுவே அவர்களுடைய ஆற்றல் என்றும் சொல்லுகிருர்.

'பணிதல்' என்பதன் கருத்தும் 'ஆற்றல்' என்பதன் கருத்தும் ஒன்றுக்கொன்று முரணயிருப்பதுபோல் தோன்றினலும் 'பணிதலில்தான் சான்ருேருடைய ஆற்றல் உள்ளது' என்பது வள்ளுவர் கருத்து.

இது எந்த அளவுக்கு உண்மை என்பதை மேலும் வலியுறுத்துகின்ருர். பணிதலான இந்த ஆற்றல் எடுத்த காரியத்தை வெற்றி பெறச்செய்து முடிக்கக்கூடியது மட்டும் அன்று. அதை முடிப்பதற்கு எதிரிகளால் தடைகள் ஏற்பட்டாலும்கூட அவ்வெதிரிகளையும், மனம் மாற்றி, தம்பால் ஈர்த்துக்கொள்ளக்கூடிய வலிமை படைத்த கருவியாய் உள்ளது.

சுருங்கக்கூறின், சான்ருேர் தமக்கு ஏற்படக்கூடிய எவ்வித எதிர்ப்புக்களையும் 'பணிதல்' என்னும் சால்பு நிறைபண்பினல் மேற்கொள்ள முடியும்.

இத்தகைய சால்பு சாதாரண மக்களிடம் எதிர் பார்க்க முடியாது. தன்னல உணர்ச்சிகள், கீழ்த்தர எண்ணங்கள், இவை உள்ளத்தில் தோன்றக் கருவிகளாய் உள்ளஐம்புலன்கள் இவற்றின் போக்கையும், சிறப்பாக இப்புலன்கள் செயலாற்றும் வகையையும், நன்கு உய்த்துணர்ந்து தம்மனத்தை முற்றிலும் அடக்கி ஆளக்கற்றவர்களிடமே இத் தகைய சால்பு உளதாகும். இதையும் வள்ளுவர் வேறிடத்தில் குறிப்பிடுகிருர்.

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற குறளுக்கு அடுத்தபடியாக.

சுவையொளி ஊறேசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

என்கிருர். இத்தகைய சால்புடையவர்க்கு உலகமே கட்டுப்பட்டு நடக்கும்போது, எடுத்தகாரியமோ, எதிரிகளோ அடங்குவதில் வியப்பொன்றுமில்லை, இந்தக் கருத்தில் "ஆற்றுவார்" என்ற சொல்லுக் குக் காலிங்கர் கூறும் உரையும் பொருந்துவதாகவே தோன்றுகிறது.

சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.

முந்திய குறளில், தாழ்மையுடன் பிறர் உதவி நாடும் பணிதலில்தான் சான்றேருடைய ஆற்றல் உள்ளது, இந்த ஆற்றல் எடுத்தகாரியத்தை வெற்றி பெறச்செய்துமுடிக்கக்கூடியது என்று கூறப்பட்டது.

இனி, எடுத்த காரியத்தை வெற்றிபெறச் செய்துமுடிக்க ஆற்றல் இருந்தும் அதைப் பயன் படுத்தாமல் மிக உயர்ந்த ஒரு நோக்கத்தை உள் ளத்தில் கொண்டு தோல்வியையும் வேண்டு மென்றே ஏற்றுக்கொள்வர். [ பிற்சேர்க்கை – 1 காண்க].

இத்தகைய தோல்வியை மக்கள் எப்போது ஒப்புக்கொள்வர்? தம்மைவிட உயர்ந்தோர், தம்மைவிட வலியவர், தம்மைவிட ஆற்றல் மிக்கவர், இவர்களிடம் மட்டுமே ஒப்புக்கொள்ள ஒருப்படுவர். தம்மைவிட இழிந்தோர், தம்மைவிட மெலியார், தம்மைவிட ஆற்றல் குன்றியவர் இவர்களிடம் தோல்வி கண்டால் அதை ஒப்புக்கொள்ள ஒருப்படார். அங்ஙனம் ஒப்புக்கொள்வாராயின் அது மிகமிக உயர்ந்த பண்பாகும். அதுவே சால்புக்குச் சான்றாகும்; சால்பு என்னும் பொன்னுக்கு உரைகல் போல் விளங்கும் இத்தகைய உயர்பண்பு உள்ளத்துப் பேராண்மை கொண்டவர்க்கே இயலும் என்க.

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

எந்நிலையிலும் பிறர்மீது தீமை கூறாமல் இருப்பது சால்புடையவர் பண்பென மேலே (4-ஆம் குறளில்) கூறப்பட்டது.
எதிர்ப்புகள் ஏற்பட்டாலும்கூடப் பணிதலே சால்புடையவர் மற்றொரு பண்பென 5-ஆம் குறளில் கூறப்பட்டது.

தம்மைவிட இழிந்தவரிடம் தோல்வி கண்டால் கூட, அத்தோல்வியை உயர்ந்ததொரு நோக்கத்துக்காக ஒப்புக்கொள்வர் சால்புடையவர் என்று 6-ஆம் குறளில் கூறப்பட்டது.

பிறர்மீது தீமை கூறாமலிருப்பதே கடினம்.

எதிர்ப்பு ஏற்படின் பணிதல் அதைவிடக் கடினம்.

இழிந்தவரிடமும் தோல்வி ஒப்புக்கொள்வது அதனினும் கடினம்.

இனி, தமக்குத் தீமை செய்தோர், துன்பம் இழைத்தோர் இவர்க்குக்கூட நன்மை செய்தல், இனியவையே கூறுதல், இனியவையே செய்தல், அனைத்திலும் உயர்ந்த செயலாகும். இது சாதாரண மனிதர்க்கு இயலாதது. சால்பு எய்திய மக்களுக்கே இயலும்.

சால்புடையவர் எனத் தங்களைக் கூறிக்கொள் வோர் இன்னா செய்தவர்க்கும் இனியவையே செய் யாவிடின் அத்தகைய சால்பினால் பயனில்லை. அஃ தாவது அது சால்பே ஆகாது!

இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

ஒருவனது வறுமை நிலை உலகநடை முறைப் படி இழிவானதாகக் கணிக்கப்படுகிறது. அதை யும் தாங்கக்கூடிய மனத்திண்மை உண்டானால் வறுமையும் இழிவாகக் கருதப்படத் தேவையில்லை. இந்த மனத்திண்மையே சால்பு என்க.

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு பவர்.

உலகமே பெயர்ந்தாலும் சான்றோர் நிலை பெய ரார். சான்றாண்மைக்குக் கடல்போல உள்ளவர் கள் அவர்கள்; பிறரால் அங்ஙனம் கணிக்கப்படு பவர்கள். சான்றாண்மையில் அத்துணை உயர்நிலை அடைந்தவர்கள் கடல்போல் பெரிதான ஆண்மை கொண்டவர்கள். காலம் தன் தன்மை குலைந்தாலும் சான்றோர் நிறைநிலை குலைவதில்லை.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

உலகமே நிலைகுலைந்தாலும் சான்றோர் நிலை பெயரலாகாது என்று முந்திய குறட்பாவில் கூறப்

பட்டது. அப்படிச் சான்றோர் நிலைகுலைந்தால் என்ன நடக்கும் என்று இக்குறட்பாவில் கூறப் படுகிறது.

உலகம் நிலைபெற்று உய்வதுயாரால்? எதனால்? என்ற கேள்விக்குப் பலர் பலவிதமாக விடை கூற லாம். ஆனால், முதற்கண் அது இறைவனது அருட் சத்தியால்தான் நிலைபெற்று, அவனால்தான் உய்வு பெறமுடியும் என்பதறகு மறுப்பில்லை என எவரும் ஒப்புக்கொள்வர்.

இந்த இறையருட்சக்தி உலகினர் உய்யக் கிடைப்பது யாரால்? அல்லது எதனால்?

தாங்களே பண்புருவினர்களாகி பிற பண் பாளர்களுக்குச் சான்றாகி, பண்பாளர்களிடம் சால் பலைகளையும், எல்லாரிடமும் பண்பலைகளையும் பரப்பும் ஆண்மையுள்ளவர்களாய், நல்லவை எல் லாம் தம் கடன் என்றறிந்து சான்றாண்மை மேற் கொண்டு எந்நிலையிலும் பிறர்மீது தீமை கூறாமல், எதிர்ப்புகள் ஏற்படினும் பணிதலே நன்றென; உயர்ந்த நோக்கத்துடன் தம்மைவிட இழிந்த வரிடமும் தோல்வி ஒப்புக்கொண்டு; தீமை செய் வோர்க்கும் நன்மையே செய்து; துன்பம் இழைத் தோர்க்கும் இனியவை புரிந்து இங்ஙனம் நன்மைக் கும், நன்மை வடிவினான இறைவனுக்கும் சான்றாக விளங்கும் இந்த ஆண்மை குன்றினால்; சான்றோரி டத்தே இந்தச் சான்றாண்மை குன்றினால்; உலகில் மக்கள் நிலை பெற்று இன்புடன் வாழ வழியேது!

இங்ஙனம் நன்மைக்குச் சான்றாக விளங்கும் ஆண்மை படைத்தவர்கள் குன்றும்போது உலகில் என்ன நடக்கிறது என்பதற்கு இன்றைய உலகில் நிகழும் ஒழுங்கீனமும், அவலநிலையும், நிலையற்ற சமாதானமுமே சான்றென்க.

ஆகவே, சான்றாண்மைக்கு ஆழிபோல் இருக்க வேண்டியவர் நிலை பெயர்ந்தால் சாதாரண மக்கள் நிலையும் தடுமாறவேண்டியதுதான். மக்கள் நிலை பெயர்ந்தால் மக்கள்வாழ் உலகமும் நிலைபெயரும்!

'இருநிலம் பொறை தாங்காது! என்று குறட்பாவில் கூறுவது இக்கருத்தென்றே புலப்படுகிறது. ஊழிபெயரினும் தாம் பெயரலாகாது என்ற ஆண்மையுடன் வாழவேண்டிய பொறுப்புடைய சான்றோரே நிலைகுலைந்துவிட்டால், ஊழிபெயராமல் வேறு என்ன ஆகும்?

## 2. அன்பு

'அன்பு' க்குஉரையாளர் கூறும் பொருளாவது

1. **பரிமேலழகர்:** ''வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார் கண்: காதலுடையனாதல்.
2. **மணக்குடவர்:** அன்புடைமையாவது தன்னைச் சார்ந்தார் மாட்டுக் காதலுடையனாதல்.
3. **பரிதியார்:** அன்புடைமையாவது புதல்வரிடத்திலே அன்புடைமை ஆத்மாக்களிடம் தோறும் உண்டாக வேணும் ஆதலால் அன்புடைமையாயிற்று.
4. **ஞா. தேவநேயன்:** அஃதாவது, இல்லறத்தானும் அவன் வாழக்கைத் துணையுமாகிய கணவனும் மனைவியும் தாம் பெற்ற மக்களிடத்துக் காட்டிய அன்பை, துறவோர்ப் போற்றல், விருந்தோம்பல், ஒப்புரவொழுகல் இல்லாதார்க் கீதல், இரப்போர்க்கிடுதல் முதலிய இல்லற வினைகள் நடைபெறற்கேற்பப் பிறரிடத்தும் உண்டாயிருத்தல், பிள்ளைகளைப் பெற்ற

வர்க்கே பிறரிடத்து அன்புண்டாகும் உலகக் கொள்கை.

5. குழந்தை: நமக்குத் தொடர்புடையாரிடத்துக்கொள்ளும் பற்று அல்லது காதல்.

6. கா. சுப்பிரமணியபிள்ளை: மனைவி மக்கள் உற்றார் உறவினர் நண்பர் முதலியயோரிடத்து விருப்பமுடைமை.

7. சாமி. சிதம்பரனார்: உள்ளத்தில் அன்பு என்னும் பண்புடன் வாழ்வது.

8. கவிஞர் இராமலிங்கனார்:
காதலின் குடும்பம் கடந்த விரிவே அன்பு.

9. பேராசிரியர் இலக்குவனார்:
பிறவுயிர்களிடத்தும் அன்புடையராயிருத்தல்.

10. கா. அப்பாத்துரையார்:

திருவள்ளுவர் அறத்துக்கும் அன்புக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை விளக்கியுள்ளார் அதன்படி, ''அறம் உடலானால் அதை உள் நின்று இயக்கி வளர்த்து மலர்ச்சியடையச் செய்யும் உயிர்ப்பண்பு—நிலைப்பண்பான அதனை இயக்கப்பண்பாக்கும் உயிர்த்துடிப்புப் பண்பு—அன்புடைமையாகும். இவ்வன்பு-டைமை இன்பவாழ்வாகிய நிலத்தில் காதல் என்னும் வேரோட விட்டு, பாசப்பயிராக வானோங்கி வளர்ந்து, பண்புக்கிளைப் பரப்பி, சால்புத் தளிர் விட்டு, அருள் மலர் பூத்து, எல்லையற்ற பேரின்பமாகும் காழில் கனிதரும் கற்பகத் தருவாக இயல்வது. அன்புடைமை இடையறு இயக்கப் பண்பு அது ஆக்கப்பண்பு அழிவையும் ஆக்கமாக மாற்றிக் கொண்டே சென்று, அழிவாற்றல்களையே ஆக்க ஆற்றலாகச் செய்துவிடும் தன்மை வாய்ந்த பொன்

மாற்றுச் சித்தாற்றல், ஆக்கமலர்ச்சியாற்றல் ஆகும்.........மனித இன நாகரிகம் இது வரை மலர்ச்சியடைந்து வந்திருப்பதும் இனியும் மலர்ச்சியடைய இருப்பதும் அன்புடைமை அறத்தினலேயே, அதுவே இல்லறம் துறவறம் ஆகிய இருவகை அறங்கட்கு மட்டுமன்றி அழி வாற்றல் தடுக்கும் எதிர்மறை அறமாகிய மறத் திற்கும் அடிப்படை, என்று அவர் பலபட விளக்குகிருர்.

அன்பு, அருள், இன்பம் என்னும் தெய்வப் பண்புகளுள் அன்பும் ஒன்று: ''தெய்வத்தளம் நிலப்பண்பு மலர்ச்சியின் மலர்ச்சி விதையாதலினல் இது தெய்வ அறத்தின் உள்ளுயிர் இயக்கப்பண் பாக அமைகிறது. (மணி விளக்க உரை, 2ம். பகுதி-அதி. 8 காண்க)

தொடர்புடையாரிடத்துக் கொள்ளும் பற்றே அன்பு என்பது உரையாளருள் பெரும் பான்மை யோருடைய கருத்தாயிருப்பது தெளிவு.

ஆனல் இக்கருத்து வள்ளுவருடையது அன்று என்பதை அவரே விருந்தோம்பல் பற்றிக் கூறும் கருத்தினின்று தெளிவாகின்றது.

(இந்நூலின் 3ம் அதிகாரத்தைக் காண்க)

மேலும், கடவுளின் ஒருமைப்பாட்டை வாழ்க் கை நோக்க ஒருமைப்பாடு அல்லது உலக ஒருமைப் பாட்டின் மீதும், வாழ்க்கை நோக்க ஒருமைப் பாட்டை வாழ்க்கை ஒருமைப்பாட்டின் மீதும் கட்டமைத்த (1) திருவள்ளுவர், அவ்வாழ்க் கைக்கு இன்றியமையாத பண்பாக உள்ள அன்பை எங்ஙனம் தொடர்புடையார் மாட்டுள்ள ஒன்ருகக்

கருதியிருக்க முடியும்? உலக ஒருமைப்பாட்டுக்கு இன்றும் இன்றியமையாத கருவியாக உள்ளது அன்பேயன்றோ? ''தெய்வப்பண்புகளுள்'' ஒன்றாகிய இந்த அன்பு ''தெய்வ அறத்தின் உள்ளுயிர் இயக்கப்பண்பாய் அமை'' வதால் (மணி விள. 2ம் பகுதி அதி. 8) அதனை மிகக்குறுகிய ஒன்றாக எண்ணி, தொடர்புடையாருடன் மட்டுமே செலுத்தப்பட வேண்டிய ஒன்றாக எங்ஙனம் வள்ளுவர் கருதியிருக்க முடியும்?

இனி, இந்த அன்பு இறைவனுடன் தொடர்பு கொண்டதா அன்றா? என்ற கேள்வி எழும்.

உரையாளர் பெரும்பாலும் இக்கேள்வி-யை எழுப்புவதாகத் தெரியவில்லை. மணி விளக்கவுரை மட்டும், இந்த அன்பு ''எல்லையற்ற பேரின்பமாகிய காழில் கனிதரும் கற்பகத் தருவாக இயல்வது'' என்று கூறுகையில், இறைவனுடன் தொடர்பு கொண்ட ஒன்றாகவே கருதுவதாகத் தெரிகிறது. இக்காரணம் பற்றியும் அன்பு தொடர்புடையார் மாட்டுள்ளது என்ற கருத்து பொருந்தாது. இறைவனுடன் பேரின்பத் தொடர்பு கொண்டுள்ள அன்பு, அவனுடன் தொடர்பு கொண்டுள்ள மனித இனம் அனைத்தோடும் தொடர்பு கொண்டாக வேண்டும். மானிடர் எல்லாரும் இறைவன் மக்கள் என்ற கருத்து எல்லோருக்குமே ஏற்புடையதாயின் ஒரு தந்தையின் மக்களிடையே தொடர்புடையார், தொடர்பற்றார் பற்றிப் பேச்சு எழ இடமில்லையன்றோ? மக்கள் எல்லோரும் தொடர்பு கொண்டவர்களேயன்றோ? இக் கருத்துக் களை இனி ஆய்வோம்.

ஈண்டு வள்ளுவர் கூறும் அன்பு யாருக்குப் பொருந்துவது? இறைவனுக்குப் பொருந்தும் அன்பா? மனிதனுக்குப் பொருந்தும் அன்பா? என்பது ஆழ்ந்து ஆயவேண்டிய பொருள். இக் கேள்விக்குப் பதில் கூறுமுன் வேருெரு கேள்விக் குப் பதில் காண வேண்டியிருக்கிறது. அஃதாவது, வள்ளுவர் தம் நூலில் கூறும் கருத் துக்கள் எல்லாம் மனிதர்க்கு மட்டும் பொருத்தியே பொருள் காண வேண்டுமா? என்பது.

திருக்குறள் ஓர் அறநூலாதலால் அது மனிதர் கள் நடத்த வேண்டிய வாழ்க்கையைப் பற்றியதே; ஆகவே, அவர் கூறும் கருத்துக்கள் மனித வாழ்க் கையோடு மட்டுமே தொடர்பு கொண்டவை, என்ற முடிவுக்கு வரக்கூடும். ஆனால் இது முற்றும் உண்மையா?

அறம் என்பது மனித வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டதேயெனினும், இறைவனுடன் எத்தொடர்பும் இல்லாததா? அறவாழ்க்கை என்பது இறைவனுடன் தொடர்பற்ற வாழ்க்கையா? இக் கேள்விகளுக்கு வள்ளுவர் "கடவுள் வாழ்த்து" அதி காரத்திலேயே பதில் தந்து விடுகிருர்.

இறைவனை முதலாகக் கொண்டது உலகு; அவ்வுலகில் வாழும் மனிதனும் அவ்விறைவனையே முதலாகக் கொண்டவன்; இறைவனின் தாளைத் தொழுவதே வாழ்க்கைப் பயனை அடையும் வழி; ஆகவே அவனது'' தாள் சேர்ந்தார்க்கல்லால்" "மனக்கவலைமாற்றலரிது" வாழ்வென்னும் ஆழியை நீந்தல் அரிது; அவனது பொருள்சேர்புகழ் புரிந் தால் தான் இருள்சேர் வினை நம்மை அணுகாது; அப்போது மட்டுமே நீடுவாழ்வு உண்டு என்று, இறைவனுடன் தொடர்பு கொண்ட அறவாழ்க்

கைக்கு அடிகோலுகிருர் ஆசிரியர். இறைவனே அறவாழி அந்தணன் என்றும் அழைக்கிருர்.

ஆகவே, அவரது நூலில் வரும் அடிப்படை மையக் கருத்துக்கள் யாவும் இறைவனோடு தொடர்பு படுத்தியே விளங்கிக்கொள்ள வேண்டும. 'இறைவன்' என்ற சொல்லை முதல் அதிகாரத்தில் தவிர வேறெங்கும் ஆளவில்லை ஆசிரியர். எனினும் இறைவனைப் பற்றிய கருத்தும்-அவனோடு தொடர்பும்-தம் நூலில் வேவெறங்கும் இல்லை என்பது தவருனமுடிவாகும்.

"ஆதிபகவன் முதற்றே உலகு" என்று தம் நூலைத் தொடங்குபவர், அவ்வுலகிலுள்ள எல்லாமே -சிறப்பாக நல்லவையெனப்படும் எல்லாமே- அவனே முதலாகக் கொண்டுள்ளன என்ற கருத்துடன் தான் தம் நூலை இயற்றியிருப்பார். கடுகு போன்ற இக்குறட்பாக்களைத் துளைத்து நோக்கிஞல் கருத்துப் புலப்படும்.

திருக்குறளின் அடிப்படைக் கருத்துக்களும்-மையக் கருத்துக்களும் பின்வருமாறு:

இறை உண்மை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, துறவு, அருளுடைமை, தீவினை அச்சம் செய்ந்நன்றியறிதல், மெய்யுணர்தல், (சான்ருேர் நூலாதலால்) சான்ருண்மை, இச்சான்ருண்மையின் ஐந்து தூண்களென ஆசிரியரே குறிப்பிடும் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை —இன்பம் வீடு-இவையே.

இவற்றையெல்லாம் ஆசிரியர் இறைவனுடன் தொடர்புபடுத்தியே தம் நூலை இயற்றியிருப்பார் என அழுத்தமாகச் சொல்லலாமன்ருே?

இக்கண்ணோட்டத்தில் 'அன்பு' என ஈண்டு கூறப்படுவது இறைவனிடத்துக் காணும் அன்பா, மனிதனிடத்துக் காணும் அன்பா என்னும் கேள்விக்கு விடைகாண முயல்வோம்.

உலகில் நாம் காணும் நலன்களுள், உயர்பண்புகளுள், வாழ்க்கைக்குரிய தேவைகளுள் சிகரமாக விளங்குவதே அன்பு என்பதை எவரும் ஒப்புக் கொள்வர்;

இத்தகைய நலனுக்கு அகரமாக-ஆதிமூலமாக -இறைவன் அன்றி வேறுயார், வேறு எது இருத்தல் கூடும்! நல்ல-தெல்லாம் அவனையன்றி வேறு யாரை ஆதாரமாகக் கொண்டிருக்க இயலும்?

அங்ஙனமே இத்தகைய உயர்பண்பு, சுயநலம் மிகுந்த அற்பமனிதனை ஊற்றாகக் கொண்டுள்ளதா?

மனித வாழ்வின் தேவைகளுள் மிகமிக இன்றியமையாத-தாகக் கருதப்படும் இவ்வன்பை நமக்கு அளித்து, மன நிறைவு தரக்கூடியவர்யார்? அல்லது எது? வாழ்க்கையில் பலபல ஏமாற்றங்களுக்கெல்லாம் முதற்காரணம் இந்த அன்பே-அதாவது விரும்பிய அன்பைப் பெறுமல் போவதே-என்பது அனைவரும் அனுபவ வாயிலாக அறிந்தது. அன்பை அடைய ஆசிப்பதுபோல் நாம்வேறெதையும் ஆசிப்பதில்லை என்பது கண்கூடு- எனினும் எதிர்பார்க்கிற அளவுக்குப் பெறுகிறோமில்லை. ஏன்? .........குறைவு மிக உள்ள இடத்தில் அதாவது மனிதனிடத்து அதைத் தேடுகிறோம். மனிதனின் நெஞ்சம் மிகச் சிறியது. அதாவது அதிக அன்பைத் தாங்கவும் இயலாதது-வெளிப்படுத்தவும் இயலாதது. ஓரளவு அன்பு காட்டுவோரும் இறுதியில் ஏதாவதொரு நன்மையை எதிர்பார்த்தே அங்ஙனம் செய்கின்ற

னர். இதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். இத்துணை குறைவுள்ள இடத்தில் இத்துணை உயர்ந்த தொரு பண்பை எதிர்பார்ப்பதற்கு மாறாக, நிறைவே தன் இயல்பாகக் கொண்டுள்ள இறைவனிடம் அதைத் தேடுவோமாஞல் ஐயமின்றி அதைக் காண்போம்.

ஆகவே, இந்த அன்பு யாருக்குப் பொருந்துவது? அன்பே உருவாய் உள்ளது யார்? இறைவனு மனிதனு? இயல்பாகவே, அன்புருவானவன் இறைவன் என்ற கருத்து யாருக்கும் ஏற்புடைய தொன்ருகும். மனிதனிடத்து இயல்பாகவே அன்பு என்னும் சிறப்பு காண்கின்ரோம் இல்லை என்பதும் கண்கூடு யாரோ ஒரு சிலரிடத்து ஓரளவு அன்பு காணப்படினும் மனிதனுய் உள்ளவன் எவனும் அன்புருவானவன் அல்லன் என்பது தெளிவு. ஆகவே, இறைவன் ஒருவனே இயல்பாக அன்புருவானவன். அன்பே அவனது இயல்பு. அன்பே அவனது இயல்பாதலானும், அவ்வியல்பு அளவற்ற மாண்பு பொருந்தியதாதலானும், அதற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பது மிகப்பொருத்தமேயன்ரே?

இறைவனின் அன்பையும் அதன் அளவிலா ஆற்றலையும் அடைத்து வைக்க எங்ஙனம் இயலும்? அளவுள்ளது தான் தன்னுள் அடங்கிக் கிடக்கும் தன்மையது!

ஆகவே, வள்ளுவர் கூறும் அன்பு முதற்கண் இறைவனது இயல்பாகிய அன்பே என்பது தெளிவு.

அன்புக்கு அவர் கூறும் இலக்கணத்தினின்று இது மேலும் தெளிவுறுகிறது. அன்புக்கு அவர் கூறும் இலக்கணமாவது:

1. அதற்கு 'அடைக்கும் தாழ்' இல்லை: உண்மையான அன்பு எளிதாக வெளிப்பட்டு விடும்.

2. அன்புக்குப் பிரதி அன்பு காட்டாதவர்களையும் அணைக்கும் தன்மையது.

3. பிறர்க்கென உயிரையும் தியாகம் செய்யத் தயங்காது: "என்பும் உரியோம் பிறர்க்கு" என்ற அளவுக்கு அத்தியாகம் பரிணமிக்கும்.

4. ஆர்வமுடைமை ஈனும்: இந்த ஆர்வமுடைமை நண்பென்னும் நாடாச் சிறப்பை ஈனும்.

5. "மறத்திற்கும் துணை" யாயிருக்கும்.

6. உயிர்நிலை அதன்வழியது.

இவை யாவும் இறைவனின் இயல்பாகிய நிறை அன்புக்குப் பொருந்துபவையா? மனிதனிடத்துக் காணக்கூடியகுறை அன்புக்குப் பொருந்து பவையா?

சிறப்பாகப் பிரதி அன்பு காட்டாதவர்களையும் அணைத்து அன்பு காட்டுவது;

பிறர்க்கென உயிரையும் தியாகம் செய்யத் தயங்காமல் என் என்பும் உரியது பிறர்க்கு என்ற கொள்கையின் அடிப்படையில் வாழ்க்கை நடத்து வது;

இவை சுயநலமே உருவான மனிதப்பிறவிக்கு எளிதாக எட்டக்கூடியனவா? "நான் ஏன் ஒரு வனுக்காக என் உயிரையும் தியாகம் செய்ய வேண்டும்?" என்று அவன் ஐயுறத்தான் செய்வான். அந்த அளவுக்கு அவனைத் தூண்டி விடக்கூடியதென்ன? இத்துணைச் சால்பு நோக்கி அவனை வழிநடத்த வலிமை மிக்க ஓர் ஏவுதலாவது உண்டா? எங்கிருந்து வந்தது அந்த ஏவுதல்? அந்த முறையில் முன்மாதிரி காட்டியது யார்?

சாதாரண மனிதப் பிறவிக்கு இது எளிதன்று எனின், இறைவனே வந்து மனிதனுக்கு வழி காட்டித் தூண்டுதல் தரவேண்டும். தன்னுள் தேங்கிக் கிடக்கும் அளவிடமுடியாத அன்பை வெளிப்படுத்துவற்காக, அந்த அன்பினும் ஆர்வ முடைமையால் அவன் செய்தது என்ன? அந்த ஆர்வமுடைமையால் விளையும் 'நண்பென்னும் நாடாச்சிறப்பினை, எங்ஙனம் இறைவன் வெளிப் படுத்தினான்? அவன் காட்டிய அன்புக்குப் பிரதி அன்பு செலுத்தாதபோதும் அவன் "அன்பிலார் எல்லாம் தமக்குரியர்" என்று அரவணைத்தது எப்போது? எங்கு? "என்பும் உரியர் பிறர்க்கு" என்ற இலக்கணப்படி தன் உயிரையும் அவன் தியாகம் செய்தது எப்போது? எங்கு?.........

இறைவன் அன்பின் பெருக்கால், ஆர்வத் தால். உலகையும், மனிதரையும் படைத்தான்: அதே அன்பின் செயலால் தான் படைத்த மனிதருடன் நட்புக்கொள்ள விரும்பினான். மனிதன் "நாடாச்சிறப்பினை" இறைவன் அவனுக்கு அளித் தான். அந்தச் "சிறப்பு" இறைவனுக்குரிய பேரின்பத்தில் பங்கு பெறும் அளவுக்கு அவனை உயர்த்தியது. இத்துணை அன்பு காட்டிய பின்ன ரும் மனிதன் இறைவனின் அன்பைப் புறக்கணித் தான். புறக்கணித்த போதிலும் "தமக்குரியர்" என்று மனித இனத்தை அரவணைத்தான்: அதற் காகத் தன் உயிரையும் தியாகம் செய்யத் தயங்க வில்லை-என்ற கருத்துக்களைத் தம் 'உயிர்நிலை' என்று கருதும் கொள்கையினர் யார்?...........

(பிற்சேர்க்கை—2 காண்க)

இத்தகைய மிக உயர்ந்த பண்பாம் அன்பு சுயநலமே பெரும்பாலும் வாழ்க்கையின் குறிக்

கோளாகக் கொண்டொழுகும் மனிதர்க்கும் பொருந்த வேண்டுமானால், அது எங்ஙனம் ஆகும் அத்துணை ஆற்றல் எங்கிருந்து பெறலாம் என்ற கேள்விகள் எழும்?

(விடை, பிற்சேர்க்கை-3 ல் காண்க.)

## 3. விருந்தோம்பல்

'அன்புடைமை'க்கும் 'விருந்தோம்பலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. அன்பென்பது 'தொடர்புடையார்கண் காதலுடையனாதல். என்ற பொருளில் மட்டுமே கொள்ளப்படுகின்றது.

'விருந்தோம்பல்' என்பதன் உண்மைப் பொருளை ஆய்ந்தால் அது உண்மையன்று என்பது புலப்படும்.

விருந்து உபசரித்தல், வீட்டுக்கு வருபவரை அன்புடன் வரவேற்று உணவிடுதல் என்ற பொருளில்மட்டுமே இந்த அதிகாரத்துக் குறட்பாக்களுக்குப் பொருள் கூறப்பட்டு வருகிறது. ஆனால் 'விருந்து' என்ற சொல்லின் உண்மைப்பொருளை அல்லது முதற்பொருளை ஆய்ந்து நோக்கின், மேற்சொன்ன பொருள்மட்டுமேயன்றி வேறு ஆழ்ந்த பொருளும் இருப்பதாகத் தெரியவரும்.

விருந்து என்ற சொல்லுக்கு முதலில் புதுமை என்ற பொருள்தான் அகராதியில் தரப்படுகிறது. அதாவது, புதிதாயுள்ள நிலை. விரும்புவது என்னும் வேர்ப்பொருளைக்கொண்ட விருந்து என்னும் சொல் பின்பு விரும்பப்பெற்ற புதியவரையும், அவர் நிலையான புதுமையையும், அவர்க்களிக்கும் சிறந்த

உணவையும் முறையே குறித்து, இன்று உறவினர்க்கும் நண்பர்க்கும் படைக்கும் சிறந்த உணவையே குறிக்கும்அளவு இழிபடைந்துள்ளது. பண்டை விருந்தினர் புதியவராயிருந்ததினல் புதுவர் எனவும்பட்டார்.

(ஞா. தேவநேயன்)

கா. அப்பாத்துரை: அவர்கள் தரும் விளக்கம்:

"பொருளிலும் வடிவத்திலும் முறைமையிலும் பழமையின் எல்லே கடந்து புதுமையில் முனேயும் இலக்கிய வகையின் பெயராக" விருந்து என்ற சொல்லேத் தொல்காப்பியர் வழங்கியுள்ளார்.

"புத்தம்புதிதான பண்பு, எதுவும்தொடர்பு அற்றவரிடம் காட்டப்படும் அன்பாதரவுப் பண்பு என்று உரையாசிரியர்கள் விளங்குகின்றனர்."

"உறவு ஏதுவும் அதாவது, அகத்தொடர்பும் புறத்தொடர்பும் அற்ற இனவரவினரே. விருந்தினர்".

பண்டை உரோமரிடையில் விருந்தினரைத் தெய்வமாக, மருமகன்போல அன்பார்வத்துடன் வரவேற்கும் பண்பு சிறப்புற்றிருந்தது. இலத்தீன் மொழியில் விருந்தினர் என்பதற்குரிய சொல்-Hospes- புதியர், புதுவரவினராகிய அயலார் என்ற பொருளும், விருந்தினர் என்ற பொளும் ஒருங்கே உடையதாக உள்ளது: வடபுல வேதவழக்கிலும் சமஸ்க்கிருதத்திலும் விருந்தினர்க்குரிய சொல் இனவரவினர் என்ற பொருளே மட்டுமன்றி, விருந்தினரைத் தெய்வமாகப் பாராட்ட வேண்டும் என்ற கருத்தும் உள்ளது.

இத்தகைய உயர்பண்பு இன்று படிப்படியாக இழிபுற்றுச்சுருங்கி, 'சிறப்பு உணவு,... குடும்ப, சுற்ற, சமுதாய எல்லையினர்க்கும் நண்பர்களுக்கும் ஆரவாரமாகச் செய்யப்படும் தன்னலம் குறிக் கொண்ட உபசரிப்பு என்ற பொருளில் வழங்குகிறது

ஆகவே, தற்பற்றின் எல்லை கடந்த பண்பு சுற்றம் சூழல், சாதி, சமய, மொழி, நாட்டுச் சூழல், தன்னல, தன்மதிப்புச் சூழல், ஆகிய யாவும் கடந்த, பேதமெல்லாம் கடந்த உயர் பேரின்பத்தின் (மனித இனத்தின்) பேரானராகவே வள்ளுவ விருந்தினர் உள்ளனர்.

விருந்து என்னும் சொல் விருந்தில் படைக்கப்பட்டு உணவையும் குறிக்கலாம்: ஆகுபெயராக அவ்விருந்தை உண்பவரையும் குறிக்கலாம்.

ஈண்டு விருந்து என்ற சொல் விருந்துக்கு வருபவரையே குறிக்கிறது காண்க.

ஆகவே, விருந்து ஓம்பல் என்று சொற்றொடர் விருந்தினரைஓம்புதல் என்றுவேற்றுமைத் தொகையாகவோ.

விருந்தினரை ஓம்பும் ஓம்புதற்பண்பு என்றே கொள்ளலாம்.

பின்னைய பொருளே சிறப்பது காண்க. இவ்வதிகாரத்துக்குப் பொருத்தமானது அஃதேயாம்.

இக்கருத்தில், விருந்தோம்புதலாவது: சுற்றம் சூழல், சாதி, சமய, மொழி, நாட்டுச் சூழல், தன்னல, தன்மதிப்புச்சூழல் ஆகிய யாவும் கடந்த, பேதமெல்லாம் கடந்த முறையில், முன்பின் அறிமுகமாகாமலே புத்தம்புதிதாகத்

தம்மை அணுகி வருபவராயினும், எத்தொடர்பும் அற்றவராயினும், அனைவரிடமும் காட்டப்படும் அன்பாதரவுப் பண்பேயாகும்.

ஏதோ ஓரளவு அன்பு காட்டுவது போதாது. ஓம்புதல் என்னும் சொல் காத்தல், பாதுகாத்தால், பேணுதல், ஓம்புதல் என்ற நிலைகளுள் உச்சநிலை என்பது கவனிக்க.

பன்மொழிப்புலவர் கருத்துக்களை ஈண்டு தருகிறோம்.

காத்தல்- என்பது பொதுப்படக் காப்பாற்றுதலைக் குறிக்கும்.

பாதுகாத்தல்: பாதுகாத்தல், பங்கிட்டளித்துக் காத்தல் ஆகும். ஈண்டு காக்கும் பொருள் அறிவின் மிக்கது; காக்கப்படும் பொருள்கள் பல. இவை அறிவிற் குன்றியன. தாய் குழந்தையைப் பாதுகாப்பது போல.

பேணுதல்: அறிவின் மிக்க பொருள் அருமையின் மிக்க பொருளை, அது தன்னை அறியா நிலையில் காப்பது.

ஓம்புதல்: காக்கப்படும் பொருள் உச்ச நிலை பெறுகிறது. காப்பாரின் நிலையும் உச்ச நிலை ஆகிறது.

தம் முழு வாழ்வும், முழுக் கவனமும் முழு அறிவும் ஈடுபடுத்தி, காக்கப்படும் பொருள் அல்லது பண்புக்கு எதிரான சூழல் கூறுகளனைத்தையும் உயிர் கொடுத்தும் எதிர்த்து நின்று தம் வாழ்வின் தலைநோக்கமான, அருமைப்பாடு மிக்க, ஒன்ற

னுக்கே தம் ஓய்வொழிவற்ற முயற்சியை ஈடுபடுத்து வதே ஓம்புதல் ஆகும்.

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற குறட்பாவை நோக்குக.

இதனின்று வெளிப்படும் கருத்துக்கள் பின்வரு மாறு:

1) ஈண்டு குறிக்கப்படும் பண்பைக் காப்பதில் வாழ்வும் முழுக் கவனமும் முழு அறிவும் ஈடு படுத்தப்பட வேண்டும்.

2) இப் பண்புக்கு எதிரான சூழல் கூறுகள் உண்டானால் உயிர் கொடுத்தும் எதிர்த்து நிற்கவேண்டும்.

3) வாழ்வின் தலைநோக்கமானது இப்பண்பு.

4) அருமைப்பாடு மிக்க இவ்வொன்றனுக்கே தம் முயற்சியை ஈடுபடுத்த வேண்டும்.

5) அம் முயற்சி ஓய்வொழிவற்றதாயிருத்தல் வேண்டும்.

"விருந்து" என்ற சொல்லுக்கு 'வீட்டுக்கு வருபவரை அன்புடன் வரவேற்று உணவிடுதல்' என்ற பொருள் மட்டுமே இருந்தால் இந்த அளவுக்கு 'ஓம்பப்பட வேண்டும்' என்று கூறுவது பொருந் துமா? மாறாக, முன்பு கூறியவாறு, சுற்றம் சூழ்தல் முதலிய பேதமெல்லாம் கடந்த முறையில் புத்தம் புதிதாகத் தம்மை அணுகி வருபவரையும், எத்தொடர்பும் அற்றவராயினும் அனைவரையும் அன்பால் அணைத்துக்கொள்ளும் பண்பே 'விருந்து' என்ற சொல்லின் உண்மைப் பொருள் என்றால்,

'ஓம்புதல்' என்ற சொல்லுக்கு மேற்கூறிய பொருள் முற்றிலும் பொருந்தும்.

ஒழுக்கத்தையே ஒருவன் உயிரையும்விட அதிகமாக ஓம்ப வேண்டுமெனின், ஒழுக்கத்தை விட எத்துணையோ உயர்ந்ததாகிய 'அன்பை' மேற்கூறிய முறையில் உயிர் கொடுத்தும் காக்க வேண்டுமென்பதில் வியப்பில்லையன்றோ?

"அன்பின் வழியது உயிர்நிலை" யாதலின் அன்பின்றேல் மனித வாழ்வுக்குப் பொருள் இல்லை;

அன்புற் றமர்ந்த வழக்கென்ப — வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு

ஆதலின் அன்பில்லாத வாழ்க்கையில் இன்பம் இருக்க இடமில்லை;

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று"

ஆதலின் அன்பில்லா வாழ்க்கை மலராது;

"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு", ஆதலின் என்பை (அதாவது உயிரை)க் கொடுத்தும் ஓம்பப்பட வேண்டியது அன்பு.

1) ஆகவே "விருந்தோம்பல்" என்பது எல்லாரிடத்தும் செலுத்த வேண்டிய அன்பே யென்க. இந்த அன்பில் முழுக் கவனமும் அறிவும் முழு வாழ்வுமே ஈடுபடுத்தப்பட வேண்டும். ஏனெனில் எளிதில் அடைந்துவிடக்கூடிய இலட்சியம் அன்று அன்பு: முயன்று முயன்று அடைய வேண்டியதொன்று, மிக மிக உயர்ந்ததொன்றாதலின் இத்துணை கவனத்துக்கும் மதிப்புக்கும் உரியதே.

2) தம் மணி விளக்க உரையில் கா. அப்பாத்துரை அவர்கள் கூறுவது போல திருக்குறளில் திருவள்ளுவர் கண்ட ஒருமைப்பாட்டின் அருமைப்பாடு வேறு யாராலும் எட்ட முடியாதது. இதன் இரகசியம் அவர் கூறும் இறைக்கோட்பாட்டிலேயே உள்ளது.

"ஒரே இயற்கை, ஒரே உலகம் என்ற பாறை உச்சியில்; ஒரே மனித வாழ்க்கை, ஒரே உயிர்ச் சமுதாயம், ஒரே உயிரின வாழ்வு என்னும் நிலத் தளத்தின் மீது: ஒரே வாழ்க்கை நோக்கம் என்னும் கடவுட் கருத்துருவான கூர்ங் கோபுரமுகடு நோக்கி இழைவுறும்படி எழுப்பப்பட்ட பாரிய வாழ்க்கைத் தத்துவக் கோவிலாகவே திருவள்ளுவரின் கடவுட் கருத்து ஒருமைப்பாடு அமைந்துள்ளது."

(மணி I. 109)

"தனி மனிதர், ஆணும் பெண்ணும், இயற்கை வழி நின்று குடும்பத் தளத்தின் வாயிலாகச் சமுதாயத்துக்கும்†, இனத்துக்கும்‡ ஆற்ற வேண்டிய கடமைகளே **அறமாகவும்**; அதுபோலவே சமுதாயம் குடும்பத்துக்கும் இனத்துக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளே **பொருள்** ஆகவும், இனம் குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் ஆற்ற வேண்டிய

---

† சமுதாயம் என்பது அந்தந்த நாட்டில் ஏற்படும் மனிதர் குழுக்கள், அரசு முறைகளாம்.

‡ இனம் என்பது குறிப்பிட்ட சாதி, குலம் இவையல்ல: மனித இனத்தையே குறிப்பிடும்.

** சமுதாயம் என்பது மனிதர்களே உயிர்களின் முழுப் பரப்பு; ஒரே காலத்தில் உடன் வாழ்வு வாழும் குழு. இனம் என்பதோ இப்பரப்பின் முக்காலத் தொடர்புறவு ஒழுக்கு.

கடமைகளே இன்பமாகவும்; இம் மூன்றன் முழு மொத்த நோக்கே இனக் குறிக்கோளாகிய இறையாகவும், முழு மொத்த வளமே இறைப் பேருகிய பேரின்பமாகவும் திருவள்ளுவரால் கொள்ளப்பட்டுள்ளன.''

உலக மறை

''இதை மனத்திற்கொண்டுதான் திருக்குறளைப் 'பொது மறை', 'உலக மறை' என்று அறிஞர் யாவருமே போற்றுகின்றனர். மனித இனம் அனைத்தையுமே ஒரு குடும்பமாக இணைக்கும் கருத்தோடு* இயற்றப்பட்டதே திருக்குறள். இணைக்கும் சக்தியே அன்பெனப்படுவதே. இஃதே 'விருந்தோம்பல்' எனப்படுவது'.

இந்தப் பண்புக்கு எதிரான சூழல் கூறுகள் பல இருந்தே வருகின்றன. சுற்றம், சூழல், சாதி, சமயம், மொழி, நாட்டுச் சூழல், தன்னல தன் மதிப்புச் சூழல் இவை யாவும் இச்சூழல் கூறுகளே. இவற்றுள் மிக வலிமை படைத்தவை சாதி, சமயம், மொழி இவற்ருல் ஏற்படக்கூடியவை. இவற்றை எதிர்த்து வெல்ல வேண்டும். தேவைப்பட்டால் உயிர் கொடுத்தும் எதிர்க்க வேண்டும். சாதி, சமயம் முதலானவை எளிதில் எதிர்த்து வெல்லக் கூடியவை அல்ல என்பதை அனுபவத்தால் அறிகிரேும்.

எனினும் இந்த விருந்தோம்புதல் பண்பே [அதாவது அனைவரையும் பேதம் எதுவுமின்றி அன்பால் அணைப்பதே] மனித வாழ்வின் நோக்கம் என்பதால், அருமைப்பாடு மிக்க இந்த ஒன்றனுக்கே ஒருவன் (சான்ரேன்) தன் முயற்சி

---

* பிற்சேர்க்கை 1ல் ''உயர்ந்த நோக்கம்'' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்க.

யெல்லாம் ஈடுபடுத்த வேண்டும். எளிதில் அடைய முடியாத மிக உயர்ந்த நோக்காதலால், ஓய்வொழி வற்ற முயற்சியாகவும் இருத்தல் வேண்டும்.

ஆகவே, ஈண்டுக் கூறப்படும் விருந்து ஓம்பு தலை, ''உலக மக்கள் எல்லாரையும், எத்தொடர் பும் இல்லாதவராயினும் கடவுள் குறிக்கோட் பண் புடன் அன்பால் அணைக்குமாறு செய்யப்படும் தீவிர முயற்சி'' எனக் கூறலாம்.

இக் கருத்துக்களையெல்லாம் முதற் குறட்பா சுருக்கமாகக் கூறுகிறது.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்—விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

''இருப்பது, ஓம்புவது, இல்வாழ்வது எல்லாம்'' என்ற விரிவே ''இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம்'' என்னும் தொகையாயிற்று.

இருப்பது - உலகில் மனிதன் இருப்பது.

ஓம்புவது - அறத்தை ஓம்புவது.

இல்வாழ்வது - அறத்தின் ஒரு பகுதியாகிய இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்வது.

எல்லாம் - துறவறத்தை மேற்கொள்வதும்கூட

மனிதன் உலகில் தோன்றுவதும், அறத்தை வளர்க்க முற்படுவதும் (இவ்வதிகாரத்தில் விளக் கத் தொடங்கும்) இல்லறத்தை மேற்கொள்வதும், ஏன் (பின்னர் விளக்கப்பெறும்) துறவறத்தை மேற் கொள்ளுவதும் — எல்லாமே (மேற் சொன்ன கருத் தில்) ''விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டே'' யாகும்.

"விருந்தோம்புதல்" மேலே விளக்கப்பெற்றது.

"வேளாண்மை செய்தலே" இனி விளக்க வேண்டும். இக் குறட்பாவின் இரண்டாம் அடியும் "ஒப்புரவு" அதிகாரத்தின் இரண்டாம் குறட் பாவின் இரண்டாம் அடியும் ஒன்றுகவே உள்ளது.

ஆண்டு கூறப்படும் "வேளாண்மை"யே ஈண்டும் கூறப்படுகிறது என்று சொல்ல இடமுண்டு "புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரி"தான ஒப்புரவுச் செல்வத்தை உலக மக்கள் எல்லாரும் பெற்றுய்யச் செய்யப்படும் முயற்சியே "வேளாண்மை" என்று புலனுகிறது. அச்செல் வத்தின் வேறு பெயரே விருந்தோம்பலாகிய இப் பணியாகும். (ஒப்புரவு பற்றிக் கூறியவை காண்க).

மனிதன் உலகில் வாழ்வது இவ்வொரே நோக் கத்துக்காகவே. உலக மக்கள் எல்லாரையும் அணைத்து உய்யச் செய்வதே அந்நோக்கம். இதற்கு விருந்தோம்பலும், ஒப்புரவுப் பணியும் இன்றியமையாதன. இக்கருத்தே பின்வரும் குறட் பாக்களில் வலியுறுத்தப்படுகின்றது.

*

# 4. அருள் என்னும் அன்பீன் குழவி

'அருள்' என்பது என்னவென உரையாசிரியர்கள் கூறும் கருத்தை முதற்கண் ஆய்வோம்.

**பரிமேலழகர்:** தொடர்பு பற்றுது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை.

**மணக்குடவர்:** யாதானும் ஒருயிர் இடர்ப்படின் அதற்குத் தன் உயிர்க்கு உற்ற துன்பத்திணுல் வருந்துமாறு போல வருந்தும் ஈரமுடைமை.

**பரிதியார்:** அருளுடைமையாவது வான ப்ரஸ்தம்.

**பு. குழந்தை:** உயிர்கள் மாட்டு அருளுடையராதல், அருள் - இரக்கம். அன்பு தொடர்பு பற்றி நிகழ்வது. அருள் தொடர்பு பற்றி நிகழ்வது. அன்பின் முதிர்ச்சியே அருள்.

**ஞா. தேவநேயன்:** தொடர்பு கருதாது அறு வகைப்பட்ட எல்லா உயிர்களிடத்தும் ஒப்புக் கொள்ளும் இரக்கம்.

அன்பு போன்றே அடைக்கும்தாழ் இன்றிச் செயலாக வெளிப்படும் அருளறம் வீடுபேற்றுக்கு இன்றியமையாததென்பதும் அறிவு மட்டும் போதா தென்பதும் பெறப்படும்.

இவ்வுரைகளினின்று வெளிப்படும் கருத்துக்கள் சிறப்பாக இரண்டு:

1) அருள் என்பது உயிர்கள் மாட்டு இரக்கம்.

2) அருள் - தொடர்பு பற்ருது நிகழ்வது. அன்பின் முதிர்ச்சி. (பு. குழந்தை)

இவை எந்த அளவுக்குப் பொருந்தும் என ஆய்வோம். இந்த ஆய்வில் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டியது அருளுக்கும் அன்புக்கும் உள்ள தொடர்பாகும்.

அன்பு — தொடர்புடையார்கண் காதல்;

அருள் — தொடர்பில்லார்கண் இரக்கம்;

என்பது உரையாளர் கருத்து. இதனுல் அன்பின் முதிர்ச்சியே அருள் எனப்படுகிறது. வள்ளுவரோ அருள் என்பது 'அன்பீன் குழவி' என்கிருர். இவ்விரு கருத்துக்களும் எங்ஙனம் பொருந்தும் என்பது விளங்கவில்லை.

அன்பின் முதிர்ச்சியே அருள் என்ருல் எங்ஙனம் அதன் குழவியாயிருக்கும்?

தொடர்புடையார் மாட்டுத்தான் அன்பு என்ருல், 'என்பும் உரியர் பிறர்க்கு' எனப் பொதுப்படையாகக் கூறப்படுவது ஏன்? அருள் என்பது அன்பின் குழவி என்ருல், 'என்பும் உரியர் பிறர்க்கு என்னும் இலக்கணம் அன்புக்குப் பொருந்துவது போல் அருளுக்கும் பொருந்த வேண்டுமன்ரே? (ஈனும் தாய்க்குப் பொருந்தும் பண்பு ஈன்ற குழவிக்கும் (ஓரளவேனும்) பொருந்த வேண்டுமன்ரே? ஆகவே 'தொடர்பு பற்றி நிகழ்வது அன்பு என்றும் தொடர்பு பற்ருது நிகழ்வது அருள் என்றும் வேறுபடுத்திக் கூறுவது அத்துணை சிறப்பாகத் தோன்றவில்லை. இக்கருத்துக்களை இனி ஆய்வோம்.

அடைக்கும் தாழ் இல்லாத அன்பு, ஆர்வமுடைமையை ஈனுகிறது. அந்த ஆர்வமுடைமை

யாம் நண்பென்னும் நாடாச் சிறப்பு உண்டாகிறது என்று கண்டோம். மனிதன் எதிர்பார்க்க முடியாத, நாட இயலாத சிறப்பு இது. ஆனால் இறைவன் தனது அன்பின் ஆர்வமிகுதியால் தான் படைத்த மனிதர்க்கு அச்சிறப்பை அருள விரும்புகிறான். இந்தச் சிறப்பை—அன்புறவை—நட்பை—மனிதனின் இதயத்தில் உண்டாக்குவது. அதை உண்டாக்கும் சக்தி, அச்சக்தியின் செயல். அச்செயலால் மனித உள்ளத்தில் ஏற்படும் ஒரு தெய்வீக மாற்றம்—இவையெல்லாம் சேர்ந்தே அருள் அல்லது அருட் சக்தி எனப்படும். இது முழுதும் அன்பின் ஆர்வத்தால் விளைவது. இத்தகைய சக்தியால் இறைவன் செயலாற்றும்போது மனிதனின் உள்ளத்தில் பெரியதொரு மாற்றம் நிகழாமல் இருக்க முடியாது. அந்த மாற்றத்தால்தான் மனிதன் இறைவனது நட்பைப் பெறும் அளவுக்கு உயர்கிறான். இந்த "உயர்வை"க் குறிப்பிட்டே அருள் செல்வத்தைக் கூறும் குறள், "பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள" என்கிறது. "செல்வத்துட் செல்வம்" என்றும் அழைக்கிறது.

இந்த அன்பும் அருளும் உள்ள நிலை முதற்கண் இறைவனுக்கே உரியது. அவனே அன்புருவாகி அருளை "உடைமை"யாகக் கொண்டிருப்பவன். இந்த அருள் உள்ளம் முதற்கண் இறைவனுக்கே உரியதென்றாலும், அது அவனிடமிருந்து மனிதர்களாகிய உயிர்களுக்கும் வருகிறது. இறைவனுக்கு மனிதர் மீதுள்ள அன்பின் பெருக்காலும், அதன் விளைவாக ஏற்படும் இரக்கத்தாலுமே இந்த அருள் மனிதனை வந்தடைகிறது. ஆகவே அருளை 'அன்பீன் குழவி' என்பது பொருத்தமேயன்றோ!

ஆகவே உயிர்கள்பால் உள்ள இரக்கம்—கருணை என்று உரையாளர் சாதாரணமாக 'அருள்'

என்பதற்குக் கூறும் பொருள் இங்குக் கூறப்படும் விளக்கத்துடன் நோக்குங்கால் பொருத்தமெனக் கொள்ளலாம். இவ்விளக்கமின்றி மிகமிகக் குறை பாடுடையதே.

இனி, வள்ளுவர் கூறும் 'அருள்' இப்பொருளுடையதுதானா? 'அருள்' என்பதற்கு உரையாளர்கள் கூறும் கருத்துக்களையெல்லாம் தொகுத்துப் பார்த்தால், பின்வரும் ஏழு சிறப்புக்கள் தோன்றும்.

1. அருள் என்பது செல்வத்துட் செல்வம்; அளவிறந்த இன்பம் பயப்பது.

2. அன்பின் முதிர்ச்சியே அருள்; இம்மைக்கும் மறுமைக்கும் வாழ்வுத் துணை அதுவே.

3 அருள் செறிந்த நெஞ்சினார்க்கு இன்னா உலகம் புகுதல் இல்லை; அதற்கு மறுதலையான இருள் சேர்ந்த நெஞ்சினர்க்கே அவ்வுலகம்!

4. அருள் ஆள்பவர்க்குத் தீவினைகள் உண்டாகா, தீவினையிருந்தால் அருள் இராது.

5. அருள் இல்லார்க்கு இறந்தபின் உள்ள மேல் உலக இன்பம் இல்லை; அதன்கண் உறும் (இறைவன்) காட்சி இல்லை.

6. அருளற்றார்க்கு உய்வே இல்லை.

7. அருள் இல்லாதார் மெய்ப்பொருளைக் காண இயலாது.

இத்தனையும் ''உயிர்கள் மாட்டு இரக்கம் காட்டுதல்'' என்ற பண்புக்குப் பொருந்துமா? ஒருவன் உயிர்களிடத்து இரக்கம் காட்டுகிறுன் என்று வைத்துக்கொள்வோம். ஆனுல் வேறு பல குற்றங்களைச் செய்கிறுன். மனத்துள் பல தீயவை நினைத்து, மகிழ்கின்றுன். இஃது அனுபவத்தால் அறிந்தது. பலர் வெளிப்படையாக எத்தீய செயலும் செய்யாதிருந்தும், உள்ளத்தில் தீயவை எண்ணி, தீயவை விரும்பி அதனுல் வரும் ஒருவித தீய இன்பத்தை நுகர்வதுண்டு. மனத்துக்கண்ணும் மாசிலனுய் இராவிடில் அறமே இல்லை என்கிறது திருக்குறள். அதுவே அறமெல்லாம் என்றும் கூறுகிறது.

மனத்துக்கண் மாசில னுதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

மனத்துள்ளும் மாசின்றி வாழாவிடில் வெறும் வெளிவேடமே அது! அற வாழ்க்கையாகாது. உள்ளத்தால் உள்ளலும் தீதே'' என்றும் கூறுகிறுர் வள்ளுவர். இத்தகைய வெளிவேட வாழ்க்கை நடத்துவோர்க்கு அருளுடைமை பற்றி மேற் சொன்ன ஏழு கருத்துக்களும் பொருந்தா...

ஆகவே ஈண்டு ''அருளுடைமை" என்பதற்கு 'உயிர்களிடத்து காட்டும் இரக்கம்' என்ற பொருள் அன்று, வேறு உயர்ந்த பொருள் இருத்தல் வேண்டும்.

மேலும் ஆய்வோம்!

அருளைப் பற்றிக் கூறும் வள்ளுவர் அதை முதற்கண் செல்வத்துட் செல்வமாகக் கருதுகிறுர்.

பின்னர் அருள் சேர்ந்த, அருளில்லா. அருள் அற்ற, அருள் நீங்கி என்ற நிலைமையை உரைக்கிருர்.

"அருள் ஆள்க, அருள் ஆள்வார் என்று அருள் ஆளும் நிலையையும் கூறுகிருர். 'அருளாதான்' எனும்போது அருள் செய்பவனைப் பற்றிக் குறிப்பிடுகிருர்.

ஆகவே இவ்வதிகாரத்தில் உள்ள கருத்துக்கள் சிறப்பாக நான்கு:

1. அருள் உள்ள, சேர்ந்த நிலை;
2. அருள் அற்ற, நீங்கிய, அருள் இல்லா நிலை.
3. அருள் செய்யும் நிலை (அருளாதான்)
4. அருளை ஆளும் நிலை.

அருள் செய்யும் நிலையும் அருளை ஆளும் நிலையும் ஒன்றெனப் புலப்படுகிறது. 'அருளை ஆள்வது' துறவியர்க்குரிய சிறப்பான நிலை என்ற கருத்து ஈண்டு அறிவுறுத்தப்படுதலால், 'அருளாதான்' செய்யும் அறம் என்றதன் கருத்து. அருள் ஆள முடியாத நிலையில் உள்ள துறவி செய்யும் அறம் பயனற்றது என்ற கருத்தையே குறிப்பதாகத் தோன்றுகிறது. அன்றி "அருள் செய்பவன்! இறைவனே என்போமாயின் ஆண்டுள்ள 'செயயும் அறம்' என்ற சொற்களுக்குப் பொருள் இராது.

ஆகவே, அருள் உள்ள நிலை, அருள் அற்ற நிலை, அருள் ஆளும் நிலை எனும் மூன்று நிலைகளைப் பற்றியே இவ்வதிகாரத்தில் கூறப்படுகிறது என்க.

இனி, அருள் உள்ள நிலை முதற்கண் யாருக்குச் சிறப்பாகப் பொருந்தும்?

இறைவன் தர விரும்பும் அருள் உறவை, அன்புறவைப் பெற்று, அதில் திளைப்பதற்கு மாறாக, தனக்குக் கிடைத்த அருள்நிலையாகிய செல்வத்துட் செல்வத்தை மதியாமல் செருக்குற்று, தனக்குக் கிடைத்த இறைவனின் நட்புறவை இழக்கும் நிலையே அது. அதுவே தீவினை என்னும் செருக்கு. அதுவே இறைவனது பொருள் சேர் புகழ் புரியாத நிலை; இருள்சேர் வினை. அருள் நிலை இழந்தார்க்கு இருள் வினை புரிந்தார்க்கு, இருள் சேர்ந்த இன்னுலகம் புகுதலே முறை! ஏனெனில் அவர்கள் அல்லவை செய்தொழுகுபவர்கள். ஆகவே அவர்களுக்கு 'அவ்வுலகம்' இல்லை. அவர்கள் **மீண்டும் பூப்பர்** என்பதற்கில்லை.

இனி, அருள் ஆள்வார் நிலை யாருக்குப் பொருந்தும்?

இறைவனின் அருளைப் பெற்ற யாவருமே ஓரளவு அருளை ஆள முடியும். அஃதாவது, பிறர் அவ்வருளைப் பெற்றுக்கொள்ள ஓரளவு துணை செய்ய முடியும். "வாய்மை"யால் சிறப்பாக இது நிறைவுறும். எனினும், அருள் ஆள்பவர்கள் சிறப்பாகத் துறவியர் என்பது வள்ளுவர் கருத்தாகத் தோன்றுகிறது' வேறெதனையும் நினையாது, விரும்பாது, இறைவன் அன்புறவையே சிந்தித்துச் செயலாற்ற அவர்களே முழுதும் ஏற்ற நிலையில் உள்ளார் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

அவர்களுடைய வாழ்க்கையும் அருளை ஆள்வார்க்கேற்றதாய் அமைய வேண்டும். அது அருளுக்கு ஏற்றதாயும், மருளை நீக்கியதாயும்,

''வான்* சக்திக்கு உட்பட்டதாயும், ''ஊனுடன்'', அஃதாவது உலக நாட்டங்களுடன் தொடர்பற்ற தாயும் இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்து கிறுர் வள்ளுவர். இதனுற்றுன், ''புலால் மறுத்தல்'' அதிகாரத்தில் ''ஊன் தின்பவர்க்கு'' அருளாட்சி† பொருந்துவதில்லை என்ற கருத்தில் கூறுகிறுர்.

அருளைப் பற்றி ஈண்டு கூறப்படும் கருத்துக்கள் எல்லாம் விவிலியக் கருத்துக்களுடன் பொருந்து வன என்பதைப் பிற்சேர்க்கை-5ல் காண்க.

# 5. அருளும் பொருளும்

'பொருள்செயல்வகை' அதிகாரத்தில் வள்ளுவர்'அருள் என்னும் அன்பீன் குழவி' பற்றிப் பேசுகிறுர். இதன் நோக்கம் என்ன? அருளுக்கும் பொருளுக்கும் தொடர்புண்டா? ஈண்டுக் கூறப்படும் 'பொருள்' பொருளாகிய பொருளா, அருளாகிய பொருளா? (பொருட்செல்வமாகிய செல்வமா? அருட்செல்வமாகிய செல்வமா?) என்று ஆய்வது பயன் தருவதாகும்.

---

* 'வான்' என்பது இறைவனின் அருட்சக்தியாம்

† விரிவான விளக்கத்திற்கு வள்ளுவர் கூறும் 'அருட் செல்வம்' யாது? என்னும் புலவர் மு. தெய்வநாயகம் அவர்களது நூலைப் படித்தறிக.

இந்த அதிகாரத்தில் “பொருள்” என்ற சொல்லுக்குப் “பணம்” “செல்வம்” என்ற பொருளையே உரையாளர் அனைவரும் கூறுகின்றனர். “பொருள்செயல்வகை” என்றால் பொருளை ஈட்டும் வகை எனப்பொருள் கூறுவர்.

இவ்வதிகாரத்தில் உள்ள குறட்பாக்கள் சில ‘பணம்’, ‘செல்வம்’ என்ற கருத்தையே கூறுவது போல் காணப்படுகின்றன. எனினும் பணமாகிய பொருளைப்பற்றி மட்டுமே இவ்வதிகாரம் கூறுகின்றதா, பொருள் என்ற சொல்லுக்குப் ‘பணம்! என்ற பொருள் மட்டும்தான் உண்டா என்பது கேட்க வேண்டிய கேள்விகள் ஏன்?

1) ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும் மதிப்புடையவராகச் செய்யவல்ல செல்வத்தைப் போன்ற வேறுபொருள் இல்லை - என்பது இவ்வதிகாரத்து முதற்குறளின் கருத்து

இது உண்மைதானா? இக்குறளில், “பொருள்” என்ற சொல்லுக்குப் ‘பணம்’ என்ற பொருளை மட்டும் கொடுத்தால்,

பணமல்ல வரைப்பண மாகச் செய்யும்
பணமல்லது இல்லை பணம்.

என்ற குறள் உருவாகும்! இதற்குப் பொருளே இல்லை என்பது தெளிவு. இனி, ‘பொருள்’ என்ற சொல்லுக்கு இக்குறளில் இரு பொருள் தரப்பட்டுள்ளதெனத்தோன்றுகிறது. ஒன்று மதிப்பு; மற்றொன்று பணம், செல்வம். இப்படிப் பொருள் கொடுத்து நோக்குங்கால் வெளிப்படும் கருத்து முற்றிலும் உண்மைதானா? அஃதாவது, மதிப்பற்றவரை

மதிப்புள்ளவராக்க வலிமை படைத்தது பணம். அதைப்போல் வேறில்லை என்பது உண்மைதானா? பணம் இருந்தால் தான் மதிப்புண்டு, வேறெதுவும் ஒருவனுக்கு மதிப்புத்தராது; வேறெதனாலும் ஒருவன் மதிப்புப்பெற முடியாது—என்ற கருத்தைத் தான் வள்ளுவர் கூறியுள்ளாரா?

'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்' அதையே ஒருவன் நாட வேண்டும், ''பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள'' ஆகவே, அருட்செல்வம் ஒன்றே உண்மையான உயர்வைத் தரும் என்று கூறும் வள்ளுவர், பணத்தைவிட மதிப்புத்தருவது இல்லை என எங்ஙனம் கூறு வார்?

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்.

வேண்டாமையே பெருஞ்செல்வம், அது போல் உலகிலே இல்லை என்று கூறும் வள்ளுவர் பணத்தைப்போல் வேறில்லை என்று எங்ஙனம் கூறுவார்?

''பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணர்''வது மருளாதும் என்று கூறும் வள்ளுவர் பணமாகிய பொருள்தான் பொருள் என்று எங்ஙனம் கூறுவர்?

ஆகவே, ''பொருள்'' என்ற சொல்லுக்குப் ''பணம்,'' ''மதிப்பு'' என்ற பொருளைவிட உயர்ந்ததொரு பொருள் இருத்தல் வேண்டும்.

பொருள் என்னும் பொய்யாவிளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

இக்குறளில் 'பொருள்' என்ற சொல்லால் தாம் குறிக்க விரும்புவது என்னவென ஆசிரியரே கூறுவதுபோல் தெரிகிறது.

பொருள் என்பது பொய்யாவிளக்கம்' என்கிறார். ஈண்டு ''பொருள்'' என்ற சொல்லுக்குப் 'பணம்' என்னும் பொருள் கொடுத்தால், ''பணம் என்னும் பொய்யாவிளக்கம்'' என்றாகும் இது உண்மையா? பணம் என்பது அணையாத (பொய்யாத) விளக்கமா? இதை யாரும் ஏற்கார்

''மதிப்பு'' என்ற பொருள் கொடுத்தாலும் பொருள் சிறக்கவில்லை என்பது தெளிவு, 'மதிப்பு' என்பது நிலைக்காதது. அது பொய்யாவிளக்காக எங்ஙனம் இருத்தல் கூடும்?

ஆகவே, 'பொருள்' என்ற சொல்லுக்கு வேறு உயர்ந்ததொரு பொருள் இருத்தல் வேண்டும்.

3. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

பணமோ, மதிப்போ மனிதனுக்கு அறமும் இன்பமும் பயக்குமா? பயப்பதில்லை என்பதே பலரும் வாழ்க்கை அனுபவத்தால் அறிந்த உண்மை. ''தீதின்றி வந்த பொருள்''கூட இத்தகைய அறனும் இன்பமும் பயப்பதில்லை. பணமுள்ளவர்கள் அறத்தை வளர்ப்பது அரிதெனக் காண்கிறோம். பணம் இன்பத்தைத் தருவதும் அரிதென்றே காண்கிறோம். ஆகவே, அறனும் இன்பமும் ஒருங்கே பயக்கக்கூடிய உயர்ந்த பொருள் வேறாக இருத்தல் வேண்டும்.

4. 'அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம்' பற்றி அடுத்துக் கூறப்படுகிறது.

ஈண்டு 'பொருள்' மட்டும் குறிப்பிடாமல், பொருளால் வரும் ஆக்கம் குறிப்பிடப்படுவது கவனிக்க.

பணம், மதிப்பு என்ற பொருள் மட்டுமே ஈண்டு இருந்தால் ''பணத்தால், மதிப்பினால் வரும் உயர்வு, மேன்மை'' என்ற கருத்து வெளிப்படும்.

இந்த உயர்வும் மேன்மையும், ''அன்பொடும் அருளொடும்'' வரக்கூடும், அவை இல்லாமலும் வரக்கூடும். முன்னது கொள்ளத்தக்கது, பின்னது தள்ளத்தக்கது என்பது கருத்து.

இனி, ''அன்பொடும் அருளொடும் வரும் பணத்தால் அல்லது மதிப்பால் விளையும் உயர்வு என்றால் எங்ஙனம் பொருள் பொருந்துகின்றது?

'அன்பு' என்பதும், 'அருள்' என்பதும் எத்துணை உயர்வு பெற்றவை என்பது ''அன்பீன் குழவி'' என இந்த அதிகாரத்திலேயே கூறப்படுகிறது. அருள் என்பது செல்வத்துட் செல்வம்; அஃதொன்றே உண்மையான உயர்வைத் தருவது; ''பல்லாற்றால் தேரினும்'' அஃதே வாழ்வுக்குத் துணை; அருள் சேர்ந்த நெஞ்சினால் மட்டுமே ஒளி சேர்ந்த இன்ப உலகம் புக இயலும்; அருளில்லார்க்கு மேலுலகம் இல்லை; பொருள் அற்றார் ஒருக்கால் பூப்பர் எனினும், அருள் அற்றார் பூப்பதேயில்லை. அருள் ஆள்வார்க்கு ''இல் என்ப தன்னுயிர் அஞ்சும் வினை'', —என்று பலபட அருளின் உயர்வைப் புகழ்ந்துரைக்கும் வள்ளுவர், உயர்வற்ற 'பணம்' என்பதும் 'மதிப்பு' என்பதும் 'அருளொடு'

வருதல் வேண்டும் என்ற கருத்தை எங்ஙனம் கூற முடியும்? அதற்குப் பொருள் வேறேதோ உயர்ந்த தொன்றாயிருந்தால் அன்றி அங்ஙனம் கூற இடமில்லை என்க.

அன்பின் குழவியாகிய அருளுக்கே இத்துணை உயர்வு உண்டென்றால், அதனை ஈனும் அன்புக்கு எத்துணை உயர்வு இருத்தல் வேண்டும்! அன்பு பற்றிக் கூறிய கருத்துக்கள் எல்லாம் ஈண்டு நினைவுறுத்துக.

ஆகவே 'பொருள்' என்ற சொல்லுக்கு ஈண்டு வேறு மிக உயர்ந்த பொருள் இருத்தல் வேண்டும். அது அன்போடும் அருளோடும் பொருந்திய ஒன்றாக இருத்தல் வேண்டும்.

5. மேற் கூறப்பட்ட கருத்து

"அருளென்னும் அன்பீன் குழவி..." எனத் தொடங்கும் குறட்பாவுக்குப் பொருந்தும். அருள் என்னும் அன்பின் குழவியும் 'பொருள் என்னும் செல்வச் செவிலியால்'தான் உளதாகும். பொருள் என்னும் செல்வம் செவிலியெனச் செயல் புரியாவிடில் அருள் என்னும் அன்பின் குழவியே இராது என்க, மேற்கூறிய அத்துணை உயர்வு கொண்ட அருளும் 'பொருள்' இல்லாமல் உளதாகாதென்றால், இப்பொருள் என்பது பணம், மதிப்பு அன்று. பணமோ மதிப்போ இல்லாமல் அருள் இராதென்பது பொருந்தக்கூடிய கருத்தாகுமா? உண்டு என்ற சொல்லுக்கு 'வளரும்' என்ற பொருள் கொடுத்து, பொருளால் அதாவது பணத்தால் அருள் செயல்களை வளர்க்க, பெருக்க முடியும் என்று கூறுவர். 'உண்டு' என்ற சொல்லுக்கு 'வளரும்' என்ற பொருள் எங்ஙனம் பொருந்தும்?

மேலும், ''செல்வச் செவிலி'' என்ற அரிய பெயர் —பணத்துக்குப் பொருந்துமா?

6. ''செறுநர் செருக்கறுக்''கப் பொருளைவிட வலிய படை இல்லை என்றார் மேலும் வள்ளுவர்.

ஈண்டு, அரசர்க்கு வேண்டிய படைபலத்தை உண்டாக்கப் பொருள் மிகமிகத் தேவை என்று கொண்டாலும், பகைவர் செருக்கை ஒடுக்க வேறு எதுவும் தேவையில்லை என்று சொல்ல முடியுமா? பணம் ஏராளமாக இருந்தும், தோல்வி அடையும் அரசர் இல்லையா?

ஆகவே இங்குக் கூறப்படும் ''செறுநர்'' வெளிப்படையாக ஒரு நாட்டுக்கு, அல்லது பொதுவாக மக்களுக்கு ஏற்படக்கூடிய எதிரிகளா? அல்லது ஒருவனின் உள்ளத்தில் பதுங்கிச் செயலாற்றும் ஆன்ம எதிரிகளா? இந்த ஆன்மீக எதிரிகளுள் முதலிடம் பெறுவது ''செருக்கே'' என்க. அதுவே தீவினை என்பதும் வள்ளுவர் கருத்து. ''தீவினை என்னும் செருக்கு'' என்று அவர் கூறுவது கவனிக்க.

மேலும் இக்குறட்பாவில் வரும் ''அறுக்க'' என்ற சொல் கவனித்தற்பாலது. இதே அதிகாரத்தில் ''பொருள் என்னும் பொய்யா விளக்கம் ''இருளை அறுக்கும்'', எண்ணிய தேயத்துச் சென்று'' என்று கூறப்படுகிறது. செருக்கு என்பதும் இருள் என்பதும் ஒன்றே என்னும் கருத்து ஈண்டு மறைந்துள்ளது.

இத்தகைய பொருள் எண்ணிய தேயத்துச் சென்று இருள் என்னும் செருக்கையும், செருக்கு என்னும் இருளையும் அறுத்து எங்கும் எதிரிகளை

ஒடுக்கிவிடும் வலிமை படைத்தது. அரசன், ''எண்ணிய தேயத்துச் சென்று'' ஆங்குள்ள எதிரிகளைத் தாக்கி ஒடுக்க, பொருள் என்னும் படையை விடக் கூரியது, வலியது இல்லை என்ற கருத்து ஈண்டு சிறக்கிறதா? அல்லது பணம், மதிப்பு என்பனவற்றைவிட மிக உயர்ந்ததாகக் கருதப்பட வேண்டிய 'பொருள்' இருந்தால், வெளிப்படையான எதிரிகளை மட்டுமன்று, உள்ளரங்க ஆன்மீக எதிரிகளையும் வெல்லலாம் என்ற கருத்து ஈண்டு சிறக்கின்றதா?

''எண்ணிய தேயத்து'' என்ற சொற்றொடர், அரசர்கள் தம் எதிரிகள் உள்ள எந்த தேயத்தும் சென்று என்று பொருள்படுமா? அல்லது, அவ் உயர்ந்த பொருளைக் கொண்டு, சான்றோர் எங்கும், எத்தேயத்தும் சென்று, பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்ய முடியும் என்று பொருள்படுமா? இது சிந்திக்கத்தக்கது. ஆகவே 'பொருள்' என்ற சொல்லுக்குப் 'பணம்' என்ற பொருள் மட்டுமே சிறப்பாகத் தெரியவில்லை.

7. மூலப்பொருள்களுள் ஒன்றாகிய பொருளை மிகுதியாக ஈட்டியவர்க்கு அறம், இன்பமாகிய மற்றிரண்டும் ஒருங்கே கைகூடும் என்பது இவ்வதிகாரத்தின் இறுதிக் குறட்பா. ''அறன் ஈனும், இன்பமும் ஈனும்,'' என்ற குறட்பா குறித்து மேலே சொல்லப்பட்டது இக்குறட்பாவுக்கும் பொருந்தும். ஈண்டும் மிக உயர்ந்ததொரு 'பொருள்' குறிக்கப்படுகிறது. இதற்கு இக்குறட்பாவிலேயே சான்றுகள் உளவென்றும் கூறலாம்.

ஈண்டு, 'பொருள்' என்று மட்டும் கூறாமல் 'ஒண்பொருள்' என்று கூறப்படுவது கவனிக்க. 'ஒண்மை' என்ற சொல்லுக்கு 'ஒளி' அல்லது

'விளக்கம்' என்று பொருள் கொடுத்தால் 'பொருள் என்னும் பொய்யா விளக்கம்' என்று தொடங்கும் குறளுடன் பொருந்துகிறது. 'ஒண்மை' என்ற சொல்லுக்கு 'அழகு', ஒழுங்கு, அறிவு, நன்மை என்று பொதுப்படையான பொருள் கொடுத்தால், ஈண்டு சுட்டப்படுவது வெறும் பணமாகிய பொருள் அன்று, உள் அழகும், ஒழுங்கும், அறிவும், நன்மையும் பொருந்திய பொருள் என்ற கருத்து எழும்,

ஒளி பொருந்திய (அல்லது உயர்ந்த நன்மை பயக்கும்) பொருளை ஈட்டினல் ''எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு,'' அதாவது. ஏனை இரண்டும் எண்பொருளாக ஒருங்கே கிட்டும். ஈண்டு எண்பொருள் என்றது எளிமையாக அடையக்கூடிய பொருள் என்பது கருத்து. ''எண்மை'' என்ற சொல்லுக்கு ''மதிப்பு'' என்ற பொருளும் இருப்பதால் ''மதிப்புள்ள பொருளாகிய மற்றிரண்டும்'' என்று பொருள்படவும் கூடும்.

ஆகவே, இக்குறளிலும் ''பொருள்'' என்ற சொல்லுக்கு வெறும் 'பணம்' என்ற பொருள் மட்டுமின்றி. வேறு மிக உயர்ந்த பொருள் இருத்தல் வேண்டும், இப்பொருள் யாதென ஆய்வோம்.

ஆசிரியரே தரும் குறிப்புகளை முதற்கண் நோக்குவோம்.

இப்பொருள் :

1) ஒளி பொருந்தியது ('ஒண்பொருள்')

2) இருள் அறுக்கும் பொய்யாவிளக்கமாகத் திகழ்வது.

3) செருக்கறுக்கும் எஃகு.

4) பொருள் அல்லவரைப் (மதிப்பில்லாத வரை) பொருளாகச் செய்யும் தன்மை படைத்தது.

5) "எண்ணிய தேயத்துச் சென்று" செயல் புரியக்கூடியது.

6) அருள் என்னும் அன்பின் குழவிக்குச் செல்வச் செவிலியாகும்.

7) அருளொடும் அன்பொடும் வந்து ஆக்கம் தருவது.

8) அறமும் இன்பமும் ஒருங்கே பயக்கக் கூடியது.

இவையெல்லாம் எதற்குப் பொருந்தும்?

இத்துணை உயர்ந்த பண்புகள் மெய்ப்பொருளாகிய இறைவனோடு தொடர்புகொண்டுள்ள ஒன்றனுக்கு மட்டுமேயன்றி வேறெதற்குப் பொருந்தக் கூடும்?

அது எதுவாயிருக்கக்கூடும்? இறைவனோடு தொடர்புகொண்டுள்ள அருட்சக்தியாம செல்வமா? 'வான்' ஆகும் இறைவனின் செல்வக் குவியலா? இச்செல்வத்தை அனைவரும் பெறுமாறு அருளாள்வோர் இயற்றும் ஒப்புரவுப் பணியா? புத்தேள் உலகத்தும், ஈண்டும் பெறற்கரிய நன்மையாம் ஒப்புரவுச் செல்வமா? பொருள் அல்லவற்றை பொருள் என்றுணரும் மருளை ஒழித்து, உள்ளத்தில் ஏற்படும் இருளையும் செருக்கையும் அறுத்து மெய்ப்

பொருள் அல்லவரை மெய்ப்பொருளாளராக்கும் இவ் ஒப்புரவுப் பணியை எண்ணிய தேயத்து அஃதாவது எங்கும் சென்று செய்யத் தூண்டும் 'வாய்மை' என்னும் பொய்யா விளக்கா ?*

"ஒப்புரவின் நல்லபிற பெறலரிது"

"வாய்மையின் நல்லபிற இல்லை"

என்று வள்ளுவர் கூறும் இவ்விரு நன்மையும் சேர்ந்து ஈண்டு பொருள் என்ற சொல்லால் சுட்டப்படுகின்றனவா? ஒப்புரவுக்கு வாய்மை இன்றியமையாததால் இரண்டும் ஒன்றெனக் கருதப்படுவதில் பிழை என்ன! இவ்விரண்டும் இணைந்தால் மக்கள் உள்ளங்களில் அருள் என்னும் அன்பின் குழவி உதிக்க ஏற்ற செவிலித்தாய் தோன்றுகிறாள் எனலாம் அன்றோ? அவ்வருள் மனத்தில் தோன்றவான் சக்தியே அன்னையாகச் செயலாற்றுகிறாள் எனில் பிழையென்ன? அச்சக்தியே அருளுக்கெல்லாம் ஆதிமூலமாயிருப்பதால் செல்வச்செவிலி எனப்படுவது பொருந்துமன்றோ? "தாளாற்றித் தரப்பட்ட பொருள்" (பிற்சேர்க்கை 5 காண்க). இஃதே எனச் சொல்லத் தடையென்ன? இதைத் தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு அவனே ஏற்படுத்திய ஒப்புரவாளர் எங்கும் சென்று மக்களுக்கு "யாதொன்றும் தீமையிலாத இறைவனைச் சொல்லி அவனது பொருள்சேர் புகழ் புரிந்து அதனால் இருள்சேர் வினை தப்பைச் சேராமல் காத்துக்கொள்ள இந்த ஒப்புரவுப் பணியும் வாய்மையும் இன்றியமையாததன்றோ?

* எல்லா விளக்கும் விளக்கல்ல — சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு. என வாய்மை பற்றிக் கூறியுள்ளது கவனிக்க.

"யாதொன்றும் தீமை இலாத" இறைவனின் பொருள்சேர் புகழைப் புரிவதால் தீதின்றி வரும் பொருளை அடையலாம் அன்றோ? இங்ஙனம் "அருளொடும் அன்பொடும்" "தீதின்றி வந்த பொருள்" ஆக்கம் பொருள் அல்லவரைப் பொரு ளாகச் செய்யவல்லதன்றோ? இத்தகைய பொருள் இல்லாரை யார் மதிப்பர்? மதிக்க என்ன உண்டு! மாறாக, இப்பொருள் உள்ளவரைப் பலரும் ஏற்றுப் பயனடைவர், அன்றோ? இத்தகைய வாய்மை யோடு வரும் ஒப்புரவு நன்மை "புரை தீர்ந்த நன்மை பயப்"பதால், அஃதொன்றே, உலக மன்னர்கள் பெறக்கூடிய 'உறுபொருள், உலகு பொருள் தன் ஒன்னார்த் தெறுபொருள்' இவை அனைத்தும்விட விரும்பத்தக்கது அன்றோ?

இத்தகைய பொருளைச் செய்தல் வேண்டும். "செய்க பொருள்!" என்கிறது குறள். அதாவது இத்தகைய பொருளை நாடி அடைய முயல்க. இந்த ஒப்புரவாலும் வாய்மையாலும் அகத்தூய்மை காணப்படும்"; உண்மையான அற வாழ்க்கை உளதாகும். "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" அன்றோ! மேலும் அறத்தான் வருவதே இன்பம்!" ஆகவே ஒப்புரவு-வாய்மை என்னும் பொருளால் அறமும் இன்பமும் ஒருங்கே உண்டாகும். ஆனால் இப்பொருளைத் திரட்டத் தொடங்கும்போதே உண்டாகி விடுவதில்லை. இவ் "வொண் பொருளைக் காழ்ப்ப இயற்றினல்" தான் உண்டாகும். அதாவது, நிரம்ப முயன்றல் தான் உண்டாகும். அப்போது

குன்றேறி யானைப்போர் கண்டற்றுல் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

அஃதாவது, குன்றின்மீதுள்ளவன் குன்றினடியில் யானையும் யானையும் புரிகின்ற போரை அச்சமும்

வருத்தமும் இன்றி காண்பது போலாகும் ஒருவன் ஈண்டு கூறப்படும் பொருளைப் பயன்படுத்தி, அரியதொரு செயல் செய்ய முனைபவன் முயற்சி.

அஃதாவது, காலிங்கர் கூறுவதுபோல "பாவமும் பகையும் தன்னை அணுகாமல் பரிகரித்து இனிது வாழும் பொருளுடையோன் என்பது பொருளாயிற்று."

இனி, பாவமும் பகையும் ஒருவனை அணுகாமல் காப்பது பணமாகிய செல்வமா? பணமே பாவத்தையும் பகையையும் தூண்டி விடுகின்றதன்றோ? ஆகவே இவற்றிலிருந்து பாதுகாப்பது மேற்கூறிய ஒப்புரவு-வாய்மையாம் செல்வம் என்பதே பொருந்தும் கருத்தாகும்.

ஏற்கெனவே ஒப்புரவு பற்றியும், வாய்மை பற்றியும் கூறிய வள்ளுவர் "பொருள் செயல்வகை" என்ற அதிகாரத்திலும் அவற்றையே உரைக்கிறார் என்பது பொருந்தாக் கூற்று எனத் தடைகிளம்பலாம்.

அவையிரண்டினுலும் "வாய்மை" என்னும் பொய்யா விளக்கு ஒளிவீசி இருளை அறுத்துக் கொண்டேயிருக்க, யாதொன்றும் தீமையிலா தானின் பொருள்சேர் புகழைப் புரிவதால் மக்கள் உள்ளம் மெய்ப்பொருளின்பால் ஈர்க்கப்பட, புரை தீர்ந்த நன்மை பயக்குமாறு அருள் ஆள்வோர் எத்தேயத்தும் சென்று பணி புரிய, அருள் என்னும் குழவி இறைவன் அன்பிலிருந்து உள்ளங்களுள் உதிக்க, அறமும் இன்பமும் உண்டாகும். ஒப்புரவும் வாய்மையும் சான்றாண்மையின் தூண்களாக, அவற்றை உறுதியான ஆதாரமாகக்

கொண்டு செயலாற்றுதலே "பொருள் செய்தல்" என்க. "பொருள் செய்க" என்ற கருத்தை வலியுறுத்தும் நோக்குடன் இவ்வதிகாரத்தை இயற்றினர் என்க.

'பொருள்' என்ற சொல்லை இப்பொருளில் பயன்படுத்தியது பொருத்தமற்றதென்பதற்கில்லை. ஏனெனில், வள்ளுவர் 'பொருள்' என்ற சொல்லை அருளுடனும் பொருளுடனும் இணைத்துக் கூறுவது கவனிக்கத் தக்கது.

> பொருட்பொருளார் புன்னலம் தோயார்
> அருட்பொருள் ஆயும் அறிவினர்

அங்ஙனமே 'செல்வம்' என்ற சொல்லையும் அருளுடனும் பொருளுடனும் இணைத்துக் கூறியது கண்டோம்.

'பொருட் பால்' பகுதியில் இக்கருத்து கூறப்பட்டதற்குப் பொருத்தம் இல்லாமல் இல்லை. பொருளாகிய பொருளை ஆள்வோர் அரசர். ஆதலின் அவர்கட்கும் பொருந்தும் கருத்துக்களைக் கூறும் அதே நேரத்தில் அருளாகிய பொருளை ஆள்வோர் "அருள் ஆள்வோர்" ஆதலின் அவர்க்குப் பொருந்தும் கருத்தையும் கூறினர் என்க.

ஆகவே ஈண்டு கூறப்படும் 'பொருள்' முதற்கண் அருள் ஆள்வோர்க்கும், பின்னர் அரசர்க்கும் பொருந்துவதாகும்.

*

# 6. நாண்

நாண் உடைமையை வள்ளுவர் சால்பூன்றிய தூண்களுள் இரண்டாவதாகக் கூறுகிறார்.

> "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
> ஐந்து சால்பூன்றிய தூண்"

என்கிறது குறள்.

மணக்குடவர்: அறம் பொருள் இன்பங்களின் பிறர் பழியாமல் ஒழுகுதல்.

பரிதியார்: நீதியல்லாதது கண்டால் நாணுதல்.

புலவர் குழந்தை: தமக்கு ஒவ்வாத காரியம் செய்ய நாணுடையராதல். அதாவது, இழிந்த செயல்களைச் செய்ய நாணுதல்.

ஞா தேவநேயன்: உயர்குடிப் பிறந்து மானம், பெருமை, சால்பு, பண்பு ஆகிய குணங்களையுடையோர் தமக்குப் பொருந்தாத கருமங்களைச் செய்ய நாணும் தன்மை.
சாமி. சிதம்பரனார்: செய்யத் தகாதவைகளைச் செய்ய நாணுதல்.

மு. கோவிந்தசாமி: அஞ்சுவதஞ்சும் அறிவுடையது நாணம்

மு. வ.: தகாத செயல் காரணமாக நாணுவதே நாணமாகும்.

கா. சுப்பிரமணியப் பிள்ளை: ஒவ்வாத கருமங்களுக்கு இணங்காத இயல்பு. ஒவ்வாத காரியத்தைச் செய்யக் கூசுதல்.

இவ்வுரைகளினின்று இருவித கருத்துக்கள் புலனாகின்றன.

ஒன்று: தகாத காரியத்தைச் செய்ய நாணுதல். இது எல்லா மனிதர்க்கும் பொருந்தக்கூடிய நியதி.

மற்றொன்று: உயர்ந்தோர் அல்லது உயர்குடிப் பிறந்து நற்பண்புகளையுடையோர் செய்யத்தகாத காரியத்தைச் செய்ய நாணுதல்.

இது குறிப்பிட்ட சிலருக்கே பொருந்தக்கூடிய நியதியாகத் தோன்றுகிறது. இத்தகைய பாகுபாடு ஏற்புடையதாகாது. ஏன்? இழிந்த செயல்களைச் செய்ய எவருமே நாணுதல் வேண்டும். மனிதர் அனைவர்க்குமே பொருந்தக்கூடிய நியதியாகவே இந்த 'நாண்' என்பது இருத்தல் வேண்டும் அது இல்லையேல் 'சால்பு' என்னும் நிறைவு இருப்பதற்கிடமில்லை. சால்புக்குத் தூணாக 'நாண்' உள்ளதன்றோ?

ஆகவே, இழிந்த செயல்கள் செய்ய நாணுதல் என்ற கருத்தே சிறந்தது. மனிதர் அனைவர்க்கும் பொதுவான நியதியே இது என்க.

இனி, தகாத செயல்களைச் செய்ய நாணுதல் என்ற கருத்து மட்டும்தான் இங்கு உள்ளதா, செய்த பின்னர் நாணுதலும் உள்ளதா என்பது ஆயத்தக்கது.

"கருமத்தால் நாணுதல்" என்ற சொற்றொடரில், "கருமத்தால்" என்ற சொல்லுக்குத் தரும் உரைகள் சில பின்வருமாறு:

— இழிந்த கருமம் காரணமாக.

— தாம் செய்யும் வினையினாலே.

— இழிந்த செயல்களால்.

வேறு சில உரைகள் :

தீவினை செய்ய வெட்கி ... ... ...

ஒவ்வாத காரியத்தைச் செய்யக் கூசுதல் ... என்கின்றன. தீவினை செய்வதற்கு முன்பு நாணு தலா, செய்த பின் நாணுதலா என்று இவ்வுரை களினின்று தெளிவாகப் புலப்படவில்லை

தீவினை செய்யும் முன்பு நாணுதல் எனின் தீவினை செய்ய அஞ்சுதல் என்றே பொருள்படும். இக்கருத்தைத் "தீவினை அச்சம்" என்ற அதி காரத்தில் விளக்குகிறார். ஆகவே, "நாண்" என்னும் இந்த அதிகாரத்தில், 'செய்த பின் நாணுதல் பற்றியே கூறப்படுகிறது என்று முடிவு செய்யலாம்.

செய்த பின் ஏன் நாணுதல் வேண்டும் எனின், காரணம் கூறுகிறார்.

"நாணுடைமை மாந்தர் சிறப்பு" என்று முதற் காரணம் கூறுகிறார்,

"அன்பின் வழியது உயிர்நிலை" என்று வள்ளு வர் கூறியது, ஊண் உடை முதலியன பொதுவாகக் கொண்டிருக்கும் எல்லா உயிர்களைக் குறித்தன்று, அன்பு என்னும் சிறப்பான பண்பினைப் படைத்த ஆறறிவுயிர்களைக் குறித்தே. சால்புக்கு முதல் தூண் என விளங்கும் அன்பு இல்லையேல் மனித

வாழ்வுக்கு இடமில்லை, என்பது கருத்து. அன்பின் வழியதாக மனித உயிர்நிலை சிறக்கவில்லையேல் அந்த மனிதப் பண்பே இல்லை என்க.

இனி, தீவினை செய்வோன் அன்பின் வழியது உயிர்நிலை என்ற நியதிக்கு மாருக ஒழுகுபவனு கின்ருன். தீவினை என்பது அன்பை ஒழிப்ப தாகும். ஏனெனில், "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற இலக்கணத்திற்கு மாருக, தீவினை செய்பவன் பிறர்க்குத் தீமையே செய்பவ ஞகின்ருன் தீவினையெல்லாம் யாதாமொரு வகை யில் அன்பைக் கெடுப்பதாகும். தீவினையாளன். "என்பும் உரியர் பிறர்க்கு" என்பதற்கு மாருக, "பிறர் என்பும் தனக்குரியது" என்ற முறையில் செயல்புரிகின்ருன் ! தீவினை என்பது அன்பு றவைக் கெடுப்பது : அன்பையே ஒழிப்பது.

இனி இத்தகைய தீவினை நிகழ்ந்தபின், ஒருவன் செய்யவேண்டியது என்ன ? பேசாம லிருந்துவிடலாமா ? அன்பைக் கெடுப்பவன் அதனை மீண்டும் தோற்றுவிக்க வழியில்லையா ? உண்டு. அதுவே "நாண்" என்னும் நன்மை.

தீமையே ஒழிக்க, அதனை மேற்கொள்ள ஒரே பொரு சக்தியுண்டு. அதுவே நன்மையெனப் படுவது நன்மையால் மேற்கொள்ள முடியாத தீமை எதுவுமில்லை.

ஓர் எடுத்துக்காட்டு : அருணனும் கருண னும் நெருங்கிய நண்பர்கள். அருணன் ஒரு முறை எங்ஙனமோ கருணனுடைய பெயரை அநியாயமாகக் கெடுத்து அவனது குடும்பத் துக்கே பெரியதொரு தீங்கை விளைவித்து விட்டான், அதன் பின்னர் அருணன் தான்

இழைத்த தீங்கை எண்ணி உள்ளம் வெதும்பி "இனிய நண்பனுக்கு இப்படித் தீங்கு இழைத்து விட்டோமே!" என்று பெரிதும் நாணி, தான் செய்த அநியாயத்தைப் பலர் முன்னிலையிலும், சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு, எதிர்பாராததொரு பேருதவியைக் கருணனுடைய குடும்பத்துக்குச் செய்தான்.

தான் செய்த குற்றத்தை எண்ணி நாணுவதால் அக்குற்றத்துக்குத் தக்க கழுவாய் உண்டாவது இதில் காண்கிறோம். ஆகவேதான் "நாண் எனனும் நன்மை" எனப்படுகிறது இந்த நன்மை சால்புடையார்க்குரியது என்றும் அறிதல் வேண்டும்.

"நாண் என்னும் நன்மை குறித்தது சால்பு" என்கிறார் வள்ளுவர்.

நாணுதல் ஏன்?

தான் செய்த குற்றத்தை எண்ணி ஒருவன் நாணும்போது, நாணுமாறு அவனை உந்துவது என்ன? எதுவாக இருக்கமுடியும்? எதுவாக இருத்தல் வேண்டும்?

தீவினை என்பது அன்புறவைக் கெடுப்பது, அன்பையே ஒழிப்பது எனின், அன்பில்லாத உயிர் நிலை பொருளற்றதாயின், அத்தீவினை, புரிந்தபின் பொருளற்ற வாழ்க்கை நடத்துபவனாகின்றான். "அன்பகத்தில் உயிர்வாழ்க்கை" பற்றி வள்ளுவர் கூறுவது கவனிக்க, அன்பின் வழியது உயிர் நிலை என்றால், அன்பில்லாத வாழ்க்கை மனிதப் பண்புக்கு ஏற்றதாவது அன்றோ? ஆகவே, இந்த

இழிநிலையை எண்ணி அவன் நாணவேண்டியவனாகின்றான். சால்பு என்பது அன்பில்லாமல் நிலை பெறாதாகையால் சால்பினை வளர்க்க வேண்டிய சான்றோன் அன்பைச் சீர்குலைத்தால், "நாண் என்னும் நன்மை குறித்தது சால்பு" ஆதலின், நாணவேண்டியதேயன்றோ?

மேலும், தீவினை என்பது செருக்கு என்கிறார் வள்ளுவர் "தீவினை அச்சம்" என்ற அதிகாரத்தில். ஆகவே செருக்கு என்னும் தீவினை நிகழ்ந்தால், தன்னைத் தாழ்த்திக்கொள்வதே முறையன்றோ? இங்ஙனம் தாழ்த்துவதே நாண் என்க.

இனி, அன்பு, அன்புறவு என்னும்போது மனிதர் ஒருவர்க்கொருவர் செலுத்தவேண்டிய அன்பு பற்றி மட்டும் பேச்சா, மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள அன்புறவு பற்றியும் பேச்சா?

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்." என்று வள்ளுவர் கூறும் அன்பின் இலக்கணம் எந்த அன்புக்குச் சிறப்பாகப் பொருந்தும்? இறைவன் மனிதன்பால் செலுத்தும் அன்பிற்கா? மனிதன் மனிதன்பால் செலுத்தும் அன்பிற்கா?

மேலும், "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பது யாருக்கு முற்றிலும் பொருந்தும்? இறைவனுக்கா, மனிதனுக்கா? இறைவனுக்கே முழுதுறப் பொருந்தும் என்று "அன்புடைமை" என்னும் அதிகாரத்தில் விளக்கப்பெற்றது காண்க.

ஆகவே, இறைவனுக்கே முழுதுறப்பொருந்தும் இந்த அன்பை ஒருவன் தன் குற்றத்தால் கெடுத்து விடுவானாயின் என் செய்வது? அஃதாவது, மனிதன்பால் இறைவன் செலுத்திய, செலுத்தும்

அன்புக்குக் கைம்மாருக மனிதன் இறைவன்பால் அன்புறவு கொண்டு ஒழுகவேண்டும் அன்ருே? தீவினை செய்பவன் எவனும் அன்பைச் சீர்குலைக்கிருன் என்ருல், அவன் இறைவன்பால் செலுத்த வேண்டிய அன்பையும் சீர்குலைக்கிருன்.

"அன்பின் வழியது உயிர்நிலை" என்ற நியதி மனிதனுக்குக் மட்டுமன்று, இறைவனுக்கும் பொருந்துவதாகும். இறைவனும் அன்பின் வழி நின்றே உலகையும் மனிதனையும் படைக்கின்ருன். அன்பின் வழி நின்றே தன்னை ஜந்தவித்தான் ஆக்குகின்ருன். அன்பின் வழி நின்றே "என்பும் உரியர் பிறர்க்கு" என்ற இலக்கணத்துக்கு ஏற்ற இலக்கியமாக விளங்குகின்ருன். *

ஆகவே, அன்புறவைக் கெடுத்தவன், மற்றவர் பால் தனக்கிருக்க வேண்டிய அன்புறவைக் கெடுத்ததால் மட்டுமன்று, இறைவன்பால் தனக்கிருக்க வேண்டிய அன்புறவையும் கெடுத்ததாலும் நாண வேண்டியவனுகின்ருன்.

அங்ஙனம் எல்லா நன்மை வடிவினனுன இறைவன் முன் தீவினை என்னும் செருக்குச் செயலைப் புரிந்ததால், இறைவன் முன்னிலையில், தன்னைத் தாழ்த்திக்கொள்ள வேண்டியவனுகின்ருன்.

சிறப்பாக, இது சான்ருேர்க்குரிய பண்பாக விளக்க வேண்டும். சான்ருேர்க்கு "அணியன்ருே நாண் உடைமை!" "அஃதின்றேல் பிணியன்ருே பீடுநடை!"

---

* "அன்புடைமை" அதிகாரம் காண்க,

மேலும்,

" நாண் அகத்தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணுல் உயிர்மருட்டி யற்று."

என்று கூறப்படுவதும் கவனித்தல் வேண்டும்.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை" வளம் பெருது என்று கூறிய வள்ளுவர், அந்த அன்பைத் தீவினையால் சீர்குலைத்த பின்,

"நான் அகத்தில்லா உயிர் வாழ்க்கை" கயிற்ருல் ஆடும் வெறும் மரப்பாவைப்போல் என்று கூறுவது மிகப் பொருத்தமே.

அன்பகத் தில்லா வாழ்க்கை பயனற்றது அங்ஙனமே சீர்குலைந்த அன்பை மீண்டும் பெறச் செய்யும் நாண் இல்லாவிடில், மனிதன் மனிதனேயல்லன். உயிருள்ளவன்போல் காணப்படினும் அவன் கயிற்ருல் இயக்கப்படும் மரப்பாவைக்கு ஒப்பாவான்.

ஆகவே, நாண் என்பது மனித உயிர்க்கு எத்துணை அவசியம் என்ருல், உயிர்போனலும் போகட்டும், நாண் என்னும் சால்பு இழத்தலாகாது என்ற மன உறுதியுடன் வாழ்வான் என்கிருர் வள்ளுவர். "நாணுல் உயிரைத் துறப்பர். உயிர் பொருட்டால் நாண் துறவார் நாண் ஆள்பவர்." என்கிருர்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்புகளுள் நான் என்பதும் ஒன்ருகியிருப்பதால் சிறப்பாக இறைவனுக்கும் — ஐந்தவித்தானுக்கும் சான்றுகூற வேண்டியவர்க்கு மிகமிகத் தேவைப்

படுவதால் சால்பூன்றிய தூண் எனப்படுவதில் வியப்பில்லை (பிற்சேர்க்கை. 4 காண்க)

செய்த தீவினைபற்றி நாணுதல் இல்லாதவன் இறைவனுக்கும் அவனது அன்புக்கும் சான்று கூறுதல் பொருளற்ற கருத்தாகுமன்றோ.

# 7 ஒப்புரவு

'ஒப்புரவு, என்ற சொல்லுக்கு அறிஞர்கள் கூறும் பொருளும், கருத்தும் என்னவென முதற்கண் ஆராய்வோம்.

பரிமேலழகர்: உலகநடையினை அறிந்து செய்தலே ஒப்புரவு. உலகநடை வேதநடை போல அறநூல்களுள் கூறப்படுவதன்றித் தாமே அறிந்து செய்யும் தன்மையாதலின் 'ஒப்புரவு அறிதல்' என்றார்.

மணக்குடவர்: ஒப்புரவறிதலாவது, இல்லென இரந்து வந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றல் இலரெனினும், தம் அளவிற்கும் தம் வருவாய் அளவிற்கும் ஏற்கத் தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல்.

பரிதியார்: ஒப்புரவறிதலாவது, ஒருவர்க்குச் செய்யும் ஒப்புரவு அறிய வேண்டும் என்றவாறு.

**கா. சுப்பிரமணியப்பிள்ளை :** ஒப்புரவு என்பது தம்மைச் சார்ந்த பிறரைத் தம்மோடு ஒத்த நன்னிலை அடையும்படி செய்தல். அவருடைய குறைகளை உணர்ந்து அவற்றை நீக்குவதற்கு வழியறிதல் ஒப்புரவு எனப்படும். தம்முடைய குலத்தினருக்கும் நாட்டினருக்கும் இடர் வந்தபோது உதவுதல் ஒப்புரவு என்ப.

**புலவர் குழந்தை :** ஒப்புரவு — உலகநடை, ஒப்புரவு அறிதல் — உலகம் ஒழுங்காக நடைபெறும் வழியை அறிதல், ஒழுங்காக நடைபெறுதலாவது - மக்கள் எல்லோரும் உண்டு, உடுத்து ஒழுங்காக வாழ்தல். அவ்வாறு வாழும்படி செய்தலே ஒப்புரவு செய்தல் ஆகும். அதாவது உலக வாழ்வைச் சமன் செய்தல், ஒப்புரவு — சமன். ஒப்புரவு செய்தல் — சமன் செய்தல். விதைத்த நிலத்தில் பாத்தி கட்டுவோர், தண்ணீர் சமனாகப் பாயும் பொருட்டு மேட்டை வெட்டி பள்ளத்தில் போட்டுச் சமன் செய்வது ஒப்புரவு செய்தல் எனப்படும். அவ்வாறே உள்ளவர் இல்லார்க்கு உதவி, உலக வாழ்வைச் சமன் செய்வது ஒப்புரவு செய்தலாகும். அவ்வாறு உலக நடையைச் சமன் செய்வது ஒப்புரவு செய்தல் ஆகும். "உடையோர்" கடன் இது என்பதை அறிதல் - ஒப்புரவறிதல் ஆகும். இல்லார்க்குக் கொடுத்தல் உள்ளார் கடன் என்பதை உணர்ந்து கொடுத்தல் ஒப்புரவு அறிதல் – ஒப்புரவு செய்தலாகும்.

**தேவநேயன் :** அஃதாவது, இல்லறத்தாருட் பெருஞ் செல்வர், செல்வருள் உயர்ந்தோரான வள்ளல்களைப் பின்பற்றி யொழுகுதலின் கண், "வளவனாயினும் அளவறிந்தளித்துண்" என்ற நெறி முறைப்படி தத்தம் அளவறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ளுதல். உயர்ந்தோரான வள்ளல்களை

யொத்தொழுகுதலும் அவரவர் செல்வத்தின் அள வறிதலும் பற்றி ஒப்புரவறிதல் எனப்பட்டது. இது பெருஞ் செல்வர்க்குரிய உலகநடையாம்.

சாமி சிதம்பரனார்: உலகப் போக்கறிந்து வாழ்வது.

புலவர் மு. கோவிந்தசாமி (நயவுரை): அருள் அன்பு போன்றன ஒப்புரவும் ஈகையும். ஒப்புரவு பிற நாட்டார்க்கும், பிற உயிர்க்கும் எவ் வகையாலும் வரையின்றிச் செய்வது (பரந்தது). ஈகை பெரிதும் தன்னுயிர்க்கே உணவால் உதவு வது.

சுருங்கக் கூறின்,

1) உலகநடையினைத் தாமே அறிந்து செய லாற்றுதல்.

2) தம் அளவிற்கும் வருவாய்க்கும் ஏற்பப் பிறர்க்குப் பொருள் உதவி புரிதல்.

3) தம்மைச் சார்ந்த பிறரைத் தம்மோடு ஒத்த நன்னிலை அடையும்படி செய்தல்.

4) தம் குலத்தினர்க்கும் நாட்டினர்க்கும் இடா வரும்போது உதவுதல்,

5) உள்ளவர் இல்லார்க்கு உதவி உலக வாழ் வைச் சமன் செய்வது.

6) தத்தம் அளவறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளுதல்.

7) உலகப் போக்கு அறிந்து வாழ்வது.

8) பிறநாட்டார்க்கும் பிறவுயிர்க்கும் எவ் வகையாலும் வரையின்றிச் செய்வது.

என்னும் கருத்துக்களே "ஒப்புரவு" என்ற சொல்லுக்கு அறிஞர் கூறும் பொருள் எனத் தோன்றுகின்றன.

ஆனால், உள்ளவர் இல்லார்க்கு உதவி புரிதல் என்ற கருத்து "ஈகை" என்னும் அடுத்த அதிகாரத்தில் கூறப்படுவதால், "ஒப்புரவு" என்னும் இந்த அதிகாரத்திலும் வள்ளுவர் கூறினர் என்பது பொருந்தாது.

உலகநடையை அறிந்து ஒழுகுதல், உலகப் போக்கு அறிந்து வாழ்வது என்ற கருத்துக்களும் அத்துணை சிறப்பாகத் தோன்றவில்லை உலக நடையும் போக்கும் பல விதங்களில் இழுக்குடையனவாகவே காணப்படுவதால் அது சான்றோர்க்கு ஏற்ற பண்பு, என்பதற்கில்லை. ஆகவே, 'ஒப்புரவு' என்ற சொல்லுக்கு வேறு பொருள் இருக்க வேண்டும்.

"தீவினை அச்சத்திற்குப் பின்னர் 'ஒப்புரவு' உள்ளது கவனித்தற்பாலது. இவ் இல்லற இயலில் அற வாழ்க்கையைச் சார்ந்த அடிப்படை உண்மைகள் விளக்கப்படுவது தெளிவு இவ்வுண்மைகள் இல்லறத்துக்கும் துறவறத்துக்கும் பொதுவானவை என்பதும் தெளிவு.

ஆகவே, "அன்பின் வழியது உயிர்நிலை" என்று அன்பின் இலக்கணத்தைக் கூறிய பின்னர், அவ்வன்பை நிலைநாட்டுபவை, எவை என விளக்குகின்றார் ஆசிரியர்.

விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந் நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை,

புறங்கூருமை, பயனில சொல்லாமை, என்ற அதிகாரங்களின் அடிப்படைக் கருத்துக்கள் பல விளக்கப்படுகின்றன. இல்லறவியலாதலின் "பிறனில் விழையாமை" என்ற அதிகாரமும் உள்ளது.

இவற்றைக் கூறியபின், அன்பின், வழியதான உயிர்நிலையைச் சீர்குலைப்பது "தீவினை"யே என்பதால், அதற்கு அஞ்ச வேண்டும் என அறிவுறுத்த "தீவினை அச்சம்" என்ற அதிகாரம் உள்ளது.

நன்றியின்மை, நடுவுநிலையின்மை, அடக்கமின்மை, ஒழுக்கமின்மை, பிறனில் விழைதல், அழுக்காறு, வெஃகுதல், புறங்கூறுதல், இவையெல்லாம் தீவினைகள். ஆதலின், இவற்றிற்கு அஞ்சுதல் வேண்டும் என்கிருர் வள்ளுவர்.

ஏன் அஞ்ச வேண்டும் என்பதற்குக் காரணங்கள் கூறுகிருர்.

1) தீவினை என்பது "செருக்கு," ஆகவே விழுமியார் அதற்கு அஞ்சவேண்டும என்கிருர்.

* தீவினையார் அஞ்சார் விழுமியர் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.

விழுப்பம் தரலான் ஒழுக்கத்தை ஒருவன் உயிரை விட அதிகமாக மதித்து ஓம்புதல் வேண்டும். ('ஓம்புதல்' என்ற சொல்லின் ஆழ்ந்த பொருளை ('விருந்தோம்பல்' பகுதியில் காண்க.

2) தீவினை என்பது "செருக்கு". ஆகவே, அது 'அடங்காமை' ஆகும்

---

* பிற்சேர்க்கை ........ 6 ......... காண்க.

அடங்காமையோ ஆரிருள் உய்த்து விடும்.

"இருள்சேர் இருவினை" களுள் தீவினை ஒன்று என்பதுபற்றிக் கருத்து வேறுபாடு இல்லையாதலின், தீவினை இருள் சேர்த்துவிடும் என்பதில் ஐயமிருக்க இடமில்லை. இந்த 'இருள்' என்பது மருள், மயக்கம் என்பது மட்டுமன்று, "இருள் சேர்ந்த இன்னா உலகமே" என்க. தீவினையாகிய இருள்சேர்ந்த நெஞ்சில், அருள் புகாதாகையால், அத்தகையோர் அருள் இல்லா, அதாவது, இருள் சேர்ந்த இன்னா உலகம் புக வேண்டியது முறையேயன்றோ? ஆகவே,

"நாச்செற்று விக்குள் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்" *

என்கிறார்.

ஆகவே, மேலுலகம் என்னும் இன்னுலகம் புகுமாறு ஒருவன் இருள் சேர்க்கும் தீவினையைத் தவிர்த்தாக வேண்டும் என்பது தெளிவு. மாறாக, 'அருள்சேர்' அல்லது "ஒளிசேர்" நல்வினையைச் செய்தல் வேண்டும். அவ்வொளிசேர் நல்வினையாவது "இறைவன் பொருள்சேர் புகழ் புரிதலே யாம்.

"பொருள் அல்லவற்றைப் பொருள்" என்று மருளடைந்து மனிதன் எங்கெங்கோ தேடுகிறான் தன் மன நிறைவை. ஒன்றுக்கும் பயன்படாத காரியங்களைப் பெரிதாக மதித்து, அவற்றையே உண்மைப் பொருளாக எண்ணி, மதிமயங்கி

---

* ஆகவே 'இருள்சேர் இருவினை' களுள் "நல்வினை" ஒன்று அன்று என்பது தெளிவு.

ஏமாந்து. போகிறான், பணம், செல்வாக்கு, சிற்றின்பம் இவற்றையே ‘பொருளாக எண்ணித் தேடுகிறான்.

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

என்பதை மறந்து இறைவனின் பொருள்சேர் புகழ் தரும் பேரின்பத்தை முழுமூக்சுடன் நாடுவதற்கு மாறாகப் பணம், மதிப்பு, பேர், புகழ், பால் இன்பம் ஆகிய சிற்றின்பங்களை நாடித் தன் வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்கிறான். அருள்ஒளிசேர் இன்னுலகம் சேர்க்கும் நல்வினை செய்யாது, இருள் சேர் இன்னா உலகம் புகுவோமே என்ற அச்சமின்றி வாழ்க்கை நடத்துகிறான். அதன் பின்னர் நிகழ்வதென்ன? புகழ் புரிவதற்கு மாறாக, தீவினை புரிந்த பின்னர், ஒருவன் என்ன செய்வது? தீவினையிலேயே மாள்வதா? அத்தீவினையின் விளைவைப் போக்கிவிட வழியேதும் இல்லையா? உண்டு என்கிறார். அதுவே “நாணுடைமை” என்பதாகும்”. தனி அதிகாரத்தில் காண்க.)

இந்நாணுடைமையால் இறைவனோடு ஒப்புரவாக இயலும் என்ற கருத்தும் வள்ளுவரது படிப்பிணையாகும், ஆகவே ஒப்புரவு என்ற அதிகாரத்தை இக்கண்ணோட்டத்தில் ஆய்வோம்.

ஒப்புரவு - சமன் செய்தல்

“ஒப்புரவு” என்னும் நன்மை இவ்வுலகைச் சார்ந்ததொன்று அன்று என்னும் கருத்தை வள்ளுவர் மிக அழுத்தமாக,

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.

இந்த ஒப்புரவிலும் மேலான நன்மையை இவ்வுலகிலும் பெற முடியாது: மேலுலகிலும் பெற முடியாது என்கிறார். அத்துணை மேலான நன்மையாயின், பொருள் இல்லார்க்கு வழங்குதல், உலக நடையறிந்து ஒழுகுதல் முதலிய கருத்துகள் எல்லாம் சற்றும் பொருந்தாமை காண்க.

மேலுலகிலும் கிடைக்காத நன்மை எனின், இறைவனோடு தொடர்பு கொண்ட நன்மையாகத்தான் இருக்க முடியும். மேலுலகத்துப் பேரின்பமே என்க. ஆனால் ஈண்டுக் கூறப்படுவது "ஒப்புரவு" ஆகும், எப்பொருளில் இந்த ஒப்புரவு மேலுலகிலும் இவ்வுலகிலும் பெறலரிது என்று சொல்ல முடியும்? இறைவனின் பேரின்பமே அனைத்து நன்மையினும் உயர்ந்தது எனின், அவன் தர விரும்பும் அப்பேரின்பத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவதும் மிக உயர்ந்த நன்மையேயன்றோ? அங்ஙனம் விரும்பி ஏற்காமையே இருள் சேர் வினை எனப்பட்டது. மனிதன் தன் பொருள் சேர் புகழ் புரிய வேண்டுமென்னும் அதுவே அவனுக்கு உண்மையான இன்பத்தைக் கொணர முடியும் என்றும் இறைவன் விரும்பியது அக்குறட்பாவில் கூறப்படும் கருத்தேயன்றோ? அதைத் தர விரும்பிய இறைவனின் நட்பையும் அன்பையும் ஏற்காமைக்கு நாணி அதை ஏற்க முன்வருவதும் மிக உயர்ந்த நன்மையேயன்றோ? இறைவனின் அன்புறவினும் மேலான நனமை மேலுலகிலும் இல்லை, இவ்வுலகிலும் இல்லையன்றோ?

இந்தக் கருத்தை ஒப்புரவு என்ற சொல் எங்ஙனம் உணர்த்துகிறது? 'ஒப்புரவு' என்ற சொல்லுக்கு "சமன்" என்ற பொருள் உண்டு. ,,விதைத்த நிலத்தில் பாத்தி கட்டுவோர், தண்ணீர் சமனாகப் பாயும் பொருட்டு மேட்டை

வெட்டிப் பள்ளத்தில் போட்டுச் சமன் செய்வது ஒப்புரவு செய்தல் எனப்படும்.'' (புலவர் குழந்தை உரை).

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இறைவனே ஏற்படுத்த விரும்பிய அன்புறவைப் பற்றிய இலக்கணத்தை ஆய்ந்து பார்த்தால் 'சமன் செய்தல்' என்ற இந்த 'ஒப்புரவு' நன்கு புலனுகிறது.

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே அளவிலாத் தொலைவு இருந்தேயாக வேண்டும். மனிதனைவிட இறைவன் அளவிட முடியா மேன்மை கொண்டவன், இறைவன் மிகமிக உயர்ந்தவன். மனிதன் மிகமிகத் தாழ்ந்தவன். இந்நிலையில், இறைவன் மனிதனிடம் அன்புகொண்டு நட்புறவு நிறுவ முன் வருகின்ருன்.

இனி, நண்பர்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வுகள் இருத்தலாகாது. உண்மையான நண்பன் தாழ்வுற்ற நிலையில் உள்ள தன் நண்பனை உயர்த்திவிட முழு மூச்சுடன் முயல்வான். நட்பின் தன்மையே அப்படி. இறைவனும் இந்த முறையில் தான் செயலாற்றுகின்ருன். தனக்கும் தான் படைத்த மனிதனுக்குமிடையே உள்ள அளவிட முடியாத தூரத்தைக் குறைத்து ஓரளவு சமத்துவத்தை உண்டாக்க விரும்புகின்ருன். தன் பேரின்பத்தில் பங்கு பெறுமாறு அவனை அழைத்ததன் கருத்து இதுவே. அழைத்த பின்னர் அவன் 'தீவினையென்னும் செருக்'கினுல் இறைவன் உண்டாக்க விரும்பிய நட்புறவைக் கெடுத்துக்கொள்கிருன். கெடுத்துக்கொண்ட பின்னரும் இறைவன் மீண்டும் அந்நட்புறவை ஏற்படுத்த விரும்புகின்ருன்.

உயர்ந்த இடத்தில் உள்ள தண்ணீர் தாழ்ந்த இடத்துக்கு இயல்பாகவே பாய்வதுபோல இறைவனின் அன்பும் அதன் குழவியாகிய அருளும் பெருவெள்ளமெனத் தாழ்வுற்ற மனிதனின் உள்ளத்தில் பாய்கின்றது அந்த அன்பையும் அருளையும் இழந்து மிகமிக இழிந்த நிலைக்கு வீழ்ச்சியுற்ற மனிதனை மீண்டும் உயர்நிலைக்கு உயர்த்துகின்றான் இறைவன். ஏன் இங்ஙனம் செய்கிறான்? அதுவே அன்பின் பண்பு: நட்புறவின் தன்மை. இதுதான் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிகழ்ந்த ஒப்புரவு என்க. அஃதாவது, சமன் செய்யப் பட்ட நிலையாகும்.

ஆனால், இது முற்றிலும் சமன் ஆன நிலை என்பதற்கில்லை.

மேட்டையும் பள்ளத்தையும் சமனாக்க முடியும். இரண்டும் அளவுள்ள முறையில் சமனின்றி இருக்கின்றன. இறைவனும் மனிதனுமோவெனில், அளவற்ற முறையில் சமனின்றி இருக்கின்றனர். அஃதாவது, இறைவன் மனிதனைவிட அளவிட முடியாத முறையில் உயர்ந்தவர். மனிதனை எந்த அளவுக்கு உயர்த்தினாலும் அவன் இறைவனுக்கு இணையான நிலைக்கு வந்துவிட முடியாது. அங்ஙனம் வந்தால் அளவில்லாத இறைவன் மனிதனைப் போல் அளவுள்ளவனானான் என்றும், அளவுக்குட் பட்ட மனிதன், அளவுக்குட்பட முடியாத இறைவனானான் என்றும் ஆய்விடும்! இது முற்றிலும் விகற்பம். ஆகவே, மனிதனை இறைவன் எந்த அளவுக்கு உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு உயர்த்துகின்றான் என்பதே பொருள். படைப்புண்ட பொருள் எந்த அளவுக்கு உயர்த்தப்பட முடியுமோ அந்த அளவுக்கு உயர்த்தப்பட்டதால்,

ஓரளவு சமநிலை உண்டாயிற்று என்பதில் தவறில்லை. இதுவே ஒப்புரவு நிலை என்க.

**இத்தகைய நிலையை இறைவன் ஏற்படுத்தியதாகக் கூறும் கொள்கை யாருடையது?**

**(பிற்சேர்க்கை 9இல் காண்க)**

இந்த அளவுக்கு இறைவன் தனக்குச் செய்த நன்றிக்கு எந்தக் கைம்மாறும் செய்ய முடியாத நிலையில் மனிதன் உள்ளான் என்பதையே,

> கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
> என்ஆற்றும் கொல்லோ உலகு.

என்ற முதற்குறள் குறிப்பிடுகிறது.

இறைவனுக்கு மனிதனால் எந்நன்மையும் இல்லை. தன்னிலேயே எல்லா நிறைவும் கொண்டுள்ள இறைவனுக்கு மனிதன் எந்த நன்மையும் ஆற்ற இயலாதவனாய் உள்ளான். எனினும் இறைவன் மனிதனுக்கு இந்த உயர்ந்த நன்மையைத் தர விரும்புகிறான். இது "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு" என்பதில் ஐயமென்ன!

இறைவன் கைம்மாறு கருதாமல் செயலாற்றுவது மட்டுமன்று; மனிதன் இறைவனுக்கு ஏதேனும் கைம்மாறு செய்ய விரும்பினால்கூட, செய்வதற்குத் தன்னிடம் ஒன்றுமில்லை. எனினும், தான் படைத்த படைப்புகளுக்கு இறைவன் தன்னுள் இருக்கும் அளவில்லாத நன்மையாகிய பேரின்பத்தில் பங்கு தருவதைத் தன் கடமை போலவே எண்ணிச் செயல் புரிவது காண்கிறோம். "கைம்மாறு வேண்டா கடப்பாடு" என்றது இதனால்தான்.

இங்ஙனம் செயல் புரிவதைத் தன் கடப்பாடாகக் கருதிச் செயல் புரியும் "மாரிமாட்டு" அஃதாவது மாரிபோல் அருள் பொழியும் இறைவன் பால் உலகம் ''என் ஆற்றும்?'' அவன் பொழியும் அருள்மாரியை விரும்பி ஏற்பது மட்டுமே அவன் செய்யக்கூடியது என்றவாறு.

இந்த ஒப்புரவு நன்மையைத் ''தாளாற்றித் தந்த பொருள்' என்கிறது அடுத்த குறள்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இக்குறளில், "தாளாற்றித் தந்த பொருள்" எது, யார் தாளாற்றித் தந்தது என்ற கருத்துக்களை உய்த்துணரல் தேவைப்படுகிறது. ''முயன்று முயன்று ஈட்டிய செல்வம்'' என்ற கருத்தில்தான் அறிஞர் பெரும்பாலும் பொருள் கூறுகின்றனர்.

ஈண்டு "தந்த" என்ற சொல்லுக்கு 'ஈட்டிய' என்று பொருள் கூறுவது பொருத்தமாகத் தோன்ற வில்லை. "யாரோ பெரு முயற்சி செய்து ஈட்டித் தந்த"-என்ற பொருளே சிறப்புறுகிறது. "ஒப்புரவு" என்ற சொல்லுக்கு இவ்விளக்கத்தில் தரப்படும் பொருளுடன் ''தந்த'' என்ற இக்கருத்துச் சிறப்புறு கிறது. யார் தந்தது?...

இறைவன் மனிதனுக்குத் தர விரும்பிய பேரின் பத்தையும் நட்புறவையும் மனிதன் ஏற்காமல் இறைவனின் பொருள்சேர் புகழைப் புரியாமல், தீவினைக்கு ஆளாகி, இழந்தான் என்று மேலே கூறினோம், அந்நட்புறவை மீண்டும் தர இசைந்தான் இறைவன். எங்ஙனம் தர விரும்பினான்? ''தாளாற் றித்தரவே'' விரும்பினான். தாளாற்றி என்றால் பெரு முயற்சி செய்து, துன்புற்று என்று பொருள்.

இறைவன் 'துன்புற்று' இழக்கப்பெற்ற இறைவன் நட்புறவைப் பெற்றுத் தந்தான் என்று கூறும் கொள்கையினர் யார்? .... ஆகவே, தாளற்றித் தந்தது யார்? தாளாண்மை செய்வதென்றால் என்ன?

பிற்சேர்க்கை 5 காண்க

# 8. கண்ணோட்டம்

இச்சொல்லுக்கு உரையாசிரியர்கள் கூறும் பொருளை ஆய்வோம்,

**பரிமேலழகர்:**

தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை.

**மணக்குடவர், பரிப்பெருமாள்:**

கண்ணால் காணப்பட்டாரை அருள் செய்தல், குற்றம் செய்தாரை ஒறுக்குங்கால் உலகத்தார் இசைய ஒறுக்க வேண்டும் எனினும் அவ்வாறு செய்தவரைத் தம் கண்முன்னாகக் கண்டால் அதனைப் பொறுத்தலும் வேண்டும் என்ற பண்புடைமை.

**பரிதியார் :**

அரசர்க்குக் கிருபையாகிய பார்வை வேண்டும் என்றது

**புலவர் குழந்தை :**

பழக்கமுடையார் சொல்லை மறுக்க முடியாமல் இரக்கம் காட்டுதல்.

**ஞா. தேவநேயன் :**

"தன் உறவினரும் நண்பரும் தன்னோடு பழகியவரும் தன்னோடு தொடர்புடையவரும் தனக்கு உதவினவரும் எளியவரும் ஆனவர்க்கு நன்மை செய்வதை மறுக்க முடியாத அன்பு. இது அவரைக் கண்டவுடன் அவர்மீது மனம் விரைந்தோடும் பண்பாகும்."

**சாமி. சிதம்பரனார் :**

பழகியவர்களின் சொற்களை மறுக்காமை,

**கா சுப்பிரமணியப் பிள்ளை :**

வேண்டியவர்களைக் கண்டால் அவர் சொன்னதை மறுக்க முடியாமை.

சுருங்கக் கூறின், உறவால், நட்டால், பழக்கத்தால், தமக்கு வேண்டியவர்கள் சொன்னதை மறுக்கமாட்டாமை, என்ற பொருளே பெரும்பான்மையாகக் கூறப்படுகிறது "மறுக்கமாட்டாமை" என்பது "நன்மை செய்வதை மறுக்க முடியாத "அன்பு?" என்று கொள்ளலாம். (ஞா. தேவநேயன் உரை காண்க.)

அருள் செய்தல் அருட்பார்வை செலுத்துதல், இரக்கம் காட்டுதல் ,என்ற பொருளும் ஓரளவு கூறப்படுவது கவனிக்க.

இந்த இருவகைக் கருத்துக்களுள் எது பொருத்தமானது ?

கண்ணோட்டம் என்பது சால்பூன்றிய தூண் களுள் ஒன்றெனக் கூறுகின்றார் வள்ளுவர். சால்பு, சான்றாண்மைப் பண்புகளுள் ஒன்றாகக் கருதப் படும். இக்கண்ணோட்டத்துடன் மேற்சொன்ன இரு கருத்துக்களுள் எது பொருந்துகிறது என்று ஆய்தல் தேவை.

இந்த அதிகாரத்தில் கூறப்படும் கருத்துக்களை ஆய்வதால் பொருள் விளங்கும். கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை உண்மையான உண் டிவ் வுலகு.

இக்குறளில் கண்ணோட்டம் என்பது "கழி பெரும் காரிகை" எனப்படுகிறது. "கழிபெருங் காரிகை" என்றால் என்ன ? "சிறப்புடைய அழகு," "பெரிய அழகு." "மிகவும் பெரிய நன்மை" என்பது அறிஞர் சிலர் உரை. "கண் ணோட்டம் என்கிற திருமாது" என்கிறார் பரிதியார்.

"கண்ணோட்டம் என்னும் பெண் உலகைப் படைப்பவள் (ஈனுபவள்) அழகு உண்மையான் உலகுள்ளது ... ... ..., உறுப்புகளுள் கண் சிறந்ததாகலின் அதனழகு கழிபெருங்காரிகை யாயிற்று. அருளே சக்தி, அவள் உண்மையான உலகு உள்ளது." என்பது சாமி சிதம்பரனார் உரை.

இக்கருத்தையே ஆங்கில மொழிபெயர்ப்பாளர் சிலரும் கூறுகின்றனர்.

... ... ... "the beautiful high Dance Grace" என்கிறார் வித்துவான் K.M. வெங்கடராமையா, * M.A., B.O.L.

"காரிகை" என்னும் சொல்லுக்கு "அழகு" என்னும் பொருள் கொண்டு இக்குறளை ஆய்வோமாயின் கருத்து சிறப்பதாகத் தோன்றவில்லை." சிறப்பான அழகு இருப்பதால்தான் இவ்வுலகு நிலை பெற்றுள்ளது எனின் பொருள் என்ன? மாறாக 'காரிகை' என்னும் சொல்லுக்கு அருள் என்னும் திருமாது * சக்தி — என்று பொருள் கொண்டால் பொருள் சிறக்கிறது. இறைவனின் அருட்சக்தியால்தான், அவனது அருட்பார்வையால்தான் உலகம் நிலை பெறுகின்றது. கண்ணோட்டம் என்ற சொல்லுக்கு 'அருட்பார்வை' இரக்கம் காட்டுதல் என்று மேலே கூறப்பட்ட இரண்டாவது பொருள் கண்டு பொருத்தமாகிறது. இறைவனுடன் ஒன்றாய் உள்ள அவனது சக்தியே உலகத்தை நிலை பெறச் செய்கின்றது எனின், அறிய கருத்து தோன்றுகின்றது." "ஆதி பகவன் முதற்றே உலகு" என்னும் முதற் குறளில் உள்ள கருத்தையே இக்குறள் மீண்டும் வலியுறுத்துவதாகத் தோன்றுகிறது.

பொருட்பால், அரசு இயலில் வரும் இக்குறள் அரசர்க்கிருக்க வேண்டிய பண்புகளுள் ஒன்றான

* திருக்குறள் உரைக்கொத்து — காண்க-

* இறைவனின் அருட்சக்தியை உருவகப்படுத்திக் கூறப்படுகிறது என்னலாம்.

"கண்ணோட்டத்தை (அருட்பார்வை ... இரக்கம் காட்டுதல்) கூறுகின்றது. ஆகவே ஈண்டு இறைவனது அருட்சக்தி, அருட்பார்வை பற்றிப் பேச்சு எங்ஙனம் இருக்க முடியும் என்று தடை கிளம்பலாம்.

அரசர்க்குரிய பண்புகளுள் ஒன்றைக் குறித்தே ஈண்டு கூறப்படுகிறது என்று வைத்துக் கொண்டாலும் கண்ணோட்டம் என்னும் அருட்பார்வை - அதுவும் உலகை நிலைபெறச் செய்வதாகிய அருட்சக்தி - முழுமுதற் பொருளாம் இறைவனுக்கே முற்றிலும் பொருந்தும் என அறிக. உலகெலாம் ஆளும் இறைவனுக்குள்ள அதிகாரத்தில் ஓரளவு பங்கு பெற்றே உலக மன்னர்கள் ஆள்கின்றனர் என்று எண்ணும்போது, உலக மக்களைத் தகுந்த முறையில் ஆண்டு நடத்த இறைவனுக்குள்ள அழகுயர் பண்புகளுள் ஒன்றான கண்ணோட்டம் உலக மன்னர்க்கும் இருத்தல் வேண்டும் என்று இம்முதற் குறட்பாவில் வலியுறுத்தப்படுவது பொருத்தமேயன்றோ.

உலக மன்னர்களைப்பற்றி மட்டுமே இக்குறளுள் கூறப்படுவதானால், அவர்கள் அனைவர்க்கும் அருட்பார்வை உண்டு, அதனால்தான் உலகம் நிலைபெற்றுள்ளது எனக்கூறுதல் பொருந்துமா? கொடுங்கோல் மன்னர்கள், இரக்கமற்ற ஆட்சியாளர்கள் எத்துணையோபேர் உலகை ஆட்டிப் படைத்துள்ளனரே, இன்னும் உலகம் நிலைபெற்றிருப்பது எங்ஙனம்? என்ற கேள்வி எழாதா? ஆகவே இக்கண்ணோட்டம் என்பது முதன்முதல் இறைவனுக்கே முற்றிலும் பொருந்தும் - அவன் ஒருவனே அருட்பார்வையுடன் உலகினை நோக்குபவன் - தீவினை நிறைந்தால்கூட அருளுடன் மக்களை மன்னித்து ஆட்கொள்பவன் - அதனாற்றான்

உலகமே நிலைபெற்றுள்ளது – அவனது அருட் பார்வை இன்றேல் தீவினை மல்குங்கால் மக்கள் எவ்வித ஒழுக்கமுமின்றி வாழ்ந்தால் – உலகம் என்னவாகும்? ஆகவே, இக்குறட்பாவில், மன்னருக்கு இருக்க வேண்டிய கண்ணோட்டத்திற்கு ஆதியும் மேல்வரிச் சட்டமுமான இறைவனது கண்ணோட்டத்தைக் குறித்தே உணர்த்துகிறது என்க.

அடுத்த குறட்பாவால் இக்கருத்து வலிமை பெறுகின்றது.

கண்ணோட்டத் துள்ளது லகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

இறைவனின் அருட்பாவையால் தான் உலகம் நிலைபெற்றுள்ளது என்று முந்திய குறட்பா கூறிற்று. அந்த அருட்பாவையை உலகமக்கள் அனைவரும் ஓரளவு ஒருவர்க்கொருவர் காட்ட வேண்டும் ஏனெனில் பரிப்பொருள் உரை கூறுவதுபோல, "உலகத்தார் பலர் ஆதலால் குற்றம் செய்வார் மிகுந்திருப்பர் அதற்கெல்லாம் தண்டம் செய்யின் உலகம் என்பது ஒன்று இல்லையாம் அதற்காகப் பொறுக்க வேண்டுவன பொறுக்க வேண்டும்." இங்குக் கூறப்படுவது சிறப்பாக உலகில் முதலாகிய இறைவனுக்கே பொருந்தும். மனிதர் செய்யும் ஒவ்வொரு குற்றத்துக்காகவும் அவர்களை இறைவன் தண்டிப்பதாயிருந்தால் வெகு விரைவில் உலகமே இல்லாதொழியும். இது எல்லா மனிதர்க்குமே பொருந்தும். செய்யப்படும் குற்றத்தின் பொருட்டு ஒருவரையொருவர் தண்டித்துக் கொண்டேயிருந்தால் என்ன நேரும் என்பது எளிதில் புரிந்து கொள்ளலாம்.

ஆனால், இது ஆட்சி செய்வோர்க்குச் சிறப்பாகப் பொருந்தும், ஆட்சி செய்வோர் (அரசர், அதிகாரிகள்) அனைவரும் இறைவனது பேராலும்; அவனது அதிகாரத்தாலுமே மக்களை ஆள்கின்றனர், அவனை இறையென்றே மக்கள் கருதுகின்றனர்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

என்று வள்ளுவர் கூறுவது கவனிக்க அங்ஙனமாயின் மக்களை ஆளும் மன்னன் இறைவனது அருட் பார்வை ஓரளவேனும் கொண்டவனாய் விளங்க வேண்டுமல்லவா?

இதனாற்றான் 'கண்ணோட்டம்' என்ற அதிகாரத்தை அரசியலில் வைத்துள்ளார் வள்ளுவர்

உலக ஆட்சி செய்வோர்க்கு மட்டுமன்று (அரசர்க்கு மட்டுமன்று) அருள் ஆட்சி செய்வோர்க்கும் இது இன்றியமையாதது. ஆகவே சான்றாண்மைக் கெல்லாம் தூண் எனக் கண்ணோட்டம் விளங்குகிறது என்கிறார் வள்ளுவர்.

முதற்குறட்பாவில், உலகம் நிலைத்திருப்பது கண்ணோட்டத்தால் என்ற வள்ளுவர், இரண்டாவது குறட்பாவில் உலகியலும்—உலகம் இயங்குவதும் கண்ணோட்டத்தாலே என்கிறார் இறைவனது அருட்பார்வையின்றேல் உலகம் நிலைபெறுவதுமில்லை, செயல்படுவதுமில்லை என்றவாறு. ஆகவே, ஆட்சி செய்வோர் அனைவருமே கண்ணோட்டத்தைக் கையாளுதல் வேண்டும். அஃதாவது அருட் பார்வையால் இரக்கம் காட்டுவதால் தவறிச் செல்வோரை - உலகைத் தாங்கிக்கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் தாங்கவில்லையேல் உலகம

அவர்களைத் தாங்குவதில் பொருள் இல்லை. "நிலக்குப் பொறை' என்றார் (பரிமேலழகர் உரை) அவர்கள் வாழ்ந்து பயனில்லை என்பதால் நிலத்துக்குப் பாரமேயன்றோ! உலகம் அவர்களைச் சுமந்து பயனில்லை!

மனிதர்க்கு, ஆட்சியாளர்க்குக் கண்ணோட்டம் எத்துணை இன்றியமையாதது. எந்த அளவுக்கு அருட்பாவை விளங்க வேண்டும் என்ற கருத்தையே அடுத்து வரும் குறட்பாக்கள் எல்லாம் பலபடக் கூறுகின்றன.

✓ ஆகவே 'கண்ணோட்டம்' என்பதற்கும் பொருள் :

1) இறைவனது அருட்பார்வை

2) ஆட்சியாளர் கொண்டிருக்க வேண்டிய அருட்பார்வை

3) எல்லா மனிதருமே கொண்டிருக்க வேண்டிய அருட்பார்வை என்றாகும்.

இனி இம்மூவித அருட்பார்வை மூவகையில் செயல்படுகிறது கவனித்தல் வேண்டும். எங்ஙனம் என்று ஆய்வோம்.

"கண்ணோட்டத் துள்ளதுலகியல்" என்ற குறட்பாவுக்குப் பொருள் கூறும் பரிப்பெருமாள் அவர்கள்: "உலகத்தார் பலர் ஆதலால் குற்றம் செய்வார் மிகுந்திருப்பர். அதற்கெல்லாம் தண்டம் செய்யின் உலகம் என்பது ஒன்று இல்லையாம். அதற்காகப் பொறுக்க வேண்டுவன பொறுக்க வேண்டும்" எனக்குறிப்பிடுகிறார்.

இக்கருத்திற்கேற்ப இறைவனது அருட்பார்வை அனைத்திற்கு மேலாகச் செயலாற்றுவதால், தண்டனைக்குரிய எத்தனையோ பேர் தண்டனை பெருமல், மன்னிப் படைகின்றனர். உலகம் நிலை பெறுவதற்கு இறைவனது அருட்பார்வையே முதற் காரணம். ஏனெனில், மனிதர்களுள் எவர் தண்டனைக்குரியவர் என்பதை முழுதுற அறிந்தவன் அவன் ஒருவனே குற்றத்துக்கு ஏற்ற தண்டனை விதிக்கக்கூடிய சக்தி கொண்டவனும் அவன் ஒருவனே. அவனது நீதிக்குத் தப்பக்கூடியவன் எவனுமில்லை ஆதலின், தவறு செய்வோரை உடனுக்குடனே தண்டித்தலே முறை என்ற நியதியுடன் இறைவன் செயலாற்றுவதாயிருந்தால் குற்றம் செய்வார் பலராயுள்ள உலகில் யார் பிழைப்பார்? உலகமே இல்லாதொழியும் என்க.

மக்களிடையே யார்யார் உண்மையில் தண்டனைக்குரியவர்கள் என்று அறிவதே அளவுள்ள அறிவு படைத்த மனிதனுக்குக் கடினமாயுள்ளது. பல முறை தக்கப்படி தண்டிப்பதற்கு முதலாய் சக்தியில்லாமற்போய் விடுகிறது. பல சூழ்ச்சிகள் செய்து தப்பிக்கொள்வதை அறிவோம். ஆனுல் இறைவனை பொறுத்த மட்டில் இதெல்லாம் நிகழ இடமில்லை.

எனினும் இறைவனது அருட்பார்வை அளவில்லாத இரக்கப் பார்வையாதலால், தீவினை செய்வோரை உடனுக்குடனே தண்டிப்பதில்லை மன்னிப்பு வழங்கத் தயங்குவதில்லை. தன் குற்றங்களுக்காக நாணி மன்னிப்புத் தேடும்வரை பொறுமையுடன் காத்திருக்கிருன் இறைவன், பலர் இங்ஙனம் மன்னிப்பு அடைகின்றனர்’. ஆதலால் தான் உலகம் நிலைபெறுகின்றது என்க.

ஆனால் இறைவனின் அருட்பார்வைக்கு அடுத்தபடி அவனது அதிகாரத்தில் ஓரளவு பங்கு பெற்று மக்களை ஆள்வோர்க்கும் உள்ள அருட் பார்வை குறித்தவொரு அளவில் செயலாற்று கின்றது.

அதனால் பொறுக்கப்பட வேண்டிய அல்லது பொறுக்கப்படக்கூடிய குற்றங்கள் நிகழ்ந்தால் ஆட்சியாளர் அருட்பார்வை கொண்டு பல குற்றங் களை மன்னிக்க முடியும். ஆட்சியாளர் இங்கே பொதுவாக அரச அதிகாரம் படைத்தவர்களா யிருக்கலாம், அல்லது அருள் ஆட்சியாளர்களா யிருக்கலாம். அரசர்களாயிருந்தால் தம் அதிகா ரத்தைப் பயன்படுத்தி அருட்பார்வை காட்டலாம்.

அருளாட்சி செய்வோராயிருந்தால் மக்க ளிடையே சால்பினைப் பரப்பவும், குற்றம் செய் தோரும் இறைவனது அருட்பார்வையால் பாவப் பொறுத்தலை அடைந்து, இறைவனது அருளைப் பெற்றுச் சான்றோர்க்குரிய வாழ்க்கை நடத்தத் துணை செய்யலாம்.*

இந்த அதிகாரத்தில் கூறப்படுவது அரசர், அரு ளாயர்க்குரிய கண்ணோட்டமே என்பது தெளிவு. சால்பூன்றிய தூண்களுள் ஒன்றென விளங்குவது இறைவனுடைய அருட்பார்வையன்று, சான்றோ ராக விளங்கவேண்டிய அரசரும் அருளாளருமே யாகும். இதனால்தான் இது பொருள் அதிகாரம், அரசியலில் வைக்கப்பட்டிருக்கிறது. அரசர், அரு ளாளர் எல்லாருமே "ஆட்சி" யாளர் என்பதால்

---

* மு. தெய்வநாயகம் எழுதிய 'அருட்செல்வம் யாது!' என்ற நூலைப் படித்தறிக. சிறப்பாக "அருள் நுச்சி"—அதி காரம் காண்க. மேலும், சான்றவர் சான்றாண்மை" என்ற குறள் விளக்கம் காண்க.

அரசியலில் வைக்கப்பட்டது பொருத்தமே. கண்ணோட்டத்தோடு பொருந்தியுள்ள "நாண்" என்பதும் இந்த இயலில் வைக்கப்பட்டிருப்பதும் பொருத்தமே என்றறிக.

( பிற்சேர்க்கை — 7 காண்க)

# 9. வாய்மை

உரையாளர் கூறும் பொருள்.

பரிமேலழகர்: அஃதாவது மெய்யினது தன்மை. பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.

மணக்குடவர்: வாய்மையாவது பொய் சொல்லாமை, பிறர்க்கு யாதொன்றானும் தீமை பயவாத சொற்களைச் சொல்லுதல்.

பரிதியார்: யாவர்க்கும் தோஷ வார்த்தை சொல்லாமல் இருப்பது.

காலிங்கர்: தமக்கும் பிறர்க்கும் ஒரு தீங்கும் இல்லாதனவாகிய தூய வார்த்தைகளைச் சொல்லுதல்

வாய்மை என்பது மெய்மை.

புலவர் குழந்தை: உண்மையின் தன்மை. பிறருக்குத் தீங்கு சிறிதும் உண்டாகாத சொற்களைச் சொல்லுதல்.

ஞா. தேவநேயன்: பொய்மைக்கு மறுதலையான மெய்ம்மை. எவ்வகை உயிரும் எவ்வகைத் தீங்கும் எட்டுணையும் விளைக்காத சொற்களைச் சொல்லுதல்.

வாய்மையின் இலக்கணம் — பிறர்க்கும் பிற உயிர்க்கும் தீங்கு பயவாமையேயன்றி நிகழ்ந்தது கூறல் அன்று.

உண்மை, வாய்மை, மெய்ம்மை என்னும் ஒரு பொருட்சொல் முறையே உள்ளமும் வாயும், உடம்புமாகிய முக்காரணத்தோடு தொடர்புடையனவாகச் சொல்லப் பெறும்.

சாமி. சிதம்பரனுர்:

உண்மையின் பெருமை. மற்றவர்க்குச் சிறிதும் தீமை தராத சொற்களைக் கூறுதல்.

மு. வ.: மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமையில்லாத சொற்களைச் சொல்லுதல்.

கா. சுப்பிரமணியப் பிள்ளை: மெய் சொல்லுதல், எவ்வகையான தீங்குமில்லாத சொற்களைச் சொல்லுதலேயாம்.

பிறர்க்கு எத்தீங்கும் விளையாத முறையில் பேசுதல் - பிறர்குத்தீமை பயவாத சொற்களையே சொல்லுதல் - என்ற கருத்தே இவ்வுரைகளில் சிறப்பாக விளங்குகின்றது.

இக்கருத்து எந்த அளவுக்கு உண்மை - இது மட்டும்தானு இந்த அதிகாரத்தில் வள்ளுவர் கூறு வது என்பதை ஆய்தல் வேண்டும். வாய்மை என்பது என்ன என்பதை வள்ளுவர் முதற்குறளி லேயே கூறுகிருர்.

"யாதொன்ரும் தீமை இலாத சொல்" என்கிருர்.

"பிறர்க்கு" என்ற சொல்லை இக்குறளில் புகுத்தி, "இலாத" என்ற சொல்லுக்கு "பய வாத" என்ற பொருள் கொடுத்து உரை கூறுவ தால்தான் மேற்சொன்ன கருத்து வெளிப்படு கின்றது. "கடுகைத்துளைத்து"க் கருத்துப் புலப் படுத்தும் வள்ளுவர், ஒரு சொல்லுக்கு வேருெரு சொல்லையோ, தேவையற்ற சொல்லையோ பயன் படுத்துபவர் அல்லர்: தேவையுள்ள சொல்லைக் கையாளாமல் விடுபவருமல்லர். ஆகவே, 'யாதொன்றும் தீமை இலாத' என்ற சொற் ருெடரை ஆய்வோம்,

ஈண்டு கூறப்படும் "வாய்மை" எனப்படுவது பொதுவாக நன்மக்களுக்கு இருக்க வேண்டிய நற் பண்புகளுள் ஒன்றுமட்டுமே அன்று; சால்பு என் னும் "பண்பின்" நிறைபொங்கல் மலர்ச்சி" யால் மிகமிகச் சிறந்து," பண்புருவினராகி, பிற பண் பாளர்களுக்குச் சான்ருக, பின்பற்றும் முன்மாதிரி யாக, இலக்கண மேல்வரிச் சட்டமாக நின்று பண் பாளர்களிடமெல்லாம் சால்பலைகளையும், மற்ற எல்லாரிடமும் பண்பலைகளையும் பரப்பும் பண் புடைய," * சான்ரேர்க்குரிய சால்புத் தூண்களுள் ஒன்றைக் குறித்தே ஈண்டு கூறப்படுகிறது.

* மணிவிளக்கவுரை — II — பக்கம் 534 காண்க.

"சால்பூன்றிய தூண்"களுள் ஒன்ருன "வாய்மை" என்பது இருக்க வேண்டுமெனின், சால்புடையோர்க்கு இன்றியமையாதொரு அடிப் படை நன்மையாக அது அறியப்பட வேண்டும். பிறர்க்குத் தீங்கு பயவாத சொற்களைச் சொல்லுதல் என்ற பொருள்மட்டுமே ''வாய்மை என்ற சொல் லுக்கிருந்தால், அது எங்ஙனம் சால்பூன்றிய தூணுகக் கருதப்பட முடியும்? அத்தகைய செயல் மிகச்சாதாரண நல்லொழுக்கத்தைச் சாருமேயன்றி சால்புக்குத் தூணுக கருதப்பட முடியுமா? ஆகவே, "வாய்மை" என்ற சொல்லால் வள்ளுவர் கூற விரும்புவது யாது? அஃதாவது, ''யாதொன்றும் தீமையிலாத சொல்'' என்ருல் என்ன?

யாதொன்றும் தீமையிலாதது எது? தீமை என்பது சற்றும் கலப்பில்லாதது எது? அடுத்த குறட்பாவில் ''புரை தீர்ந்த நன்மை'' என்று கூறப்படும் நன்மை எதுவோ, அதுவேதான், ''யாதொன்றும் தீமையிலாதது'' என்று சொல்ல இடமுண்டு, தீமையுடன் கலப்பற்ற நன்மை, குறை வற்ற நன்மை இறைவன் ஒருவனேயன்ரே? ஆகவே, ''யாதொன்றும் தீமை இலாத'' என்று பலவின் பாலாகக் கூறப்படுவது, இறைவனுடன் தொடர்பு கொண்ட நன்மைகள், அல்லது இறை வன் தரும் நன்மை என்றே பொருள்பட வேண்டும்.

இனி. இறைவனுடன் தொடர்புகொண்ட நன்மைகள் எவை? அல்லது அவன் தர விரும்பும் நன்மை யாது? ''அன்புடைமை'' அதிகாரத்தில் கூறப்பட்டது போல், தன்னுள் அடைத்து வைக்க முடியாத அன்பின் காரணமாக வேறு உயிர்களைப் (மனிதரை) படைத்து, தனக்குள்ள பேரானந்தப் பெருஞ் செல்வத்தில் அவர்களுக்குப் பங்கு தர விரும்புகின்ருன் இறைவன். இந்தச் செல்வமோ

தீமை யாதொன்றும் இல்லாத இறைவனின் பேரின்பமாகும். மனிதன் தேடும் மன நிறைவைத் தரக் கூடிய நன்மை ; தீமைக் கலப்புள்ள எதுவும் இந்த நிறைவைத் தராது. இதை வாழ்க்கை அனுபவத்தால் அறிகிறோம் சிற்றின்பம் எதுவும் உள்ளத்தை முழுவதும் நிறைவுபடுத்துவதில்லை. மனிதன் பேரின்பத்துக்காக ஏங்குகின்றான். ஆகவே, ''யாதொன்றும் தீமை இலாத'', ''புரை தீர்ந்த நன்மை'' என்ற சொறறொடர்களால் சுட்டப்படுவது இறைவனது பேரின்பச் செல்வமேயாகும்,

இனி, ''யாதொன்றும் தீமை இலாத சொல்'' லுதலே வாய்மை என்பது வள்ளுவர் கருத்து. இறைவன் தரவிரும்பும் பேரின்பத்தைச் சொல்லுதலே என்ற கருத்துத் தோன்றுகிறது. இங்ஙனம் சொல்வோரே சான்றோர். இக்கருத்தையே திருக்குறள் முதல் அதிகாரத்தில் ஆசிரியர் கூறுவதாகத் தெரிகிறது.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

அஃதாவது, ''பொருள் அல்லாதவற்றைப் பொருள் என்றுணரும் மருளை "ஒழித்து ; உலகில் கிடைக்கும் சிற்றின்பமே இன்பம் என்ற மருள் தீர்ந்து, உண்மையான இன்பமாம் இறைவனின் பேரின்பத்தை விரும்பி அவனது '' புகழ் புரிந்தால் '' தீவினையெல்லாம் ஒழியும் என்றவாறு. அளவிட முடியா அன்பால் 'அன்பினும் ஆர்வமுனடமையால்' இறைவன் நமக்குத் தரவிரும்பும் பேரின்பத்தை மதித்து, அவன் புகழைப் புரிதல்வேண்டும் என்கிறார் வள்ளுவர். இத்தகைய புகழ் ''பொருள் சேர் புகழ்'' ஆகும். மருளால் ஏமாற்றம் அடையச் செய்வது அன்று.

"யாதொன்றும் தீமை இலாதது" இத்தகைய இறைவன் புகழ் புரிதலே வாய்மையாகும். ஐந்தவித்தான் காட்டிய ''பொய்தீர் ஒழுக்கநெறி'' இதுவே என்கிறது முதலதிகாரக் குறட்பா – புகழ்புரிதலைக் கூறும் குறட்பாவுக்கு அடுத்தது !

மேலும், வாய்மை பற்றிய இம்முதற் குறட்பாவில் ஆசிரியர் கூறுவது இறைவனின் பேரின்பப் புகழ் புரிதலே என்ற கருத்து.

> மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
> தானம் செய்வாரின் தலை.

என்ற குறளால் உறுதிப்படுகிறது. அஃதாவது வெறும் வாய்மொழியால் இறைவனின் புகழைப் புரியாமல் அதை மனத்தில் உண்மையாகவே இறுத்தி, அப்பேரின்பத்தை தரும் இறைவனையே எண்ணி வாழ்ந்தவனாய், இங்ஙனம் மனத்தால் அப் புகழைப் புரிந்தால் தவமும் தானமும் செய்வாரினும் சிறப்படைவான்.

வாய்மை எனப்படுவது மெய் பேசுதல், உள்ளதை உள்ளவாறு உரைத்தல், யாருக்கும் தீமை பயவாத சொற்களைப் பேசுதல், என்று மட்டுமே பொருள்படுவதாயின் இங்ஙனம் மெய் பேசுவோர் தீமை பயவாத சொற்களைச் சொல்வோர் தவமும் தானமும் செய்வாரைவிடச் சிறந்தவர்கள் என்னும் கருத்து பொருத்தமா? நடந்ததை நடந்தவாறே சொல்வது தானத்தையும் தவத்தையும் விடச் சிறந்த செயலாகுமா ? அது மனிதனின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்றுதானே ?

மேலும் தீமையிலாத சொலல் ( -வாய்மை) "தவத்தொடு தானமும் செய்வாரின் தலை"

என்று கூறப்படுகிறது சொல்வது செல்வதைவிடச் சிறந்ததா? வாயால் மெய் பேசிவிடலாம் - செயலால் மெய்ம்மைக்கு ஏற்பச் செயல் புரிந்து காட்ட வேண்டுமன்றோ!

மேலும் சொல்வதும் ஒரு செயல்தானே எனின், சொன்ன அளவிலேயே நன்மை பயப்பது எது? மற்றெல்லாச் செயல்களையும்விட, இறைவன் புகழ் புரிவது ஒன்றே சொன்னவுடன் நன்மை பயப்பதாகும். ''இறைவன் பொருள்சேர் புகழ்புரிதல்'' புரிந்த (சான்று சொன்ன) அளவிலேயே '' இருள் சேர் இருவினை சேரா'' வண்ணம் பயன் விளைக்கிறது, இது எந்த அளவுக்கு நன்மையென்பது

பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

என்ற குறட்பாவுக்கு விளக்கம் கூறுங்கால் காண்போம்.

ஆகவே, இறைவனது பேரின்பப் புகழ் புரிவதே ''வாய்மை'' எனப்படும் என்ற கருத்து மிகமிகச் சிறக்கிறது.

இதே கருத்து,

உளளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

என்ற குறளிலும் இருப்பதாகத் தோன்றுகிறது. ''உள்ளத்தால் பொய்யாது'' என்ற சொற்றொடருக்கு,

1) ''உள்ளத்திற்கேற்பப் பொய்சொல்லாது,''

2) '' தன் நெஞ்சினுள் பொய்யை நினையாது,''

3) "நெஞ்சாரப் பொய் சொல்லாது"

4) "மனமறியப் பொய் பேசாது" என்ற உரையே கூறப்படுகிறது. இது பொருந்தும் உரையா? இல்லையென்றே தோன்றுகிறது, ஏன்?

மனிதனுக்குரிய சாதாரண கடமைகளுள் ஒன்றாகிய "பொய் பேசாமை"யைக் கடைப்பிடிப்பதால், அவன் "உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்று சொல்லிவிட முடியுமா? ஒரு மனிதன் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருக்க வேண்டும் என்றால், மக்களின் உள்ளங்களைக் கோவிலாகக் கொண்டிலங்கும் இறைவனைப் போலவே ஓரளவேனும் உயர்ந்துவிட வேண்டும் அன்றோ? இறைவன் ஒருவனே உலகத்தார் உள்ளங்களில் உறையக்கூடியவன். இதைக் குறிப்பிட்டே, இக்குறட்பாவுக்கு உரை கூறும் பரிதியார் "மனம் பொருந்த மெய் சொல்வானாகில், சர்வேசுவரனுக்கு நிகராகையால் உலகத்தார் ஆத்துமாவில் இருப்பன்" என்கிறார்,

மெய் பேசுபவன் இறைவனுக்கு நிகர் என்ற கருத்து அத்துணை ஏற்புடையதாகத் தோன்றவில்லை. மெய் பேசுவதைவிட மிக உயர்ந்ததொரு பண்பு இங்குச் சுட்டப்படுகிறது என்றே கூற வேண்டியிருக்கிறது.

ஒருவன் பிறர் உள்ளத்தில் இருக்க வேண்டும் என்றால் முதன்முதல் இறைவன் அவனது உள்ளத்தில் குடிபுகுந்து அங்கேயே உறைதல் வேண்டும். இறைவனை எந்நேரமும் தன் உள்ளத்துள் கொண்டிருப்பவன் இறைவனுக்குரிய பண்பினை ஓரளவேனும் அடைந்தவனாகின்றான். இறைவனுக்குரிய பண்பு எது? அன்புக்கும் இன்பத்துக்கும் உறை

விடமாயிருப்பதேயாம். அந்த அன்பு ஈனும் ஆர்வமுடைமையாவது பிறர்க்குத் தன்னுடைய பேரின்பம் தருவதே; பேரின்பத்தில் பங்கு தருவதேயாய். அன்புக்கும் பேரின்பத்துக்கும் உறைவிடமான இறைவனைத் தன் உள்ளத்தில் கொண்டு இன்பம் சுவைப்பவன் தான் பெற்ற அந்த இன்பத்தைப் பெறுக இவ்வையகம் எனச் செயலாற்றுவான். அஃதாவது இறைவனது பேரின்பப் புகழைப் புரிவான் இங்ஙனம் புரிவதால், தானும் அன்பால் பிறர் உள்ளங்களில் குடிபுகத் தொடங்குவான். இப்புகழ் புரிதல் மேலோங்க ஓங்க "உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" ஆவான்.

ஆகவே, "உள்ளத்தால் பொய்யாது" என்ற சொற்றொடர்க்கு, "தன் உள்ளத்தில் இறைவனை உண்மையாகவே தாங்கி", என்ற பொருளே சிறக்கிறது, அஃதாவது "வாய்ச் சொல்லால் மட்டும் இறைவனை உள்ளத்தில் கொண்டிருப்பதுபோல் நடிக்காமல்" என்க. அங்ஙனம் நடித்தால் வெளிப்படையாக அது 'வாய்மை' எனப்படுமேயன்றி, வாய்மை என்ற உயர் பண்பிற்கு ஏற்றதாகாது; சால்புக்குத் தூணென விளங்காது.

இக்கருத்தே

தன்னெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

என்ற குறட்பாவில் கூறப்படுகிறது.

"நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்" என்ற கருத்து மட்டும்தான் இந்தக் கூறப்படுகிறதா? மேற்சொன்ன விளக்கத்துக்கேற்ப, "தன்னெஞ்சு அறிவது" என்ற சொற்றொடர்க்கு வேறு ஆழ்ந்த பொருள் இருப்பதாகத் தோன்றுகிறது.

தன் நெஞ்சில் இறைவனைக் கோவிலாகக் கொண்டு, அவன் புகழ் புரிவதால் இருள்சேர் வினைகட்கு ஆளாகாமல், உண்மையாகவே அவனது பேரின்பத்தில் பங்கு பெற விரும்பி அவனது அன்பில் திளைத்து ஒருவன் ஒழுகினால் அவன் நேர்மையோடும் முழு உண்மையோடும் பிறர்க்குச் சான்று கூற முடியும். வாய்மையைக் கடைப்பிடித்துச் சால்புக்குத் தூண் என விளங்க முடியும். உள்ளத்தில் இருப்பதை வலிமையுடன் வாயால் எடுத்துச்சொல்ல முடியும். அங்ஙனம் உள்ளதை அவன் வாயால் பேசாமலிருந்தாலோ; அல்லது உள்ளத்தில் இறைவனைத் தாங்காதவனாய், அவனது புகழை உண்மையாகவே புரியாதவனாய், வெளிப் படையாக மட்டும் பிறர்க்குச் சான்று கூறுபவனாய் இருந்தாலோ அவன் நெஞ்சே அவனைச் சுடும். அஃதாவது அவன் நெஞ்சே அவனிடம் குற்றம் கண்டு அவனை வருத்தும்.

ஈண்டு இரு குற்றங்கள் குறிப்பிடப்படுவது கவனிக்க. ஒன்று - நெஞ்சில் இல்லாததை — அஃதாவது அவனது, இறைவனின் புகழைப் புரியாதவனாய்—பிறர்க்குச் சான்று கூறுதல். இது வாய்மையன்று, பொய்ம்மை,

மற்றொரு குற்றம்: நெஞ்சில் உள்ளதை, விரும்பத் தக்கது, போற்றப்படத் தக்கது இறைவனது பொருள்சேர் புகழே எனத் தன் நெஞ்சு அறிந்தாலும், அதை வெளிப்படையாகப் புகழ் புரியாமல் விடுவது. இதுவும் பொய்ம்மையே! சான்றோர்க்கு இரு குற்றங்களும் பொருந்தாதவை. சாதாரண மக்களுக்கு முதற் குற்றமே பொருந்தாதது எனலாம். மக்கள் எல்லோருமே சால்புக்குத் தூண்களாக இருக்குமாறு எதிர்பார்க்க முடியாதன்றோ?

ஒருவன் தன் நெஞ்சில் இறைவனைத் தாங்கி வாழ்பவனாய் இராமல், அவனது புகழை உண்மையாக உள்ளத்தால் புரியாதவனாய், வெளிப்படையாக இறைவனது புகழ் புரிகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் கூறுவதைக் கேட்டுப் பலர் தாமும் இறைவனது புகழ்புரிய முன்வருகின்றனர் என்று வைத்துக்கொள்வோம். தன் நெஞ்சைப் பொறுத்தமட்டில், அவனது வாய்மை வாய்மை என்ற பெயருக்கு முற்றிலும் தகுதியுடையதொன்றெனினும், அவன் புகழ் புரிவதைச் செவியுறுவோர்க்கு நன்மை பயக்க முடியுமன்றோ தீயவர் கூறும்? யாதாமொரு நற்கருத்தை பிறர் ஏற்று நன்மையடைவதைக் காண்கிறோம் அல்லவா? ஆகவே, ''உள்ளத்தால் பொய்யாது ஒழுகு''பவனாய் இராதிருந்தபோதிலும் அவனது வாய்மை உண்மையில் 'பொய்மையே எனினும், அவன் ''யாதொன்றும் தீமையிலாத'' ''புரைதீர்ந்த நன்மை பயக்க'' கூடிய இறைவனது புகழைப் புரிவதால், இப்பொய்ம்மையும் ''வாய்மை இடத்ததாக''க் கருதலாம். வாய்மை என்றே சொல்வதற்கில்லை. வாய்மையைச் சார்ந்ததென்று சொல்ல முடியும். இதைக் குறிப்பிட்டே வள்ளுவர்,

> ''பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்.''

என்று கூறுவதாகத் தெரிகிறது.

இத்தகைய புரைதீர்ந்த நன்மை பயப்பதால் ''பொய்யாமை அன்ன புகழ் இல்லை'' என்று வள்ளுவர் கூறுவதில் வியப்பில்லை. ''புகழ் இல்லை'' என்று அவர் குறிப்பிடுவது' இறைவன் புகழ் புரிதல் போன்ற புகழ் வேறில்லை என்ற கருத்திலேயே எனத் தோன்றுகிறது. ஆகவே, ''வாய்மைக்''கு

ஈண்டு கூறப்படும் பொருளே சிறக்கிறது. இத்தகைய புகழைத் தேடினால் எல்லா அறமும் தாமே உன்னைத்தேடிவரும் என்ற கருத்தில் "பொய்யாமை எல்லா அறமும் தரும்" என்கிறார்.

இத்தகைய சிறப்புப்பெற்ற "பொய்யாமையும் பொய்யாமல் (அதாவது தவறாமல்) வாழ்க்கையின் ஒரே குறிக்கோளாகக் கொண்டு ஆற்றினால் இல்லறம், துறவறமாகிய வேறு அறங்களில் கவனம் செலுத்தாதிருத்தலே நன்று. எல்லா அறங்களுக்கு மேலாக 'வாய்மை' எனப்படுவது விளங்குதலான் இதை முழு மூச்சுடன் ஆற்றுபவன் வேறு எந்த அறத்திலும் ஈடுபட வேண்டிய தேவையில்லை.

இல்லறத்திலோ, துறவறத்திலோ ஈடுபடுவதால் ஓரளவு கவனம் அதில் செலுத்த வேண்டியிருக்கும். வாழ்க்கையின் இறுதிக் குறிக்கோள் இல்லறமும் அன்று துறவறமும் அன்று. இறைவனின் பொருள்சேர் புகழ் புரிந்து அவனது பேரின்பத்தில் பங்குபெற்று நீடு வாழ்வதேயாம். இதனையடைய 'வாய்மை'யே சாலும், வேறு அறம் என்றவாறு.

மாய்மையின் பெருமையை மிக மிக அழுத்தமாகக் கூறுமுகத்தான் ஆசிரியர் இங்ஙனம் கூறுகிறார் என்க. வாய்மையை முழுமூச்சுடன் ஆற்றுவிடின் வேறு அறங்கள் பயின்று பயன் என்ன? அவை இறைவனின் பேரின்பத்துக்கு நீடுவாழ்வுக்கு, வழிகாட்டுமோ' என்றவாறு.

வேறு அறங்கள் எதற்கு என்ற கருத்தைக் குறிப்பிட்டே இல்லறம், துறவறம் என்றவிளக்குகள்

எல்லாம் சான்றோர்க்கு முற்றிலும் பொருந்தும் விளக்குகள் அல்ல. வாய்மை என்னும் அற விளக்கே. இறைவன் புகழ் என்னும் ஒளி விளக்கே உண்மையான விளக்கு. என்கிறார் போலும்!

இதையே மேலும் வலியுறுத்துபவராய் யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தோன் றும் வாய்மையின் நல்ல பிற எனக் கூறி முடிக்கிறார்.

(பிற்சேர்க்கை 8 காண்க)

## 10. ஊழ்

"ஊழி பெயரினும் தாம் பெயரார்" சான்றோர் என்று சொல்லப்பட்டுள்ளது. அத்துணை ஆண்மை யுடன் செயல்புரிய வேண்டியவர்கள் அவர்கள். இந்த ஆண்மைக்குப் பெருந்தடைபோல் காணப் படுகிறது. அதே திருக்குறளில் கூறப்படும் 'ஊழ்' என்பது, "ஊழிற் பெருவலி யாவுள!" என்கிறது குறட்பா. அங்ஙனமாயின், சான்றோர் எங்ஙனம் ஊழை எதிர்த்து நின்று தம் ஆண்மையை வெளிப் படுத்த இயலும்? ஆகவே, ஊழ் என்பது சான் றாண்மைக்கு எதிரிடையானதொரு சக்தியா?...... இதனை ஆராய்வோம்.

ஊழ் என்பது என்ன?

அறம் பொருள் இன்பம் என்பவற்றுள் பொருள் இன்பம் என்பவற்றின் முதற்காரணமே 'ஊழ்ன் வலி' என்று கூறியபின், ஊழ் என்பது "இருவினைப் பயன் செய்தவனையே சென்று அடைவதற்கு ஏதுவாகிய நியதி" என்கிருர் பரிமேலழகர்.

**மணக்குடவர் :**

"முன்பு செய்த வினை பின்பு விளையும் முறை. மேற்கூறிய அறம்பகுதியும் இனிக் கூறுகின்ற பொருட்பகுதியும் இன்பப் பகுதியும் முன்செய்த நல்வினையால் வருதலையும், இவற்றிற்கு மாருன பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே அவை உலகத்தில் மக்கள் பலர் தமது முயற்சியால் வந்தன என்பாரன்றே! அதற்காக இது கூறப்பட்டது.

**பரிதியார் :**

மேலான சென்மத்தின் வினைப்பயனைச் சொல்லுவது.

**ஞா. தேவநேயன் :**

பழம்பிறப்புக்களிற் செய்யப்பட்ட இருவினைப் பயன் செய்தவனையே செய்த முறைப்படி சென்றடையும் இயற்கை ஒழுங்கு.

1) இது முறைப்படி வருவதால் முறை அல்லது ஊழ் எனப்படும்.

2) அவரவர்க்குரிய இன்ப துன்பப் பகுதிகளை வகுப்பதால் பால், வகுத்தான் எனப்படும்.

3) தெய்வ ஏற்பாடுபோலிருப்பதால் தெய்வம், பால்வரை தெய்வம் எனப்படும்.

4) மாருவியல்பாயிருத்தலால் இயற்கை எனப் படும்.

புலவர் குழந்தை : ஊழ் – முறைமை, உலகியல் நிகழும் முறைமை. அதாவது பொருளும் காலமும் செயற்படும் தகுதியும், சுற்றுச்சார்பின் தகுதியும் நமது எண்ணத்தின் முயற்சியின், செயலின் தகு திக்கு ஒத்து வருதலும் ஒவ்வாது வருதலுமாம்.

ஒத்து வருதல்—ஆகூழ்

ஒவ்வாது வருதல்—போகூழ்

செயற்படுதல்—நிகழ்தல்

மக்களின் எண்ணம் முதலியவற்றுள் அடங் காமல் அப்பாற்பட்டு இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி ஊழ் எனப்படும்.

கா. சுப்பிரமணியப்பிள்ளை: இருவினைப் பயன் களும் செய்தவனை நாடிநிற்கும் முறைமை.

கா. அப்பாத்துரையார் (சுருக்கம்)

ஊழ், தெய்வம், பால் இம்மூன்றும் ஒரே பொருள் சுட்டும்.

தெய்வம் என்ற சொல்லின் மூலமெய்ப்பொருள் 'கடவுள்' அன்று. கடவுளின் ஆற்றல் என்பதே. வள்ளுவர் வழக்கில் தெய்வம் என்ற சொல்லுக் குரிய பொருள்கள் இரண்டே. ஒன்று சிறு தெய் வம் என்பது. மற்றது ஊழ் ஆகிய கடவுள் ஆற் றல் என்பது. கடவுளது ஆற்றலின் கூறே சிறு தெய்வமாக வழிபடப்படுதலால் இவ்விரு பொரு ளும் உண்மையில் ஒன்றேயாகும்.

தெய்வம் என்ற ஊழ் குறித்த சொல் ஊழுக் குரிய கடவுள் தொடர்பைச் சுட்டிக்காட்டுவதா யுள்ளது.

ஊழ் என்ற சொல் கடவுளைக் குறிக்கும்பொழுது அது கடவுளை ஊழ் முதல்வனாகவே சுட்டுகிறது. அதுபோல கடவுளைக் குறித்த சொல் ஊழைக்குறிக் கும்போது அது ஊழைக் கடவுள் ஆற்றலாகவே சுட்டுகிறது. இங்ஙனம் ஊழுக்கும் கடவுளுக்கும் உரிய இன்றியமையாத தொடர்பு உண்டு. பால்—என்ற சொல்லின் சொற்பொருள் பகுப்பு, பிரிவு, பிரிவுக்கூறு என்பதே.

தெய்வம் என்ற சொல் ஊழுக்கும் இறைவ னுக்கும் உள்ள தொடர்பை விளக்குவதுபோல, பால் என்ற சொல் ஊழுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை விளக்கும். உண்மையில் அது உயிர் கள் வகையில் இறைவன் வகுத்த வகுத்துக்கொண் டிருக்கும் வகுப்பு முறையே ஆகும். ('f "படி யளக்கிறான்...")

தெய்வம் - ஊழின் இறைக்கூறு

ஊழ் - இறைவனின் ஆற்றற்கூறு

பால் - இவ்விரண்டின் உயிர்க்கூறு

தெய்வம் - கடவுளின் உருவ இயல்பு

ஊழ் – கடவுள் ஆற்றலின் அருவ இயல்பு

பால் - கடவுள் ஆற்றலின் உருவ இயல்பு

ஆத்திக சமயங்கள் யாவுமே ஊழைக் கடவு ளுடன் ஒன்றுபடுத்தி அதைக் கடவுளின் கூறா கவும், கடவுளின் ஆற்றலாகவும் உயிர்களுடன்

கடவுளைத் தொடர்புபடுத்தும் பண்பாகவும் குறிப்பிட்டு வந்துள்ளன.

புத்தர் கடவுளை மறுத்தார்; ஊழை மறுக்கவில்லை. கடவுட்கருத்தின் தொடர்பிழந்த நிலையில் அது உயிர்ப்பண்பற்ற, அறிவுப்பண்பற்ற, இயந்திர இயக்கப் பண்பாயிற்று

இந்த இயந்திரம் அல்லது இயற்கை-யாழியை உயிர்களின் அவாவும், அவாவினால் உந்தப்பட்டு இயங்கும் இருவினைகளுமே இயக்குவதாக வாதிட்டார். இவ்வாறு இருவினைக் கோட்பாடுடன் ஊழ்க் கோட்பாடு இணைக்கப்பட்டு புதியதோர் ஊழ்வினைக் கோட்பாடு ஆயிற்று. புத்த சமயத்துடன் மிக நெருங்கிய அறிவுத் தொடர்புடைய சமண சமயமாகும்.

புத்த சமய அறிவுப்படைக்கல முழுவதையும் தமதாக்கிக்கொண்ட சங்கராச்சாரியார் அத்துவைதக்கோட்பாடும் ஊழ் ஆற்றலே-இருவினையாற்றல் என்ற கருத்தை மேலும் வளர்த்தது.

ஆத்திகரான சைவ வைணவரும் இப்புதிய கோட்பாட்டின்மீதே தம் ஆத்திகக் கட்டுமானத்தைச் சீரமைத்தனர்.

ஊழை இயக்கும் ஊழ்முதல்வனை இவர்கள் ஊழை இயக்கும் இருவினை இயந்திரத்தை ஆட்டுவித்து இயக்குபவன்.

ஊழை ஆட்டி இயக்கும் வினைச்சக்கரத்தையே ஆட்டுவித்து இயக்கும் முதல்வன் என மாற்றினர்.

வள்ளுவரோ, உலகெங்கும் பரவியுள்ள தூய பழைய ஆத்திக சமயங்களின் மூல அடிப்படையான – படிஅளப்புக் கருத்தையே தம் கருத்தாகக்கொண்டு தம் நூலை இயற்றினர். ஆகவே, ஊழ் இருவினைத், தொடர்பு மறுபிறப்புக் கோட்பாடு இவற்றைத் திருக்குறளில் முனைப்பாகக் காண முடியாது.

## தொகுத்துப் பார்ப்போம்

1) ஊழ் – இறைவன் ஆற்றல் – அழியாதது, என்றும் மாருதது, வளராதது, தளராதது. ஆயினும் அந்த முதல் ஊழிலிருந்தே ஆகூழ், போகூழ் அல்லது இழவூழ் என்ற இருபக்கங்களையுடைய துணையூழ் தோன்றுகிறது.

இத்துணை யூழின் பகுதிகளாகிய ஆகூழும் போகூழும் இணைந்த இணைவே பால் என்றும் ஊழ்க்கூறு. அதன் அடிப்படையே மனித முயற்சி.

3) இந்த ஊழ்க்கூற்றினைத் தனிமனிதர் தம் முயற்சியாகிய நல்வினைத்தீவினைகளால் ஓரளவு மட்டுப்படுத்தலாம். (619-தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்). அதை மாற்றியும் அமைக்கலாம். (620 ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாதுஞற்றுபவர்.)

4) ஆகூழ், போகூழ் என்பன ஏற்கெனவே இருந்துகொண்டு தாமாகவே செயலாற்றுபவையன்று. ஒருவர் செய்யும் நல்வினை முயற்சி, அல்லது தீவினை முயற்சிகளே அவற்றை ஆக்குகின்றன. ஊழுக்கு எதிராக எந்த முயற்சியும் பலிக்காது என்று பலர் கருதுவது தவறு. முயற்சியின்

ஆற்றலுக்கும் அளவுக்கும் தன்மைக்கும் பெருமைக்கும் ஏற்றபடி செயல்விளைவுகள் ஊழை வென்று, இயக்கும் திறமுடையவை ஆகின்றன. ஆயினும் இந்த நிலையில்கூட வெல்லப் படுவது இறை ஆற்றல் அன்று, ஊழின் ஒரு சிறு பகுதியேயாகும்.

இதைப் பின்வருமாறு விளக்கலாம். பகுத்தறிவும் செயல் ஆற்றலும் படைத்த மனிதன் முயற்சி எதுவும் செய்யாமல் எல்லாம் ஊழின்படியாகட்டும் என்றிருந்தால் அது அவனது மனிதத் தன்மைக்கு இழுப்பாகும். ஆனால் அவன் செய்யும் முயற்சிக்கு இறைவனின் ஆற்றல் முன்னின்றால் தான் எண்ணிய கருமம் கைகூடும். ஆகவே இறை ஆற்றலும் மனித முயற்சியும் ஒன்மேறாடொன்று இணைந்து செயல்படுகின்றன என்பதே பொருத்தம். இறைவன் தான் படைத்த அறிவு விழைவு உள்ள மனிதனை ஒரு சிறு கல்லைப்போல், அல்லது மண்ணைப்போல் பாவிக்காமல், மனிதன் என்ற முறையில் செயலாற்றுமாறு தன் ஆற்றலால் முன் நிற்றல் வேண்டும், அதே சமயத்தில் மனிதன் தன்னாலாவது மிகமிகச் சிறிதே என்பதை உணர்ந்து இறைவன் ஆற்றலை நம்பிப் பயன்படுத்திச் செயல் புரிய வேண்டும். ஆகவே “நான் முயன்றாலும் முயலா விட்டாலும் நடப்பதுதான் நடக்கும் ஊழை நான் எங்ஙனம் வெல்ல முடியும்?” என்றிருப்பது தவறு. இறைவன் தன் ஆற்றலை மனிதரின் நன்மைக்காகப் பயன்படுத்தும்போது, மனிதர் செய்யும் முயற்சியையும் கவனத்துக்கு எடுத்துக் கொண்டே செயலாற்றுவான். அதிக முயற்சியானால் முயற்சியின் தேவைக்கும் மதிப்புக்கும் ஏற்றவாறு தன் ஆற்றலைப் பயன்படுத்துவான். முயற்சி சிறிதானால், முயற்சி செய்வதில் ஒருவன் காட்டிய அசதிக்கும், செய்பவன் நிலைக்கும் ஏற்ற

வாறு தன் ஆற்றலைப் பயன்படுத்துவான். ஒரு புறம் மனித முயற்சியை இறைவன புறக்கணிக்க முடியாது. மறுபுறம் தன் ஆற்றலைத் தான் விரும்பும் அளவுக்கு அல்லது தேவையின் அளவுக்குப் பயன்படுத்த அவனுக்கு முழு உரிமையுண்டன்றோ? இதை நன்குணர்ந்தால் இறைவன் ஆற்றலும் மனித முயற்சியும் எங்ஙனம் இணைந்து செயல்படக் கூடும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இக்கருத்துக்களைக் கண்முன் கொண்டு குறட்பாக்களை விளக்குவோம்.

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

மேற்கூறிய விளக்கத்துடன் ஆகூழ், போகூழ் என்பவற்றின் பொருள் காண்போம். அதாவது இறைவனின் ஆற்றல் என்றும் ஊழ்மனித எண்ணத்தின், முயற்சியின், செயலின் தகுதிக்கு ஒத்து வருமாயின் – ஆகூழ்: வரவில்லை எனின்-போகூழ்.

எண்ணமும், முயற்சியும், செயலும் ஏற்றவையாயின் இறைவனின் ஆற்றல் முன்னின்று செயலாற்றும். அப்போது வெற்றி கிடைக்கும். இது ஆகூழ்: அசைவின்மை ஈண்டிராது.

எண்ணம் நேர்மையற்றதாய், அல்லது தவறுடையதாய், முயற்சியும் செயலும் போதுமானவையாயில்லாவிடில், வெற்றி கிடைக்காது. இது போகூழ்: ஈண்டு மடி தோன்றும்.

அசைவின்மை தோன்றுதவாறு இறைவன் ஆற்றல் முன்னிற்கும் என்றே மடமை வெல்லும் அளவுக்கு இறைவன் ஆற்றல் முன்னிற்கவில்லை அன்றே.

ஒருவன் முயற்சி செய்தாலும், செய்யாவிட்டாலும் எண்ணம் எங்ஙனமிருந்தாலும் அந்த ஆற்றல் முன் னிற்க வேண்டும் என்பது பொருந்தாது!

கைப்பொருள் என்பது பணம் மட்டுமன்று–எல்லாவித வெற்றியுமே,

பேதைப் படுக்கும் இழவூழ், அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.

ஊழ் என்னும் இறை ஆற்றல் முன்னின்றால் (ஆகலூழ்) ஒருவனது அறிவு பெருகும் - அறிவு அகன்று தெளிவடையும். இல்லையேல் (இழவூழ்) அறியாமையில் அழுந்திவிட நேரிடும்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறவே மிகும்.

இறைவனின் ஆற்றல் முன்னின்று செயலாற்றினால் அவன் ஒருவன் கற்கும் நூலறிவும் தக்க பயன் அளிக்காது. இயற்கையாக உள்ள அறியாமையே மிகும். ''தன் உண்மை அறிவு'' - இயல்பாகவே தன்னிடத்துள்ள அறிவு என்று பொருள் படக்கூடும். அங்ஙனமாயின் இயல்பாக ஒருவனிடத்துள்ள அறிவு மிகக்குறைவுள்ளதாயிருந்தால், இந்தக் குறைவான அறிவு இன்னும் குறைவாகி அறியாமையே மிகும் என்று பொருள்படலாம்.

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

உலகில் சிலருக்குச் செல்வம் பெருகும்: சில ருக்கு அறிவு பெருகும். இவ்விரண்டிற்குமே இறைவனின் ஆற்றல் முன்னிற்க வேண்டும். முயற்சியும் துணை செய்ய வேண்டும்.

நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

இறைவன் ஆற்றலும் ஏற்ற முயற்சியும் இல்லையேல் நல்லவை முதலாய் பயனளிக்காமற் போகலாம். அந்த ஆற்றலும் முயற்சியும் இருந்தால் தீயவையும் பயன் தரக்கூடியவையாகலாம்.

பரியினும் ஆகாவாம் பால்அல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

இறைவன் ஆற்றல் முன்னிற்காவிடில் பொருளை எவ்வளவு வருந்திக் காப்பாற்றினும், நிலைப்பதில்லை. இறைவன் ஆற்றலிருந்து முயற்சி இல்லாவிடினும் அங்ஙனமே. அந்த ஆற்றலும் முயற்சியும் இருந்தால் நிலைக்காதனவும் நிலைத்துவிடும்!

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

இறைவன் ஆற்றல் ஒருவர் எண்ணத்துக்கும் முயற்சிக்கும், செயலுக்கும் ஏற்ற அளவில்தான் செயல்படும் என்று அவனே வகுத்திட்ட படியன்றி, நாம் என்ன செய்தாலும் பயன் இல்லை; அத்திட்டத்துக்கு அமைந்து இயன்ற அளவு முயற்சி செய்தல் வேண்டும்.

துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்,

உலகில் கிடைக்கும் பொருளால் ஒருவன் இன்புற முயல்வான். இன்னொருவன் இன்பம் நுகர வாய்ப்பிருந்தும் அதனை நுகராமல் விடுக்கிறான்.

வேருெருவன் முகர்வதற்குப் பொருள் இல்லாமை யால், உலக இன்பம் நீத்து துறவறம் மேற்கொள்ளு கிருன். எல்லாம் இறைவனுடைய அருள் ஆற்ற லும் அவனவனுக்குள்ள நல்ல மனப்பான்மையும் செய்யும் முயற்சியையும் பொறுத்தது.

நன்ருங்கால் நல்லவாக் காண்பவர் அன்ருங்கால்
அல்லற் படுவ தெவன்.

நல்லன நிகழும்போது அவற்றை நல்லவை என்று துய்த்து இன்புறுகின்றவர்கள், தீயன நிக ழும்போது துன்புறுகின்றனர். இதற்குக் காரணம் என்ன? நல்லவையெல்லாம் ஏற்று இன்புறுகின்ற வர்கள் துன்பம் தரும் சிலவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பது ஏன்? நல்லன ஏற்று இன்புறுவது இயல் பாகவே எளிது. துன்பம் தருவனவற்றை ஏற்பது அத்துணை எளிதன்று. இயல்பாகவே நாம் பின் வாங்குகிருேம். துன்பம் நேரிடுங்கால் துன்பம் தரு வதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமானுல் அதற்கு இறைவன் ஆற்றல் முன்னிற்க வேண்டும். அந்த ஆற்றலின்றி ஒருவன் இயற்கைக்குக் கடினமான எந்தக் காரியத்தையும் செய்ய முடியாதவன்.

ஊழிற் பெருவழி யாவுள மற்ருென்று
சூழினும் தான்முந் துறும்.

இறைவனின் ஆற்றலைவிட வலிமை படைத் தது ஒன்றுமில்லை. அதை மேற்செல்ல எந்தச் சூழ்ச்சியும் இல்லை. ஆகவே, அதனை நம்பி, அதே சமயத்தில் முயற்சியும் செய்து வெற்றிகாண முனைந்து நிற்றல் வேண்டும்.

"ஊழிற் பெருவலி யாவுள" என்று சொன்ன அதே வள்ளுவர்,

ஊழையும் உப்பக்கம் காண்பவர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

என்றும் கூறினர்,

எதைச்செய்ய முற்பட்டாலும், "இறைவன் ஆற்றல் முன் நிற்காவிடில் என்னல் என்ன இயலும்?" என்ற நம்பிக்கையும் வேண்டும்; தன் வலிமையை அளவுக்கு மீறி நம்பிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதே, சமயம் எல்லாம் தன் முயற்சியைப் பொறுத்தது என்ற உணர்வுடன் சோர்வடையாமல், வருந்தி மேன்மேலும் முயலுதல் வேண்டும். இவ்விரு பண்புகளும் ஒன்ருகச் செயல்பட்டால் தான் வெற்றி உண்டு. இறைவன் ஆற்றல் மனிதனின் முயற்சியைப் பெருக்கும். தன் முயற்சியால் பெரிதும் வருந்துவதைக் காணும் இறைவன் தன் ஆற்றலை அம்முயற்சியுடன் இணைக்கிருன். ஆகவே, கோரியதெல்லாம் நிறைவுறத் தடை ஏதும் இராது.

(பிற்சேர்க்கை 10ல் காண்க)

*

இந்தப் பிற்சேர்க்கைப் பகுதியில் இப்புத்தகத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் எந்த அளவுக்கு விவிலியக் கருத்துக்களுடன் பொருந்தியுள்ளன என்பது உரைக்கப்படும்.

# பிற்சேர்க்கை - I

## "துலை அல்லார் கண்ணும் தோல்விகொளல்"

இது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் சிறப்பாக நிறைவேறியதைக் காண்கிறோம். தன்னைக் கொல்ல வந்தவர்களை நொடிப்பொழுதில் முறியடித்து வெற்றிகொள்ளும் வலிமை படைத்திருந்தும் மானிடர்க்காகத் தன்னைப் பலியாக்கி அவர்கள் இழந்த அருட்செல்வத்தை மீண்டும் அவர்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்ற மிக உயர்ந்த நோக்கத்துக்காக, தன் உடலை (ஐந்தை) அவித்துப் பலியாக்கி மாந்தர் செய்தீவினைகளுக்கெல்லாம் கழுவாயாக அர்ப்பணிக்கத் திருவுளம் கொண்டார். இந்த உயர்ந்த நோக்கத்துக்காக மிகப்பெரியதொரு தோல்வியை - தம் எதிரிகளால் தமக்குக் கிடைத்த அவமானத்தையும் அவல மரணத்தையும் - தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டார்.

1) தம் எதிரிகளை முறியடிக்கத் தமக்கு வலிமை இருந்ததென்பதைப் பன்முறை காட்டியிருந்தார். உதாரணமாக ஒரு முறை நாசரேத்தூரில், அவர்பேசியமொழிகளைக் கேட்ட ஊரார் சினங்கொண்டு, "வெகுண்டெழுந்து, அவரை ஊருக்கு வெளியே தள்ளி, அவ்வூர் அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிடக் கொண்டு சென்றனர். அவரோ அவர்களிடையே நடந்து தம் வழியே போனார்". (லூக். 4, 28 - 30).

2) வேறொரு முறை அவரைக்கல்லால்எறிந்து கொல்ல முயன்றனர். அவரைப் பிடிக்கப்

பார்த்தனர். அவரோ, அவர்கள் கையிலிருந்து தப்பிச் சென்றார். (அரு. 10, 39) அப்படியே வேறொரு முறையும் செய்தார். (அரு 8, 59).

3) ஆனால், குறித்த காலம் வந்தபோது, தம் எதிரிகள் தம்மைப் பிடிக்கவந்த நேரத்தில், தப்பப் பார்க்காமல் பிடிபடுவதற்கென்று எதிரே செல்கிறார். "மனுமகன் (-நான்) பாவிகள் கையில் ஒப்படைக்கப்படும் நேரம் நெருங்கிவிட்டது எழுந்திருங்கள், போவோம்! என்னைக் காட்டிக்கொடுப்பவன் நெருங்கிவிட்டான்", (மத். 26, 45 - 46 காண்க), என்று தம் சீடரிடம் சொல்லிக்கொண்டே அவர்களிடம் செல்கிறார். தமக்கு விருப்பமானால் தப்பிக்கொள்ள முடியும் என்று காட்ட பிடிக்க வந்தவர்களை ஒரு வார்த்தையால் முப்முறை தரையில் குப்புற விழச் செய்கிறார்: (அரு. 18, 2 - 9 வாசிக்க).

தாம் பிடிபடாதவாறு காப்பாற்றச் சீடருள் ஒருவர் வாளை ஏந்தித்தாக்க முற்பட்டபோது அவரைத் தடுத்து, தமக்கு விருப்பமானால் வான்படைகளையே தம் உதவிக்கு அழைக்க முடியும் என்கிறார். (மத். 26, 51 - 53 வாசிக்க).

4) தம் உயிரைப் பறிக்க யாருக்கும் அதிகாரம் இல்லையென்றும் தாமே விரும்பி, உன்னதமானதொரு நோக்கத்துக்காகத் தம்மைப் பலியாக்குவதாகவும் தெளிவாகக் கூறினர்

" நல்ல மேய்ப்பன் தன் உயிரைக்கொடுத்தும் ஆடுகளை ஓநாயின் வாயினின்று காப்பாற்றுவான்.

அதுபோல மக்களுக்காக நானும் செய்கிறேன்" என்றார்.

"நல்ல ஆயன் நான், மேய்பனின்றி அல்லலுறும் என் ஆடுகளுக்காக (மனித இனத்தவர்க்காக) என் உயிரைக் கொடுக்கிறேன். என் கிடையைச்சாராத ஆடுகள் உள்ளன. அவற்றையும் நான் கூட்டிச் சேர்க்க வேண்டும். அவை என் குரலுக்குச் செவி கொடுக்கும். ஒரே ஆயனும் ஒரே மந்தையும் உண்டாகும். இது தான் அவர் கொண்டிருந்த உயர்ந்த நோக்கம். என் உயிரை என்னிடமிருந்து பறிப்பவன் எவனுமில்லை. நானாகவே என் உயிரைக் கையளிக்கிறேன். உயிரைக் கையளிக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதனை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" என்றார். (அரு. 10, 14 - 18 வாசிக்க).

'என் ஆடுகள் நான் தரும் இறை உயிரை பேரின்பமாம் அருள் உயிரைப்-பெற்றுய்ய வேண்டுமென்றே நான் வந்தேன். இதற்காகவே என் உயிரைப் பலியாக்குகிறேன்' என்றார். (அரு. 8, 10 காண்க).

ஆதியில் நிகழ்ந்த தீவினையால், ஆதிப் பெற்றோர் இறைவன் தந்த "நண்பெனும் நாடாச் சிறப்பைப்' புறக்கணித்ததால், அதனால் ஏற்பட்ட கொடிய விளைவுகளால் மனித இனம் பிளவுபட்டுச் சிதறிப் போய்விட்டது. "சிதறிக்கிடந்த கடவுளின் மக்களை ஒன்றாய்ச் சேர்ப்பதற்காகவே" - இந்த மிக உயர்ந்த நோக்கத்துக்காகவே - இங்ஙனம் தாமாக விரும்பி, வெற்றி பெறக்கூடிய ஆற்றல் படைத்திருந்தும், தோல்வியை அரவணைத்தார் - என்க.

# பிற்சேர்க்கை — 2

## ‘ அன்பின் வழியது உயிர்நிலை ’

“ ஆதி பகவன் முதற்றே உலகு ” என்று தொடங்குகிறார் தம் அறநூலை. அறத்தைக் கடைப் பிடிக்க வேண்டிய மனிதன் வாழும் இடமாகிய உலகுக்குத் தலைவனும் முதல்வனுமான கடவுளை அந்த முதற்குறட்பாவில் குறிப்பிடுகின்றார் என்பது வெளிப்படை.

எந்தப் பொருளில், ‘ தலைவன், முதல்வன் ’ என்பதையும் போதிய அளவு அக்குறட்பாவிலேயே குறிப்பிடுகிறார் ? “ எழுத்தெல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருப்பதுபோல ” என்கிறார். எந் தப் பொருளில் எழுத்தெல்லாம் அகரத்தை முதலா கக் கொண்டிருக்கின்றன ?

அகரமானது வாய் திறந்தவுடன் உண்டாகி விடும். அஃதாவது வாயிலுள்ள கருவிகள் ஒன்றை யும் அசைக்காமலே எழுதுவதாகும்.

அங்ஙனமே, கடவுள் ‘வாய் திறந்தவுடன்’ எந்தக் கருவிகளின் துணையும் இல்லாமலே, உலகம் உண்டாகும்படி செய்தார் என்ற கருத்து ஈண்டு மறைந்துள்ளது.

‘வாய் திறந்தவுடன்’ என்றால் விரும்பியவு டன்’ என்று பொருள். கடவுளின் ‘வாய்’ என்பது அவரது ‘சொல்’லேயாகும். அதுவும் வாய்ச்சொல் அன்று. மனச் சொல்லேயாகும். அஃதாவது ‘விருப்பம்’ என்க. கடவுளது விருப்பத்தால் தான்

உலகம் உண்டாகியுள்ளது என்பது கருத்து. தானாகவே அன்று, இறைவனின் திருவுள்ளச் செயலால்* தான் இவ்வுலகம் உள்ளது, இயங்குகின்றது என்பது பொருள்.

இக்கருத்து கிறிஸ்துவ மறை நூலில் பன்முறை குறிப்பிடப்பட்டுள்ளது கவனித்தற்பாலது.

“ஆகரமும் னகரமும் நானே” என்கிறார் எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள். (திருவெளி: 1 - 8) “ஆகரமும் னகரமும் - முதலும் இறுதியும் தொடக்கமும் முடிவும் நானே” (திரு 22, 13) என்று, கடவுள் தம்மை ஆகரம் என அழைத்துக் கொள்வது கவனித்தற்பாலது. இந்த ஆகரத்தின் அடிப்படையில் எழும் “வாக்கெல்லாம்” அவரே தான் என்றும், அவரால் தான் அனைத்துமே உண்டாயின என்றும் விவிலியம்* கூறுகிறது.

‘ஆதியில் வாக்கு இருந்தார்
அவ்வாக்கு கடவுளோடிருந்தார்
அவ்வாக்கு கடவுளாயுமிருந்தார்
அவர் வழியாகவே அனைத்தும் உண்டாயின
அவரால் அன்றி எதுவும் உண்டாகவில்லை.”
என்றிருக்கிறது. (அரு; 1. 1-3)

---

* உயிர்கள் ‘பரிணாமத்தால்’ உருவாகின்றன என்ற கருத்துக்கு இது மாறுபாடன்று. ஏனெனில், அந்தப் பரிணாமும் இறைவனின் விருப்பத்துக்கு உட்பட்டு நடைபெறக்கூடியதொன்றாகும். தாதுப்பொருட்களை இறைவன் உண்டாக்கி அவற்றிற்குப் பரிணமிக்கும் ஆற்றலையும் தந்து, தாம் விரும்பிய முறைப்படி பரிணமிக்கச்செய்து இங்ஙனம் உலகம் உருவாகும்படி செய்திருக்கக்கூடும். இந்தப் பரிணாமக்கொள்கை எந்த அளவுக்கு எண்பிக்கப் பட்டுள்ளது என்பதை அறிஞர் ஆய்ந்தறிக.

ஈண்டு 'வாக்கு' எனும்போது உள்ளத்தினின்று எழும் உள்வாக்கு என்றறிக. வாயினின்று சொல் எழுமுன் உள்ளத்தில் - மனத்தில் - அது உருவாகின்றதை நாம் அனுபவத்தால் அறிகின்றோம். மனிதராகிய நமக்கு உட்சொல்லும் உண்டு, அதன் பயனாய் எழும் வாய்ச்சொல்லும் உண்டு. இறைவனுக்கோ எல்லாம் வல்லதாய் உள்ள உட்சொல்லினைத் தம் அடியார்கள் வாயிலாக மக்களுக்கு எடுத்துரைப்பதுண்டு. இதனால்தான் இந்த அடியார்களை இறைவாக்குரைப்போர், அல்லது இறைவாக்கினர் என்கின்றோம்.

இங்ஙனம் இறைவனின் எல்லாம் வல்ல வாக்கினால் உருவான உலகைப்பற்றி முதற்குறட்பாவில் குறிப்பிட்ட பின்னர் வள்ளுவர் பாயிரத்தின் மற்றக் கருத்துக்களை உரைக்கின்றார்.

பாயிரம் முடிந்ததும், உலக வாழ்க்கைக்குத் தேவையான இல்வாழ்க்கையைக் குறித்துப் பேசத் தொடங்குகின்றார். மனிதன் இன்றி உலகிற்கு மதிப்பேது? இல்வாழ்க்கையின்றி மக்களினம் ஏது?

இல்வாழ்க்கையின் உறுப்பினர்களாகிய கணவன், மனைவி, மக்கள் இவர்களைக் குறித்து 5, 6, 7 அதிகாரங்களில் விளக்குகின்றார். இதன் பின்னர், உலகப் படைப்பின் சிகரம் போலும், உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத அமிசமாகவும் உள்ள மனிதன் உலகில் தோன்றியதன் தத்துவங்களை விளக்குவதுபோலத் தெரிகிறது.

மனிதன் உலகில் தோன்றியதன் அடிப்படைக் காரணம் என்ன என்பதை 'அன்புடைமை' என்னும் 8-ம் அதிகாரத்தில் முதற்குறளிலேயே உரைக்கின்றார்.

மனிதனை ஏன் படைத்தான் இறைவன்? என்ற கேள்விக்கு, ''அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்!'' என்று பதிலிறுக்கின்றார் வள்ளுவர்.

கடவுள் மனிதனைப் படைப்பதற்கும் அன்பிற்கும் தொடர்பென்ன என்பது எளிதில் புலப்படாமலிருக்கலாம். ஆனால், மிக மிக ஆழ்ந்த தொடர்பு உண்டு.

நல்லவன் தனக்குள்ள நன்மையை இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ள ஆர்வம் காட்டுவதை, தன்னலமே பெரும்பாலும் காணப்படும் இவ்வுலகிலும் கூட அவ்வப்போது கண்கூடாகப் பார்க்கின்றோம்.

தனக்குள்ளதை இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளுமாறு ஏதோ ஒன்று அந்த நல்லவனைத் தூண்டுகின்றது. அந்த நல்லவன், மிகமிக நல்லவனாயிருந்தால், இத்தூண்டுதலும் ஆர்வமும் மிகச் சிறந்து விளங்கும்.

ஏன் இந்த நிலை? நல்லவனுக்கு ஏன் இந்த ஆர்வம் ஏற்படவேண்டும்?

நல்லவனிடத்திலுள்ள 'நன்மை' என்பதன் பண்பே அது. நன்மை என்பது பரவும் தன்மையது. தன் 'நன்மை'யைத் தனக்குள்ளேயே வைத்திருக்க இயலாத பண்பினைக் கொண்டது. தன் நன்மையால் பிறரும் பயனடைய வேண்டுமென்று ஆர்வமுடன் விரும்பும் தன்மையது. இங்ஙனம் ஆர்வமுடன் விரும்புவதே 'அன்பெ'னப்படும். ஆகவே 'நன்மைக்கு' அடைக்கும் தாழ் இல்லை. அங்ஙனமே அன்புக்கும் அடைக்கும் தாழ் இல்லை. இதனாற்றான் 'அன்பு ஈனும் ஆர்வமுடைமை' என்றும் இவ்வதிகாரத்திலேயே சொல்லப்பட்டுள்ளது.

இனி, தனக்குள்ள நன்மையால் பிறரும் பயனடைந்து இன்புறவேண்டுமென்று அந்தப் 'பிறர்' தோன்றும்படி செயலாற்றுவதே படைப்புத் தொழிலாகும். அந்தப் 'பிறர்' என்பவர் யார்? மனிதரே.

இறைவன் ஒருவனே தானாய் உள்ளவன், தானாய் இயங்குபவன். அவனே அனைத்திற்கும் 'அகரம்' ஆதலான், அவனன்றிப் "பிறர்" என்பவர் யாரும் இலர் அஃதாவது படைப்புப்பொருள் எதுவுமில்லை. உலகமும் இல்லை உலகில் உள்ள பொருட்களும் இல்லை. மனிதனும் இல்லை, ஆகவே உலகில் மனிதன் தோன்றுவதற்கு- இறைவனின் உள்ளத்தே அளவிட முடியா ஆழியென இருக்கின்ற அன்பும் அந்த அன்பு ஈனும் ஆர்வமுமே காரணமாகும்.

தனக்குள்ள அளவிடமுடியாப் பேரின்பச் செல்வத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்பதே. அங்ஙனம் மனிதனைத் தோற்றுவித்ததன் நோக்கமாகும். அனைத்துக்கும் முதல்வனாகிய இறைவனது பேரானந்தப் பெருஞ்செல்வத்தில் பங்குபெற்று, தானும் (மனிதனும்) பேரின்பத்தில் பங்கு பெற்றுத் துய்க்க வேண்டுமென்பதே இறைவனின் நோக்கம் என்க. இங்ஙனம் தனக்குள்ள இன்பம் பிறர்க்கும் உளதாக வேண்டும் என்று விரும்பிச் செயல் புரிவதே நட்பு எனப்படும். நண்பர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள் இரா. உண்மையான நண்பன் தாழ்வுற்ற நிலையில் உள்ள தன் நண்பனைத் தூக்கி விட முழுமூச்சுடன் முயல்வான். தூக்கிவிட இயலாவிடின் நட்பின் பொருட்டுத் தானும் தாழ்வுறுத் துன்புற இசைவான். நட்பின் தன்மையே அப்படி. இயன்ற வகையில், இயன்ற அளவுக்கு

நண்பரிடையே ஒருவித சமத்துவத்தை உண்டாக்கும் தன்மையது நட்பெனப்படுவது.

இந்த இலக்கணத்தின்படியே, இறைவனும் செயல்புரிவது காண்கிறோம். அவன் மனிதனைவிட எவ்வளவோ உயர்ந்தவன். மனிதனோடு ஒப்பிட்டு நோக்குங்கால் இறைவனுக்கும் மனிதனுக்கு மிடையே உள்ள அளவிட முடியாத தூரத்தை ஓரளவு குறைத்து, தான் படைத்த மனிதனை உயர்த்த இறைவன் விரும்பினான். இதனால்தான் அன்பின்ற ஆர்வமுடைய இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே பிறந்தது நண்பென்னும் நாடாச் சிறப்பு. இதனையே வள்ளுவர்,

> "அன்பு ஈனும் ஆர்வமுடைமை அதுஈனும்
> நண்பு என்னும் நாடாச்சிறப்பு"

எனக் கூறுகின்றார்.

மனிதரிடையே நட்பு என்னும் சிறப்பு ஏற்படுவதற்கு நட்பு செய்யத் தேவைப்படும் ஆட்கள் இருத்தல் இன்றியமையாதது. ஆட்கள் இன்றேல் நட்பு ஏற்பட வழி எது? ஆனால், இறைவன்நட்பு செய்ய விரும்பும்போது நண்பராவதற்குத் தேவைப்படும் ஆட்களையும் உருவாக்கின்றான். அவனன்றி வேறெதுவும் இல்லையன்றோ? அவனால் தானே மனிதன் உருவானதும்! ஆகவே இறைவனின் நட்பு, தன் நண்பராகக்கூடிய ஆட்களையும் உருவாக்கி, அவர்களைத்தன் நட்புக்குரியவர்களாக்கும் அளவுக்குச் சிறப்பினை எய்துகின்றது. "நாடாச் சிறப்பு" என்று கூறப்பட்டது இறைவன் தரும் நட்பினுக்கு மட்டுமே முற்றிலும் பொருந்துவது கவனிக்க. தன் வல்லமையாலும், தனது அன்பின் ஆர்வத்தாலும் உருவாகாத உயிர்கள் வேறு இருப்

பின், அது ஈண்டுக் கூறப்படும் சிறப்புக்கு ஓரளவு இழுக்கே என்க.

## ஆட்களை உருவாக்குதல்.

இங்கு 'ஆட்கள்' என்னும்போது, பொதுப்பட மனிதரைக்குறிக்கலாம். மனிதனை உலகில் தோற்று விப்பதற்குக் காரணமாய் அமைந்தது இறைவனிடத்துள்ள அன்பே என்று மேலே கூறப்பட்டது. இந்த அன்பினால் - அன்பின் தூண்டுதலால் - உள்ளேயே அடைத்து வைக்க முடியாத அன்பின் தீவிர ஆற்றலினால் நிகழ்ந்ததென்ன?

"ஆருயிர்க்கு என்போடு தொடர்பு இயைந்தது". அஃதாவது மனிதனின் என்புக்கும் (உடலுக்கும்) உயிருக்கும் தொடர்பு ஏற்பட்டது. இதை எண்ணும்போது விவிலியத்தில், மனிதன் படைக்கப்பட்ட வரலாற்றையொட்டிக் கூறப்படும் செய்தி நினைவுக்கு வருகின்றது. அஃதாவது, ஆதியில் கடவுள் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவ்வுயிர் அற்ற உருவத்திற்கு உயிர்மூச்சைத் தந்ததால் மனிதன் உயிருள்ளவன் ஆனான் என்று எழுதியுள்ளது விவிலியத்தில். மண்ணால் மனிதனை உருவாக்கினார் என்னும்போது மண்ணை எடுத்து கையால் பிசைந்து உருவம் ஒன்றைக் கடவுள் செய்தார் என்பதன்று பொருள். குயவன் கையில் மண்போல இறைவன் மையில் (அதாவது அவரது வல்லமைக் குட்பட்டவனாய்) மனிதன் இருக்கின்றான் என்பது மட்டுமே பொருள். அந்த வல்லமைக்குட்பட்டே மனிதன் உயிர் பெற்றவனானான். அந்த வல்லமைக்கு உட்பட்டே அவன் அவ்வுயிரை இன்று (சாவு என்னும் கொடுமைக்காளாகி) இழந்து, மீண்டும் உயிரற்ற என்பாக உடலாக ஆய்விடுகிறான். ஆகவே, இறைவனின் அன்புச் செயலைச்

சார்ந்ததே மனிதன் உயிரோடிருக்கும் நிலைமை. இறைவனின் அன்பின் செயலைப் பொறுத்தது உடலோடு உயிருக்குள்ள தொடர்பு. இக்கருத்தையே வள்ளுவர்,

அன்போடு இயைந்த வழக்கு என்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

மனிதனின் உயிர் அவனது உடலுடன் இயைந்து வழங்கவேண்டுமாயின், இறைவனின் அன்பு அவனுடன் - அவன் வாழ்வுடன் இயைந்து செயல்பட வேண்டும்.

## ஆண் - பெண்ணாகிய ஆட்கள்.

பொதுப்பட்ட முறையில் மனிதனைப் பற்றி மட்டுமேயன்று ஆசிரியர் குறிப்பிடுவதாகத்தோன்ற வில்லை இல்வாழ்க்கையைக் குறித்தே இல்லறவியலாகிய இவ்வியலில் கூறுவதால், ஆண்-பெண் ஆகிய மனிதரைக் குறித்தும் இக்குறளில் குறிப்பிடப் படுகிறது எனக்கூற இடமுண்டு.

'என்போடு இயைந்த' என்னும்போது, ஆண் பெண் வாழ்க்கையையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றாரா? ஆம் - என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. மீண்டும் விவிலியத்தை நோக்குவோமாகில் பின்வரும் செய்தி கிடைக்கிறது.

ஆதி (ஆண்) மனிதனுடைய விலாவினின்று எலும்பொன்றை எடுத்து, அதை ஒரு பெண்ணாகச் செய்து, அவளை ஆதிமனிதன் முன் நிறுத்தவே, அவன் - "இவள் என் எலும்பினின்று எலும்பாகவும், என் தசையினின்று தசையாகவும் இருக்கின்

ருள். ஆணிடமிருந்து தோற்றுவிக்கப்பட்டதால் பெண்* எனப்படுவாள்.

"இதன்பொருட்டே ஒருவன் தன் தந்தையையும் தாயையும் விடுத்து தன் மனைவியோடு சேர்ந்துகொள்வான். இருவரும் ஒரே உடலாயிருப்பர்" (ஆதி: 2, 22 - 24) என்றான்.

கடவுள் ஆதிமனிதனின் விலா எலும்பினின்று பெண்ணை உருவாக்கினார் என்பது நகைப்புக்கிடமான செய்தியாகக் காணப்படலாம். ஆனால், உருவகமாகச் சொல்லப்படும் இதில் மறைந்துள்ள ஆழ்ந்த கருத்தை உணர்தல் வேண்டும். ஆணும் பெண்ணும் மணவாழ்வில் எந்த அளவுக்கு ஒன்றுகின்றனர்;(i) ஆகவே அவர்களுடைய வாழ்க்கை எந்த அளவுக்கு இதயத்* தொடர்பு கொண்டதாய் அஃதாவது அன்போடு

(i) எலும்பினின்று எலும்பு, தசையினின்று தசை-என்று எபிரேய மரபுச் சொற்றொடர்க்கு இதுதான் பொருள்.

இயைந்ததாய் இருத்தல் வேண்டும் என்னும் உயர்த்த கருத்தை வலியுறுத்தவே இந்த உருவகம் கையாளப்படுகின்றது. இந்த ஒன்றிப்பும் இதயத் தொடர்பும் மணவாழ்க்கையின் மிக முக்கிய பண்பாக ஆதியிலிருந்தே இருந்தது. இதை இயேசு கிறிஸ்து நன்கு விளக்குகின்றார்.

* எபிரேய மொழியில் இந்தத் தொடர்பு நன்கு விளங்குகிறது. வடமொழியிலும் ஓரளவு விளங்கும். "மனுஷனிடமிருந்து தோற்றளிக்கப்பட்டதால் மனுஷி எனப்படுவாள்" என்று வாசித்தால் தெரியும்.

* விலா - விலா எலும்பு - என்றதன் பொருள் இதுவே. விலாவுடைய பாதுகாப்பில் இதயம் உள்ளது என்று சொல்ல இடமுண்டல்லவா ?

அவரது எதிரிகளான பரிசேயர் அவரிடம்வந்து "எக்காரணத்திற்காவது ஒருவன் தன் மனைவியை விலக்கி விடுவது முறையா?" என்று அவரைச் சோதிக்கக் கேட்டனர். அதற்கு அவர், "படைத்தவர் தொடக்கத்திலிருந்தே 'ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்' என்றும், 'ஆதலால் கணவன் தன் தாய்தந்தையை விட்டுத் தன் மனைவியோடு கூடியிருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள் எனக் கூறினார்' என்றும் நீங்கள் படித்ததில்லையா? இனி அவர்கள் இருவர் அல்லர், ஒரே உடல். ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' என்றார். அவர்கள் ''அப்படியானால் முறிவுச் சீட்டுக்கொடுத்து, மனைவியை விலக்கி விடும்படி மோயீசன் கட்டளையிட்டது ஏன்?'' என்று கேட்டனர். அவரோ, "உங்கள் முரட்டுத்தனத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிட மோயீசன் அனுமதி அளித்தார். ஆனால் தொடக்கத்திலோ அப்படி இல்லை" என்றார். (மத். 19, 3 - 8)

ஆகவே, மணவாழ்க்கையில் கணவன் - மனைவியருடைய உயிருக்கும் அவர்களுடைய உடலுக்கும் உள்ள தொடர்பு அன்போடு இயைந்ததாய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தும் இக்குறளில் மறைந்து கிடப்பதாகத் தோன்றுகிறது. மணவாழ்க்கையின் உயர்வை ஈண்டு வலியுறுத்துகின்றார் என்க.

வெறும் சிற்றின்பம் அன்று.

'மணவாழ்க்கை' அன்போடு இயைந்ததாய் இருத்தல் வேண்டும் என்பதால், வெறும் இச்சைக்காக மட்டுமே உறவுகொள்வது தகாது என்ற கருத்தும் உள்ளது. அன்பு வேறு, இச்சை வேறு. அன்

புடையார் பிறர் நலனையே எண்ணுவர். இச்சை யுடையவரோ தன் நலனையே நினைப்பர்.

அன்பின் உண்மைத் தன்மையை உணர்ந்தவர்கள் தம் சொந்த மன நிறைவுக்காக (இச்சை யடங்குவதற்காக மட்டும்) இம்மண உறவைத் துய்க்கமாட்டார்கள்.

மண உறவு என்பது என்புடன் (உடலுடன்) உள்ள உறவு மட்டுமே எனப்பெரும்பாலும் மக்கள் கருதினாலும், அது அன்போடு இயைந்த வழக்காகவே கருதப்பட வேண்டும். அதாவது சிற்றின்பத்தை விளக்கும் உறவாக மட்டுமே அது கருதப் படலாகாது சிற்றின்பத்தை விளக்கும் இவ்வுறவு கூட மெய்யின்பத்துக்கு வழி காட்டவேண்டும். மெய்யான அன்பின் அடிப்படையில்தான் அதுவும் அமைய வேண்டும். உலகில் மக்கள் பெரும்பாலும் விரும்பும் இச்சிற்றின்பம்கூட ஒரு சிறப்பினை எய்துதல் வேண்டும். வெறும் சிற்றின்பமாக மட்டுமே இருந்துவிட்டால் மக்கள் விலங்குகளை விட எவ்விதத்திலும் சிறந்தவராகக் கருதப்பட முடியாதன்றோ? ஆகவே, இல்லறத்தில் மண உறவு உண்மைச் சிறப்பினை எய்த வேண்டுமாயின் ''அன்புற்றமர்ந்த வழக்காக' அமைய வேண்டும். அதாவது உண்மை அன்பால் எழும் செயலாயிருத்தல் வேண்டும்; கணவன் மனைவிக்கே உரியவன், மனைவி கணவனுக்கே உரியவள் என்ற அடிப்படையில் அமைதல் வேண்டும். ஏனெனில், உண்மை அன்பு 'என்பும் உரியர் பிறர்க்கு' என்ற அடிப்படையில் அமைய வேண்டுமல்லவா! கணவன் மனைவியுடன் தன் இன்பத்துக்காக மட்டுமே உறவுகொண்டாலும், அது தன்னலம் ஆகுமேயன்றி ' என்பும் உரியர் பிறர்க்கு' என்ற இலக்கணத்துக்கு ஏற்ற அன்பு ஆகாது.

இந்த அளவுக்குக் கணவன் மனைவியருடைய உள்ளம் மேம்பட்டு விளங்குவது இவ்வுலகில் நிகழக் கூடிய காரியமா என்று கேள்வி எழக்கூடும். நிகழக் கூடியதே என்று வள்ளுவர் கருதியிராதிருந்தால் இந்தப் பொருளில் வலியுறுத்தியிருக்க மாட்டார் * தன்னலமே நிறைந்துள்ள மனிதன் அதை முற்றி லும் ஒழித்துவிட்டு மெய்யன்பை அடைய முடியும். ஆனால், அதற்கு அவன் வீரச்செயல் (சாண்ருண் மைச் செயல்) பல மேற்கொள்ள வேண்டும், தன் ஆசையை அடக்கி ஒடுக்குவதே மனிதன் செய்யக் கூடிய செயல்களுள் மிக உயர்ந்த வீரச்செயல்-மறச் செயல்-; இந்த மறச்செயலே இல்லறத்துக்கும் துற வறத்துக்கும் உறுதுணை என்று கூறுகின்றார். இல் லறத்தைத் தக்க முறையில் அஃதாவது மேற் சொன்னவாறு உண்மை அன்பின் அடிப்படையில்- நடத்த வேண்டுமாயின் வீரச்செயல் தேவை என் கிறார் வள்ளுவர். தக்க அளவுக்கு அன்பிருந்தால் ஆகாதது ஒன்றுமில்லை. ஆகவே, மறத்திற்கும், அதாவது வீரச்செயல்களுக்கும் அன்பே துணை என்கிறார். அத்தகைய அன்பிருந்தால் உண்மை யான இன்பமும் கைகூடும். அன்பில்லா வாழ்வு உண்மை இன்பமில்லா வாழ்வே. உண்மை இன் பம் என்பது நொடிப்பொழுதில் முடிந்துவிடும் சிற் றின்பமாகாது. நீடித்துள்ள இன்பமே மெய்யின்பம்.

இத்தகைய இன்பம் சிற்றின்ப உலகமாகிய இவ் வையகத்தில் கிடைப்பதில்லை. ஏனெனில், சிற்றின் பத்தால் ஒருவன் இன்புற்று "அமர்வதில்லை"— அஃதாவது, இன்புற்று நிறைவு எய்துவதில்லை. ஏனெனில், சிற்றின்பத்தில் ஒருவன் அன்புற்று அமர்வதில்லை. நொடிப்பொழுது அன்பும் இன்பமும் நுகர்ந்து மீண்டும் ஏங்குகின்றான்! ஆகவே இந்நிலை, "அன்புற்றமர்ந்த வழக்கு" அன்பும் ஆகாது, இன்புற்றமர்ந்த சிறப்பும் ஆகாது.

ஆகவே, அன்பில் நிலைத்து, அதனால் விளையும் இன்பம் பெற்று, வேறு எக்கவலையுமின்றி இன்புற்று, சிறப்புற்று வாழ்வதற்குச் சிற்றின்பம் உள்ள இவ் வையகம் ஏற்றதல்ல; பேரின்ப நிலையே ஏற்றதென அந்நிலையை எய்த முனைந்து நிற்றல் வேண்டும்.

இக்குறளுக்குப் பொருள் கூறும் அறிஞர்கள் சிலர், இம்மைச் சிற்றின்பத்தை மட்டுமல்ல, மறுமை யில் அடையக்கூடிய பேரின்பத்தையும் குறிப்பிடு வது கவனிக்கத் தக்கது.

பரிமேலழகர்: "இவ்வுலகத்து இல்வாழ்க் கைக் கண் நின்று இன்பம் நுகர்ந்து அதன்மேல் துறக்கத்துக்குச் சென்று எய்தும் பேரின்பத்தினை, அன்புடையராம் இல்லறத்தோடு பொருந்திய நெறி யின் பயன் என்று சொல்லுவர் அறிந்தோர்",

இதன் பொருள் என்ன? இல்லற வாழ்வில் காணும் சிற்றின்பத்தின் பயனே மறுமையின் பேரின் பம் என்பதா? சிற்றின்பமே பேரின்பத்துக்கு வழி என்பது கருத்தா? அது எங்ஙனமாகும்? மாறுக மெய்யன்பின் அடிப்படையில் அஃதாவது, 'என் பும் உரியர் பிறர்க்கு' என்ற இலக்கண அடிப்படை யில் கணவனும் மனைவியும் மேற்குறிப்பிட்டவாறு சிற்றின்பம் நுகர்வாராயின், அந்தச் சிற்றின்பம் மேலோங்காமல். அன்பே மேலோங்குகின்றமை யால், அது மெய்யின்பத்துக்கு – நீடித்த பேரின்பத் துக்கு வழியாகும் எனப்பொருள் கூறுவோமானால், விளங்குகிறது.

இப்பொருளிலேயே ஞா. தேவநேயன் அவர் களும் கூறுகின்றார்.

"இல்லறத்தினாலேயே இம்மையில் இவ்வுலக இன்பமும், மறுமையில் விண்ணுலக இன்பமும் பெறுவதற்குக் காரணமாயிருப்பது அன்பு ஒன்றே என்பது இங்குக் கூறப்பட்டது."

**வாழ்வே அன்பின் வழியது :**

இம்மைக்கும் மறுமைக்கும் மெய்யின்பம் பயப்பது அன்பு ஒன்றேயாதலால் தான் வள்ளுவர் பலபட அன்பின் பெருமையையும் அதன் இன்றியமையாமையையும் அறிவுறுத்துகின்றார்

மனிதனின் வாழ்வெல்லாம் 'அன்பின் வழியது' என்றும், அந்த அன்பின் வழியதாயில்லாத மனிதன் வெறும் தோல்போர்த்த எலும்புக்கூடே என்றும் கூறுகின்றார். மனிதனை மனிதனாக்குவது அன்பு ஒன்றே.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு".

அன்பு செய்வதற்கென்றே உயிர் (மனிதன்) உள்ளது. ஆதலின், இல்லற வாழ்விலும், மனஉறவிலும்கூட, அன்பே மேலோங்கி நிற்க வேண்டும். 'அன்பு' 'காதல்' என்ற பெயரால் சிற்றின்ப இச்சை மேலோங்கவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இல்லையேல், இல்லற வாழ்க்கை வெறும் புறத்துறுப்புக்களின் உறவாகவே இருந்து விடும். இதனால் பயன் என்ன? புறத்துறுப்புகள் செய்ய வேண்டிய செயலுக்கு முழுமையான பொருள் தருவது அகத்துறுப்பாகிய அன்பேயாகும்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பில வர்க்கு".

ஆகவே, அகத்துள்ள உறுப்புபோல் அன்பானது இருந்து, மனிதனை இயக்கி, சற்றின்பம் மேலோங்கி விடாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்க.

இத்தகைய அகத்துறப்பு சிறந்து விளங்கவில்லையேல், வாழ்க்கை மலரவே மலராது. காய்ந்துலர்ந்து போன, வளமற்ற வாழ்க்கையாக இருந்து விடும். அன்பு இல்லாதவர் சிறப்புறுவர் என்பது பாறை நிலத்தில் அல்லது பாலை நிலத்தில் உலர்ந்த மரம் தளிர்ப்பது போன்றதே. உலர்ந்த மரம் தளிர்ப்பதே இயலாதது. அதிலும் பாலை நிலத்தில் அல்லது பாறை நிலத்தில் தளிர்ப்பதென்றால் இருமடங்கு இயலாதென்க.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று."

மாறாக, அகத்துறுப்பாகிய அன்பைக் கொண்டுள்ள மனிதனின் வாழ்க்கை, பாலை நிலம் அல்லது பாறை நிலம் போன்ற (அஃதாவது துன்பம் நிறைந்த, வளமில்லாத...) உலக வாழ்வில் மலரும் வலிமை படைத்ததாகும். என்ற கருத்தும் இதனுள் மறைந்துள்ளது.

இத்துணை அருமையும் பெருமையும் உள்ள அகத்துறப்பாம் அன்பில்லாத மனிதனின் இறுதி என்னும்? தனக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், தான் மேற்கொண்ட இல்லறமே அவனை வாட்டி வதைக்கும்! எலும்பில்லாத புழு கடும் வெயிலில் அகப்பட்டால் எப்படித் துடிதுடித்து அவதியுறுமோ அப்படியே அவன் துன்புறுவான்.

''என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.''

ஈண்டு 'அறம்' என்றுள்ளது அறக்கடவுளைக் குறிக்கும் என்று உரைகள் கூறுகின்றன. ஆகுபெயராக 'அறவாழி அந்தணனாகிய கடவுளைப் பொதுபடக் குறிப்பிடலாம.

இத்துணைச் சிறப்புகளும், வலிமையும் கொண்டுள்ளதால், "அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாழ்!'' என்று கூறியதில் வியப்பொன்றுமில்லை.

## எது மெய்யன்பு?

இனி. இந்த மெய்யன்பு எங்குள்ளது என அறிவதெங்ஙனம்? அஃதாவது ஒருவர், காட்டும் அன்பு உண்மையான அன்புதானா, அல்லது தன்னலத்தினைக் கருதிக் காட்டப்படும் அன்பா என்று வேறுபடுத்திக் காண்பது எங்ஙனம்?

விளக்குவோம். அன்பெல்லாம் அன்பாய் விடாது. ஒருவருக்கு அன்பு செய்தால், (அல்லது அன்பு செய்வதுபோல் காட்டிக்கொண்டால்) அதனால் தனக்கு நன்மை விளையும் என எதிர்பார்த்து அன்பு செய்வோர் உலகில் இல்லாமலா இருக்கிறார்கள்? இது தன்னலமேயன்றி, அன்பன்று. அன்பின் வெளிவேடமே இது. ஏனெனில்' உண்மை அன்பு எந்நலனையும் எதிர்பார்ப்பதில்லை. அதுமட்டுமன்று, தனக்குள்ள நலனையும் பிறர்க்கு உரிமையாக்கிவிடும். தனக்கென எதையும் வைத்துக்கொள்ளாது. இதையே வள்ளுவர், "என்பும் உரியர் பிறர்க்கு" என்கிறார். தன் எலும்பையும் தந்து விடுதல் என்றால், எதையும் தனக்கென வைத்துக்கொள்ளாமல் தியாகம் செய்தல். எலும்பைத் தந்த பின் எஞ்சி நிற்பது ஒன்றுமில்லையல்லவா!...

உடல் நிலைபெற எலும்பு தேவையல்லவா? எலும்பைத் தந்த பின் ஊனும் நிலைபெருதாகையால், எல்லாமே தந்தாயிற்று என்பது பொருள்.

இத்தகைய அன்பு ஒருவரிடம் உண்டா என்று அறிவது எங்ஙனம்? அதற்குத் தக்க சான்று உண்டென்கிருர் வள்ளுவர்.

தம் அன்புக்குரிய பிறர்க்குற்ற துன்பத்தைக் கண்டதும், தாம் சிந்தும் சிறிய கண்ணீரும் உண்மை அன்பைப் பலரும் அறியச் செய்துவிடும் என்கிருர்.

பிறர் துன்பம் கண்டு தாமும் துன்புறுவதில் தான் மெய்யன்பு உள்ளது. என்பது கருத்து.

அன்புக்குச் சான்ருகத் துன்பத்தைக் குறிப்பிடுவது மிகமிக உன்னிப்பாக நோக்கத்தக்கது.

இக்கருத்தை எளிதில் எண்பிக்க முடியும். கடும் நோயுற்றுக் கிடக்கும் தம் குழந்தைகளைக் கண்காணிக்கின்ற இரு தாய்மார்களை எடுத்துக் கொள்வோம்.

ஒரு தாய் தன் குழந்தையின் அருகிலேயே சோகமே வடிவென அமர்ந்திருக்கிருள். உண்பதுமில்லை, உறங்குவதுமில்லை. எந்நேரமும் குழந்தையின் நினைவாகவே ஏங்குகிருள். தன் சுகத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தான் எவ்வளவு துன்புற்ருலும் சரி, தன் குழந்தை குணமடைந்தால் போதும் என்ற ஒரே கவலையுடனிருக்கின்ருள்.

மற்ருெரு தாய் ஏதோ ஓரளவு குழந்தையைக் கண்காணிக்கின்ருள் என்ருலும், உண்பதும் உறங்குவதும் குழந்தையை விட்டுவிட்டுத் தன் நண்பருடன் இன்புறுவதுமாக இருக்கின்ருள். தன் குழந்தையைப் பற்றி ஏதோ ஒரு சிறிது கவலையைத் தான் காட்டுகிருள்.

இவ்விரு தாய்மார்களுள் யாருக்குக் குழந்தை மீது உண்மையான அன்பு உண்டு என்று கேட்டால், முதலில் சொன்னவளுக்கே என்று எவரும் தயக்கமின்றிப் பதிலிறுப்பர். ஏன்? எந்த நலனும் கோராமல், பிறர்க்காகத் துன்புறும்போதுதான் உண்மையான அன்பு வெளிப்படுகிறது. அவர் மேல் வைத்த அன்பு ஒன்றையே எண்ணித் துன்புறுவதினும் மேலான அன்பு இருக்க முடியாது. அன்பின் இந்த இலக்கணத்தைக் குறிப்பிட்டே இயேசு கிறிஸ்து, "தன் நண்பருக்காக உயிரைத் தியாகம் செய்வதினும் மேலான அன்பு யாரிடமும் இல்லை" என்ருர்.

இக்கருத்தில் தான் 'ஐந்தவித்தானுகிய இறைவன் மனிதருடைய துன்பத்தைக்கண்டு, தாமும் துன்புற இசைந்தார். அதற்காகத் தம் உயிரையும் உடலையும் பலியாக்கி ஐந்தவித்தான் ஆனுர். தீவினை செய்து தம் அன்பை இழந்த அன்பிலா மாந்தர் அனைவரும் தமக்குரியர் என்று, அவர் பொருட்டுத் தம் என்பையும் பிறர்க்கு உரியதாக்கினுர். தமக்கென எதுவும் வைத்துக்கொள்ளாமல் அனைத்தையும் பலியாக்கினுர்.

இத்துணை அன்பை உணர்ந்து அதன் வழி நின்ருல் மட்டுமே உயிர் நிலைபெறும் என்க. இத்தகைய அன்பு இல்லறத்தினரையும் சாரும்; துறவறத்தினரையும் சாரும். இரு திறத்தார்க்கும் இன்றியமை

யாததாகும். இல்லறத்தினரிடையே இத்தகைய அன்பு மேலோங்காவிடில், சிற்றின்பமே மேலோங்கி விடும். துறவறத்தாரிடையே இத்தனை அன்பு மேலோங்காவிடில், பேரின்ப நாட்டம் குறைவுறும். ஆகவே, 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பது உறுதியடைகிறது.

சுருக்கம் :

இதுவரை கூறிய விளக்கங்களிலிருந்து இவ்வதிகாரத்தில் வள்ளுவர் கூறும் அன்பு முதன்மையாக மனிதன், மனிதனின்பால் காட்டும் - காட்டவேண்டிய அன்பு அன்று, கடவுள் மனிதன்பால் காட்டிய அன்பென்று புலனாகிறது.

அந்த அன்பின் காரணமாகத்தான் கடவுள் மனிதனை 'அன்போடு இயைந்த தொடர்பென"ப் படைக்கின்றார். தன்னுள் அடைத்து வைக்க முடியாத அந்த அன்பினால்தான் இறைவன் ஆணையும் பெண்ணையும் இல்லறத்தில் இணைத்து, அந்த இல்லற வாழ்க்கையும் அன்போடு, இயைந்த தொடர்பாக விளங்கவேண்டும் என ஏற்படுத்தியுள்ளார். தாம் மனிதன் பால் காட்டும் அத்தகைய அன்பை, ஆணும் பெண்ணும் இல்லறத்தில் ஒருவர்பால் ஒருவர் காட்டவேண்டும் எனத்திட்டம் வகுத்துள்ளார். அத்தகைய அன்பே துறவறத்திலும் விளங்கவேண்டும் எனவும், மனிதன் மனிதன்பால் கொண்டிருக்க வேண்டிய உறவிலும் விளங்கவேண்டும் என்றும் விரும்புகின்றார்.

ஆகவே, எந்த அறத்தைக் கடைப்பிடித்தாலும், 'அன்பின் வழியது' வாழ்க்கை என்ற அடிப்படையில்தான் அமைதல் வேண்டும். ஆகவே தான் சால்பூன்றிய தூண்களில் முதலாவதாக 'அன்புடைமை'யை வைத்தார் வள்ளுவர்.

இதை ஐந்தவித்தாஞகிய இறைவன் மிகச்சிறப்பாக அறிவுறுத்தியிருப்பதும் கவனித்தற்பாலது. அன்புக்கு இலக்கணம்போல் உள்ள (மேற்சொன்ன) வார்த்தைகளைக் கூறுமுன் அவர் தந்த கட்டளை :

“நான் உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல நீங்களும் ஒருவர் ஒருவரிடம் அன்புகூற வேண்டுமென்பதே என் கட்டளை...”

அஃதாவது துன்பம் வந்துற்றபோது உங்கள் கண்ணீரைக் கண்டு நானும் கண்ணீர் வடித்ததுபோல்- இவ்வுலகுக்கு வந்து துன்புற்றதுபோல - நீங்களும் ஒருவரொருவருடைய துன்பங்கண்டு அவர்கள்பால் அன்பு செலுத்தி அவர்கள் கண்ணீரைப் போக்குங்கள்” என்றவாறு :

மனிதன் இந்த அளவுக்குப் பிறர்பால் அன்பு செலுத்த மனவலிமையற்றவஞயிருக்கின்ருன். அதஞற்ருன், இறைவனே வந்து அவனுக்கு வழிகாட்டியாகவும், வலிமை தருபவஞகவும் மேல்வரிச் சட்டமாகவும் நமக்குத் தன்னை அளித்துள்ளான். அன்பு என்பது என்னவென்று விளக்கியதோடு, அந்த அன்பைப் பிறர்பால் செலுத்தத் தேவையான மனவலிமையையும் அருளினுன். இதையெல்லாம் நினைவிற்கொண்டு, மனிதன் உண்மையான அன்பு வழியில் வாழ முழுமூச்சுடன் முயலுதல் வேண்டும் என்க.

இயேசு கிறிஸ்து உலகுக்கு வெளிப்படுத்திய அன்பின் தன்மை பற்றி திரு வி. க. அவர்கள், ‘கிறிஸ்துவின் அருள் வேட்டல்’ நூலில் பாடியுள்ளது சிறப்பாக நினைவுறுத்தத்தக்கது :

அன்பே நீ ஆதலினால் ஆருயிர்கள்பொருட்டுன்
அழகுடலை வதைக்க விட்டாய்: அருள் உயிரை நீத்தாய்
இந்நிலத்தில் அச்செயலை எக்குரவர் ஏற்றார்?

..............................................

அன்பினிலே குறையிருந்தால் அருஞ் செயலை ஆற்றல்
ஆகாதே ஆகாதே! 'அன்புடைய அறவோர்
என்பும் பிறர்க்கு உரியர் 'என எழுந்த மொழிக்குகந்த
இலக்கிய மாயிலங்கி நிற்கும் இயேசு குருநாதா!

இயேசுவின் வாழ்க்கையாகிய இலக்கியத்துக்கு வள்ளுவர் அன்புக்குக் கூறும் பொருள் இலக்கணமென அமைந்துள்ளது காண்க.

வேறுயாரும்—எக்குரவரும்- இச்செயலை (அதாவது தம் ஐந்தையும் அவிக்கும் அளவுக்கும், என்பும் பிறர்க்குத் தரும் அளவுக்குச்) செய்யவில்லை என்று அவர் கூறுவதும் கவனிக்க.

## பிற்சேர்க்கை — 3

### "ஐந்தவித்தான் அருளும் ஆற்றல்..."

சுயநலமே உருவான மனிதன் அச்சுயநலத்தை முழுதும் மேற்கொண்டு 'என்பும் உரியர் பிறர்க்கு' என்ற அடிப்படையில் எங்ஙனம் வாழ முடியும்? சுயநலமும் இத்தகைய பிறர் அன்பும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையன்றோ? மனிதனைச் சுயநலத்துக்கு அடிமையாகுமாறு செயல்புரியும் கருவிகளே ஐம்புலன்கள். இவற்றை அடக்கியாள ஞானிகள் பல வழிகளைக் கையாண்டுள்ளனர். எந்த அளவுக்கு வெற்றி கண்டனர் என்பது ஆய்வுக்

குரிய கேள்வி. தற்பலித் தியாகம் செய்யுமள வுக்கு அவர்கள் வாழ்வில் சுயநலம் தோல்வி யுற்றதா என்பதும் ஆய்வுக்குரியது.

இவ்வைம்புலக் கருவிகள் பக்குவப்பட்டு, சுய நல முனைப்பு ஒடுங்கி, அன்பு மேலோங்க, இறை வன், யாரும் எதிர்பார்க்க முடியாததொரு வழி யைக் கையாண்டதாகக் கூறுகிறது விவிலியம். அஃதே ஐந்தவித்தான் தந்த அவியுணவு. இதையே கண்டு விளக்குகிறோம்.

முதற்கண் ஐந்தவித்தான் என்ற சொல்லுக்கு உள்ள பொருளை விளக்குவோம்.

'அவித்தல்' என்ற சொல்லுக்குப் பெரும்பாலும் உரையாளர் 'அடக்குதல்' என்ற பொருளையே தருவர். ஆனால் இது பொருத்தமன்று. ஐம்புலன் களைப் பொறுத்த அளவில் ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்பதைத் திருத்தமாகவும், படிப்படி யாகவும் கூறியுள்ள வள்ளுவர் அடக்குதல் என்ற சொல்லுக்குப் பதிலாக அவித்தல் என்ற சொல்லைக் கையாண்டார் என்று சொல்ல இடமில்லை.

ஐயுணர்வு எய்துதல் வேண்டும் (354)
அவற்றை அடல் வேண்டும், விடல்
வேண்டும் (343)
அவற்றை அடக்குதல் வேண்டும் (126)
அவற்றின் வகை தெரிதல் வேண்டும் (27)
அவற்றைக் காத்தல் வேண்டும் (24)

என்று திருத்தமாகக் கூறியவர், 'அவித்தல்' பற்றிக் கூறும்போது, வேறெதோ பொருளை மனத்தில் கொண்டிருத்தல் வேண்டும், மேலும். அவித்தல் பற்றிப் பேசும்போது 'அவித்தல்

வேண்டும்' என்னுமல், "ஐந்தவித்தான்" ஒருவனைப் பற்றியே பேசுகிருர்.

யாரைக் குறிப்பிட்டு இங்ஙனம் பேசுகிருர்?

"அவித்தல்" என்ற சொல்லின் பொருள் என்ன என்று முதலில் ஆய்வோம்:

''அவித்தல்' என்பது அழித்தல் அன்று. முனைப்புக் கொடுத்துத் தன்வயப்படுத்தி ஆட்கொள்வதையே அது குறிக்கும், காய்கறிகளை நாம் அவிப்பது அவற்றை அழிப்பதற்கோ, சுட்டுக்கருக்குவதற்கோ, சுவை கெடுப்பதற்கோ அன்று. அவற்றின் கடுமை. கடுப்புப் போக்கிப் பதப்படுத்தி சுவைக்குகந்தனவாக்குவதற்கேயாகும். புலனறிவுகளையும், புல நுகர்வுகளாகிய புல அவாக்களையும் இவ்வாறு ஆரும் அறிவின் ஆற்றலால் பதனுறவித்து, இனத்துக்கு மாருன அவற்றின் கடுமை, கடுப்பு முனைப்புகளகற்றி அவற்றை இனத்துக்கும் அக உயிருக்கும் ஏற்ற உணவு அல்லது உணர்வாக்குவதே புலனவா அவித்தல் ஆகும். அவி உணர்வின் ஆன்ருேர், அவி உணவின் ஆன்ருேர் என்ற இரு வகை வழக்குகளும் ஏற்பட்டமை இதனுலேயாகும். அவியுணவு என்பது அவி உணவுக்குரிய ஒரு புறச் சின்னமேயாகும். நம் உணர்வை அவித்தமைக்கு அடையாளமாகவே நாம் தெய்வ உருவினுக்கு அவியுணவு படைக்கிருேம். திருவள்ளுவர் காலத்துக்கு நீண்ட நாட் பிற்பட்ட காலங்களில் வேத மொழியில் இது ஓசை மாறி (ஹவிசு என்று) வழங்கப்பட்டாலும் பொருள் மாருமல் நெய்யிட்டுப் பதப்படுத்திய கூலங்களையே உணர்த்திற்று," (மணி விளக்கவுரை, I Vol. 311 - 311)

அவித்தல் பற்றி ஈண்டுக் கூறப்படும் கருத்துக்கள் முதல் அதிகாரத்தில் கூறப்படும் ஆதிபகவனாகிய உலக முதல் குருவுக்குப் பொருந்துமா?

தன் "பொறிவாயில் ஐந்தை" "முனைப்புக் கெடுத்துத் தன் வயப்படுத்தி ஆட்கொண்டான்" என்பதும்,

காய்கறிகளின் "கடுமை கடுப்புப் போக்கிப் பதப்படுத்திச் சுவைக்கு உகந்ததாக்கு"வது போல், ஆதிபகவனும் "புலனறிவுகளையும் புல நுகர்வுகளாகிய புல அவாக்களையும் இவ்வாறு ஆளும் அறிவின் ஆற்றலால் பதனுறுவித்து இனத்துக்கு மாறான அவற்றின் கடுமை கடுப்பு முனைப்புகள் அகற்றி அவற்றை இனத்துக்கும் அக உயிருக்கும் ஏற்ற உணவு அல்லது உணர்வாக்கி"னன் என்பதும் இறைவடிவான, இறைவனுக்கு மிகமிக அணுக்கமான, நிலையுடைய உலகக் குரவர்க்கெல்லாம் ஆதியாகிய உலக முதல் குருவாகிய, உலகுக்கெல்லாம் அகரமாகிய ஆதிபகவனுக்கு எங்ஙனம்பொருந்தும்? முதல் அதிகாரத்தில் கூறப்படும் ஆதிபகவன், 'வாலறிவன்' என அழைக்கப்படுகின்றான். வாலறிவு என்பது நிறைவான அறிவைத் தனக்கு இயல்பாகக் கொண்டிருப்பவன் என்றுதான் பொருள்பட வேண்டும். அங்ஙனமாயின், "ஆளும் அறிவின் ஆற்றலால் பதனுறுவிப்பது" எங்ஙனம் அவனுக்குப் பொருந்தும்? ஆளும் அறிவு என்பது சாதாரண பகுத்தறிவுள்ள மனிதர்க்கு மட்டுமே பொருந்தக்கூடும்!

இந்த ஆதிபகவன் மனிதர்கள் இதய "மலர் மிசை ஏகினன்" என்றால், தனக்குள்ள அருவ

நிலையில்தான் அங்ஙனம் 'ஏகினன்' ஆதல் கூடும். உருவ நிலையில் வேறு மனிதர் "இதய மலர்மிசை ஏகுதல் எங்ஙனம் இயலும்?

இங்ஙனம் அருவ நிலையில் இதய "மலர்மிசை ஏகினன்" இறைவனேயன்றி வேறெதுவாயிருத்தல் கூடும்? இத்தகைய இறைமைப் பண்பு நிறைந்தவன் தன் 'ஐந்தை'ப் பதனுறுவிக்கத் தேவைப் பட்டது என்பது பொருந்தாக் கூற்ருகவே உள்ளது.

அங்ஙனமே, "வேண்டுதல் வேண்டாமை இலான்" ஆகிய அவன் புலனவாக்கள்பாற்பட்டு அவற்றுள் சிலவற்றை வேண்டுபவனுகவும், சில வற்றை வேண்டாதவனுகவும் ஆகுமாறு எங்ஙனம்?

"தனக்குவமை இல்லாதான்" எனில் பகுத்தறிவு படைத்த பிற மனிதர்களைப் போலவே ஆருவது அறிவினுல் புலனவாக்களை அடக்கி, அவித்துப் பதனுறுவிக்கத் தேவைப்பட்டது எனின், பிற மனிதரும் அவனுக்கு உவமையானவர் என்ருகிவிடும் அன்ரே?

"அறவாழி அந்தணனுகிய" அவனும் பிறரைப் போல் புலனவாக்களை அவித்துப் பதப்படுத்தினன் என்ருல் "அறவாழி" என்ற பெயருக்கே தகுதியற்றவனுய் விடுகிருன் அன்ரே? ஆகவே, ஈண்டுக் குறிக்கப்படுவது, ஆதிபகவன், தன் பொறிவாயில் ஐந்தை" அவிப்பது பற்றியன்று, பிறருடைய பகுத்தறிவு படைத்த சாதாரண மனிதருடைய புலன்களை அவிப்பது பற்றியே என்க.

இது எங்ஙனம் இயலும்? ஆதிபகவன் மனிதருடைய "ஐந்தினை" அவித்தானு? எங்ஙனம்? என்று கேள்விகள் எழும்.

ஆம், அவித்தான் என்பதே விடை. அவித்தான் என்ற சொல்லை ஈண்டு "அழித்தான்" என்ற பொருளில் கொள்ளாமல், "அவித்துப் பதனுறவித்தான்" என்று மேற்சொன்ன பொருளில் மட்டுமே கொள்க. இதற்காக அவன் மேற்கொண்டதே "தற்பலித் தியாகம்" என்க,

வரலாறு :

ஆதிமுதல் மக்கள் தாமறிந்த தெய்வங்கட்குப் "பலி"களை இட்டு வந்துள்ளனர். பலியிடுவதால் தாங்கள் செய்த தீவினைகளுக்கு மன்னிப்புக் கிடைக்கும், அவற்றிற்கு ஏற்ற கழுவாய் உண்டாகும், தெய்வங்களின் கோபம் தணியும், தயவு கிடைக்கும், தங்கள் தேவைகள் நிறைவுறும் என்ற கருத்தில்தான் இப்பலிகள் நிகழ்ந்து வந்துள்ளன. இப்பலிகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

ஒன்று - தானியங்கள், பழங்கள் முதலியன காணிக்கையாகத் தரப்பட்டன. இவற்றைத் தெய்வங்களுக்குப் படைத்தல்' என்றனர்.

மற்றொன்று - உயிர்களைக்கொன்று, இரத்தம் சிந்தி,தெய்வங்களுக்குப்படைத்தலாகும். இவையே 'பலிகள்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டன. இப்பலிகளே தலைசிறந்து விளங்கின என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம் படைக்கப்பட்டவையாயினும் சரி, இரத்தப் பலிகளாயினும் சரி, படைத்த பின்னர் அல்லது பலியிட்ட பின்னர் படைத்ததை, பலியிட்டதை உண்டு வந்தனர். பலியிட்டதை உண்பது பலிச்சடங்கின் ஓர் அமிசமாகவே இருந்து வந்தது. படைக்கப்பட்ட பொருளில், பலியாக்கப்பட்ட உயிர்களின் உடலில் தெய்வச்சக்தி ஏதோ வந்து குடி

கொள்வதாகவும், அதை உண்டால் அந்தச்சக்தி தங்களுடையதாகித் தங்களுக்கு நன்மைபல விளை யும் என்றும் நம்பிவந்தனர். இந்தக் கருத்தில் நம் நாட்டிலும் ஆதிகாலத்தில் எத்தனையோ பலிகள் நிகழ்ந்தன என்று அறிவோம். இவற்றைப் புத்த ரும், பின்னர் சமணரும் கண்டித்து நீக்க முயன்ற னர். 'உயிர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டும்' என்ற நோக்கத்தோடுதான் முக்கியமாக அப்படிக் கண்டித்தனர். திருவள்ளுவரும் இதைக்கண்டிக் கிறார். ஆனால் அதற்கு அவர் தரும் காரணம் முற்றிலும் வேறாய் உள்ளது.*

ஈண்டு நாம் மேலும் விளக்க வேண்டுவது: இறைவன் ஐந்தவித்தானாகி உலகிற்கு வந்தபோது, தன் உடலை அவித்து, அதாவது பதனுறுவித்து அளித்தது தன்பொருட்டன்று, பிறர்பொருட்டு, மனிதர் பொருட்டு என்ற கருத்தாகும்.

மனிதர்களுடைய புலனறிவுகளையும், புலநுகர்வு களாகிய புல அவாக்களையும் பதனுறுவிக்கும்பொ ருட்டு, இனநன்மையின் பொருட்டு அவற்றின் கடுமை கடுப்பு முனைப்புகள் அகற்றி, அவற்றை இனத்துக்கும் அக உயிருக்கும் ஏற்ற உணவு அல் லது உணர்வாக்கும் பொருட்டும் இங்ஙனம் ஐந்த வித்தானாக வந்த இறைவன் ஆதிபகவன் தன் 'ஐந்தை' அவித்தான் என்க.

மனிதர்களுடைய புலனறிவுகள் முதலிய பத னுறுமாறும், கடுப்புகள் முனைப்புகள் நீங்குமாறும்

---

* இவையெல்லாம் மு. தெய்வநாயகம் அவர்கள் எழுதி யுள்ள 'அருட்செல்வம் யாது' என்ற நூலில் கூறப்பட் டுள்ளன.

அவன் செய்த ஏற்பாடே தன்னைப் பலியாக்கிய போது தன்னையே அவியுணவுமாக்கியது. மனித உடலை உணவாக்கித் தந்தான் என்னும் போது அருவருப்பு ஏற்படத்தான் செய்யும். ஆனால் இது வெறும் மனித உடலை உண்பதன்று! பலி யாக்கப்பட்ட உடலில் தங்கும் இறை சக்தியையே தனதாக்கிக் கொள்வதாகும். உணவுப் பொருள் எதை உண்டாலும் அதனுள் அடங்கியிருக்கும் உட் சத்தே பயன்படுவது. அவியுணவாயின் அது இறைவனோடு விசேட தொடர்புகொண்டதொரு தெய்வீக சக்தியே* என்க. ஏன் இந்த ஏற்பாடு?

கடுப்பும் முனைப்பும் மிக்க மனிதர்களின் புலன்களின் அறிவுகள், நுகர்வுகள், அவாக்களை பதனுறுவிக்கவே என்க.

ஐந்தவித்தானின் ஆற்றலைப் பற்றிப் பேசும் "நீத்தார் பெருமை" அதிகாரத்தில், அவன் தயா ரித்துத்தந்த "உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பது" குறித்தும், "ஐந்தின் வகை தெரிவான்கட்டே உலகு" என்றும் ஆசிரியர் கூறு வது கவனித்தற்பாலது. அவியுணவாகத் தன்னை யளித்த ஐந்தவித்தானின் இந்த ஏற்பாட்டை ஏற்று அதைப் பயன்படுத்தினால் தன் 'ஐந்தும்' பதனுறும், கடுப்பு முனைப்பு இன்றிச் செயல்புரியும். ஆகவே அவற்றை அடக்கியாள முடியும், அவற்றின் வகை தெரிந்து, காக்க முடியும் என்கிறார் வள்ளுவர்.

---

* இதனை ஐந்தவித்தானாகிய கிறிஸ்து சாதாரண உணவுப் பொருள் வடிவமாகத் தந்துள்ளார் என்பது கவனித்தற் பாலது. அன்றைய மக்களின் சாதாரண உணவுப்பொ ருளாயிருந்த கோதுமை அப்பத்தின் வடிவிலும், சாதா ரண பானமாயிருந்த திராட்சை இரச வடிவிலும் தந் தார் என்பது கிறிஸ்துவப்படிப்பினை. ஆகவே அருவருப்பு எதற்கும் ஈண்டு இடமில்லை என்பது தெளிவு.

அதனுல் சுயநலம் மேலோங்காமல் தடுத்து, அன்பு மேலோங்கச் செய்ய முடியும்.

"அவியுணவு என்பது அவியுணர்வுக்குரிய ஒரு புறச்சின்னமேயாகும். நம் உணர்வை அவித்த மைக்கு அடையாளமாகவே நாம் தெய்வ உருவி னுக்கு அவியுணவு படைக்கிறேம்", என்கிருர் மணி விளக்க உரையாசிரியர். ஆனல், ஐந்தவித்தான் தன்னையே தற்பலியாக்கி, அவியுணவாகச்சமைத்து மனிதர் தாம் உண்டு ஐந்தினைப் பதனுறுவிக்க வேண்டுமென்பதே உண்மை. ஐந்தவித்தான் உலகில் தோன்றுமுன் மக்கள் தெய்வங்களுக்குப் படைத்தபோது ஆசிரியர் கூறும் கருத்து உண்மையாயிருந்திருக்கலாம். ஆனல் இனி நாம் இறைவனுக்குப் படைக்க வேண்டிய அவியுணவு இல்லை; மாறக அவனே படைத்துத் தந்த தற்பலியுணவு மட்டுமே உண்டு என்க. அதை நாம் உண்டு, இறைவனின் அருட்சக்தியையும், தன்னுள் அடக்கி வைக்க முடியாத அன்பின் ஆற்றலையும், 'என்பும் உரியர் பிறர்க்கு' என்ற அடிப்படையில் வாழ்வதற்கேற்ற முனைப்பும், இறைவனே காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி நடக்க மனஉறுதியும், தேவைப்பட்டால் தன்னைப் பிறர்க்கெனப் பலியாக்கும் அளவுக்கு அன்பின் தீவிரமும் - நிறைவாகப் பெற்றுக் கொள்ள இயலும்.

'என்பும் உரியர் பிறர்க்கு' என்று வாழ முனைவது தியாக வாழ்வின் சிகரம். அத்தகைய வாழ்வுக்குத் துணைசெய்வது, ஐந்தவித்தான் தியாகத்தினுல் ஏற்பட்ட அவியுணவு! தியாக உணவு-தியாக வாழ்வை உண்டாக்க வல்லது. சாதாரண உணவு சாதாரண உயிரை வளர்க்கின்றதன்றே?

முடிவு :

1. அவித்தான் என்ற சொல்லுக்கு 'அன்பர்களின் ஐம்புல அவாக்களை அடக்குவித்தவனாகிய கடவுள்' என்று உரையாளர் கூறும் கருத்து அத்துணை பொருத்தமற்றது என்பது மேற்கூறியவற்றினின்று புலப்படும். கடவுள் ஐந்தவித்தானாகி, தன்னை அவியுணவாக்கி, அன்பர்க்கு அதை உண்ணுமாறு அளித்து, அவ் அவியுணவின் ஆற்றலால் ஐம்புல அவாக்களை அடக்கமட்டுமன்று, அவற்றின் வகை தெரிந்து, காத்து, அன்பு நெறியில் செலுத்தி, அவற்றைப் பதனுறுவித்து, அன்பு மேலோங்கத் துணை செய்தான் என்ற பொருளில் கொண்டால் பொருத்தமாவது காண்க.

2. 'ஐந்தவித்தான்' என்ற பெயரை இயேசு கிறிஸ்துவுக்குப் பொருத்தமென்பதைச் சிலர் ஏற்கத் தயங்கக்கூடும். ஆனால் உயர்திரு திருவாசகமணி அவர்கள் கூறியுள்ளதை நினைவுறுத்தவிரும்புகிறேன்.

## ஆதிபகவன் துணையும் உண்டு.

ஐந்தவித்தான் தந்த அவியுணவின் வாயிலாக மக்கள் அன்பு என்னும் மிக உயர்பண்பை அடைய முடியும். ஐம்புலன்கள் செல்லும் சுயநல வழியில் சென்றுவிடாமல், தியாக வழியில் செல்லவேண்டிய அருள்சக்தி கிடைக்கும் என்று மேலே கூறினோம். இந்த "ஆதிபகவன்" என்ற முறையிலும், நாம் அன்பை அடைந்துவாழ இறைவன் துணைபுரிகிறான் என்று இனி விளக்குவோம்.

ஆதிபகவன் என்ற பெயருக்குள்ள பொருளை முதற்கண் ஆய்வோம்.

'பகம்' என்ற சொல்லுக்கு அவாவின்மை, ஈச்சுரத் தன்மை, செல்வம், ஞானம், கீர்த்தி, வீரியம் 'என்னும் அறுகுணம் - என அகாரதிகள் கூறும்.

இதிலிருந்து தோன்றும் 'பகவன்' என்ற சொல்லுக்கு மேற்கூறிய அருங்குணங்கள் கொண்டவன் என்றே பொருள் இருத்தல் வேண்டும்.

ஈசன் என்ற சொல்லுக்கு, அரசன், ஆள்பவன், எப்பொருட்கும் இறைவன், கடவுள் என்ற பொருள் இருப்பதால், ஈச்சுரத்தன்மை என்பது இறைவன தன்மை என்றே பொருள்படும்.

இதுபற்றி மணிவிளக்க உரை கூறுவது :

"பகம் என்பதற்குக் கண் என்றும், செல்வம் என்றும், சமயவாணர் பொருள் கூறி, 'பகவன் எல்லாவற்றையும் காண்பவன்', 'எண்வகைச் செல்வங்கள் அல்லது குண நிறைவுகளையுடையவன்' என்ற பொருள்களில் அது கடவுளைச் சுட்டும் என்றும் உரைப்பர். ஆனால் 'பகவன்' என்ற சொல்லுக்கு இப்பொருள் முற்றிலும் பொருந்தாது. ஏனெனில் இறைவனைக் குறிக்கும் இடங்கள் எதனிலும் வள்ளுவர் இச்சொல்லை வழங்கவில்லை. அதே சமயம் இறைவாழ்த்து அதிகாரத்தில் குறட்பாதோறும் வழங்கும் இறைவன் என்ற சொல்லுக்கு அல்லது அதற்குரிய அடைமொழிக்கு முன்னால் இச்சொல் வழங்கப்பட்டுள்ளதனால் அது இறைவனுடன் தொடர்பற்ற சொல்லாகவும் இருக்க முடியாது.

இதனையொட்டி ஞா. தேவநேயன் கூறுவது :

"பகவன் என்னும் சொல் முற்காலத்தில் கடவுளையே குறித்தது. ஆயின், பிற்காலத்தார் அதைப்

பிரமன், விட்டுணு, உருத்திரன் என்னும் ஆரிய மத முத்திருமேனியர்க்கும் அருகன் புத்தன் என்னும் பிறமதத் தலைவருக்கும் வழங்கிவிட்டமையால் கடவுளைக் குறிக்க முதல் என்னும் அடை கொடுக்க வேண்டியதாயிற்று. கடவுள என்னும் சொல்லும் இங்ஙனமே இழிபடைந்து விட்டமையால் முதற் கடவுள் என்றும் முழுமுதற் கடவுள் என்றும் அடைகொடுத்துச் சொல்லும் வழக்கை நோக்குக. பகம் (ஆறு) என்னும் சொல்லை மூலமாகக்கொண்டு பகவன் என்பதற்குச் செல்வம், மறம், புகழ், திரு, ஓதி, (ஞானம்), அவாவின்மை என்னும் அருங் குணங்களையுடையவன் என்று பொருள் கூறுவது பொருந்தாது."

"பகவன் என்பது பகுத்துக்காப்பவன் அல்லது எல்லா உயிர்கட்கும் படியளப்பவன் (dispenser) என்று பொருள் படும் தென்சொல். பகு - பகவு - பகவன்."

புலவர் குழந்தை -

ஆதிபகவன் - மக்களுக்கெல்லாம் முதல்வன் ஆவான்...பகவு - பகுதி. "என்பகவு அன்ன (889) எனக்காண்க. ஆதிபகவு-முதன்மைப்பகுதி: முதன்மையானது - குணங்களின் முதன்மைப் பகுதி. அதாவது எல்லாக் குணங்களிலும் முதன்மையான குணம் என்பது பொருள். ஆதிபகவு + அன் = ஆதிபகவன். முதன்மையான குணத்தையே ஆதி பகவன் என ஆண்பாலால் கூறினர். மக்கள் முதன்மையான குணமுடையவராய் வாழ வேண்டும் என்பது கருத்து."

கடவுள் வாழ்த்து என்ற தலைப்புக்கொண்ட இந்த அதிகாரத்தின் முதற்குறளில், கடவுள் இறை

அமைவதும் இயல்பே. பகவன் ஊழி முதல்வன் அல்லது உலககுரு.'' (மணிவிளக்கவுரை காண்க).

இப்பண்புகள் எல்லாம் யாருக்குப் பொருந்தும்?

பலருக்குப் பொருந்துவதாகத் தோன்றலாம். ஆனால் வள்ளுவர் இந்த ஆதிபகவனை மேலும் விளக்குமுகத்தான் அவனை ''ஐந்தவித்தான்'' என்கிறார். ஆகவே, ஆதிபகவனும் ஐந்தவித்தானும் ஒன்றேயென்றாகிறது. ''அவித்தான் என்ற சொல்லை ஆதிபகவனைக் குறித்ததாகக் கொள்ளாமல் கடவுளையே நேரில் குறித்ததாகப் பரிமேலழகரும் பிற உரையாசிரியர்கள் பலரும் கொண்டனர். ஆயினும் இதன் பொருத்தமின்மையை உணர்ந்து பலர் அதனைப் பிறிதின் கிழமைச் சொல்லாக்கி ''அன்பர்களின் ஐம்புல அவாக்களை அடக்குவித்தவனாகிய கடவுள்'' என்று உரை கூறினர்...இது ஒவ்வாத விளக்கம் என்கிறது மணிவிளக்க உரை. 'அடக்குவித்தவன்' என்று இறந்த காலத்தில் கூறுவதற்கு மாறாக என்றும் அடக்குவிப்பவன் என்ற பொருளில் கூறியிருந்தால் 'ஐந்தவிப்பான்!' என்று இருக்க வேண்டுமன்றோ? இது யாரைச் சுட்ட முடியும்? உலககுரு என வந்தவருள் அதே சமயத்தில் ஐந்து அவித்தனாகவும் வந்துள்ளது யார்? 'அவித்தான்' என்ற சொல்லுக்கு மேலே கூறப்பட்ட விளக்கத்தினின்று, இப்பெயர் இயேசுகிறிஸ்துவுக்கு மிகச்சிறப்பாகப் பொருந்துவது காணமுடிகிறது.

இனி: உலககுரு என்ற கருத்தை இந்த முதல் அதிகாரத்தில் குறட்பாக்கள் எல்லாமே குறிப்பிடுகின்றன. இரண்டாம் குறளிலேயே அக்குரு ''வாலறிவன்'' என்றழைக்கப்படுகிறார். 'குரு' என்றால் அவன் பாதத்தமர்ந்து கற்றல் வேண்டும். அங்ஙனம் கற்றதன் பயனாக அவன் நற்றாளைத் தொழவும்

வேண்டும்; இல்லையேல் கற்றும் பயனில்லை என்கிருர்.

மற்றக் குரவர்கள் எல்லோரும் சீடர்க்குப் புறம்பே அமர்ந்து பாடம் சொல்லித்தர வேண்டும். இந்தக் குரவரோ சீடர்களுடைய இதயக் கமலத்திலேயே அமர்ந்து கற்பிக்கக் கூடியவர். இறைவனுகிய குரு ஒருவர் மட்டுமே சீடர் உள்ளத்தமர்ந்து அறிவு புகட்டமுடியும். தனக்குவமையில்லாதான் இந்தக்குரு. அவர் ஒருவரே மனிதனின் மனக்கவலை மாற்ற முடியும். அவனடி சேர்ந்தார்க்கு "யாண்டும் இடும்பை இல."

"குரு" என்ற இந்நிலையை வலியுறுத்தவே ஆசிரியர் பலமுறை அவனது தாள்களைப் பற்றிக் கூறுகிருர். இருமுறை அவனது தாள் தொழுதல், வணங்குதல் குறித்துப் பேசுகின்ருர். ஐந்து முறை அவனடி சேர்தல் பற்றிப் பேசுகிருர்.

ஆகவே உலக முதல் குருவாகக் காட்சியளிக்கும் இந்த ஆதிபகவன் உலகில் தோன்றியுள்ள குருபெருமான்களுள் யாராயிருக்கக்கூடும்? . . . உலக குருவாக இருக்க வேண்டுமானுல் இறைவன் தனக்கு இயல்பாயுள்ள அருவ நிலையுடன் உலகில் காட்சியளிக்க இயலாது ஏனெனில் ஐம்புலன்

---

* இங்ஙனம் தோன்றியதாகக் கூறப்படும் இயேசுவைக் குறிப்பிட்டு அவர்தம் சீடர் எழுதிவைத்துள்ளது: "கடவுள் மனு உருவானுர். நம்மிடையே குடிகொண்டார், ஆதிமுதல் இருந்தவரை உங்களுக்கு அறிவிக்கிருேம். நாங்கள் கேட்டதை, கண்ணுல் பார்த்ததை உங்களுக்கு அறிவிக்கிருேம். அவரை நாங்கள் நோக்கினேம், கையால் தொட்டுணர்ந்தோம்........நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கின்ருேம்........நாங்கள் பார்த்ததை, நாங்கள் கேட்டதை உங்களுக்குத் தெரிவிக்கிருேம்".

களுடன் உடலுடன் - கூடிய நிலையில் மட்டுமே உருவநிலை ஏற்படக்கூடும். உலக மக்களுக்கு குருவாகி, அவர்கள் அக்குருவின் பாதத்தமர்ந்து பாடம் கேட்க வேண்டுமென்றால், அவர்கள் கண்டு, கேட்டு அறிவு பெறக்கூடிய நிலையில் தோன்ற வேண்டும். மனிதன் காணக்கூடிய கேட்கக்கூடிய * வகையில் உருவெடுத்து வருதல் வேண்டும். மனிதனுக்குப் பயன்படவேண்டுமானால் மனித உருவில் வருவதுதான் சிறந்தது. ஆகவே, பொறிவாயில்கள் ஐந்துள்ள உடலை மனித உடலை - தரித்து உலகுக்கு வருகிறான் இறைவன். 'ஐந்து' என்னும் போது ஆறாவது அறிவாகக் கருதப்படும் பகுத்தறிவும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

"'தமிழர் பொறி' புலன் இரண்டையும் ஐந்து என்றே கொண்டனர். ஆனால் புலன் என்ற சொல்லை 'அறிவு' என்ற பொருளில் கொண்டபோது, ஆறறிவாகவே கொண்டனர். ஆகவே, ஐந்தவித்தான் என்ற முறையிலும், ஆதிபகவன் என்ற முறையிலும், இறைவன் எல்லா உயிர்கட்கும் சிறப்பாக மனிதர்களுக்கும் படியளப்பவனாகி, அதாவது சிறந்த அருட்கொடைகளை வழங்குபவனாகி, அன்புஎன்னும் முதன்மையான, குணமுடையவராய் மக்களை வாழவைத்தவனானான் என்க

இக்கொடைகளுள் தலைசிறந்து ஐந்தவித்தான் தயாரித்துத தந்த அறியுணவாகும். இவ்வுணவைத் தக்கமுறையில் பயன்படுத்துபவர்கள் சிறிது சிறிதாக "முதன்மையான குணமுள்ளவர்களாகி, தம்முள் அடைத்து வைக்க முடியாத அன்பு கொண்டவர்களாவார்கள் : 'என்பும் உரியர் பிறர்க்கு' என வாழ்வார்கள் என்க.

அவர் இயற்றியுள்ள ஆங்கில மொழிபெயர்ப்பில் 282 - 283 பக்கங்களில் அவர் கூறுவது :

"The Word 'ஐந்தவித்தான்' is intrigoing and rather jarring, not to say in affropriate, if literally interpresed as some commentators and translators have done with reference to God the almighty.

"If applied to Mahavia or Lord Buddha or to Jesus Christ its literal meaning, namely one who has scorched or scorched one's five senses, might hold good. But used with reference to God the supreme, it will be absend and blasphemous".

'ஐந்தவித்தான்' என்னும் பெயர் மகாவீரர், புத்தர் அல்லது இயேசுவுக்குப் பொருந்தலாம் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

ஈண்டு "அவிக்தல்", 'ஆதிபகவன்' என்னும் சொற்களுக்குப் பொருந்தக்கூடிய பொருளை முன்னிட்டு இம்மூவருள் யாருக்குச்சிறப்பாகப் பொருந்துகிறது என வாசகரே முடிவுசெய்து கொள்ளட்டும். தன் ஐந்தினை - உடலை அவித்து, அவியுணவாகத் தந்தது மகா வீரரா? புத்தரா? இயேசு கிறிஸ்துவா?......

## பிற்சேர்க்கை - 4

### "நாண் என்னும் நன்மை"

சான்றாண்மையுடன் விளங்க வேண்டியவர்கள் இறைவனுக்குச் சான்று கூறவேண்டியவர்கள் அவன் தந்த நண்பென்னும் நாடாச்சிறப்பைப் பேணாது அவனது பொருள்சேர் புகழைப் புரியாது குற்றம் புரிந்து, ஆன்மீக வீழ்ச்சியடைய நேருங்கால் நாண் என்னும் சால்புத்தூண் அவர்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும்.

ஒருவன் தவறு செய்வதிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் முதலில் அவனுக்குத் தான் செய்

வது தவறு என்ற உணர்வு வரவேண்டும். தவறு என்று உணரும் உணர்வே நாணத்தை உண்டாக்குகிறது. நாணம் அவனைப் பழைய வழியிலிருந்து திருப்பிப் புதுவழியாம் பொய்தீர் ஒழுக்க நெறிக்குக் கொண்டு வருகிறது.

இவ்வாறு மனிதனின் போக்கு வேறு திசைக்கு அதாவது இறைவன்பால் திரும்பலே 'மனந்திரும்பல்' என அழைக்கப்படுகிறது. இதைக் கூறுவோர் யார்? . . . .

நாணுடைமையும் மனந்திரும்பலும் 'ஒரே நிகழ்ச்சியே. தன்னிடத்திலுள்ள தவருன செயல்களுக்காக நாணமடையும் ஒருவனுடைய மனம், பின்பு வேறு திசையில் திரும்பிச் செயல்படுகிறது.

இங்ஙனம் மனம்திரும்புதலேயே தம் கொள்கைகளுக்கெல்லாம் அடிப்படையாக வைத்துப்போதித்தது யார்? "கடவுள் அரசு நெருங்கிவிட்டது, மனந்திரும்பி, இந்நற்செய்தியை நம்புங்கள்" (மார்க். 1, 15) என்று தம் பணியைத் தொடங்குகிருர் ஐந்தவித்தாஞகிய கிறிஸ்து.

"மனந்திரும்பும்படி பாவிகளை அழைக்கவே வந்துள்ளேன்" (லூக். 5, 32). என்கிருர்.

"மனந்திருமபாவிடில் நீங்கள் எல்லோரும் அழிவீர்கள்" [லூக். 13, 5] என்றும் அவர் மக்களுக்கு அறிவுறுத்திஞர். "மனந்திரும்பும் ஒரு பாவியைக் குறித்து வானகத்தில் மிகுந்த மகிழ்ச்சியுண்டாகும்". [லூக். 15, 7] என்றும் கூறிஞர்.

அவருடைய சீடர்களும் அதையே வலியுறுத்துகின்றனர். "உங்கள் பாவங்கள் ஒழியும்பொருட்டு

மனம் மாறிக் கடவுளிடம் திரும்புங்கள்'' [அப். பணி : 3, 19]

"மக்கள் அறியாமையில் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்ததைக் கடவுள் பொருட்படுத்தாமல், இப்போது உலகெங்கும் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என மனிதர்களுக்குக கட்டளையிடுகிறார்'' [அப். பணி : 17, 30] எனச் சீடர்கள் போதிக்கின்றனர்கள்.

சான்ருண்மையுடையவர் தாம் செய்யும் குற்றங்களுக்காக மட்டுமன்று. பிறர் செய்த பிழைகளுக்காகவும் நாணுதல் வேண்டும். நாணுதல் மட்டுமன்று. பிறர் செய்யும் குற்றங்களுக்காக மன்னிப்புக் கோருதலும் வேண்டும்.

"விண்ணுலகில் உள்ள எம் தந்தாய்,...... எங்கள் குற்றங்களை மன்னியும்" என வேண்டுங்கள் எனப்போதித்தவர் யார்? தனக்காக மட்டுமன்று, பிறர்க்காகவும் இங்ஙனம் வேண்டுதல் செய்வது எக்கூட்டத்தினர்க்குச் சிறப்பாகப் பொருந்தும்? அவனவன் தனக்கு ஏற்ற வகையில் கடவுளிடம் செல்ல முயலுதல் வேண்டும் என்ற கொள்கைக்கு முற்றிலும் மாருன இக்கொள்கையை அழுத்தமாக அறிவுறுத்தியவர் யார்?

இதனைத் தம் கொள்கைகளுள் தூண்போலக் கொண்டிருப்பவர்கள் யார்?... இதெல்லாம் விவிலியத்துடன் சிறப்பாகப் பொருந்துவது காண்கிறோம்.

# பிற்சேர்க்கை — 5

## ஒப்புரவு: இறைவன் தாளாற்றித் தந்த பொருள்.

"புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல" ரிய இறைவனின் நட்புறவை, பேரின்பத்தில் பங்கு பெறும் பெரும்பேற்றை, மனிதன் இழந்த பின்னர் அதை அவனுக்கு மீண்டும்தர இயலுமா? தரவல்ல வன் யார்?

தர இயலும், அதைத்தரவல்லவன் அதைத்தர முன்வந்த இறைவனாகத்தான் இருக்கமுடியும் என்பது தெளிவு. ஆகவே இந்த "ஒப்புரவு" என்னும் நன்மையைத் "தாளாற்றித்தந்தவன்" இறைவனே யாகும். அன்பும், அது ஈன் குழவியும் இறுதியில் இறைவனையே முதலாகக் கொண்டுள்ளன அன்றோ ஆகவே முதலில் தருபவனும், இழந்தபின் மீண்டும் தருபவனும் ஒன்றாகவே இருத்தல் வேண்டுமல்லவா?

ஆனால் வேறுபாடு ஒன்றுண்டு. முதலில் தர விரும்பியபோது இலவசமாகத் தர விரும்பினான். இழந்த பின்னர் மீண்டும் தர விரும்பியபோது "தாளாற்றித்தரத் திருவுளங் கொண்டான். பின் வரும் விவிலியக் கருத்துக்கள் இங்ஙனம் தாளாற்றித தந்தவன் இறைவன், தந்த பொருள் ஒப்புரவாகும் அருட்செல்வம் என்பதை விளக்கும். 'தாளாற்றி' என்றது 'பெருமுயற்சி செய்து' என்று மட்டுமன்று, துன்பம் எல்லாம் ஏற்று, இறுதியில் உயிர்ப்பலியாகி என்று பொருள்படும். 'தாளாற்று முறையில் அவன் செய்ததென்ன?

அளவில்லா மாண்புடைய அவன் மனிதனின் எளிய நிலைக்குத் தாழ்ந்து மனுவுருவெடுக்கிறான். இங்ஙனம் தாழ்வதால், தீவினையால் தாழ்ந்துவிட்ட மனித இனம் உயர முடிந்தது.

## 1. இறைவன் தாழ்ந்த நிலை.

"கடவுள் தன்மையில் விளங்கிய அவர்
கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை
விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டிய
தொன்றாகக் கருதவில்லை.
ஆனால், தம்மையே வெறுமையாக்கி,
அடிமையின் தன்மை பூண்டு
மனிதருக்கு ஒப்பானார்
மனித உருவில் தோன்றி,
தம்மைத் தாழ்த்திச்
சாவை ஏற்கும் அளவுக்கு,
அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அள
வுக்குக் கீழ்ப்படிபவரானார்." (பிலிப். 2:6-8)

## 2. மனிதன் மீண்டும் உயர்ந்த நிலை:

"தமக்கேயுரிய மாட்சிமையாலும், ஆற்றலாலும் நம்மை அழைத்த இறைவனை அறியச்செய்யும் அறிவின் வாயிலாக, இறைப்பற்றுடன் கூடிய வாழ்வை வளர்க்கும் அனைத்தையும் அவரது தெய்வீக வல்லமை நமக்கு வழங்கியுள்ளது. இறைவன் வாக்களித்த கொடைகள் அந்த மாட்சிமையாலும் ஆற்றலாலும் நமக்கு வழங்கப்பட்டன. மதிப்பும் மாண்பும் மிக்க இக்கொடைகளால் நீங்கள், இச்சையின் விளைவாக இவ்வுலகிலுள்ள அழிவுக்குத் தப்பி, இறை இயல்பில் பங்குபெறக்கூடும்
(2 இரா: 1: 3-4)

"அவர் தமது பெயரிலே விசுவாசம் வைத்துத் தம்மைஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கடவுளின் மக்களாகும் உரிமை அளித்தார். இவர்கள் இரத்தத்தினாலோ, உடல் ஆசையினாலோ ஆண்மகன் கொள்ளும் விருப்பத்தினாலோ பிறவாமல், கடவுளாலேயே பிறந்தவர்கள்.

"வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சிமையை நாங்கள் கண்டோம். தந்தையிடமிருந்து அவர் பெற்ற இம் மாட்சிமை ஒரே பேறான அவருக்கு ஏற்ற மாட்சிமையே. ஆகவே அவர் அருளும், உண்மையும் நிறைந்து விளங்கினார்.

"அவருடைய நிறைவிலிருந்து நாம் அனைவரும் அருளுக்குமேல் அருளைப் பெற்றுள்ளோம். . . . அருளும் உண்மையும் இயேசு கிறிஸ்து வழியாக வந்தன. யாரும் கடவுளை என்றுமே கண்டதில்லை; தந்தையின் அணைப்பிலுள்ள ஒரே பேறானவர்தான் அவரை வெளிப்படுத்தினார்."

(அரு: 1:12-14; 16-18

## "தந்த பொருள்"

3. எல்லா மனிதரும் இறைவனின் பொருள்சேர் புகழ் புரியாமல், தீவினை புரிந்தனர். ஆகவே, எல்லாருமே கடவுளது மாட்சிமையின் சாயலின்றி உள்ளனர். ஆனால் இறைவனின் அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்களாக்கப்படுகிறார்கள். கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய விடுதலைச் செயலின் வாயிலாய் அங்ஙனம் ஆக்கப்படுகிறார்கள். அவரைக் கடவுள் மனிதர் செய்த தீவினைகளுக்கெல்லாம் கழுவாயாகுமாறு இரத்தப் பலியாக்கினார்.

(உரோ: 3:23-25 கருத்து)

4. தம்முடைய திருவருட் செயல்முறையைக் காட்ட விரும்பிய கடவுள், கடந்த காலத்தில் பொறுமையாயிருந்து, மனிதர் செய்த தீவினைகளைத் தண்டிக்காமல் விட்டார். இக்காலத்திலோ (அதாவது கடவுள் மனு உருவாகி உலகுக்கு வந்த பின்னர்) அத்திருவருட்செயல் முறையைக் காட்ட விரும்பி, அவர் அருள் மிக்கவராகவும், இயேசுவை ஏற்றுக்கொள்பவர் எல்லாரும் தமக்கு ஏற்புடையவராகுமாறு அருள் அளிப்பவராகவும் விளங்கினார்.

(உரோ: 3:25-26 கருத்து)

5 இறைவனுக்கு ஏற்புடையவர்களான நாம், இயேசு கிறிஸ்து வாயிலாகக் கடவுளுடன் சமாதானம் கொண்டிருக்கிறோம் நாம் இப்போது அடைந்திருக்கும் அருள்நிலைப்பேறு இயேசு கிறிஸ்துவை ஏற்றதால் நமக்குக் கிடைத்துள்ளது.

(உரோ: 5:1.2 கருத்து)

6. இறைவனின் அருட்சக்தியாம் பரிசுத்த ஆவியால் நம் உள்ளங்களில் கடவுளின் அன்பு பெருவெள்ளமெனப் பொழியப்பட்டுள்ளது. அதாவது கடவுள்மீது ஆழ்ந்த அன்பு கொள்ளுமாறு நமக்கு அருள் தரப்பட்டுள்ளது. இதனால் நாம் எதற்கும் அஞ்சோம். துன்பங்கள் ஏற்பதில் கூடப் பெருமைப்படுகிறோம்.

(உரோ: 5:3-5 கருத்து)

7. நல்லவன் ஒருவனுக்காக யாரேனும் தம் உயிரைக் கொடுக்கலாம். ஆனால் நாம் பாவிகளாயிருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பை எண்பிக்கிறார். ஆகையால் நாம் இப்போது அவரது இரத்தப்பலியால் இறைவனுக்கு ஏற்புடையவர்களாகி, இறுதித் தண்டனைக்குத்

(இன்று உலகுக்கு) தப்பி மீட்புப்பெறுவோம் என உறுதியாய் நம்பலாம். (உரோ:5·7–9 கருத்து) இன்று உலகம் புகாதவாறு, அருள் சேர்ந்த நெஞ்சினைப்பெறத்தந்த அருட்செல்வமே அவன் தாளாற்றித் தந்த பொருள் என்ற கருத்து சிறக்கிறது.

3 கடவுளுடைய நட்புறவை இழந்தவர்களாயிருந்தும் இறைவடிவினரான இயேசு ஏற்ற தற்பலியால் நாம் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டோம். இனி நாம் அவர் தரும் (அருள்) உயிரால் வாழ்வு பெறுவோம் என உறுதியாய் நம்பலாமன்றோ? நம்மை ஒப்புரவாக்கிய இயேசு வாயிலாய் நாம் கடவுளில் பெருமை கொள்ளலாமன்றோ?

(உரோ: 5:10-11 கருத்து)

கடவுளை நினைத்து, அவரது மாட்சியை நினைத்து, அல்லது அன்பையும் அருளையும் எண்ணிப பெருமை கொள்வது எத்துணைச் செல்வம்! அதுவே இறைவன் தாளாற்றித் தந்த பொருள்!

9. ஆதியில் நிகழ்ந்த ஒரு மனிதனின் குற்றம் எல்லா மனிதர்க்கும் அருளற்ற நிலையைக் கொணர்ந்தது. அந்த ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் [தீவினை என்னும் செருக்கால்) மானிடர் எல்லாருமே அருள் அற்றவராயினர். அதனால் உலகில் அருள் அற்ற இருள் ஆட்சி ஓங்கியது. இனிப் பூப்பரோ மானிடர்? என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் கடவுளின் அருளும் இயேசு கிறிஸ்து என்னும ஒருவரின் செயலால் கிடைக்கும் அருட்கொடையும் எல்லாமனிதர்க்கும் எவ்வளவோ மிகுதியாய்ப் பெருகியுள்ளன! அந்த அருட்பெருக்கையும், இறைவனுக்கு ஏற்புடையவராகும் வரத்தையும் அடைந்து கொண்டவர்கள் அதே இயேசு வழியாக வாழ்வு பெறுவார்கள் என உறுதியாய் நம்ப

லாமன்றோ? இங்ஙனம் இயேசு என்னும் ஒரே ஒருவ ரின் ஏற்புடைய செயல் [தற்பலியாக்கிய செயல்] எல்லா மனிதர்க்கும் வாழ்வளிக்கும் விடுதலையாய் மலர்ந்தது! இனி மானிடர் அருள் பெற்றுப் பூப்பர் எனுற நிலை தோன்றியது.

ஆதிமனிதனின் செயலால் தீவினை பெருகிற்று. பாவம் பெருகிய இடத்தில் அருள் அணைகடந்து பெருக்கெடுத்தது. முடிவில்லா வாழ்வுக்காக இறை யருள மனிதரை இறைவனுக்கு ஏற்புடையவராக்கி ஆட்சி செய்கிறது. (உரோ: 5:15-21 கருத்து)

10. நாம் கடவுளின் செல்வத்திற்கு உரிமையாளர் கள், (உரோ- 8:17) "கடவுளின் மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய உள்ளியல்பின் சாயலாகவும்" (எபிரே: 1:3) ஞானத்தின் வடிவாக வும், ஒளியினின்று ஒளியாகவும் பிறந்த "சாயலுக் கேற்ற உருவைத் தாங்கும்படி கடவுள் நம்மை அழைத்தார். அழைப்பை ஏற்றவர்களைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கினர். அவர்களுக்குத் தம் மாட்சிமையில் பங்கு தந்தார். [உரோ: 8-30 கருத்து.] கடவுளின் அருட்செல்வம் எத்துணை மிகுதியானது! அவரதுஞானமும் அறிவும்எத்துணை ஆழமானவை! அவருடைய திட்டங்கள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை! [உரோ. 11,33]

11. கடவுள் இரக்கப் பெருக்கமுள்ளவர், அன்பு மிக்கவர். நம் குற்றங்களால் நாம் 'செத்தாருள் வைக்கப்பட்டி"ருந்த போதிலும், அவர் நம்மீது கொண்ட பேரன்பினுல், "ஒத்தது அறிந்து உயிர் வாழ்ப"வர்களாகுமாறு செய்தார். நாம் மீட்புப் பெற்றது அருளாலேயே-கிறிஸ்துவோடு நாம் உயிர்

பெற்றெழவும், விண்ணுலகில் அவரோடு அமரவும் அவர் வழி செய்தார்.

இறைவன் நம்மீது காட்டிய பரிவினுலே தம் அளவற்ற அருள் வளத்தை வரப்போகும் காலங்களில் காண்பிப்பதற்காகவ்வ இவையெல்லாம் செய்தார்... இது நம்மால் ஆவதன்று, கடவுளின் நன்கொடையே. இது மனித செயல்களால் ஆனதன்று நாம் இறைவனின் கைவேலையே.

(எபே. 2:4-10 கருத்து)

12. கடவுளோடு மனித இனம் அனைத்தையும் ஒப்புரவாக்கும்படி புதியதொரு மனுக்குலத்தைப் படைத்தார். ஆகவே இனி நாம் கடவுளுக்கு அன்னியரல்லர், வெளிநாட்டாருமல்லர். இறைமக்கள் சமுதாயத்தின் உறுப்பினர். கடவுளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

எபே. 2:19 கருத்து)

[யாரையும் அன்னியராகக் கருதாமல், 'விருந்தினரையும்'' அன்பால் அணைக்க வேண்டும் என்னும் கருத்து இவ்வசனத்தில் மறைந்துள்ளது கவனிக்க]

## வேளாண்மை செய்தற்பொருட்டே

இயேசுவின் கண்களுக்கு இவ்வுலகமெல்லாம் அறுவடைக்குத் தயாராகியுள்ள பெரும் வேளாண்மைப் புலம் போலக் காட்சியளித்தது. அதாவது அவரவர் செய்த தீவினைகளாலும் அவற்றின் விளைவாகிய துன்பங்களாலும் சலிப்பும் களைப்பும் அடைந்தவராய், ஆறுதலும் இன்பமும் எங்கேனும் உண்டோ என்று ஆவலுடன் ஏங்கிநிற்கும் உள்ளங்களைக் கொண்ட மானிடர் தொகை பெருகிய வண்

ணமாக இருந்தது. இறைவனிடமிருந்து வரக்கூடிய ஆறுதல் செய்தியை ஏற்றுக்கொள்ளக்கூடிய பக்குவ நிலையில் மானிடர் இருந்தனர். அறுப்பதற்குத் தயாராக உள்ள விளைநிலம்போல அவர்கள் காட்சியளித்தனர்! இறைவனின் களஞ்சியத்தில் எளிதில் சேர்க்கக்கூடிய தானியம்போல அவர்கள் இருந்தனர்! அறுப்பதற்கு ஆட்கள் செல்ல வேண்டியது ஒன்றுதான் இனி நடைபெற வேண்டிய வேலை ஆகவேதான் கூறுகிறார் இயேசு தம் சீடருக்கு; தம்மைப் பின்பற்றும் அனைவருக்குமே 'அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு; ஆதலால் தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள் என்கிறார்; (மத். 9:38). இந்தத் தெய்வீக "வேளாண்மை செய்தற் பொருட்டு" தாம் நேரடியாக அனுப்பும் அப்போஸ்தலர் என்னும் ஆட்கள் மட்டுமன்றித் தம்மை ஏற்ற அனைவருமே முனைந்து செயலாற்ற வேண்டும் என்கிறார்.

"நீங்கள் உலகிற் சென்று பலன் தரும்படியாக (அதாவது மேற்சொன்ன பொருளில் நல்ல அறுவடை செய்யும்படியாக) உங்களை ஏற்படுத்தினேன்," (அரு. 15,16] என்றார்.

"என் தந்தை என்னை அனுப்பினதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன். பரிசுத்த ஆவியைப் [வான் சக்தியை) பெற்றுக்கொள்ளுங்கள். யாருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும். யாருடைய பாவங்களை மன்னியாது விடுவீர்களோ அவை மன்னிப்பின்றி விடப்படும்." [அரு. 20:22-23) என்று தம் சீடரை அனுப்பும் நேரத்தில், அவர்கள் செய்யவேண்டிய "வேளாண்மைப்" பணி என்பதில் அடங்கியுள்ளது என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

இங்ஙனம் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் [அதாவது அவரால் அனுப்பப்பட்ட பணியாளர்கள்), தாம் தாளாற்றித்தந்த பொருளாகிய அருட்செல்வத்தைத் தக்கார்க்கு [அதாவது விரும்பி ஏற்றுக் கொள்பவர்க்கு) வேளாண்மை செய்யும் பொருட்டு [தாராளமாக வழங்கும் பொருட்டு] ஏற்படுத்தப்பட்டவர்கள். அவர்களுக்குத்தாம் வழங்கிய உன்னத வரங்களைக் குறிப்பிட்டு, "இலவசமாய்ப் பெற்றுக் கொண்டீர்கள். இலவசமாய்க் கொடுங்கள்" என்றார் இயேசு. அவர்களும் அதை உணர்ந்து பணியாற்றினார்கள். அவர்கள் சொல்வது; "உங்களுக்கு இறைவனின் அருட்செல்வத்தைக் கொணர்ந்த பணியாளர்கள் நாங்கள். இறைவன் அருளியவாறு எங்களுள் ஒவ்வொருவரும பணியாற்றுகின்றனர். ஒருவன் நடுகிறான், ஒருவன் நீர் பாய்ச்சுகிறான். விளையச் செய்பவரோ கடவுள் தாமே. ஆதலின் நடுகிறவனுக்கும் பெருமையில்லை, நீர் பாய்ச்சுகிறவனுக்கும் பெருமையில்லை. விளையச் செய்யும் கடவுளுக்கே பெருமை எல்லாம் . . நாங்கள் கடவுளோடு உழைப்பவர்கள். நீங்கள் கடவுள் பண்படுத்தும் பண்ணை. கடவுள் எழுப்பும் கட்டிடம்." உரோ. 3 : 5-9 கருத்து).

"ஆகவே, எங்களைக் கிறிஸ்துவின் பணியாளர், கடவுளுடைய மறைபொருள்களின் கண்காணிப்பாளர் என்றே எவரும் கருத வேண்டும். (உரோ. 4 : 1)

அப்போஸ்தலப் பணியாளருள் தலைசிறந்தவரெனக் கருதப்படும் சின்னப்பர் தன்னைக்குறித்துக் கூறுவது: "நான் நற்செய்தியின் பணியாளன் ஆக்கப்பட்டேன். கிறிஸ்துவின் அளவிடமுடியாத செல்வங்களை எல்லாருக்கும் அறிவிக்க எனக்கு அருள் அளிக்கப்பட்டது (எபே 3, 8-9).

"தம் கொடைகளை அருளிச் சிலரை அப்போஸ் தலர்களாகவும், சிலரை இறைவாக்கினர்களாக வும் வேறு சிலரை நற்செய்தியின் தூதர்களாகவும் ஆயர்களாகவும், போதகர்களாகவும், ... திருப்பணிக் குரிய வேலையை முன்னிட்டு இறைமக்களைப் பக்கு வப்படுத்த அக்கொடைகளை அளித்தார்." (எபே. 4 : 11-12)

"பழையன கழிந்து போயின: இதோ புதி யன தோன்றியுள்ளன. (அதாவது பழைய தீய வாழ்க்கை ஒழியயட்டும். புதிய அருள் வாழ்க்கை தொடங்கட்டும்) இவை எல்லாம் கடவுள் செயல் தான். அவரே கிறிஸ்து வழியாக நம்மைத் தம் மோடு ஒப்புரவாக்கி, ஒப்புரவு செய்தல் திருப் பணியை எங்களுக்குக் கொடுத்தார். உள்ள படியே கடவுள் உலகினரின் குற்றங்களுக்குரிய கடனைக் கணிக்காமல் அவர்களைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கினுர். அவரே அந்த ஒப் புரவுச் செய்தியை எங்களிடம் ஒப்படைத்தார். ஆகவே நாங்கள் கிறிஸ்துவின் தூதர்களாகச் செய லாற்றுகிருேம். நாங்கள் பேசுவது கடவுளே அறிவுறுத்துவது போலாகும்: ஆகவே கிறிஸ்து வின் பெயரால் மன்ருடுகிருேம், கடவுளோடு ஒப்புர வாகுங்கள்." (2 கொரி. 5:18-29 கருத்து).

"வேளாண்மை" செய்தலாகிய பணி எந்த அளவுக்கு இருக்க வேண்டும், இருக்க முடியும் என் பதை அறிய உவமைகளால் அறிவுறுத்துகிருர் வள்ளுவர்.

உலகெலாம் விரும்பித் தேடுகின்ற பேரறிவாள ஞகிய * இறைவன் ஈட்டுத்தந்த ஒப்புரவு என்னும்

* இறைவனை 'வாலறிவன்' என்று கடவுள் வாழ்த்தில் ஆசிரியர் அழைப்பது கவனிக்க.

செல்வம் பெருமையால் நிரப்பப்பெற்ற ஊருணியென உள்ளது. இறைவனின் அளவிடமுடியா அருள்கடலென உள்ளது. அத்திருவின் பயனைத் துய்க்க விருப்புகின்றவர்கள் அவ்வருட்கடலினிடம் வந்து பருக முயலுதல் வேண்டும். பெறலரிய செல்வமான ஒப்புரவின் பெருமையையும் அதனால் விளையும் நன்மையையும் உணராமல் சிற்றறிவாளராகிய மனிதர்கள் துய்க்க விரும்பும் உலகச்செல்வத்தையே மதித்து மயங்கி நிற்கும் மக்கள் இத்தகைய முயற்சியில் தாமாகவே ஈடுபடுவார்களா? பெரும்பாலும் இல்லை என்பது கண்கூடு. ஒப்புரவினை அடையும் வழி தெரியாமல் தவிப்பவர்களும் இருத்தல் கூடும்? இந்தச் சூழ்நிலையில்தான் வேளாண்மை செய்யும் ஒப்புரவாளர் - ஒப்புரவுப் பணியாளர் தேவைப் படுகின்றனர்.

இவர்கள் உண்மையாகவே பிறர்க்கு நன்மை செய்யும் சிறப்புடையவர்களாய் நயன் உடையவராய்த் திகழ்தல் வேண்டும். ஒப்புரவு என்னும் செல்வம் இத்தகைய "நயன் உடையான் கண் படில் "அது" பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்று" என்கிறார். அஃதாவது, ஊர் நடுவே பழுத்த பழங்கள் நிரம்பப் பெற்றதுபோல், வேண்டுவோர் வந்து எளிதாகப் பறித்துண்டு இன்புறலாம் என்றவாறு. ஒப்புரவாளர் - ஒப்புரவு என்னும் செல்வத்தைத் தக்கார்க்கு வேளாண்மை செய்ய வேண்டுமானால் இக்கனி மரம்போல் நன்மை நிரம்பியவராய் – நீர் நிரம்பி வழியும் குடம்போன்று - பிறர்க்கு விளங்க வேண்டும். அப்போது ஒப்புரவுச் செல்வம் தானாகவே பிறர்மீது "வழிந்து" நன்மை புரியும்.

ஆனால், இதனினும் மேலானபடி, "வேளாண்மை" செய்யும் இப்பணியில்! தன்னிடமிருந்து வழிந்தோடும் ஒப்புரவுச் செல்வத்தைப்

பிறர் பெற்றுக்கொள்ள வேண்டுமானுல், அவர்கள் அதன் அருமையை உணர்ந்து பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும். ஆனால் இங்ஙனம் முன்வராமல் தடுக்கும் ஆன்மநோய் ஒன்று பலர்க்கு உண்டு. பொருள் அல்லாதவைப் பொருள் என்று உணர்ந்து மருளடைந்து, அப்பொருள்மீது மிகமிக ஆர்வம் கொண்டு ஒழுகுவோர் இவர். ஆன்மீக மருளாகும் இந்த நோய் நீங்கும் வழி எது? ஒப்புரவாளர்களே அந்த நோய் தீர்க்கும் மருந்தாக மாறவேண்டும். அந்த அளவுக்குத் தம்மைத் தியாகம் செய்ய வேண்டும். கனி கொடுக்கும் மரம்போல் மட்டுமன்று தானே மருந்தாய் விடும் மருந்து மரம் போல் என்கிருர் வள்ளுவர். இதற்கு நயன் உடைமையும் போதாது: பெருந்தகைமை வேண்டும் என்கிருர்.

இத்தகைய ''பெருந்தகையான் கண்படின்'' ஒப்புரவாகிய செல்வம் தன் முழுப்பயனையும் தருவதாகும். அந்நிலையில் எந்தச் சூழ்நிலைக்கும் பின் வாங்காமல் தம் கடனைச் செய்வார்கள் ஒப்புரவாளர். அங்ஙனம் தம்மைத் தியாகம் செய்வதைத் தம் கடன் என்று அருட்காட்சியால் அறிந்தவர்களே ஒப்புரவுப்பணி நன்கு செய்ய ஏற்றவர்கள் என்க.

இங்ஙனம் தம் கடன் செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அதுவே ஒப்புரவாளர்க்கு ஏற்படக் கூடிய மிக இழிந்த நிலை, வறுமை நிலை! பெருந்தகைமை உடையவர்கள் மட்டுமன்று, நயன் உடையார்கூட இந்த ''வறுமை'' நிலையால் பெரிதும் வருந்துவர் என்க. பெருந்தகைமையுடையவரோ வெனில், தாம் செய்யும் ஒப்புரவுப் பணியால், யாதேனும் துன்பம் தமக்கு ஏற்படுவதாயிருந்தாலும், தம்மை விற்றேனும் அதாவது தம்மை முழு

தும் பலியாக்கியேனும், தம் பணியைச் செய்வர்.'' அஃதொருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து !! எனக்கருதிச் செயலாற்றுவர்.

இக்கருத்துக்களைச் சிந்திக்கும்போது, ஐந்த வித்தான் ''தக்கார்க்குத் தாளாண்மை செய்யும் பொருட்டு'' அனுப்பிய சீடர், ஒப்புரவு செய்யும் பணியில் படவேண்டியிருந்த துன்பங்களை விவரிக்கும் விவிலியப் பகுதி நினைவுக்கு வருகிறது.

''உள்ளபடியே அப்போஸ்தலர்களாகிய ''அனுப்பப்பட்ட'' எங்களைக் கடவுள் அனைவரிலும் கடையராக்கினர் என நினைக்கிறேன். எல்லாரும் காணக் கொலைக் களத்திற்கு இழுத்துச் செல்லப் பட்டவர்கள்போல் ஆனோம் ... கிறிஸ்துவுக்காக நாங்கள் மடையர்கள் ... வலுவற்றவர்கள் ... மதிப்பற்றவர்கள் இந்நாள்வரை நாங்கள் பசியா யிருக்கிறோம் ... அடிபடுகிறோம். தங்க இடமின்றி இருக்கிறோம். கையால் பாடுபட்டு உழைக்கிறோம்; பிறர் எங்களைப் பழித்துரைக்கும்போது நாங்கள் ஆசி கூறுகிறோம்: துன்புறுத்தும்போது பொறுத்துக் கொள்ளுகிறோம். தூற்றும்போது உறவாடுகிறோம். இவ்வுலகத்தின் குப்பைபோலானோம். அனைவரி லும் கழிவடையானோம்.'' (1 கொரி. 4)

## பிற்சேர்க்கை - 6

### ''தீவினை என்னும் செருக்கு''

### விவிலிய விளக்கம்.

இறைவன் தான்படைத்தமனிதனுக்குக் காட்ட விரும்பிய நட்பினை மனிதன் ஆர்வமுடன் ஏற்க

வில்லை. அன்பினும் ஆர்வத்தால் இறைவன் மனிதனுடன் நட்புறவு கொள்ள விரும்பினான். அதை மனிதன் அதே ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்ள வில்லை.

இங்ஙனம் ஏற்காமற் போனது செருக்கினாலேயே என்கிறது விவிலியம். விளக்குவோம்.

தனக்குரிய பேரானந்தப் பெருஞ்செல்வத்தில் மனித இனத்தார்க்குப் பங்குதர இறைவன் விரும்பினான். ஆனால் அதை உடனே தந்துவிடவில்லை. இறைவனது பேரானந்தத்தில் பங்கு பெறுவது எத்துணைச் சிறப்பு, எத்துணை விரும்பத்தக்கது என்பதை மனிதன் உணர்ந்த பின்னரே அதை அவனுக்குத் தர விரும்பினான் இறைவன்.

பெறுபவர் எம்முயற்சியும் செய்யாமல், பெரியதொரு நன்மையை யாரும் அவர்மீது திணிப்பதில்லை. அறிந்து விழைந்து செயல்புரிவது பகுத்தறிவுள்ள மக்கள் பண்பாதலால் மனுதனும் இறைவன் தனக்கு அளிக்க விரும்பிய பேரின்பத்தை மதித்து விரும்பிப் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்ட வேண்டுமென எதிர் பாாத்ததில் வியப்பில்லை. இதனால்தான் இறைவன் மனித இனத்தின் ஆதித் தந்தைக்குப் பரிசோதனைக் கட்டளை ஒன்று தந்தார் என்கிறது விவிலியம். அவன் தர விரும்பிய பேரின்பத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அது மிகச் சிறியதொரு பரிசோதனையே. பல இன்பங்களை நுகரக்கூடிய வாய்ப்பினையளித்து, ஒரே ஒரு சிறு இன்பத்தை மட்டும் நுகரலாகாது* என்றான் இறை

* பலமரங்களின் இனிய கனிகளிடையே,ஒரேஒரு மரத்தின் கனியை மட்டும் தொடலாகாது என்று கூறப்பட்டதன் உட்கருத்து இதுவே, எபிரேய மரபுப்படி கூறப்பட்டதொரு உருவகம் இது என்க.

தான் தர விரும்பிய பேரின்பத்தை அடைய இச் சிறு 'முயற்சி'யேனும் தேவைப்பட்டது. எம்முயற்சியும் இன்றி அடையும் பெரியதொரு நன்மையை யாரும் அதிகம் மதிக்கமாட்டார்கள். ஏதோ ஒரு சிறு முயற்சியேனும் செய்து அடைந்தால் அதற்கு மதிப்புண்டு அன்றோ? ஆகவேதான் இறைவன் இத்தகையதொரு சிறு பரிசோதனைக்கு மனித இனத்தின் ஆதிப்பெற்றோரை உட்படுத்தினான்.

ஆனால், பரிசோதனையில் தோல்வியடைந்தனர். அஃதாவது, இறைவன் தர விரும்பிய பேரின்பத்தையும், அதைத்தர விரும்பியதில் அவன் மனிதன்பால் வெளிப்படுத்திய 'நண்பென்னும் நாடாச் சிறப்பையும்' தக்க முறையில் மதித்து வரவேற்கவில்லை. ஏன், புறக்கணித்தார்கள்! இறைவனுடன் நட்புறவு கொள்வதும் அவன் தர விரும்பிய பேரின்பத்தை ஏற்பதும் ஈடில்லாப் பெறும்பேறு எனக் கருதாமல் தாம் விரும்பிய சிறு இன்பத்தையே மதித்து, அதையே நுகர முனைந்தது எத்துணை இழுக்கு, நன்மையே வடிவினனான இறைவனுக்கு! இத்தகைய இழுக்கினைத் தன்னைப் படைத்த இறைவனுக்கே கொணர்ந்தது எத்துணைச் செருக்கு! எத்துணைத் தீவினை இது! ஆகவே, "தீவினை என்னும் செருக்கு" என்பது முற்றிலும் பொருந்தும்.

கிறிஸ்துவ மறைநூல் வரலாற்றினை ஆய்ந்தால் இந்தச் 'செருக்கு' தெளிவாகப் புலப்படுகிறது. உருவகமாகச் சொல்லப்படுவதன் உட்கருத்தைப் பின்வருமாறு கூறலாம்:

**இறைவன் :** உனக்கு நான் தந்துள்ள எல்லா இன்பங்களையும் நீ நுகரலாம். ஒன்றே ஒன்றை மட்டும் நுகராதே.

[இவ்வின்ப வனத்திலுள்ள எல்லா மரக்கனிகளையும் நீ உண்ணலாம். ஒன்றன் கனி மட்டும் உண்ணாதே!]

பேய்: (ஆதித்தாயிடம் வந்து) ''எல்லா இன்பங்களையும் நுகரலாம், ஒன்றை மட்டும் நுகரலாகாது என்று ஏன் கடவுள் தடுத்தார்?''

பெண்: அதை நுகர்ந்தால் சாவு என்ற தண்டனைக்கு ஆளாவோம் எனக் கடவுள் எச்சரித்திருக்கிறார்.

பேய்: சாகவே மாட்டீர்கள், அதை நுகர்ந்ததும் உங்கள் கண்கள் திறக்கப்படும், தெய்வங்கள் போல் ஆவீர்கள். இது கடவுளுக்குத் தெரியும்!

இதை நம்பி விட்டாள் பெண்; கணவனையும் நம்பச் செய்து விட்டாள்.

'இது கடவுளுக்குத் தெரியும்' என்று பேய் சொன்னபோது, "கடவுள் வஞ்சகமாக இப்படிச் செய்திருக்கிறார். நீங்கள் தெய்வங்களைப் போல் ஆகாதபடி இப்படி உங்களை ஏமாற்றியிருக்கிறார்" என்ற பொருளில் பேசியது பேய். இது இறைவனுக்கு எத்துணை இழுக்கு! தம் பேரின்பத்தில் பங்குதர விரும்பித் தன் நட்புறவை அளிக்க முன்வந்த பரம்பொருளான இறைவனுக்கு இது எத்துணை அவமானம்!

மேலும் . இறைவனது நட்புறவைப் புறக்கணித்தே, இறைவனைப் போல் ஆகவேண்டும் என்று விரும்பியது எத்துணை அகந்தை!

இதுவே தீவினை - 'தீவினையென்னும் செருக்கு' என்கிறது விவிலியம்.

ஆதிப்பெற்ஞேர் 'தெய்வங்களைப் போல் ஆக வேண்டும்' என்று விரும்பித் தேடியது 'பொருள்' அற்ற புகழேயன்ருே? கடவுளுக்குப் புறம்பே உண்மையான 'புகழ்' கிடைக்குமென அவர்கள் கருதியது ''பொருளல்லவற்றவைப் பொருள் என்று உணரும் மருளால் தான். மருள் நீங்கிய மாசறு காட்சி அவர்களுக்கு இல்லாது போயிற்று. ஆகவே தான் ''இறைவன் பொருள்சேர் புகழை'' அவர்கள் புரியாமல் போய்விட்டனர். அஃதாவது தங்களுக்கு இறைவன் தர விரும்பிய பேரின்பத்தின் மாண்பை உணர்ந்து போற்ருது போய் விட்டனர் அவனது நட்புறவினுல் வரும் மெய்ப்புகழை இழந்தனர். இதுவே அத்தீவினை எனப்படுவது. இதுவே இருள் சேர் இருவினை'களுள் ஒன்று எனக.

இந்த ஆதித்தீவினை தலைமுறை தலைமுறையாக எல்லா மனிதர்களையும் தாக்கி வருகிறது என்கிறது விவிலியம். ஆதிப்பெற்ருேர் செய்த தீவினையால் ஏற்பட்ட ஓர் அவல நிலையே—இது அதாவது இறைவன் தர விரும்பிய ''நண்பென்னும் நாடாச் சிறப்பை'' இழந்து விட்ட நிலை. இந்த ''நண்பென்னும் நாடாச்சிறப்பினுல்' மனித இனம் எல்லாம்மிக உயர்ந்ததொரு நிலையிலிருக்கும் பேற்றைப் பெற இருந்தது. அஃதாவது முறைகெட்ட இச்சையின்மை, தெளிவான கூர்அறிவு, உடற்றும் பசி'' யின்மை, சலிப்புறச்செய்யும் உழைப்பற்ற பிழைப்பு, நோய்களில்லா அரிய நிலை முதலிய பேறுகள் பெற இருந்தது" சாவு என்னும் கொடிய நிகழ்ச்சியும் இல்லாத மேலான நிலை இருந்தது. இவையெல்லாம் இறைவன் தந்த அரிய பேறுகளாயிருந்தன.

ஒவ்வொரு தலைமுறைக்கும் அந்தப் பேறுகள் எல்லாம் உரியனவாக வேண்டும் என்று என்று

ஏற்பாடு செய்தான் இறைவன். தலைமுறைகளைத் தொடங்கும் ஆதிப்பெற்றோர் அந்தச் சிறப்பை ஏற்று இறைவனின் நட்பில் திளைத்தால்தான் அந்த நட்புநிலை-அருள் நிலை-அவர்களிடமிருந்து பிறக்கும் எல்லாத் தலைமுறையினருக்கும் உரியதாகும் என்றருளினார் இறைவன். ஆதிப்பெற்றோரே அதை இழந்து விட்டனர். ஆகவே, தலைமுறைகள் எல்லாம் இழந்து விட்டன. இந்த இழந்த நிலையே ஆதி தீவினை எனப்படுகிறது. இதன் விளைவாக மனிதனுடைய உள்ளத்தில் தோன்றியது மருள் நிலை: அல்லது அருளற்ற இருள் நிலை. இதுவே, 'இருள்சேர் இருவினை'களுள் ஒன்றெனப் டுலப் படுகிறது.

# பிற்சேர்க்கை — 7

## கண்ணோட்டம்

ஈண்டு முதற்கண் குறிக்கப்படுவது மானிடர் மீது இறைவன் காட்டும் அருட்பார்வை: இரண்டாவதாக அந்த அருட்பார்வையால் இரக்கம் பெற்று வாழ்வடைந்த மக்கள் ஒருவர்க்கொருவர் காட்டவேண்டிய அருட்பார்வை.

தீவினை என்னும் செருக்கினின்று மனிதன் விடுதலையடைவது இறைவனது அருட்பார்வையால் மட்டுமே என்ற கருத்து எக்கூட்டத்தினரது? அவனவன் செய்த தீவினைக்கு அவனவனே பட்டுத் தீர்க்கவேண்டும். ஒரு பிறப்பில் முடியாவிடில் பல பிறப்புக்களில் தீர்க்க வேண்டும் என்ற கோட்பாட்டுக்கு மாறாக, ஒருவன் எத்துணை அக்கிரமங்கள் செய்தவனாயினும், இப்பிறப்பிலேயே அவன் அவற்

றிலிருந்து விடுதலை பெற முடியும்-இறைவனோடு ஒப்புரவாகி அவன் தந்த நண்பென்னும் நாடாச் சிறப்பை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும்-பல பிறப்புகள் தேவையில்லை, இறைவனது அருட் பார்வைக்கு அளவில்லா ஆற்றலுண்டு, ஒரு நொடிப்பொழுதில் தீவினையாளரைப் புதுப்பிறப்பாக ஆக்கிவிட முடியும்—என்னும் இக்கருத்துக்கள் எல்லாம் யாருடையவை?

அவனவன்செய்த தீவினைகளுக்கு அவனவனே தான் கழுவாய் புரிய முடியும் என்ற கொள்கைக்கு மாறாக, மானிடர் அனைவர் செய்த தீவினைகளுக்கெல்லாம் தாமே கழுவாயாக இறைவனே மனித உருவில் வந்து தன்னைப் பலியாக்கினான் என்று கூறுவோர் எக்கூட்டத்தார்?

"அன்பும் அருளும் உள்ளவர் ஆண்டவர். சினம் கொள்ளத் தாமதிப்பவர். அருள் உள்ளம் படைத்தவர் . . . தம் படைப்புகள் அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுபவர்." (சங். 144)

"உங்கள் பாவங்கள் செந்தூரம்போல் இருந்தாலும் உறைபனிபோல் வெண்மையாகும்." (இசை.1). (அஃதாவது எவ்வளவுதான் கொடியவையாயிருந்தாலும் அவற்றை நீக்கி உங்களைப் புனிதப்படுத்துவேன் என்றவாறு).

இவைபோன்ற இறைவாக்குகள் விவிலியத்தில் ஏராளமாக உள்ளன. இறைவன் முன்னிலையில் ஒருவன் தன்னைத் தாழ்த்தி, நொறுங்கிய உள்ளத்துடன், இறைவனது நண்பென்னும்நாடாச்சிறப்பை புறக்கணித்ததற்காக மனம் வருந்தி, அவன்பால் திரும்பி வந்தால் இறைவனது அருட்பார்வை ஐய

மின்றிக் கிடைக்கும். கிடைக்குமாறு ஐந்தவித்தான் மனிதர்க்கு உதவியுள்ளான்,

இறைவனது அருட்பார்வையால் தன் குற்றங்களுக்கு மன்னிப்புப் பெற்ற பின்னர் மனிதரும் ஒருவருக்கொருவர் இரக்கங் காட்டுதல் அவசியம். இக்கருத்து எந்த மதத்தில் அழுத்தமாகக் கூறப்படுகிறது ?

ஐந்தவித்தானுல் உண்டான கண்ணேட்டத்தைப் பெற்ற சான்ருேர், மற்றவர்களிடத்தும் கண்ணேட்டத்துடன் விளங்க வேண்டுவது இன்றியமையாததாகும். மற்றவர்களை மன்னிக்கும் மனம் அற்றவனுக்கு மன்னிப்பு இல்லை. இதைத் திட்டமாக உணர்த்துவதற்காகத்தான் இயேசு பெருமான் தம்முடைய சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்த வேண்டுதலில்...

எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை நாங்கள் மன்னித்துள்ளதுபோல, எங்கள் குற்றங்களை மன்னித்தருளும்." (மத். 6:12)

எனக் கற்றுக்கொடுத்ததுடன் அதற்கு விளக்கமும் கொடுத்தார்.

"மனிதருடைய குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களாகில், உங்கள் வானகத் தந்தை உங்களையும் மன்னிப்பார். மனிதரை நீங்கள் மன்னியாவிடில், உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்" (மத். 6:14-15)

இரக்கமுடையோர் பேறுபெற்ருேர்,
ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.
(மத். 5:7)

பத்தாயிரம் பொற்காசு கடன்பட்ட ஒருவன், தன் அரசனால் மன்னிக்கப்பட்டுத் திரும்புங்கால், தன்னிடம் நூறு வெள்ளிக்காசு கடன்பட்ட உடன் ஊழியனுக்கு மன்னிக்க மறுத்த காரணத்தால், தான் பெற்ற மன்னிப்பை இழந்து துன்பத்திற் காளானான் (மத். 19:23-35)

உளபோல் முகத்தவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

"அளவினால் கண்ணோட்டம்' என்பதனுள் கண்ணோட்டம் காட்டவேண்டிய அளவு குறிககப் பட்டது. எத்தனை முறை மன்னிப்பது என்ற அளவு விளக்கப்படுகிறது.

"பின்னர் சீடர் இயேசுவை அணுகி," ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு எதிராகக் குற்றம் செய்துவந்தால், நான் அவனை எத்தனை முறை மன்னிப்பது? ஏழு முறை வரைக்குமா "? என்று கேட்டார். அதற்கு இயேசு கூறியதாவது: 'ஏழு முறை என்றன்று, எழுபது முறை ஏழு முறை என உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார். (மத். 18:21-22) அதாவது எப்போதுமே!

மரத்திற்கும் மனிதனுக்கும் ஒரு தொடர்புண்டு. மரத்தை வளர்ப்பது மண். அம்மரத்தை அழிப்பதுவும் அம்மண்ணே. மண்ணில் நிலைபெறும் மரம் தன் கடமையைச் செவ்வனே ஆற்றும்வரை அம்மண் அம்மரத்தை வளர்க்கிறது, என்று அம்மரம் தன் கடமையைச்செய்யவில்லையோ அன்றேஅம்மரத்தை அம்மண் அழிக்கிறது. மரத்தின் கடமை என்ன? மரத்தின் ஒவ்வொரு பகுதியும் மண்ணிலிருந்து தான் பெற்ற சாரமாம் சக்தியை அடுத்த பகுதிக்குக் கடத்த வேண்டும். தான் பெற்றதைக்

கொடுக்காதவிடத்து அம்மரம் அழியத் தலைப் படுகிறது. வளர்த்த மண்ணே அதை அழித்து விடுகிறது.

இவ்வாறே மனிதர்களும் தாங்கள் பெற்ற மன்னிப்பாம் கண்ணோட்டத்தை மற்றவர்களிடமும் காட்டக் கடமைப்பட்டவர்கள். மற்றவர்களுக்கு இவர்கள் மன்னியாவிடத்து, இவர்களும் மன் னிப்பைப் பெருது அழிவர். (மத். 18:23-35)

ஆகவே மண்ணோடு இயைந்த மரத்தைப் போன்று, கண்ணோடு இயைந்து கண்ணோடாதவர் அழிவர்.

மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்து கண்ணோடா தவர்.

கண்ணை அழகுபடுத்துவதும், கண்ணையுடைய மனிதனைச் சிறப்பிப்பதும், கண்ணோட்டம். கண் ணோட்டத்துடன் ஒத்தியங்க வேண்டிய அக்கண், கண்ணையுடைய மனிதன் தன்னிலே மாறியவிடத்து, அம்மனிதன் அழிவதற்குக்காரணமாயும் அமைந்து விடுகிறது.

கண்ணோட்டமும் மண்ணைப்போன்று ஒரு பொது விதியையுடையது என்பதே வள்ளுவர் கொள்கை. ஆகையால்தான் "கண்ணோட்டத் துள்ளதுலகியல்" என்ருர். நமது மேன்மைக்கு அடிப்படைக் காரணமாய் இருப்பதுவும் இம் மன்னிப்பே. இறைவன் நமக்கு ஈட்டித் தந்துள்ள அருட்செல்வமாம் மன்னிப்பில் நாம் பங்குபெற, மற்றவர் தவற்றை நாம் மன்னிக்க ஆயத்தமா யிருக்க வேண்டும்.

ஆகவே, இவ்விருவித கண்ணோட்டம் இன்றேல் சான்ருண்மை பழுதுறும்.

இதைச் சீடரும் நன்குணர்ந்து கொண்டனர் என்பதில் ஐயமில்லை: அவர் தங்கள் எழுத்துக்களில் குறிப்பிட்டுள்ள சில சான்றுகளைப் பார்ப்போம் சீடருள் ஒருவரான அருளப்பர் எழுதி வைத்தது.

"ஆதிமுதல் இருந்ததை, நாங்கள் கேட்டதைக் கண்ணால் பார்த்ததை உங்களுக்கு அறிவிக்கிறோம். அதை நாங்கள் நோக்கினோம், கையால் தொட்டுணர்ந்தோம். நாங்கள் அறிவிப்பது உயிரின் வார்த்தையைப் பற்றியது. அந்த உயிர் வெளிப்படுத்தப் பட்டது. அதனை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கின்றோம். தந்தையோடு இருந்து நமக்கு வெளிப்படுத்தப்பட்ட முடிவில்லா வாழ்வுபற்றிய செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம். (1 அரு. 1, 1-3)

2. சீடருள் வேறொருவர், இராயப்பர், "இந்த இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகள் (அப். பணி 1:32) என்று பல்லாயிர மக்கள் முன்னிலையில் கூறினார்.

3. "கடவுள் இயேசுவோடு இருந்தால்" அலகை துன்புறுத்திய அனைவரையும் குணமாக்கி எங்கும் அவர் நன்மை செய்துகொண்டே சென்றார், இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததே. அவர் யூதேயா நாட்டிலும், இயெருசலேமிலும் செய்த அனைத்திற்கும் நாங்கள் சாட்சிகள். அவரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்று போட்டனர். ஆனால், கடவுள் அவரை மூன்றும் நாள் உயிர்ப்பித்தார், உயிர்த்தவரைக் கடவுள் அனைவருக்கும் வெளிப்படுத்தாமல், தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட சாட்சிகளுக்கே வெளிப்படுத்தினார். இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தபின் அவரோடு உண

வருந்திய நாங்களே சாட்சிகள். வாழ்வோரையும், இறந்தோரையும் நடுத்தீர்க்கக் கடவுளால் ஏற்படுத்தப் பட்டவர் அவரே என்பதை மக்களுக்கு அறிவிக்கவும், சாட்சியம் கூறவும் கடவுள் எங்களுக்குப்பணித்தார்.(அப்.பணி:10:38,42 கருத்து).

4. "சாவுக்குரிய குற்றம் எதுவும் காணுதிருந்தும் அவரைத் (இயேசுவை) தொலேக்குமாறு பிலாத்துவைக் கேட்டனர். அவரைக் குறித்து எழுதப்பட்டவை அனைத்தும் நிறைவேறிய பின்னர் அவரைக் கழுமரத்திலிருந்து இறக்கி, கல்லறையில் வைத்தனர் கடவுளோ அவரை இறந்தோரிடமிருந்து எழுப்பினுர் அவரும் கலிலேயாவிலிருந்து தம்முடன் இயெருசலேம்வந்திருந்தவர்களுக்குப்பல நாட்கள் தோன்றினுர். அவர்கள இப்போது மக்கள் முன் அவருக்குச் சாட்சியாக நிற்கின்றனர்." எனச் சின்னப்பர் என்னும் சீடர் கூறினுர். (அப். பணி. 13, 28-31)

இக்கருத்துடைய மொழிகள் 'புதிய ஏற்பாடு' என்னும் நூலில்பல இடங்களில் காணப்படுகின்றன. ஆகவே தமக்குச் சான்று கூறுவதே தம் சீடர்களுடைய தலேயாய கடன். அதுவே அவர்கள் வாழ்க்கைப் பணி என்பது தெளிவாகிறது.

கிறிஸ்துவுக்குச் சான்று கூறும் பணியே நற்செய்திக்குச் சான்று கூறும் பணியாகவும் விவிலியம் எடுத்துரைக்கிறது. ஏனெனில் கடவுளாகிய ஐந்தவித்தான், உலகில் தோன்றித் தன்னே அஃதாவது தன் உடலே (ஐந்தை) அவித்துப் பலியாக்கி மனித இனத்தை ஆட்கொண்ட செய்தியே நற்செய்தியாகும். மானிடர் முடிவில்லா நீடு வாழ்வு பெறும் பொருட்டுத் தன்னேப் பலியாக்கும் அளவுக்

சான்று பகர்ந்தவர்களுக்குச் சிறப்புப் பெயர், கிரேக்க மொழிச் சொல்லாகும் martyr என்பது. இச்சொல்லின் பொருள் சான்றுனவன், சான்ருேன் என்பதே. இங்ஙனம் கிறிஸ்து மீட்பருக்கும் சான்ருண்மையாகும் வாழ்வுக்கும் சான்று கூறியவர்கள், சான்று கூற வேண்டும் என்பதையே மையக் கோட்பாடாகக் கொண்டவர்கள் வேறு யார். கிறிஸ்துவத்தைக் கடைப்பிடிப்பவர்கள் தவிர"

## பிற்சேர்க்கை - 9

### சான்ருேர் யார்?

'சான்ருேர்' என்ற சொல் இன்று 'நல்லவர், மேலானவர், உயர்ந்தோர்' என்ற பொருளில் ஆளப்படுகிறது. ஆனல் தொடக்கத்தில் அது கொள்கையால் இணைந்த ஒரு குறிப்பிட்ட தொகுதியினரையே குறித்தது.

இதற்குச் சான்றுகள் :

"ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேர் பலர்" (புறம். 191); "பிறர் நோயும் தம் நோய் போற்போற்றி அறனறிதல் சான்றவர்க்கெல்லாம் கடன்" (கலித். 139 : நெய்தல். 22)

"சான்ருேர் சென்ற நெறி" ... (புறம் 134) என்ற மேற்கோள்கள் ஈண்டுப்போதும்.

எத்தகைய கொள்கை அவர்களுக்கு இருந்தது? என்பதை டாக்டர் மா. இராசமாணிக்கனர் விளக்குகிருர் :

"கல்வி கேள்வி ஒழுக்கங்களால் சிறந்த சான்ருேர் போர்களையே விரும்பிய மன்னர்களுக்கும் வீரர்களுக்கும் வாழ்க்கை நிலையாமையை வற்புறுத்தத் தொடங்கினர்; உடல் நிலையற்றது, என்பதைப் பல சான்றுகள் கொண்டு விளக்கி அவர்களை அறவழியில் செலுத்தினர்; துறவு உள்ளம் கொள்ளச் செய்தனர். "நாடும் செல்வமும் மன்னர் உயிர்க்குத் துணை செய்வதில்லை. அவர் செய்யும் அறவினையே மறுமைத் துணையாய் நின்று இன்பம் தரும்" (357) "இவ்வுலகம் ஒரே நாளில் எழுவரைத் தலைவராகக் கொள்ளும் தன்மை உடையது; அஃதாவது எந்த ஆட்சியும் நிலையில்லாதது பற்று விடுதலே இன்பத்தைக் காணும் வழி" (358) என்று அறிவுறுத்தி வந்தனர்.

சான்றுகள் கொண்டு தம் பணியைச் செய்து வந்ததால் 'சான்ருேர்' என்ற பெயர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

ஆனல் இதுமட்டும்தான் "சான்ருேர்" என்ற சொல்லுக்குப் பொருளா? இதைவிட ஆழ்ந்த பொருள் உண்டா? . . . உண்டு எனத் தோன்றுகிறது, பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையாரின் மணிவிளக்க உரையிலிருந்து :

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருேன் எனக்கேட்ட தாய்.

என்னும் குறள் அவ்வாழ்ந்த பொருளுக்கு வழி செய்கிறது அவ்விளக்கவுரைப்படி.

"ஈன்ற என்ற சொல் ஈனேர் (இவ்வுலகத்தோர், உடல் வாழ்வு மட்டுமேயுடைய கீழுலக மக்கள்) என்ற சொல்லுடன் தொடர்புடையது.

ஈன்ற என்பதன் எதிர்ச்சொல்லே ஆன்ற, சான்ற என்பது. இவை ஆன்மீகப் பிறப்புற்ற ஆன்றோர், சான்றோர் என்பதைக் குறிக்கும்.

'ஈன்றாள் பசிகாண்பானாயினும்' என்று தொடங்கும் (656) குறட்பாவில் கூட, 'ஈன்றாள்' என்ற சொல் 'உடலைப் பெற்றவள்' என்ற பொருள் தொனிக்கும்படி வழங்கப்பட்டுள்ளமை காணலாம்.

ஈன்ற பொழுதில் என்பதில் 'பொழுது' என்ற சொல் தாயின் பிள்ளைப் பேற்றின் முதற் பிறப்பைச் சுட்டி, அதன்பின் பிள்ளை சான்றோன் எனக்கேட்ட 'பொழுது' ஆகிய இரண்டாம் பிறப்பைக் குறித்துக் காட்டுகிறது. முன்னது சிறு பிறப்புக்குரிய சிறு பொழுது; பின்னது பெரும் பிறப்புக்குரிய பெரும் பொழுது; முன்னது துன்பத்தை மறக்க வைக்கும் ஆற்றலுள்ள இன்பமாயினும் சிறு திற இன்பம். பின்னதோ இன்பத்தையே பேரின்பமாக்கித் துன்பத்தைக் கூடப் பெரும் பேரின்பமாக்கும் ஆற்றலுடைய இன்பத்துள் இன்பம், தாய் இன்பம், கடவுட் பேரின்பம் ஆகும்". (மணிவிளக்கவுரை II பக். 538)

இந்த 'ஆன்மீகப் பிறப்பு' பற்றி இயேசுகிறிஸ்து அறிவித்தார்.

யூதருள் பரிசேயர் என்ற ஒரு பிரிவு உண்டு. மக்களிடையே செல்வாக்கு மிக்கவர்களாய் விளங்கிய அவர்கள் மறை வல்லுநர்கள் எனக் கருதப்பட்டனர். இவர்களுள் நிக்கோதேமு என்ற பெயர் கொண்ட ஒருவன் இயேசுவைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தான். அவர் ஆற்றிவரும் புதுமைச் செயல்களும் அவன் செவிக்கு எட்டின. புதுமை

களையும் அவைகளைச் செய்கின்றவரையும் குறித்து என்ன நினைப்பதென்றே தோன்றவில்லை நிக்கோதேமுவுக்கு. நேரில் கேட்டு அறிய நினைத்தான்.

கடவுளின் சிறப்பான அருளையும் ஆதரவையும் பெற்றிருந்தாலன்றி எம்மனிதனும் இயேசு செய்து வரும் அரிய புதுமைச் செயல்களைச் செய்ய முடியாது என்று அவன் மனத்தில் பட்டது. இதை முதன் முதலில் இயேசுவிடம் வெளிப்படுத்துகிறான் நிக்கோதேமு. "குருவே, நீர் கடவுளிடமிருந்தே அருளாசிரியராக வந்துள்ளீர் எனத் தெரிகிறது. ஏனெனில் கடவுள் தன்னோடிருந்தாலொழிய எவனும் நீர் செய்யும் இப்புதுமைச் செயல்களைச்செய்ய இயலாது!'' என்று வாயார வாழ்த்தி நின்றான்.

பரிசேயர் வெளியாசாரங்களுக்குப் பேர்போனவர்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிச் செயலாற்றும் வெறும் வெளிவேடத்தில் மனநிறைவுறும் பரிசேயருள் இவனும் ஒருவன் அல்லவா? ஆகவே இங்ஙனம் வெளிப்படையாகப் புகழ்மொழிகளைத் தாராளமாக வழங்கினால் இயேசு மனநிறைவுற்று தன்னை மெச்சிக்கொள்வார் என்று நினைத்தான்போலும். பிறர் புகழ் தேடும் சாதாரண மனிதருள் இயேசுவும் ஒருவராயிருந்திருந்தால் இந்நிறைவான புகழ்மொழியைக் கேட்டதும் மயங்கியிருப்பார். ஆனால் கடவுள் நம் உள்ளங்களை நாடுபவர். நம் உள்ளம் முற்றிலும் அவர்க்கு உரிமையானாலன்றி மனநிறைவு அடைபவரல்லர். ஆதியில் கடவுளின் மக்களாய் அருள் வாழ்வுக்கு அழைக்கப்பட்ட மக்களினம், மீண்டும் அவ்வருளைப் பெற்று, கடவுளின் அன்பு மக்களாய் மாற வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோள்களை உலகுக்கு அறிவிப்பதுடன் அவ்வுயரிய குறிக்கோளுக்காகத் தம் உயிரையே பலியாக்க வந்திருந்த ஐந்தவித்தானு

கிய மீட்பர் வெறும் மொழிகளால் மயங்கிப் போவாரா?

ஆகவே, நிக்கோதேமுவைப் பார்த்து, "நண்பரே, என்னைப் புகழ்ந்து கூறுவதால், உமக்குப் பயன் என்ன? நான் கடவுளிடமிருந்து அருளாசிரியனாக வந்துள்ளேன் என்று நீர் உண்மையாகவே நம்பினால் என் அருட்போதனையின் வழிநடக்க ஏன் முன் வரவில்லை? கடவுள் என்னோடிருப்பதாக நீர் எண்ணினால் என் சொல்லை ஏன் ஏற்கவில்லை? வெறும் புகழ்ச்சி யொழியால் மனநிறைவுறுதீர். உம் உள்ளத்தை ஊடுருவி உம்மை முழுவதுமே மாற்றி, உமக்குப் புது வாழ்வு தரக்கூடிய இறைவனின் அருள் பிறப்பை நாடும். அஃதொன்றே பயன்தரவல்லது அதையுமக்கு அருளவே நான் இங்கு வந்துள்ளேன்!" என்ற கருத்தில் சுருக்கமாக, "ஒருவன் மீளவும் பிறந்தாலொழிய இறைவனின் விண்ணரசைக் காணான், உண்மையிலும் உண்மை இது" என்றார்.

"மீளவும் பிறப்பதா?" என்ன வேடிக்கையான கூற்று, என்று நினைத்தவனாய், "ஒருவன் வயதான பிறகு எப்படிப் பிறக்கக்கூடும்? தன் தாயின் வயிற்றில் மீளவும் நுழைந்து மறுபடியும் பிறப்பானா? என்று திகைப்பும் ஏளனமும் கலந்த வண்ணமாகக் கேட்டான் நிக்கோதேமு!

"ஒருவன் நீராலும் பரிசுத்த ஆவியாலும் மீளவும் பிறவாவிடில் கடவுளுடைய பேராட்சியுள் நுழைய மாட்டான். இதுஉண்மையிலும் உண்மை!" "நீங்கள் அறிந்துள்ளது உடலோடு தொடர்புள்ள பிறப்பு மட்டும்தான். ஆனால் ஆன்மாவோடு தொடர்

புள்ள ஒரு தெய்வீகப் பிறப்பு இருக்கிறது. அஃது எப்படி நிகழ்கிறது என்று அறிய முடியாவிட்டாலும் அஃது உண்டு என்பது மட்டும் உண்மை" என்று கடவுளுடைய அருளால் மனிதனுடைய உள்ளத்தில் நிகழும் மாற்றம், அதன் விளைவாக அவனுக்கு உண்டாகும் புதுப்பிறப்பு, அதனால் அவன் நடத்த வேண்டிய புதிய அருள் வாழ்வு-இக்கருத்துக்களையெல்லாம் அறிவுறுத்தினார்.

ஆகவே, இரண்டாம் பிறப்பாகிய ஆன்மீகப் பிறப்பை அடைந்து, பழைய தீய குணங்களையும் தீவினைகளையும் விடுத்து, புதுவாழ்வினை ஏற்று, அதற்கேற்பப் புதுக்கொள்கைகளைக் கடைப்பிடித்து தாம் பெற்றுக்கொண்ட இப்புதுமை அருள்வாழ்வுக்கும் அதனால் விளையும் இன்பத்துக்கும் சான்று பகர்பவர்களே சான்றோர் என்க.

இந்நூல் முழுவதும் கூறப்பட்ட கருத்துக்களினின்று, "சான்றோர்" என்ற பெயர் யாருக்குச் சிறப்பாகப் பொருந்தக்கூடும் என்பதை இதை வாசிப்பவர்களே முடிவு செய்துகொள்வாராக.

பிறவிச் சுழற்சியோடு தொடர்பில்லாத* இரண்டாவது-ஆன்மீகப்-பிறப்பை மட்டுமே அடைந்து, "சான்று கூறுவதை"யே தங்கள் சிறப்புக் கொள்கையாகக் கொண்டு வாழ வேண்டியவர்கள் யார்? என்பதைச் "சான்றோர்" என்ற பெயரால் மட்டுமே முடிவு செய்ய வேண்டுவதில்லை.

சான்றோருடைய வாழ்வுத்தூண்களாக உள்ள உயர்பண்புகளைப்பற்றி இந்நூலில் கூறியுள்ளவை

* புலவர் மு. தெய்வநாயகம் அவர்கள் எழுதியுள்ள "எழுபிறப்பு" என்ற நூலைக் காண்க.

யெல்லாம் யாருக்குச் சிறப்பாகப் பொருந்தக் கூடும்?...நீங்களே கூறுங்கள்.

இறுதியாக, இயேசு கிறிஸ்துவின் அடியார்களுள் ஒருவரான புனித தோமையார் வாழ்ந்து உயிர் நீத்த தொண்டை நாடு சான்றோருடன் விசேடத்தொடர்புகொண்டதாக உள்ளவரலாற்றுக் குறிப்புகளும் கவனித்தற்பாலன.*

வருணசிந்தாமணி (ஆரியவேதம் பக். 12-13) "தொண்டைநாடு சான்றோரால் நிறையப்பெற்ற தெனக் கூறுகிறது. அதே வருணசிந்தாமணியில் பின்வரும் குறிப்பும் உள்ளது.

"இந்துதேச வேளாளருக்கும் அதற்குப் புறம்பாயுள்ள ஈழ நாட்டு வேளாளருக்கும் அநேகவகையில் ஆசாரங்கள் வேறு பட்டிருக்கும்.

ஈழ நாட்டார் சரித்திரங்களை விசாரிக்குமளவில் இவர்கள் பெரும்பாலும் ஈழகுலச் சான்றோராக இருந்திருக்கலாமெனத் தோன்றுகிறது. சிதம்பர க்ஷேத்திரத்தில் இவர்கள் வசிப்பதற்கு வெகுநாள் வரையிலும் இடங்கொடுக்கப்படாதென ஏற்பாடாகியிருந்தது. பின்னர் இத்தீவாந்தரத்தார் அந்த க்ஷேத்திரத்தில் வந்து தங்குவதற்கு இடமின்மையான், அவ்வீழ நாட்டிலுள்ள ஞானப்பிரகாசரென்பாரொருவர், அநேக திரவியங்களைச் செலவிட்டுத் தங்கள் நாட்டார் வந்து தங்குவதற்குச் சிறிது நிலம் ஒதுக்கித் தரவேண்டுமெனயாசித்தனர். அதின் பேரில் அச்சிதம்பர க்ஷேத்திரத்திலுள்ளவர் தென்

*இவை மு. தெய்வநாயகம் அவர்கள் எழுதிய "சான்றோர் யார்?" என்ற நூலிருந்து எடுக்கப்பட்டன.

பாரிசத்தில் கொஞ்சம் நிலம் ஒதுக்கி விட்டனர். உடனே அவர், "ஞானப்பிரகாசம்" எனத்தமது பெயரால் ஒரு குளமும் அதற்கருகில் ஒரு மடமும் ஏற்படுத்திக் கொண்டனர். ஈழ நாட்டிலிருந்து வருபவர்களெல்லாம் இக்காலமும் அம்மடத்தில் வந்து தங்குகிருர்கள். இவ்வீழத்தார் சான்றேரே யெனச் சிதம்பரத்திலுள்ள ஏனைய சாதியார் அவர்களைத் தீண்டலாகாதென இகழ்ந்து வந்தார்கள்." (வருண சிந்தாமணி-பக்-627-628)

"தக்க தொண்டை நன்ருடு சன்றேருடைத்தென்னும் சொல் திக்கறிய வந்தால் தினகரா - ஒக்குமே"

எனக்கூறுகிறது. தினகர வெண்பா-103

தொண்டை நாடு சான்றேரிருந்தமையால் நன்ருடு ஆயிற்ரும். தொண்டை நாடு சான்றேரால் சிறப்புப் பெற்றமை திக்கறிந்த செய்தியாம்.

அடுத்த குறிப்பை நமக்குக் கொடுப்பது திருக்கழுக்குன்றப் புராணமாகும். திருக்கழுக்குன்றம் தொண்டை நாட்டிலுள்ள ஒரு திருப்பதி. அத்திருப்பதியின் நாட்டுச் சிறப்பைக் கூறும் ஆசிரியர், அந்நாட்டிலுள்ள சோலைகளை வருணித்துப் பாடுகிருர், அச்சோலைகள் தங்களிடம் வருவார்க்கு, எல்லாச் சிறப்பும் சிறிதும் குறைவின்றிச் செய்கின்றனவாம். அவை செய்யும் அச்சிறப்பு எவ்வாறிருக்கிறதென்ருல் தொண்டை நாட்டிலுள்ள பழமையான சான்றேர் குடியில் பிறந்தவர்கள் விருந்தினரை ஊட்டுவதைப்போல இருக்கிறதாம்.

கொய்தள வுகுத்த மெல்லென்
கொழுமலர்க் குப்பை நாப்பண்
பெய்தன கவரிப்பாலும்
பிரசமும் பழத்தின் சேறு

மொய்தரத் தொண்டை நாட்டு
முதுகுடிப் பிறந்த சான்ருேர்
எய்திய விருந்தை யூட்டும்
மில்லெனப் பொலிந்த சோலை
(திருக்கழுக்குன்ற புராணம்-நாட்டுப்படலம்-18)

வள்ளுவர் கூறும் விருந்தெனும் வேள்வி, தொண்டை நாட்டு முதுகுடிப் பிறந்த சான்ருேர் இல்லங்களிலே சிறப்புற நடைபெற்றதாக இச் செய்யுள் சான்று கூறுகிறது, இந்நூல் தொண்டை நாட்டு முதுகுடி, 'சான்ருேர் குடியே' என்றதை ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறது.

மூன்ருவதாக. ஔவையார் தொண்டை நாட்டுச் சான்ருேரின் சிறப்பை, மற்றச் சிறப்புகளுடன் ஒப்பிட்டுக் காட்டுகிருர். இச்சான்ருேரால் தொண்டை நாடே சிறப்படைந்ததாக ஔவையார் கூறுகிருர்.

வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவளநாடு சோறுடைத்து-பூழியர்கோன்
தென்ஞடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்ருெண்டை
நன்ஞடு சான்ருே ருடைத்து.

இச்செய்யுளில் தமிழகத்தின் முப்பெரும் பிரிவுகளைக் கூறி, அவற்றுடன் அமையாது, நான்காவதாகிய தொண்டை நாட்டை விதந்து கூறிச் சிறப்பித்ததுடன், அதற்கு 'நன்ஞடு' என்ற அடைமொழியையும் கொடுத்துள்ளார் ஔவையார். அது நன்ஞடு என்ற சிறப்பையடைவதற்குக் காரணம் சான்ருேரை அது பெற்றிருத்தலே எனவும் கூறுகிருர்.

ஔவையார் கூறும் சான்றோர் இயேசு பெருமானின் அடியவர் அல்லர் எனில், உங்கள் சிந்தனைக்கு:-

1. தமிழகத்தின் முப்பெரும் நாடுகளுக்கும் மூன்று சிறப்புப்பொருட்களை. வேழம், சோறு,முத்து எனக்கூறிய ஔவையார் தொண்டை நாட்டை வலிந்து இழுத்ததுடன், அதற்கு நன்னாடு என்ற அடைமொழியும் கொடுத்து அதன் சிறப்பிற்கு மட்டும் மனிதர்களைக் கூறக் காரணம் என்ன?

2. சான்றோர்-சிறந்தவர்கள் அல்லது உயர்ந்தவர்கள் என்ற பொருளை மட்டுமே உடையதாக இருப்பின், மற்றச் சேர சோழ பாண்டிய நாட்டில் சிறந்தவர்களே கிடையாது என்பது பொருளா?

3. சிறந்தவர்களின் எண்ணிக்கை, தொண்டை நாட்டில் அதிகம் என்றால், மற்ற மூன்று நாடுகளிலும் இழிந்தவர்களே மிக அதிகம் என்பது பொருளா?

# பிற்சேர்க்கை - 10

## வாழ்

இறைவனின் அருளும் மனிதனின் முயற்சியும் எங்ஙனம் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட வேண்டும் என்பதைப் பின்வரும் விவிலியக் கருத்துக்கள் உரைக்கும்.

இயேசு சொன்னது : "நான் உங்களுக்குள் நிலைத்திருக்கிறேன். (அதாவது உங்களுக்குள் என்றும் இருந்து செயலாற்றுகிறேன்). அங்ஙனமே

நீங்களும் என்னுள் நிலைத்திருங்கள். (அதாவது என்னோடு இணைந்து என் அருட்சத்தை என்றும் பெற்றுக்கொள்ளுங்கள்). கிளை செடியோடு ஒட்டியிருந்தாலன்றித் தானாகக் கனிதர முடியாது. அதுபோல் என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, என்னோடு இணைந்திருக்க விழிப்பாயிருங்கள். என்னிடமிருந்து உங்களையும் பிரித்துவிடக்கூடிய எதையும் செய்யாமல் கவனமாயிருங்கள். (அரு. 15,4-5 கருத்து).

2. கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு இறைவன் அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார். (உரோ. 8, 28 கருத்து). நாமும் "கடவுளோடு உழைப்பவர்கள்" (1 கொரி. 3, 9)

3. "நம்முள் செயலாற்றும் வல்லமைக்கேற்றபடி நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மேலாக" நம்முள் செயலாற்றக் கூடியவர் இறைவன். (எபே. 3,20)

4. இறைவன் தரும் 'வலிமை மிக்க ஆற்றலால்' உறுதி பெறுங்கள். அலகையின் வஞ்சகத் தந்திரங்களை எதிர்த்து நிற்கும் வலிமை பெறும்படி கடவுள் தரும் படைக்கலங்களை அணிந்து கொள்ளுங்கள். ...உண்மையை உங்கள் இடைக் கச்சையாகக் கட்டிக்கொண்டு, நீதியை உங்கள் மார்புக் கவசமாக அணிந்து நில்லுங்கள் ... விசுவாசமாகிய அருளைக் கேடயமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். மீட்புச் சக்தியையே தலைச்சீராவாகத் தாங்கி, கடவுளின் வாக்கை வாளாக ஏந்திக் கொள்ளுங்கள், ஜெபத்தில் நிலையாயிருங்கள். சோர்வுறாமல் விழிப்பாயிருங்கள்." (எபே. 6, 10-18)

இறைவனின் வலிமைமிக்க ஆற்றலும், நம் முடைய முயற்சியும் விழிப்பும் செயல்படுவது காண்க,

5. "உங்களுக்குள் சிறந்ததொரு வேலையைத் தொடங்கியவர்" (அதாவது மீட்புப்பெரும் வேலையைத் தொடங்கியவர்) அதைத் தொடர்ந்து செய்து நிறைவு பெறச் செய்வார்." (பிலிப். 1, 6 கருத்து)

6. நீங்கள் எதையும் விரும்பவும், செயலாற்றவும் தம் திருவுளம் நிறைவேற உங்களுக்குள் செயலாற்றுபவர் கடவுளே. செய்வதெல்லாம் முழு முயற்சியுடன் செய்யுங்கள். அப்போதுதான் நெறி கெட்ட இத்தலைமுறையினரிடையே கடவுளின் குழந்தைகளெனத் திகழ்வீர்கள்." (பிலிப். 2, 13-15 கருத்து)

இவைபோன்ற அறிவுரைகள் பல விவிலியத்தில் காணலாம்.

# கிறிஸ்தவ மறை

## அடிப்படைக் கோட்பாடுகள் சுருக்கம்

குறிப்பு:

திருக்குறட் கருத்துகள் விவிலியக் கருத்துக்களோடு பொருந்துவன என்று பிற்சேர்க்கைப் பகுதியில் காட்டப்படுகிறது. விவிலியத்தில் காணும் சில மேற்கோள்கள், சொல்லளவில் மட்டுமே திருக்குறட் கருத்துக்களுடன் பொருந்துவதாகக் காணப்படுகின்றன என்று வாசிப்பவர் ஒருவேளை எண்ணக் கூடும். சொல்லளவில் மட்டுமன்று கருத்தளவிலும்

கிறிஸ்துவ மறை கோட்பாடுகளுடன் பொருந்து கின்றன என்பதைக் காட்டவே இக்கோட்பாட்டுச் சுருக்கம் ஈண்டுத் தரப்படுகிறது.

1. கடவுள் ஒருவரே; தாமாகவே உள்ள இக்கடவுள். அறிவும் அன்புமாக உருவெடுத்துள் ளார். அறிவு அல்லது ஞானம் கடவுளிடமிருந்து பிறக்கின்றது என்பதால் பிறக்கும் அறிவு வடி வானவரை மகன் என்றும், பிறப்பதற்கு ஆதி மூலமாயுள்ளவரைத் தந்தை என்றும் அன்புரு வானவரை ஆவி என்றும் அழைப்பது கிறிஸ்துவ மரபு. ஆவி என்ற சொல்லுக்கு மூச்சு, உயிர்ச்சத்து என்று பொருள். அருட்சக்தி, வான்சக்தி எனினும் பொருந்தும். மனம் மொழி அனைத்தையும் கடந்த கடவுளைப்பற்றி நாம் மனித மொழியில் கிடைக்கும் சொற்களைப் பயன்படுத்தியே பேச வேண்டியிருப்ப தால், மேற்கூறிய தந்தை, மகன், ஆவி என்ற பெயர்களுக்கு நாம் சாதாரணமாக மனித மொழி யில் தரும்பொருளைத் தந்து தவருகவிளங்கிக் கொள் ளக்கூடும். தந்தை மகன் என்றவுடன் தாயைப்பற்றி நினைவு வரலாம்! ஆவி என்றவுடன் நீராவியைப்பற்றி நினைவு வரலாம். ஆனல் மொழிக்குள்ள குறைபாடு களையெல்லாம் நீக்கி, தந்தை மகன் ஆவி என்ற பெயர்களை, தாய் அற்ற (அதாவது பெண்பால் தொடர்பற்ற) தந்தையையும், மகனையும் மனத்தில் நினைக்க வேண்டும் சரியாகச் சொல்ல வேண்டுமா னல், ஆண்பால், பெண்பால்களுக்கப்பாற்பட்ட கடவுள், ஆண்பால் பெண்பால்களுக்கப்பாற்பட்ட தந்தையாகவும் மகனுகவும் சிந்தித்தல் வேண்டும். இவ்வுலகத் தந்தைக்குத் தாயின் உதவி தேவைப் படுகிறது. கடவுளாகிய தந்தைக்கோ எதனுடைய, யாருடைய உதவியும் தேவைப்படாததால் தான் கடவுளை ''எல்லாம் வல்ல தந்தையே'' என்றழைக்

கும் மரபு கிறிஸ்தவர்களிடையே உண்டு, மேலும் கடவுளுடைய அறிவு முழுதும் மகன் என்ற வடிவில் பிறப்பதால். பிறக்கும் மகனை ஒரே பேருன மகன் என்றழைப்பதும் கிறிஸ்துவ மரபு.

உலகில் நாமறிந்த பிறப்பு இத்தகையதன்று தந்தையின் அல்லது தாயின் சத்தும் அறிவும் முழுவதும் உருவெடுத்துப் பிறக்கும் பிறப்பு அன்று! உடலை ஒட்டிய பிறப்பே அது! ஆகவே தான் மக்கள் பலருக்குத் தந்தையாக முடியும்! கடவுளுக்கோ முழு அறிவும் உருவெடுத்துப் பிறப்பதால் ஒரே மகன் மட்டுமே இருத்தல் கூடும்.

இங்ஙனமே, ஆவி என்ற சொல்லுக்கு "அன்பின் பெருமூச்சு" (அதாவது பேரன்பினுல் பிறர்க்கு நன்மை செய்து அவர்களுக்கு இன்பம் தர வேண்டுமென்ற அவா), அல்லது அனைத்துக்கும் சக்தி தந்து இயக்கும் ஆற்றல், அன்பால் உள்ளம் பற்றி எரியும் அனல், முதலிய கருத்துக்களை நினைக்க வேண்டும். இந்தப் பொருளில் அன்புருவானவர், இன்புருவாயும் உள்ளார். இன்பமே வடிவாக வுள்ளார். தந்தையும் மகனும் அன்புரு, இன்புரு அல்லரோ எனின், ஆம் அவர்களும் அவ்வாறு உள்ளனர். ஆனுல், நம் அறிவுக்கெட்டாத இவ்வுண்மையை நாம் வேறு வழியில் அறிந்துகொள்ள இயலாதவர்களாயிருக்கிறேம்.

கடவுள் தாமாய், அனைத்திற்கும் ஆதிமூலமாய் உள்ள சத்தாக உள்ளார். வேறெதனுடைய துணையும் தேவைப்படாத ஆதி அநாதிப் பொருளாக உள்ளார். தாமாக இருப்பதே அவருடைய முதற் பண்பு (மற்றெல்லாம் அவருடைய செயலால்தான் படைக்கப்படும் என்பதால்)

இந்த அநாதிச் சத்தாக உள்ள கடவுளிட மிருந்து, அவர் தம்மையே, அதாவது தமது அள வில்லாத் தன்மையை நினைப்பதால், அறிவதால் அந்த அறிவும் அளவிலா ஒளியென வடிவெடுக் கிறது. அநாதி ஒளியாகிய இறைவனிட மிருந்து ஒளி தோன்றுகிறது-பிறக்கிறது "ஒளியி னின்று ஒளியாக, கடவுளினின்று கடவுளாக"ப் பிறப்பதால், உருவாவதால் தான் மகன் எனப்படு கிருர். அநாதிக் கடவுளின் சந்நுரு என்னலாம். சிந்தனையே-சித்தே உருவாக உள்ளதால்! அறிவை ஒளிக்கு ஒப்பிட்டு அறிவொளி என்கிறேமன்றே!

கடவுளாகிய சத்தும், அதே கடவுளாகிய சித் தும் இரண்டு பொருட்களல்ல: ஒருவரை யொருவர் அறிந்து கொள்பவர் அறிந்துகொள்பவர். தம் முடைய அளவில்லாப் பண்பை, மேன்மையை, அருமையை இருவரும் முழுதுற அறிவதால் தோன்றுவது அளவில்லா அன்பு, இந்த அன்பும் அறிந்து விழையும் ஆளென உருவெடுக்கிறது. இங்ஙனம் ஒருவரையொருவர் முழுதுற அறிந்து, முழுதுற ஒருவர்க்கொருவர் அன்பு செய்கின்றனர்

கடவுள் ஒரே சத்து: ஒரே அறிவு: ஒரே அன்பு வடிவானவர். இந்தச் சத்தும், அறிவும், அன்பும் கடவுளுக்கு மூன்று பண்புகள் மட்டுமன்று. முவ் வுருவினர். ஆகவே தான் கிறிஸ்துவ மறைக்கோட் பாட்டின்படி கடவுள் ஒருவரே எனினும், மூவராய் உள்ளனர் எனப்படுகிறது. கடவுள் தன்மை ஒன்றே யெனினும் மூவராய் உள்ளது!

இதையெல்லாம் நம் அற்ப அறிவைக்கொண்டு எவ்வளவுதான் விளக்க முயன்ருலும் அது மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும்:

பின் வரும் முறையிலும் இவ்வுண்மையை விளக்கலாம்:

அளவற்ற எல்லா நன்மைகளும் கொண்டவர் கடவுள். இந்நன்மைகளையெல்லாம் மூன்றுக்குள் அடக்கிவிடலாம்.

1. தாமாக இருப்பது.
2 அளவிலா அறிவாக இருப்பது.
3. அளவிலா நன்மையாக இருப்பது.

தாமாக இருப்பதால் - யாருடைய, எதனுடைய உதவியும் தேவைப்படாமல் இருப்பது; அதாவது அளவில்லா வல்லமையுடனிருப்பது; அழிவின்றி இருப்பது; மாற்றமின்றி இருப்பது; மாறக்கூடிய, அழியக்கூடிய உடலின்றி இருப்பது; உருவமற்று இருப்பது; தொடக்கமும் முறிவுமில்லாமலிருப்பது; எங்கும் இருப்பது முதலான சிறந்த பண்புகளைக் கொண்டிருக்கிறார் கடவுள்.

அளவற்ற அறிவாக இருப்பதால் - எல்லாம் அறிவது; தாமாகவே அறிவது; தம்மிலேயே அறிவது; ஆதியந்தமின்றி எப்போதும் அறிந்திருப்பது; ஒரே நிலையாய் மறதியின்றி, குறைவின்றி மாற்றமின்றி அறிந்திருப்பது; முயற்சியால் அன்றி இயல்பாகவே அறிந்திருப்பது முதலான பண்புகள் எல்லாம் உள்ளவராயிருக்கிறார்.

அளவற்ற நன்மையாயிருப்பதால் – அளவற்ற இரக்கம், அன்பு முதலான பண்புகளை ஒரு நிலையாக, மாற்றமின்றி, குறைவின்றி, எப்போதும் தாமாகவே, தம்மிலேயே, இயல்பாகவே கொண்டிருக்கிறார்.

பகுத்தறிவுள்ளவர்களுக்கு இம்மூன்று பண்புகளும் அளவுடன் இருக்கின்றன. - அதாவது தாமாக அன்றி கடவுள் படைப்பதால் இருப்பது;

அளவுள்ள அறிவு, முயற்சியுடன் சம்பாதிக்கப்படும் அறிவு, இழக்கக் கூடியது, மறக்கக் கூடியது, பல குறைப்பாடுகளுடன் உள்ளது.

அங்ஙனமே அளவுள்ள நன்மையும் உண்டு. ஓரளவு மாறக்கூடியதாக, பல குறைபாடுகளுக்குட் பட்டுள்ள நன்மை.

படைப்புகளில் அளவுடன் இருப்பது கடவுளில் அளவின்றி குறையின்றி இருப்பதில் வியப்பில்லை யல்லவா!

## உயிருள்ள அறிவு, உயிருள்ள நன்மை!

நம்மில் ஏற்படும் அறிவும் நன்மையும் உம் உயி ரோடு ஒன்ருனதல்ல, ஒன்ருனதாயிருந்தால் நாம உற்பவிக்கும்போதே நம்மோடு இருத்தல்வேண்டும். அங்ஙனமில்லையல்லவா? ஆனுல், கடவுளிடமுள்ள அறிவும், நன்மையும் அவரோடு ஒன்ருயுள்ளன. அவருக்கு இயல்பாயுள்ள உயிருடன் உயிராய் அவ ரினின்று முற்றும் வேறுபட்டிராமல் உள்ளன.

இங்ஙனம் உயிருள்ள அறிவாகவும், உயிருள்ள நன்மையாகவும் உள்ளபடியால் தனிப் பெயர் களோடு விளங்குகின்றன.

உயிருள்ள அறிவாகிய கடவுளைக் கிறிஸ்துவ மறை வார்த்தை அல்லது ஞானம் என்று அழைக் கும்.

உயிருள்ள நன்மையாகிய கடவுளை ஆவி என் றழைக்கும், இந்த அறிவுக்கும் நன்மைக்கும் ஆதி மூலமாகிய கடவுளைத் தந்தை என்று கூறும்.

வார்த்தை என்பது அறிவு என்பதற்கு தத்து வார்த்தமான பெயர் - ஆவி என்பது நன்மை, அன்பு இவற்றின் மனோ வேகத்தைக் குறிக்கும் பெயராகும்.

அறிவு அல்லது ஞானம் ஆதிமூலமாகிய கடவுளினின்று தோன்றுவதால்(அதாவது பிறப்பதால்) பிறப்பவர் சுதன், புதல்வன், குமாரன் எனப்படுகிறார். ஞானம் பிறக்கிறது* என்று நாம்கூட சொல்கிறோமல்லவா? ஆகவே பிறப்பதற்கு மூலமாயுள்ளவரைத் தந்தை என்பதில் வியப்பில்லையல்லவா?

மேலும், ஞானமும், அன்பும், கடவுளிடத்தில் உருவெடுத்து நிற்கின்றன என்று கூறலாம். அறிவு மிக்க ஒருவனைப் பார்த்து, "இவன் அறிவே உருவெடுத்ததுபோல் இருக்கின்றான்!" என்கிறோம். மிகவும் நல்லவனை, அதிக அன்புள்ளவனைக் கண்டு, "இவன் அன்பே உருவெடுத்தது போல் இருக்கின்றான்!" என்கிறோம். அறிவும் அன்பும் உலகில் எங்கும் உருவெடுத்து நிற்பதைக் கண்டிலோம். ஆனால் கடவுளில் அங்ஙனம் உண்மையாகவே உருவெடுத்து விளங்குவதை யேசு அறிவித்ததால் ஓரளவு அறிய வந்தோம்.

கடவுளே இதை மனித இனத்துக்கு வெளிப்படுத்தினார்: உண்மையே உருவான அவருடைய வெளிப்படுத்தல் உண்மையாய்த் தான் இருக்க முடியும், என்ற அடிப்படையில் கிறிஸ்துவர்கள் இவ்வுண்மையை ஏற்றுக் கொள்கின்றனர். மனித அறிவுக்கு எட்டாத இந்த உண்மையையும் இதுபோன்ற

---

*அறிவீனனைப் பார்த்து. 'இவனுக்கு என்றுதான் ஞானம் பிறக்கப்போகிறதோ' (அல்லது உதிக்கப்போகிறதோ) என்று சொல்லுகிறோம்.

வேறு உண்மைகளையும் மேற்சொன்ன அடிப்படை யில் ஏற்றுக்கொள்ளும் மனநிலையைக் கிறிஸ்துவர் கள் விசுவாசம் என்ற பெயரால் அழைப்பர். (இச் சொல்லுக்கு இருக்கும் சாதாரண பொருளை மாற்றி வேறு பொருளைத் தந்திருப்பது கவனிக்க).

2. அளவிலா நன்மையாம் அறிவும் அன்பும் உரு வான கடவுள் தனக்குள்ள நலனைப் பகிர்ந்து கொள்ளுமாறு அறிவு படைத்த வேறு உயிர்களை உருவாக்கினுன், நன்மையானது தனக்குள்ளேயே அடங்கிக் கிடப்பதன்று. அதற்கு அடைக்கும் தாழ் இல்லை. ஆகவே அளவிலா நன்மை வடிவின ஞன கடவுள் தனக்குள்ள அளவில்லாப் பேரின்பத் தில் பங்கு கொள்ளுமாறு ஆறறிவுள்ள மனித உயிர் களைப் படைத்தான். தன்னை அறிந்து, தனக்கு அன்பு செய்து, தான் குறித்த முறையில் தனது பேரின்பத்தில் பங்குகொள்ளுமாறு ஏற்பாடு செய் தார். ஓர் ஆணையும் பெண்ணையும் உண்டாக்கி அவர்களால் மனித இனம் பெருக வேண்டுமென திட்டம் வகுத்தார்.

மனித இனம் இன்பமுடன் வாழ்வதற்கு ஏற்ற பல வசதிகளுடன் இவ்வுலகையும் அதில் காணும் எல்லாப் பொருள்களையும் ஆறறிவுக்குக் கீழ்ப்பட்ட வேறு உயிர்களையும் உண்டாக்கினுர். இப்பொருள் களுள் பல மனிதனுடைய வாழ்வுக்கு இன்றியமை யாதவையாகக் காணப்படாவிடினும் எல்லாம் யாதாமொரு விதத்தில் மனித இன வாழ்வுக்குப் பயன்படுபவையே. இப்படைப்புப் பொருள்களுள் காணும் அருமையும் பெருமையும், படைத்த கட வுளின் மாண்பையும் அறிவையும் எடுத்துக் காட்டி அவரைப் போற்றத் துணைசெய்பவையென ஆழ்ந்து நோக்குவோர் யாவரும் அறிந்துகொள்ள முடியும். இதைத் தான்,

படைத்தான் படைப் பெல்லாம் மனுவுக்காக
மனுவைப் படைத்தான் தனை வணங்க

என்று சுருக்கமாகச் சொல்லுகிறோம்.

"தனை வணங்க" என்ற சொற்களால் குறிக்கப் படுவது மனித இனம் தன்னைப் படைத்த கடவுளை அறிந்து வழிபட்டு அவருக்கு அன்பு செய்வதே.

3. தன்னோடு இனிய நட்புறவும் அன்புறவும் கொண்டு தனக்குரிய பேரின்பத்தில் பங்கு பெற வேண்டுமெனத் தானே உருவாக்கிய மனித இனம் அந்த இன்பத்தை விரும்பி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கடவுள் கருதினர். கடவுளின் பேரின்பமாகிய மிக உன்னத நன்கொடை மனித இனத்தின் மீது கட்டாயத்தால் திணிக்கப்படுவதொன்ருக முடியாதல்லவா? நன்கொடை என்பது விரும்பி ஏற்கப்பட வேண்டிய ஒன்று. திணிக்கப் படுவதாகாது. விரும்பி ஏற்றுக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பெனக் கடவுள் மனித இனத்தின் ஊற்றுப் போல் இருந்த ஆதிப்பெற்றோர்க்கு ஒரு சிறு கட்டளை தந்தார். அக்கட்டளையின் சாரம்:

மனித இனம் தன்னைப் படைத்த இறைவனின் பொருள்சேர் புகழ்புரிய வேண்டுமென்பதே. பொருளற்ற தற்புகழைப் புரியாமல் அதாவது தன் விருப்பத்தையே பெரிதாக மதிக்காமல், புகழுக்கெல்லாம் முற்றும் உரிய கடவுளையும் அவரோடு தனக்குக் கிடைத்த அன்புறவையும் மதித்துப் பாராட்டி, அதையே தன் வாழ்வின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இருள் சேர் தீவினை என்பது தன்னைச் சேராமல் காத்து. இறுதியில் இறைவனடி சேர வேண்டுமென்பதே அவர் தந்த கட்டளையின் கருத்து.

ஆனால், ஆதிப்பெற்ரேர் இறைவனின் பொருள் சேர் புகழைப் புரிவதற்கு மாருக, பேயின் சொல் கேட்டு, ஏமாந்து, கர்வமுற்று தெய்வங்கள்போல் ஆகவேண்டுமென விரும்பி, அக்கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போயினர். இங்ஙனம் உலகில் "தீவினை என்னும் செருக்கு" தோன்றலாயிற்று; இருள்சேர் இருவினைகளுள் ஒன்ருகிய ஆதீத்தீவினை தோன்றலாயிற்று. இதனுல், ஆதிப்பெற்ரேர் மனித இனம் முழுவதற்குமே பெருத்த இழப்பைக் கொணர்ந்தனர்.

மனித இனம் முழுவதுமே பயனடைய வேண்டுமென இறைவன் அப்பெற்ரேர்க்குச் சிறந்த நன் கொடைகள் அருளியிருந்தனர். அவற்றுள் மிக உன்னத நன்கொடையாயிருந்தது கடவுளுடன் அன்புறவு, கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே நட்பு, கடவுளுக்குரிய பேரின்பத்தில் பங்கு பெறக் கூடும் என்ற வரம் ஆகும்.

அவ்வுன்னத நன்கொடையுடன் வேறு சில சிறப்பான வரங்களும் இருந்தன: சிறந்த அறிவு, கட்டுக்கடங்கும் புலன் உணர்வு, நோய் முதலான துன்பங்களில்லாமை, சாவு என்னும் கொடுமைக்கு ஆளாகாமை முதலிய வரங்களையும இறைவன் ஆதிப் பெற்ரேர்க்கு அருளி, "இவை மனித இனம் அனைத் திற்குமே பயன்படுமாறு அருளினேன். அம்மனித இனத்திற்குத் தலையும் ஊற்றுமாய் உள்ள நீ இவ் வரங்களை இழந்துவிட்டால், இனம் முழுவதுமே இழந்துவிடும். ஊற்று கெட்டு விட்டால் தண்ணீ ரெல்லாம் கெட்டுவிடுவது போல!"...என்று எச்ச ரித்தார்.

ஆனால் அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத் தாமல் ''தீவினை என்னும் செருக்கு''க்கு அடிமை யாகி, இறைவனது பொருள்சேர் புகழைப் புரியா மல், பொருளற்ற தங்கள் புகழையே புரியலாயினர். தம் விருப்பம்போல் நடந்தனர். ஆகவே அனைத் தும் இழக்கலாயினர். இறைவனின் நட்பும் அன்பும் முதற்கண் இழந்தனர். அறிவு மழுங்கியது: கட் டுக்கடங்காத புலன் உணர்வும் தீய இச்சையும் தலைதூக்கலாயின: இதனால் ஆதித்தீவினையுடன் அவனவன் செய்யும் தீவினைகளும் துன்ப வாழ்வும் அளவு கடந்து பெருகலாயின. நோய்களும், சாப மென வரலாயின: இறுதியில் சாவுக்கு ஆளாக வேண்டியிருந்தது.

4. இந்த 'இழந்த நிலை'யினின்று மனித இனத் தைக் கடவுள் கைதூக்கிவிடத் திட்டம் வகுத்தார். இழக்கப்பெற்ற இறைவன் நட்புறவை முதற்கண் மீண்டும் மனித இனத்துக்கு அருள்வது அத்திட் டத்தின் முதல் அமிசமாயிருந்தது. அந்நட்புற வைப் பயன்படுத்தி மனித இனம் மீண்டும் இறை வனின் பேரின்பத்தில் பங்கு பெறும் பேற்றை அடைய முடியும் என்று இறைவன் அருள் கூர்ந் தான்.

இறைவனின் நட்புறவைப் புறக்கணித்ததற் காக மனித இனம் அறிவு மழுங்கிய நிலை, புலன் உணர்வுகளின் முனைப்பு, அவற்றால் ஏற்படும் அவதி, நோய் முதலிய துன்பங்கள், சாவு ஆகிய அல்லல்களைத் தாமே தரும் வான் அருட்சக்தியால் தாங்கினால், இறைவனின் பேரின்பம் பெறமுடியும் என அத்திட்டத்தில் இருந்தது. இதுவே கிறிஸ்து வர்கள் "மீட்புத் திட்டம்" என்பது. அதாவது இழந்த நிலையினின்று மீள்வதற்கு இறைவன் வகுத்த திட்டம்.

அன்பு மக்களாக்க மகனாகிய கடவுள் முன்வருகிறார். சுவீகாரம் செய்யப்பட்ட மகன் ஒருவன் செய்த குற்றத்திலிருந்து விடுவிக்கச் சொந்த மகன் முன் வருவதுபோல?

மேற்சொன்னவாறு, மனித இனத்தின்மீது வந்து விழுந்த துன்பங்களைப் பயன்படுத்தி அதனால் மனித இனத்துக்கு மீண்டும் இன்பம் பெற்றுத்தர வருகின்றார். இழந்த நட்புறவையும் பேரின்பத்தையும் பெற்றுத்தர முன்வருகினறார்.

கடவுளாகையால் மனிதப்பிறவிக்குள்ள சில துன்பங்களை அவர் ஏற்றுக்கொள்ள முடியாதன்றே அறிவு மழுங்கியதால் ஏற்படும் துன்பம், கட்டுக்கடங்காப் புலன் உணர்வுகளால், தீய இச்சையால் விளையக்கூடிய துன்பங்கள், தீவினையாகிய துன்பம் இவை இறைவனை அணுகமுடியாது. இறைவனாகிய அவருக்கு அறிவு மழுங்கியிருத்தல் எங்ஙனம்? இறைவனாகிய அவருக்குக் கட்டுக்கடங்காப் புலன்கள் எவ்வாறு இருக்க முடியும்? இறைவனாகிய அவர் தீவினைக்கு எங்ஙனம் உட்பட முடியும்?... ஆகவே இறைவனின் இயல்புக்கு ஒவ்வாதவை நீக்கி அவனது மாண்புக்கு முரணாகாத துன்பங்களை மட்டும் ஏற்றுக்கொண்டார். அதாவது, வறுமையாகிய துன்பம், சிறுமைப்படுவதால் வரும் துன்பம் பிறர் ஏளனத்துக்கும் வன்னெஞ்சத்துக்கும் ஆளாவதால் ஏற்படக்கூடிய அவமானங்கள், துன்பங்களுள் மிகக் கொடியதான சாவு என்னும் துன்பம் இவற்றையெல்லாம் ஏற்க முன்வருகிறார். இங்ஙனம் முன்வருவதற்கு அவரைத் தூண்டுவது "அடைக்கும் தாழ்" இல்லாத அன்பேயென்க! மனித இனத்தின் நலன்மீது அவருக்கு உள்ள கவலையே என்க. இழந்துவிட்ட இன்பத்தை எப்படியும் பெற்றுத்தர வேண்டும் என்ற ஆர்வமேயாகும்! "அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு''! என்ற நியதிப்படி இறை மகன் இங்ஙனம் செய்கின்றார்.

இறைவனின் இயல்புக்கு முரணாகாத மேற் சொன்ன துன்பங்களை ஏற்றுத்துன்பப்படக்கூடிய மனித உடலைத் தன்னோடு இணைத்துக்கொண்டு மனிதன் என உலகுக்கு வருகிறார்!

மனித உடல் துன்பப்படக்கூடியதொரு நிலை யில் இருந்தாலும். இறைவனுக்கு ஏற்காததொன்று அன்று. அவனுடைய கடவுள் தன்மைக்கு முரணா னது அன்று இறைமகனாகிய தன்னோடு இணைத் துக்கொள்வதால் மனித இனத்துக்கெல்லாம் பொது வான இந்த உடல் மிகப் பெரியதொரு சீர்மையை எய்தியதாயிற்று. குறைபாடுள்ள மனிதனுக்கு ஓர ளவு இறைவனின் நிறைவு உளதாகக்கூடிய முறை யில் இது நிகழ்ந்தது.

மெய்யாகவே இறைவனாகிய மகன் மனிதத் தன்மையையும் தம்மோடு இணைந்து இயேசு கிறிஸ்து என்ற பெயரில் உலகுக்கு வருகின்றார். துன்பங்களைப் பயன் படுத்தி இன்பத்துக்கு வழி காண மனித இனத்துக்குத் தேவையான ஆற்றலை அளிக்கவே அவர் வந்தது. தீவினைபால் மனித இனத்துக்கு விளைந்த துன்பங்களைச் சகிக்க முடியா மல் அல்லலுற்ற மனித இனத்துக்கு அவர், இறை மகனும் மனுமகனும்* ஆனவர் என்ற அளவில் தமக்குள்ள தெய்வீக ஆற்றலை அளிக்க அரிய தொரு ஏற்பாடு செய்கிறார்.'' இருள்சேர் இருவினை களுக்கெல்லாம் கழுவாயாகவும், 'என்பும் உரியர்

*மனிதனைக உள்ளவன் என்பது பொருள். தம்மை 'மனு மகன்' என்று பலமுறை இயேசு அழைத்துக்கொண்டது அவர் வரலாற்று நூலில் காண்கிறோம்,

பிறர்க்கு' என்ற அடிப்படையிலும், மனித இனத்தினர்மீது தமக்கிருந்த அளவிலா அன்பையும் ஆர்வத்தையும் என்பிக்கத் தம் உயிரை-உடலை-ஐந்தனை - (ஐம்புலனை) தியாகப்பலி (அவி) யாக்குகின்றார். இங்ஙனம் மனித இனத்தின் நலனுக்காக அவர் 'ஐந்தவித்தானு' கின்றார். காலாகாலமாகப் பலியிடும் பொருளை மக்கள் உண்பதால் இறையாற்றலையும், இறைவனின் அருளையும் பெற்றுக்கொள்வதாக நம்பி வந்துள்ளனர். அந்த நம்பிக்கையை முழுதுற நிறைவேற்றும் கருத்தோடு, "ஆடுமாடுகளைப் பலியிட்டு உண்பதால் பயன் ஒன்றிமில்லை," என்று கூறியவராய்த் தம்மையே பலியாக்கியபோது, பலியாக்கப்பட்ட தம் உடலை-தம் ஐந்தை - அவித்து - பலியுணவாக்கி - அவியுணவாக்கித் தந்தார். "உங்களுக்காகப் பலியான என் உடல் இது: இதை உண்ணுங்கள்: உங்களுக்கு முடிவில்லா வாழ்வு கிடைக்கும். இறுதி நாளில் சாவுக்கு ஆளாகி மண்ணுய்ப்போன உங்கள் உடலை உயிர்த்தெழச் செய்வேன்," என்றார்.

புலன் உணர்வுகளில் எவ்விதக் குறைபாடும் இல்லாததொரு உடல் ஐத்தவித்தானின் உடல்: கட்டுக்கடங்காத நிலை அவற்றிற்கு இல்லை: இறைவனுக்குள்ள ஆற்றல் அவ்வுடலுக்கும் பேரளவில் இருந்தது. அவ்வுடலுக்குள்ள தெய்வீக சத்தை நமதாக்கிக் கொண்டால் புலன்களின் முனைப்பும் கடுப்பும் நீங்கி, எத்துன்பத்தையும் மேற்கொள்ள ஆற்றல் பெறமுடியும் என இவ் ஏற்பாடு செய்தார். இந்த ஏற்பாட்டைக் கிறிஸ்தவர்கள் 'நற்கருணை' என்பர் இதில் ஐந்தவித்த இயேசுவின் பச்சை மாமிசமன்று, அவரது உடலில் தங்கும் இறையாற்றலைப் பெற்று, நாமும் சிறிது சிறிதாக நாம் புலன்களின் கட்டுக்கடங்காத உணர்வுகளையும் மேற்கொள்கிறோம். வாழ்வின் துன்பங்களைக் சிறிது சிறி

தாக மேற்கொண்டு துன்பத்தின் வாயிலாக இன்பம் காணும் வழியைக் காண்கிறோம் என்பது கிறிஸ்துவ மதக்கொள்கை.

கிறிஸ்துவர்கள் எல்லாரும் இந்த ஆற்றலைப் புனித முறையில் வாழவில்லையென்றால், தரப்பட்டுள்ள இந்தத் தெய்வீக அவியுணவைத் தக்க முறையில் பயன்படுத்தவில்லை என்பதே அதன் பொருள் !

7, படைக்கப்பட்ட எவ்வுயிருக்கும் (எம்மனிதனுக்கும்) கடவுளுக்கு இயல்பாயுள்ள பேரின்பத்தில் பங்குபெற உரிமையில்லை. "நான் அதை உனக்கு அருள்வேன்" என்று கடவுள் தந்த வாக்குறுதியின் பொருட்டு ஒருவித உரிமை ஏற்படுகிறது என்னலாம். தத்துப்பிள்ளைக்குச் சுவீகாரத்தந்தையின் செல்வத்துக்கு உரிமை கிடைப்பதுபோல!...அந்த உரிமையைக் கடவுளே தருகிறார் என்பது கருத்து. இத்தகைய உரிமையைக் கடவுள் மனித இனத்துக்கு ஆதியில் அருளினார். ஆனால் மேலே குறிப்பிட்டது போல மனித இனம் அந்த உரிமையை இழந்து விட்டது. மீண்டும் அந்த உரிமையைப் பெற்றுத் தரவே இறைமகனாகிய கடவுள் ஐந்தவித்தானாக உலகுக்குவந்தார்.வந்துமேற்சொன்னஏற்பாட்டைச் செய்தார். கடவுளின் பேரானந்தப் பெருஞ்செல்வமாகிய பேரின்பத்தைத் தனதாகக்கொண்டு அனுபவிக்கும் உரிமையே இறைமகன் பல துன்பங்கள் ஏற்றுத்"தாளாற்றித்தந்த பொருள்" அருள் என்னும் தெய்வீகப் பொருள். "ஒப்புரவு" என்னும் செல்வம். அதை மீண்டும் அடைவதற்கு உரிமை மட்டுமன்று, வழியையும் ஏற்படுத்தித்தந்தார். இறைமகன். இறைமக்களாக மீளவும் கடவுளிடமிருந்தே பிறக்குமாறு ஓர் அருட்சாதனம் (ஞானத்

தீக்கை); இறைமக்களாக வளர்ச்சி பெறுமாறு ஒரு தெய்வீக உணவு ஐந்தவித்தானின் அவியுணவு (நற்கருணை) ஐந்தவித்தான் காட்டிய "பொய்தீர் ஒழுக்க நெறி" நிற்பதற்கு இன்றியமையாத உதவியாகிய அருளை. வான் சக்தியைப் பெற்றுக்கொள்ள வேறொரு அருட்சாதனம் (உறுதிப்பூசுதல் என்பது); பெற்றுக்கொண்ட அருட்செல்வத்தைப் பலவீனத்தால் தவறு செய்து, தீவினைக்கு ஆளாகி இழந்து விட்டால் வேறொரு அருட்சாதனம் (பாவவிமோசனம் - பச்சாத்தாபம் என்பது) "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" யாதலால் அந்த இல்வாழ்க்கையை "ஒருவன் ஒருத்தியுடன், இறுதிமட்டும்" எனற நியதிப்படி "என்பும் உரியர் பிறர்க்கு" அடிப்படையில் கணவன் மனைவி ஒருவர்க்கொருவர் அன்பு செய்து. "அன்புற்றமர்ந்த வழக்கு"ப்படி திருமண வாழ்க்கை நடத்த ஒரு தனிப்பட்ட அருட்சாதனம் (திருமணம், மெய்விவாகம் என்பது); இறைமகன் "தாளாற்றித் தந்த" அருட்பொருளைத் "தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு" அருட்செல்வத்தை "ஆள்" வதற்கென அருட்தொண்டர் பணி தக்க முறையில் ஆற்றத் துணை புரியும் அருட்சாதனம் (குருத்துவம் என்பது).

இறுதியாக, "நாச்செற்று விக்குள்" வருங்கால், அதாவது தாளாற்றித் தரப்பட்ட பேரின்பச் செல்வத்தை உரிமையாக்கிக்கொள்ளும் நேரம் (சாவ) வரும்போது விசேட அருளுதவிக்காக ஓர் அருட்சாதனம் (நோயிற்பூசுதல என்பது).

ஆக ஏழு அருட்சாதனங்களை ஏற்படுத்தித்தந்துள்ளார் இறைமகனாகிய மீட்பர். இவ்வேழு அருட்சாதனங்களும் ஐந்தவித்தான் தாளாற்றித் தந்த அருட்பொருள் என்க: இப்பொருளைத் தக்கார்க்கு

வேளாண்மை செய்தற்பொருட்டு, (உலகில் பொருள் ஆட்சி நடைபெற அரச அதிகாரம் இருப்பதுபோல) அருள் ஆட்சி நடைபெறவும் ஓர் அதிகாரத்தை நிறுவினர் இவ்வொப்புரவுச் செல் வத்தைத் தந்த மீட்பர்* இதைத் "திருச்சபை" என்று அழைப்பர் கிறிஸ்துவர். தெய்வீகப் பேரவை எனினும் பொருந்தும். இறைமக்கள் கூட்டம் இறைமகனின் திருக்கூட்டம், ஐந்த வித்தானின் திருச்சங்கம் என்றும அழைக்கலாம்.

8. "தாளாற்றித்தந்த பொருளை" அருளாட்சிசெல் வோர் தக்கார்க்கு மட்டுமே வேளாண்மை செய்தல் வேண்டும் தக்கார் யார்? இப்பொருளை மதித்து ஏற் றுப் பயன்படுத்தி 'ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி''யில் நிற்க முனையவராவர். இதற்கு முதற்படி நாண் என்பது. கடவுள் தர விரும்பிய பேரின்பச் செல்வத்தைப் பொருட்படுததாது, பொருளற்ற தற்புகழையே புரியும் மனப்பான்மையை விட்டொ ழித்து, இறைவனது பொருள்சேர் புகழ் புரியுமாறு தன் மனத்தைத் திசை திருப்புதல் ஆகும். தீவினை என்னும் செருக்குக்காக வருந்தி நாணி, மனம் இறைவன்பால் திரும்பி, இறைவன்பால் ஒப்புரவி னால் வந்த செல்வத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் "தக்கார்" ஆவர். இவர்களுக்கு மேற்சொன்ன அருட்சாதனங்கள் வாயிலாக அாட் செல்வம் வாய்க்கும் என்க. பெற்றுக்கொண்ட இச் செல்வத்தைத் தன் குற்றத்தால் ஒருவன் இழந்து விட நேரிட்டால், அருட்பார்வை என்னும் கண் ணோட்டமிக்க இறைவனின் இரக்கத்தை மீளவும்

*பொருள் செயல்வகை என்ற பொருட்பால் பகுதியில் அருளைப் பற்றியும் வள்ளுவர் கூறுவதற்கு இதுவும் ஒரு காரணம் என்னலாம்.

நாட வழியுண்டு, என்பதை நினைவுறுத்தி. எத்தனை முறை தவறினாலும் மீண்டும் மீண்டும் முயற்சி செய்தல் வேண்டும்.

இங்ஙனம் ஒப்புரவுச் செல்வத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், அதன் பெருமைக்கும் அருமைக் கும் ஆண்மையுடன் சான்று கூறுவோராய் மாறி "வாய்மையின் நல்ல பிற" இலவாதலால் பிறரும் அச்செல்வத்தை அடைந்து இன்பம் எய்துமாறு பணி புரிய வேண்டும். இங்ஙனம் அருள் சேர்ந்த நெஞ்சினராகி, இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல் இன்றி, ஒளிசேர் இறைவனடி சேர்ந்து நீடுவாழ்வு பெறுவதே வாழ்க்கைப் பயன் என்க.

இந் 'நீடுவாழ்வின் மையம் இறைவனில் பேரின்பத்தில் நெருங்கிய பங்கு பெற்று, இவ்வுல கில் அவன் அருளால் அவன தாள் பணிவது' போல, அவ்வுலகில் 'அவன் அருளால் அவன் இன்பத்தில் ஆழ்ந்து அளவிடமுடியா ஆனந்தம் எய்துவதாகும் சத்து, சித்து ஆனந்தமாகிய மும்மைக்கடவுளை நேர்முகமாகக் காண்பதால் ஏற்படும் ஆனந்தவெள்ளமாகும்.

ஆனால் மனிதன், முழுமனிதன் என்ற அளவில் அந்த இன்பத்தைத் துய்ப்பானா? என்று ஒரு கேள்வி எழும். இங்ஙனம் எழுவதன் காரணம், அவனுக்கு நேர்ந்த சாவு என்னும் நிகழ்ச்சியால் உடல் மண்ணாகி, சாம்பலாகிவிட்ட பின்னர், அவனது ஆன்மா மட்டும்தானே அந்த இன்பத் தைத் துய்க்க முடியும்? அங்ஙனமாயின் மனிதன் அதைத் துய்க்கிறான் என்று எங்ஙனம் சொல்ல முடியும்? மனிதன் துய்க்கிறான் என்று சொல்ல வேண்டுமானால் இறந்து சாம்பலாகிவிட்ட அவன் உடலும் ஆன்மாவுடன் மீண்டும். இணைந்து, மீண்டும் உயிர் பெற்று, இயல்பாகத் தனக்குள்ள

குறைபாடுகளையெல்லாம் விடுத்து, அதுவும் இறைவன் பேரின்ப வெள்ளத்தில் மூழ்க வேண்டுமன்றோ?...

ஆம். அங்ஙனம் மூழ்குமாறு, அவ்வுடலை (சாம்பலாகிவிட்ட அவ்வுடலின் அணுக்கூறுகளை) மீண்டும் ஒன்று சேர்த்து, உயிர்த்தெழச் செய்து. அப்பேரின்பம் துய்க்க, அருள்வார் மீட்பர், என்கிறது கிறிஸ்துவம்

மனித மீட்புக்காகத் துன்புற்று, இறந்த மூன்றும் நாள் அவர் உயிர்த்தெழுந்தது இதற்கு அத்தாட்சியாகவும், அச்சாரமாகவுமே! "ஆதித்தீவினை சாவு என்னும் துன்பத்துக்கு மனித இனம் எல்லாம் ஆளாக வேண்டியிருந்தாலும், குறித்த காலத்தில் அதாவது மனித இனம் முழுமீட்பை அடையுமாறு இறைவன் தம் திட்டத்தில் குறிப்பிட்ட காலத்தில், இறந்துபட்ட மனிதர் எல்லாருமே உயிர் பெற்றெழுவர்" என்றார் இறைவன்.

"இதைக்குறித்து வியப்புறுதீர்கள்; இதோ' நேரம் வருகிறது. அப்போது கல்லறையில் இருப்பவர்கள் எல்லாரும் அவருடைய குரலைக்கேட்டு வெளியே வருவர் அப்போது நல்லது செய்தவர் வாழ்வு பெற உயிர்த்தெழுவர், பொல்லாது செய்தவர் தண்டனைத் தீர்ப்புப்பெற உயிர்த்தெழுவர்". (அரு. 5.28-29)

எல்லாரும் உயிர்பெற்றெழுந்தாலும் எல்லாருமே பேரின்பம் பெறுமுறையில் எழா: இறைவன் "தாளாற்றித் தந்த பொருளை" நன் முறையில் பயன் படுத்தித்தம் வாழ்வில் தீவினைபுகாமல் காத்து, இறைவன் தந்த நட்புறவை மதித்து, அவனது அன்புறவில் வாழ்ந்து, அவ்வுறவைக் கெடுக்கக்கூடிய ஐம்புலன்களை அடக்கி ஆண்டு, வகைதெரிந்து காத்து, "வரன் என்னும் வைப்பா"

கிய அப்பேரின்பத்தைப் பெரிதும் விரும்பிச் செயல் புரிந்தவர் மட்டுமே அங்ஙனம் இறைவனது மாண்பில் பங்கு பெற்றவராய எழுவர். தம் புலன் உணர்வுகளையே மதித்து, அவற்றின் நுகர்வுகளையே துய்த்து, அவற்றை அடக்கி ஆள, வகை தெரிந்து காக்க. ஐந்தவித்தான் ஏற்படுத்திய வழியைப் பயன் படுத்தாமல், தீவினை பல புரிந்து அருள் இழந்தவரும் எழுவர். ஆனல் இன்னுவுலகம் புகும் முறையில எழுவர்!...

ஆதியில் நிகழ்ந்த தீவினையால் மனிதனின் புலன்கன் கட்டுக்கடங்காமற்போயின என்று மேலே குறிப்பிட்டோம். அதனால் அவன் பட வேண்டிய துன்பங்களுள் ஒன்று இக்கட்டுக்கடங்காத இச்சையாயிற்று. இது மனிதனின் உடலில் கொடிய விஷம்போல் புகுந்துவிட்டது எனலாம். இதை அப்புறப்படுத்தி, ஆதியில் புனிதத்தின் இருப்பிடம் போலிருந்த மனித உடலை மீண்டும் புனிதத்தின்–அருளின் இருப்பிடமாக்க இறைமகன் செய்த ஏற்பாடே பலியான தன் உடலை அவியுணவாகத் தந்தது. உண்மையில் புனிதத்தின் இருப்பிடமாக இருந்த அவரது உடலைத் துர் இச்சையின் ஊற்றாக மாறிய மனித உடலைப் புனிதப்படுத்தும் உணவாக-அருள் சத்தாக–தந்தார் இறைமகன். உணவு என்பது வளர்ச்சிக்காக. ஈண்டு உடல் வளர்ச்சிக்காக அன்று, உள்ளத்தில் அருள் அன்பின் வளர்ச்சிக்காக. அருளையும் அன்பையும் தடை செய்யக் கூடிய வலிமை படைத்த புலன் நுகர்வுகளை அளவுக்குட்படுத்தி, அவற்றின் உணர்வுகளின் முனைப்பையும் கடுப்பையும் பதனுறுவிக்கச் செய்வதே அந்த அவியுணவின் நோக்கம். இறுதி நாளில் இதே உடல் இறைவனுக்குரிய மாண்புடன் உயிர்த்தெழுமாறு அதனைத் தயாரிப்பதற்காகவே இந்த ஏற்பாட்டைச் செய்தார் என்க. இதனாற்

ருன். கிறிஸ்துவ சபையில் நற்கருணை என்னும் இந்தத் ''திரு உணவு'' வழிபாடு மையமானதாக விளங்குகின்றது.

இவைதயெல்லாம் குறிப்பாக உணர்த்துவது போல் தோன்றுகிறது.'' நீத்தார் பெருமை'' அதிகாரக் குறட்பாக்கள் சில.

ஐந்தவித்தானின் ஆற்றல் பற்றிப்பேசும் குறள். அந்த ஆற்றல் அவன் இறந்தபின் உயிர்த்தெழுந்த நிகழ்ச்சியையன்றி வேறெதனைக் குறிப்பிட முடியும் * அங்குதான் அவனது ஆற்றல் ஐயத்துக் கிடமின்றி வெளிப்பட்டது. அந்த ஆற்றலால் தான் அவனது அடியார்கள் ஐந்தின் வகை தெரிந்து, அவற்றைக் காத்து ''வரன் என்னும் வைப்புக்கோர் வித்தாக'' முடியும். இந்த ஆற்றலின் பெருமையும் அதை உலகுக்கு வெளிப்படுத்திய ஐந்தவித்தானின் பெருமையும் ''துணைக் கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று'' என்கிறது குறள், அதாவது: உலகத்தில் ஆதியினின்று உலக முடிவுவரை இறந்தவரின் எண்ணிக்கை எண்ணிப் பார்க்கும்போது, அத்தனை பேருள் ஐந்தவித்தானாகிய ஒருவனே அந்த இறப்பினை வென்றவனாகக் காட்சியளித்தான்! மேலும், அத்துணை திரளான இறந்தவரும் ஒருநாள் மீண்டும் உயிர்பெற்று, எழச்செய்யக் கூடிய அவரது ஆற்றலை உரைக்கும் தரமாமோ? ...... செயற்கரிய செய்த பெரியர் ஐந்தவித்தான்! இம்மை மறுமை வகை தெரிந்தவனாதலால் இம்மையில் மனிதனின் இழிநிலை, பலவீன நிலை அறிந்து, அதை மேற்கொண்டு மறுமை இன்பத்தை அடைய மனித இனத்தார்க்கு ஆவன செய்தவரானார்!

---

* ''ஐந்தவித்தான் யார்'' என்ற மு. தெய்வநாயகம் அவர்கள் எழுதிய நூலைக் காண்க.